
இதயம்
தேடும்
என்னுயிரே
ஜெய்சக்தி

## நூல் விவர அட்டவணை

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | இதயம் தேடும் என்னுயிரே |
| ஆசிரியர் | : | ஜெய்சக்தி |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : | அக்டோபர், 2005 |
| மொழி | : | தமிழ் |
| தாளின் தன்மை | : | 11.6 kg. வெள்ளைத் தாள் |
| அச்சு எழுத்தளவு | : | 10 புள்ளி |
| நூலின் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| மொத்தப் பக்கங்கள் | : | 224 |
| நூல் கட்டுமானம் | : | சாதா அட்டை பைண்டிங் |
| பதிப்பாளர் | : | ஸ்ரீ செல்வ நிலையம்<br>32/1-107/1, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.70.00**

| | | |
|---|---|---|
| ஒளி அச்சுக் கோப்பு | : | வேலன் லேசர்<br>சென்னை-18. ✆: 94441-01753 |
| அச்சிட்டோர் | : | கே.வி.எஸ்.ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>சென்னை-14. |


# இதயம் தேடும்
# என்னுயிரே

# இதயம் தேடும் என்னுயிரே

## 1

"அப்பாகிட்டே ஆசீர்வாதம் வாங்கிக்கப்பா," என்றார் அம்மா கார்த்திகாயினி.

சியாமள கிருஷ்ணன் அப்பா பஞ்சாபகேசனின் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டான்.

"ரொம்ப சந்தோஷம்ப்பா.. ரொம்ப சந்தோஷம். நீயும் நல்ல பெரிய ஆளா வரணும். இந்தக் குடும்பத்தையும் தூக்கி நிறுத்தணும்," என்று கண் கலங்க ஆசீர்வதித்தார்.

ஜெயலட்சுமி - சியாமளனின் இரண்டாவது அக்கா - அவன் நெற்றியில் குங்குமம் வைத்தாள். அவனுக்கு இளையவளான வாசுகியும் வாழ்த்துகள் சொன்னாள்.

"அண்ணா! நீ பெரிய ஆளா ஆயிடுவே. பெஸ்ட் ஆஃப் லக்!" என்று கைகுலுக்கி வாழ்த்தினான் தம்பி நந்தகோபால்.

சியாமள கிருஷ்ணன் பஞ்சாபகேசனுக்கும், கார்த்திகாயினிக்கும் இரண்டு பெண்கள் பிறந்த பின்னர், நான்காவதாகப் பிறந்த ஆண் குழந்தை.

பஞ்சாபகேசன் ஒரு அரசாங்க அலுவலகத்தில் கிளர்க்காக இருந்தார். அந்தக் காலத்தில் கோவையில் சலிவன் வீதியில் ஒரு

தொட்டிக் கட்டு வீட்டில் அவர்கள் குடும்பம் குடியிருந்தது. அடுத்ததாக ஆண் பிறக்கக் கூடும் ஆண் பிறக்கக் கூடும் என்றே எதிர்பார்த்து, இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்றவர்கள்.

மூன்றாவதாக ஒரு பெண் குழந்தை பிறந்து இறந்துவிட, நான்காவதாகச் சியாமள கிருஷ்ணன் பிறந்தான்.

சியாமள கிருஷ்ணன் பெரிய அக்காவுக்கும் அவனுக்கும் ஆறு வயது வித்தியாசம் அவனுக்கு இப்போது இருபத்தொன்பது வயது. வாசுகி அவனை விட ஒன்றரை வயது சின்னவள். அவனைக் காட்டிலும் ஜெயலட்சுமிக்கு மூன்று வயது அதிகம். அவளைக் காட்டிலும் மூத்த அக்காவுக்கு மூன்று வயது அதிகம். அவள் பெயர் சங்கரி.

சொந்த வீடு இருந்ததால் பஞ்சாபகேசன் எப்படியோ குழந்தைகளை நன்றாக வளர்த்து விட்டார் என்றுதான் சொல்ல வேண்டும்.

கார்த்திகாயினி வீட்டுப் பின்கட்டில் இரண்டு மாடுகளை வைத்துப் பராமரித்தாள். அதனால் குழந்தைகளுக்கு எது கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் நல்ல பால், தயிர் கிடைத்தது.

எளிமையான வாழ்க்கை வாழ்ந்தார்கள். சங்கரி எஸ்.எஸ்.எல்.சி. முடித்துவிட்டுத் தமிழகப் பொதுத்துறைத் தேர்வுக்கான தேர்வு எழுதி அரசாங்க உத்தியோகம் கிளார்க் வேலை பெற்றாள்.

ஜெயலட்சுமி டீச்சர் டிரெய்னிங் முடித்துவிட்டு ஒரு தனியார் பள்ளியில் மிகக் குறைவான சம்பளத்துக்கு வேலைக்குப் போயிருந் தாள். வாசுகி பயோ கெமிஸ்ட்ரி முதுகலைப் பட்டப் படிப்பு முடித்து விட்டு ஒரு டாக்டரின் லாப்பில் வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். சொற்ப சம்பளம்.

பெண்களுக்குக் கிடைக்கிற சம்பளம் குழந்தைகளின் தேவைகளுக்கும் போக வீட்டுக்கும் கொஞ்சம் உபயோகமாக இருந்தது.



சியாமள கிருஷ்ணன் எம்.பி.பி.எஸ். முடித்து விட்டு அவன் மருத்துவக் கல்லூரிப் பேராசிரியரின் சிபாரிசின் பேரில் எம்.எஸ். இதய அறுவைச் சிகிச்சையில் பட்டம் பெற்றதோடு அல்லாமல் எம்.சி. எச்.சும் முடித்தான். கோவையில் புதிதாக உருவாகியுள்ள பெரிய அந்த இதய நோய் மருத்துவ மனையில் பணியாற்றத் தேர்வாகி இருந்தான்.

இன்றைக்குப் போய் வேலையில் சேருகிறான். ஏற்கெனவே எம்.பி.பி.எஸ். முடித்தான். சிறு சிறு மருத்துவமனைகளில் நைட் டியூட்டி பார்த்ததோடு, அவர்களின் வீட்டில் முன்னறையிலே அக்கம் பக்கத்துத் தெருக்காரர்களுக்கு வைத்தியமும் பார்த்தான். பிறகு என்ட்ரன்ஸில் இடம் கிடைக்கவே, எம்சி ஹெச்சில் இடம் கிடைத்துப் படித்தான்.

நந்தகோபாலும் எம்.பி.பி.எஸ். படிக்க வேண்டும் என்று நினைத் தான். ஆனால், போட்டியில் அவனுக்கு மயிரிழையில் வாய்ப்புப் போனது மட்டுமல்லாமல், தனியார் கல்லூரியில் இடம் கிடைத்தது.

இருபது லட்சம், முப்பது லட்சம் என்று கொடுக்க வசதி யில்லாததால் பி.எஸ்.சி. படிக்கப் போனான். தொடர்ந்து முயற்சி செய்வது என்ற மனப்பான்மையில் இருந்தான்.

சியாமள கிருஷ்ணன் அப்பா வாங்கிக் கொடுத்திருந்த அந்த செகண்ட் ஹாண்ட் பைக்கில் ஏறிப் புறப்படும் முன்பு, தன் குடும்பத்தினரை எல்லாம் ஒரு முறை பார்த்தான்.

பக்குவமான ஆனால், பெரிய குடும்பம். குடும்பத்தின் கஷ்ட நஷ்டம் உணர்ந்து செயல்படுகிற குழந்தைகளைப் பெற்ற நிறைவு அப்பாவின் முகத்தில் தெரிந்தது. ஆனால், வாழ்க்கையில் தொடர்ந்து போராடிய சலிப்பும் அந்த முகத்தில் மறைந்திருந்தது.

இவர்களுக்கெல்லாம் ஏதாவது வழி செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் அதே தெருவில் இருந்த ராகவேந்திரர் கோவிலுக்குப் போய் ஆத்மார்த்தமாக வேண்டிக் கொண்டு வேலைக்குப் புறப்பட்டான்.

இனிமேல் தன் வாழ்க்கையே வளமாக மாறப் போகிற அந்த வேலைக்குப் போய்ச் சேருவதில் அவன் உள்ளம் துள்ளிக் கொண்டிருந்தது.

உலகமே பசுமையாகவும், ரம்யமாகவும் இருந்தது.

* * *

''ஓ! நீதான் புரொஃபசர் சொன்ன யங்மேனா... வெரி நைஸ்!'' என்று கைகுலுக்கி வரவேற்றார் மருத்துவ மனையில் பர்ஸனல் ஆஃபீசர்.

முகத்திலே தேஜஸோடும், சிரித்த முகத்தோடும் இருந்தார் பரணீதரன். மருத்துவ மனையின் நிர்வாகத்தைத் தன் கையில் வைத்திருந்த அந்த அதிகாரி.

அவனது துறையின் சீஃப் டாக்டரிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி அங்கேயே விட்டுச் சென்றார்.

அவன் பணிவாக வணக்கம் சொன்னான். டாக்டரின் பார்வை அவனை மேலிருந்து கீழாக அளவெடுத்தது. அதில் ஒரு அலட்சியம் தெரிந்தது.

''ம்... ரொம்பச் சின்னப் பையனா இருக்கியே!'' என்ற உறுமலும் தெரிந்தது. அவன் முதுகுத் தண்டு சில்லிட்டாற் போன்ற உணர்வுடன் நின்றான்.

அவன் நினைத்தது போலவே குரலும் உறுமலாகவே இருந்தது.

''ம்... நல்லா... வேலை செய்யணும்!'' என்றார்.

''சரிங்க... சார்,'' என்றான் பணிவாக. பின்னர் தன்னுடைய பி.ஏ.விடம், 'அம்மா... பாஸ்கரன் கிட்டே கொண்டு போய் விடுங்க...'' என்றார்.

''சார்... பாஸ்கரன் இன்னைக்கு லீவு...'' என்றார் அந்தப் பெண்.

''சரி... இவருக்கு ரூம் அலாட் பண்ணியிருக்கு இல்லே. இன்னைக்கு மட்டும் மிஸ்டர் தங்கதுரையோட இருக்கட்டும்...''



என்று டாக்டர் தங்கதுரையை அழைத்து அறிமுகப்படுத்தி அனுப்பி வைத்தார்.

அவன் ஆர்வமாக ஒவ்வொன்றையும் கவனித்துக் கொண்டான்.

அநேகமாக அன்று மாலைக்குள்ளாக எல்லாரிடமும் அறி முகம் ஆகிக் கொண்டான். தங்கதுரை நடுத்தர வயதைக் கடந்து விட்டார். எனினும் இயல்பில் இளைஞனைப் போல் இருந்தார்.

''ஷ்யாம்!'' என்று இயல்பாக அழைத்துப் பேசத் தொடங்கி விட்டார்.

வார்டுக்குப் போகும் போதும், ஐ.சி.யூ.வுக்குப் போகும் போதும், உடன் அழைத்துப் போனார். விதவிதமான நோயாளிகள், சிறு வயதுக்காரர்கள், நடுத்தர வயது, அறுபதைத் தாண்டியவர்கள் என்று பலவிதமான நோயாளிகள்.

ஐ.சி. யூனிட்டிற்கு வெளியே கவலை தோய்ந்த முகத்துடன் காத்திருக்கும் அட்டெண்டெண்ட்ஸ் எனப்படும் உடனிருப்போர். அவனுக்கு உள்ளூர வருத்தமாகவும் பாவமாகவும் இருந்தது. உள்ளே இருக்கிற நோயாளிகளைக் காட்டிலும் வெளியே காத்திருக்கிற இவர்கள்தான் பாவம் என்று எண்ணிக் கொண்டான்.

''நீங்க எப்ப டிஸ்சார்ஜ்?''

''ஐ.சி.யூ.விலிருந்து ரூமுக்கு வந்தாச்சு...''

''நான் டிஃபன் வாங்கிட்டு வரப்போறேன்,'' என்று அவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வது அவன் காதுகளில் விழுந்தது.

'டிஸ்சார்ஜ்' ஆகிப் போகிறவர்கள் சில பேர் முகத்தில் மகிழ்ச்சி பொங்கப் போவதைப் பார்க்கும் போது மனதில் நிறைவும் தோன்றியது. அவன் பார்வை போகிற பாதையைப் பார்த்துத் தங்கதுரை சொன்னார்.

''ஷ்யாம்... மனித வாழ்வின் மகிழ்ச்சியையும் இங்கே பார்க்கலாம். சோகங்களையும் பார்க்கலாம். உயிர் போற நிலைமையில் கொண்டு வந்து போட்டு... நாம காப்பாத்

தினதுக்கப்புறம், 'ரொம்ப நன்றி... சார்... தெய்வம் சார் நீங்க'ன்னு விழுந்து விழுந்து நன்றி சொல்றவங்களும் காப்பாத்த முடியாமப் போறப்ப... என்னமோ... நாமதான் சாவுக்குக் காரணங்கற மாதிரி, கொலைகாரன் மாதிரி நம்மளைப் பார்த்துட்டுப் போறதும்... உண்டு. இனிமே அதையெல்லாம் பார்க்கப் போறே இல்லே..." என்றார்.

தங்கதுரை ஒவ்வொரு நோயாளியின் பிரச்சினையையும் ஆழ்ந்து கேட்பதையும், ஸ்டெதாஸ்கோப் வைத்துப் பரிசோதிக்கும் போது உற்றுக் கவனிப்பதையும், அவர் பக்கத்திலேயே நின்று பார்த்துக் கொண்டான்.

நோயாளிகளைப் பரிசோதிக்கும் போதே சில நுட்பமான விஷயங்களை அவனுக்கும் விளக்கிச் சொன்னார்.

அவனுக்கு ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், நோயாளிகளிடம் அளவாகவே பேசினார். ஆனால், அவனிடம் விரிவாகப் பேசினார்.

அவர் இரண்டு கட்டில் தாண்டி அந்தப்புறம் இருந்த கட்டில் நோயாளியைப் பரிசோதித்துக் கொண்டிருக்கையில், இங்கே இரண்டு நர்ஸ்கள் பேசிக் கொண்டார்கள்.

"என்னடி... இது ஆச்சரியம். துரை டாக்டர் இந்தப் புது டாக்டர்கிட்டே இவ்வளவு ஃப்ரீயாப் பேசறாரு..." என்று.

அவன் எதுவும் காதில் விழாதவன் போல் நின்று கொண்டான்.

திரும்பி வந்தவுடனே அன்றைக்கு அந்த வார்டில் இருந்த நோயாளிகளின் விவரம் பற்றிப் பேசிக் கொண்டே வந்தார்.

கான்டீன் அழைத்துப் போனார். ஸ்வீட் வாங்கிக் கொடுத்தார். அவன் குடும்ப விவரம் பற்றியெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

அவனும் ரொம்பவும் விவரமாகச் சொல்லிவிடவில்லை.

நட்பு என்பது மெதுவாகத் தொடங்கி நன்றாக ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டபின் நிதானமாக வளர்ந்து நிலைத்து நிற்க வேண்டும் என்று நினைப்பவன்.



பெரிய குடும்பமாகவும், வறுமையில் அடிபட்டவர்களாகவும் இருந்தாலும், சட்டென்று தங்கள் குடும்பக் கஷ்டத்தை ஒருவரிடம் சொல்ல மாட்டார்கள், அவனது குடும்பத்தினர்.

கட்டித் தயிரை விட்டுப் 'பழையது' சாப்பிட்டு விட்டு நிறைவாக உழைக்கும் குடும்பம். அதனால் மேலோட்டமாக விவரங்கள் சொல்லி விட்டுப் பேச்சை மாற்றி விட்டான்.

டாக்டர் தங்கதுரைக்கு அன்று இரண்டு ஏன்ஜியோ கிராம் செய்ய வேண்டி இருந்தது.

நோயாளியிடம் இதமாகப் பேசிக் கொண்டே காரியங்களைச் செய்தார். அன்றைக்கு ஏன்ஜியோ கிராம் செய்து கொண்ட நோயாளிக்கு இரண்டு தொடைகளையும் அழுத்திப் பிடித்துக் கொள்ள வேண்டியிருக்கையில், அரை மயக்கத்திலும் அவர்,

"முடியல... டாக்டர்... தாங்கல... டாக்டர்" என்று முனுமுனுக்க...

"கொஞ்சம்... கொஞ்சமே... கொஞ்சம்... பல்லைக் கடிச்சுகிட்டுப் பொறுத்துக்குங்க... உங்க நல்லதுக்குத்தானே... கொஞ்சம் கஷ்டப்பட்டாலும்... உங்களுக்கு ஒண்ணும் பிரச்சினையில்லைன்னு தெரிஞ்சருச்சில்ல..." என்று இதமாகப் பேசினார்.

நோயாளியும் ஒத்துழைப்புக் கொடுத்தார். இரண்டு பேஷன்ட்ஸுக்கும் என்று முடிக்கிறவரை உடனிருந்து பார்த்துக் கொண்டார்.

மணி மூன்றாகியிருந்தது. உணவருந்தக் கூடப் போகவில்லை. தியேட்டருக்குள்ளே அணிகிற உடைகளை மாற்றி விட்டு வெளியே வந்தார்கள்.

"சாப்பிடலாமா ஷ்யாம்?" என்று கேட்டுக் கொண்டே வருகையில், எதிரே ஒரு ஸ்ட்ரெச்சரில் ஒரு நோயாளியைக் கொண்டு வந்தார்கள். உடன் வந்தவர்களும் போக, ஐ.சி. யூனிட்டில் நுழைந்தார்கள்.

தங்கதுரையும் வேகமாகப் பின் தொடர, அந்த ஸ்ட்ரெச்சர் உள்ளே போன சமயம் தங்கதுரைக்கு என்ன தோன்றியதோ என்னவோ, "இருப்பா..." என்பது போல் அவர் கையைப் பிடித்து நிறுத்த, உள்ளேயிருந்து சீஃப் டாக்டரின் குரல் பெரிதாக ஒலித்தது

அந்தக் குரல் ஒலித்த வேகம் பார்த்துச் சியாமளன் மிரண்டு போனான். மெதுவாகத் திரும்பித் தங்கதுரையின் முகம் பார்க்க, அவர் உணர்ச்சி நிறைந்த முகத்தில் பல்லைக் கடித்துக் கொண்டு, "மனுஷன் ஆரம்பிச்சுட்டார்..." என்று முணுமுணுப்பது தெரிந்தது.

## 2

ஆவேசமாக ஒலித்தது தலைமை மருத்துவரின் குரல்.

"கிட்டத்தட்ட செத்துப்போன ஆளைக் கொண்டு வந்து காப்பாத்துங்கன்னா, எப்படிக் காப்பாத்தறது? என்ன பண்ணிகிட்டிருந்தீங்க, இத்தனை நாள்? நாங்க என்ன மந்திர மாயமா செய்ய முடியும்?" என்று சற்று நேரம் கத்தினார்.

அதற்குள் நர்ஸ்கள் ஓடி வர ஸ்ட்ரெச்சரை உள்ளே கொண்டு போனார்கள்.

நோயாளியின் உறவினர்கள் அதிர்ச்சியில் திகைத்துப் போய் நின்றார்கள்.

சியாமளன் மெதுவாகத் திரும்பித் தங்கதுரையைப் பார்க்க, அவர் உதட்டைப் பிதுக்கினார்.

"சரி சரி... வாங்க... நாம் சாப்பிடப் போகலாம்..." என்று போய் விட்டார்கள்.

அப்போதுதான் சொன்னார். "பாஸ்கரன் சார் இருந்தா... பெரிய பிரச்சினை யெல்லாம் இருக்காது..." என்று.

மேலும் விவரித்துச் சொல்லச் சொல்லிக் கேட்பதற்கு அவனுக்குப் பயமாக இருந்தது. அவரும் விரிவாகச் சொல்லவில்லை..

பிற்பகலில் வேலை சரியாக இருந்தது. அவன் அன்றைக்கு வீடு திரும்புகையில் மணி ஏழாகி விட்டிருந்தது.

* * *



"என்னடா, நோக்கு வேலை பிடிச்சுதா? முதல் நாள் அனுபவம் எப்படி? பிடிச்சுதா?" என்று ஆவலாக விசாரித்த அம்மாவிடம், "அம்மா... பெரிய ஹாஸ்பிடல் சீஃப் ஃபிஸிஷியன்தான் இன்னைக்கு இருந்தார். சீஃப் சர்ஜன் நாளைக்கு வர்றார். நல்ல ஆஸ்பத்திரி. நிறையக் கத்துக்கலாம். வளர்ச்சிக்கும் வாய்ப்பிருக்கு!" என்று அவன் சொல்லவும், அம்மா மகிழ்ச்சியடைந்தார்.

"ரொம்பக் கஷ்டப்பட்டுப் படிச்சியேடா, ராஜா... அதற்கான பலன் கிடைக்காமப் போகாது..." என்றார் ஆசீர்வதிக்கும் குரலில்.

"சரியம்மா. பசிக்குது.. சாப்பிடக் குடு." என்று அமர்ந்தவனின் அருகில் இரண்டு புறமும் அமர்ந்தார்கள் சகோதரிகள்.

அவன் இருவரையும் பார்த்துச் சிரித்தான். அம்மாவின் கை வண்ணத்தில் சப்பாத்தியும், குருமாவும், இட்லியும் சுகமாக இறங்கின.

"அண்ணா... ஒரே வருஷத்துல பெரிய ஆளாயிருவியா...? அப்புறம்... எனக்குத் தனியா லேப் வச்சுத் தருவியா?" என்றாள் வாசுகி.

"வாசுகி... நேக்குப் பணம் வந்தா... உங்களுக்கெல்லாம் செய்யாம யாருக்குச் செய்யப் போறேன்?" என்றான். மென்மையாகப் புன்னகைத்தான்.

சாப்பிட்டு முடித்தவுடன் சிரித்தான்.

என்ன என்பது போல் அவர்கள் இருவரும் பார்க்க... அவன் வாசுகியைப் பார்த்து, "இல்லே? பெரிய ஆளா ஆனா... நோக்கு லேப் வச்சுத் தரலாம்... முடியும்... ஆனா... ஜெயக்காவும் நேக்கு ஸ்கூல் கட்டிக் குடுடான்னு கேட்டா... என்ன பண்றதுன்னு யோசிச்சேன்." என்றவுடன் மூவரும் சிரித்தார்கள்.

பிறகு ஜெயா, "ஏன்டா அப்படிச் சொல்றே? அப்படியும் ஒரு காலம் வரக்கூடாதுன்னு இருக்கா... என்ன? இந்தா... பக்கத்துல இருக்கற சாதாரணப் பள்ளிக்கூடத்துக்குத்தானே நாம

போனோம்? அப்ப நாம நெனச்சமோ... இப்படி நம்மாத்துல எல்லாரும் படிப்பாளிகளா வருவோம்னு... நடக்கலையா? கடவுள் நினைச்சா எது வேணும்னாலும் நடக்கலாம்... தெரியுமோ?'' என்றாள் தத்துவார்த்தமாக.

பிறகு அம்மா, அப்பாவிடம் தனியாகப் பேசினான். சம்பளம் எவ்வளவு வரும், எப்படியெப்படிச் செலவு செய்யலாம் என்று திட்டம் போட்டுக் கொள்கையில், அப்பா சொன்னார்.

''டேய்... ஷ்யாம்... இப்பப் போலவே முடிஞ்ச வரைக்கும் சிக்கனமா இருப்போம்... ஏன்னா... ரெண்டு பொண்ணுங்க கல்யாணம் இருக்கு... நந்துவோட படிப்பு இருக்கு...'' என்றார்.

அப்பாவைக் கனிவாகப் பார்த்தான்.

''போதும்ப்பா... சிக்கனம் சிக்கனம்னு மாஞ்சு மாஞ்சு இருந்ததெல்லாம் போதும்... அம்மாவும், நீங்களும், இனிமே உங்களுக்காகவும், கொஞ்சம் தாராளமாகவும் செலவழிக்கணும், என்ன?'' என்றான்.

அம்மாவை வலத் தோளோடு சேர்த்து இறுக்கிக் கொண்டான்.

''இத பாருங்கோப்பா... என்ன அழகு... அம்சம்... மகாராணியா வாழ வேண்டியவ எங்கம்மா... இனிமே அம்மாவை மகாராணியாவே வச்சக்குவேன்...!'' என்றான்.

''அப்புறம் என்னை?'' என்பது போல் அப்பா பார்க்க...

''என்னப்பா சந்தேகம்? நீங்களும் மகாராஜாதான்...'' என்றான்.

சிரித்துக் கொண்டே தனது அறைக்குப் போனான்.

அம்மாவும், அப்பாவும் ஒருவரை யொருவர் நெகிழ்ந்து போய்ப் பார்த்துக் கொண்டு நிற்க...

''ஐயய்யோ... அண்ணா... இங்க வந்து பாரு... ஒரே ரொமான்ஸ்தான்,'' என்று நந்து குரல் கொடுக்க...

''போடா... குட்டிக் குரங்கே!'' என்று செல்லமாகத் திட்டியபடி... அம்மா சமையல் அறைக்குப் போனாள்.



வாசுகி அவனுடைய அந்த முன்னறைக்கு வந்தாள். அதில் பாதியைத் தடுத்து ஒரு மாதிரியாக கிளினிக் வடிவத்துக்குத் தேற்றி வைத்திருந்தாள்.

''அண்ணா...'' என்று வந்தவள், ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்திருப்பதைப் பார்த்து எதிரில் அமர்ந்தாள்.

''என்ன ஷ்யாம்?'' என்றாள்.

''இல்லே... பெரும்பாலான நாள் அம்மா நமக்கெல்லாம் இருக்கற காய்கறியைப் பரிமாறிட்டு... வெறுமனே மோருஞ் சாதத்தை அள்ளிப் போட்டுண்டு வேலை பண்ணுவா, தெரியுமோ? பாவம்டி அவ... தெய்வப்பிறவி... இனிமே அம்மாவை நன்னா வச்சக்கணும்டி,'' என்று உருகினான்.

''ஆமாண்ணா,'' என்றாள் வாசுகி. ''அதான் நானும் ஜெயாக்காவும் அவா ரெண்டு பேரும் ஒழுங்காச் சாப்பிடறாளான்னு பாக்கறதுக்காகவே அவா கூடத்தான் உட்கார்ந்து சாப்பிடறது...'' என்றாள்.

''ஆமாடி... சத்தா சாப்பிடறதுக்கு ஒண்ணும் பெரிசா செலவழிக்க வேண்டியது இல்லைடி... அந்தந்த சீஸன்ல கிடைக்கற ஃப்ருட்ஸ், பருப்பு... காய்கறி... கீரை பால்னு சாப்பிட்டாலே போதும். அப்புறம்... இந்த மாடு கன்னு பாத்துக்கறதுக்கெல்லாம் ஆள் போட்டுக்கலாம்டி...'' என்றான்.

''ஆமா.... ஷ்யாம்,'' என்றாள் சகோதரி.

ஒருநாள் வேலைக்குப் போய் வந்தவுடன் குடும்பத்தைத் தூக்கி நிறுத்துவதற்காக அவன் திட்டம் போட்டுக் கொண் டிருந்தான்.

அந்த வேலை அவ்வளவு எளிமையாக இருக்கப் போவதில்லை. நிறையச் சோதனைகளையும், போராட்டங்களையும் சந்திக்க வேண்டியிருக்கும் என்று அப்போதைக்கு அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

* * *

"அளவு கடந்த மகிழ்ச்சி இருந்தாலும் அவ்வளவு சீக்கிரம் தூக்கம் வராதாமே?" என்று சகோதரியிடம் கேட்டான்.

அவள் அன்புடன் சிரித்தாள்.

"ஆமாம் ஷ்யாம். அதுசரி... இன்றைக்கு எதுவும் புதுமையான அனுபவம் இல்லையா? மார்ச்சுவரி முதல் முதலாய்ப் போயிட்டு வந்த அன்னைக்குச் சாப்பிடவே செய்யாத ஆளாச்சே ஷ்யாம்... நீ?" என்றாள் ஜெயலட்சுமி.

ஷ்யாம் நீண்டதொரு பெருமூச்சு விட்டான். 'அதெல்லாம் அப்ப! இப்பவெல்லாம் அப்படி இருக்க முடியாது!" என்றான் சியாமளன்.

அதோடுகூடத் தலைமை மருத்துவரின் ஆர்ப்பாட்டத்தையும் பகிர்ந்து கொண்டான். அதற்கப்புறம் நடந்ததையும் சொன்னான்.

அவனும் டாக்டர் தங்கதுரையும் மாலை நேரம் காரிடாரில் நடந்து கொண்டிருந்தார்கள். அப்போது இரண்டு பெண்மணிகள், காலையில் வந்த பேஷண்டோடு வந்தவர்கள், கண்ணீரும் கம்பலையுமாய் நின்று கொண்டிருந்தார்கள்.

தங்கதுரை நின்றார்.

"என்னம்மா? கவலையா? உங்க பேஷண்ட் இம்ப்ரூவ் ஆயிடுவார்... கவலைப்படாதீங்க..." என்றார்.

"பின்னே பெரிய டாக்டர் அப்படிப் பேசறாரே!" என்று இழுத்தாள் ஒருத்தி. கவலை தோய்ந்த முகத்துடன்.

"அவர் பெரிய டாக்டர் இல்லையா? அப்படித்தான் சத்தம் போடுவார். ஆனா... கெட்டிக்காரர்ம்மா... உங்க ஆளைப் பிழைக்க வச்சிடுவார்... சரியா...?" என்றார் ஆறுதலாக.

அவர்கள் முகங்களில் இரசாயன மாற்றம் போல் தெளிவு தெரிவதைச் சியாமள கிருஷ்ணன் புன்னகையுடன் பார்த்துக் கொண்டு நின்றான்.



டாக்டர் தங்கதுரை தலையசைத்து விட்டு நகர்ந்தார். ஆனால், காலையில் எப்படி அதைப் பற்றிப் பிறகு பேசவில்லையோ, அதேபோல இப்போதும் எதுவும் தொடர்ந்து பேசாமல் வேறு விஷயத்துக்கு மாறி விட்டார்.

வாசுகி ஆஸ்பத்திரியைப் பற்றி விவரமாகக் கேட்டுக் கொண்டாள்.

அமெரிக்க வாழ் இந்தியர் தனிப்பட்ட முறையில் ஒரு அறக்கட்டளை தொடங்கி அதில் ஆரம்பித்துள்ள மருத்துவமனையாம். ஆனால், யாருமே இதுவரை அவரை நேரில் பார்த்தது இல்லையாம்.

அவர் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள விரும்புவது இல்லையாம். மருத்துவமனையின் நிர்வாகிக்குக்கூட அவரைப் பற்றிய அவருடைய குடும்பத்தையும் பற்றிய புகைப்படங்களே அனுப்பப்பட்டதில்லையாம்.

"அதுதான் ஜெயாக்கா ஒரே ஆச்சரியமா இருக்கு!" என்றான், சியாமளன்.

"அதைவிடு... நோக்கென்ன அதைப்பத்தி... நோக்கு வேலை குடுத்திருக்கா... நம்பிக்கையா நடந்துக்க," என்றாள் வாசுகி.

ஹாலில் பாயைப் போட்டு வட்டமாக அமர்ந்து அவர்கள் அரட்டை அடிக்க...

"என்ன இப்போ அரட்டை? நேரமாகலையா? அவன் களைச்சுப் போய் வந்திருப்பான். தூங்க விடுங்கோளேன்டி..." என்ற அம்மாவின் குரல்கேட்டவுடன் சபை கலைந்தது. நந்துவும் அவனும் ஒரே அறையைப் பங்கிட்டுக் கொண்டார்கள்.

நந்து சிரித்தான்.

"என்னடா?" என்றான் சியாமளன்.

"அண்ணா, பெரிய சர்ஜனாகப் போறே? அம்மாவோட அதட்டலுக்குப் பயப்படறியே!" என்று மறுபடியும் சிரித்தான்.

''பயமில்லடா... அது அம்மாவோட அன்பைப் புரிஞ்சுக்கறது. நோக்கு அதெல்லாம் புரியாதுடா,'' என்றான்.

''சரி சரி... ஆரம்பிச்சுராதே...'' என்று எதிர்க் கட்டிலில் போர்வையைத் தலையோடு சேர்த்துப் போர்த்துக் கொண்டு உறக்கத்தில் ஆழ்ந்தான் நந்து.

சியாமளனும் புன்சிரிப்புடனே உறக்கத்தில் ஆழ்ந்தான்.

* * *

அவர் நடந்து வருவதே பார்க்கக் கண்கொள்ளாக் காட்சி போல் இருந்தது சியாமளனுக்கு.

நல்ல உயரம், புது நிறம். நீள வெள்ளைக் கோட்டை அணிந்து கொண்டு கால்களை எட்டி வைத்து அவர் நடந்து வர, உடன் அவரது உதவியாளரும், நர்ஸும் வந்து கொண்டிருந்தார்கள்.

அவர்தான் பாஸ்கரன். அந்த ஆஸ்பத்திரியின் சீஃப் சர்ஜன். உலக அளவில் அறியப்பட்டவர். தனிப்பட்ட முறையில் இந்த ஆஸ்பத்திரியின் நிறுவனர் வேண்டிக் கொண்டதால் இங்கு வந்து சேர்ந்தாராம்.

பாஸ்கரன் கை வைத்தால் பழுது பட்டுப் போன இதயத்தையும் தூக்கி நிறுத்திவிடுவாராம். அவர் ஆபரேஷன் செய்ய ஒத்துக் கொண்டாலே போதும். பேஷண்ட் தெம்பாகி எதிர்காலம் பற்றித் திட்டம் தீட்டி விடுவாராம்.

அவர் முகத்திலே ஒரு தேஜஸ் இருப்பதைப் பார்த்து உள்ளுக்குள் வியந்தபடி நின்று கொண்டிருந்தான் சியாமளன்.

அவர் தனது அறைக்குள் நுழைந்து விட்டதற்குப் பிறகுதான் அவனுக்குச் சுயநினைவு வந்தது.

அவர் அறை நோக்கி ஓடினான்.

மற்றவர்கள் அவனை அறிமுகப்படுத்தினார்கள். அவன் பயபக்தியுடன் வணக்கம் சொன்னான்.

''ஓ! நீங்கதானா, மெடிகல் காலேஜ் டீன் ரொம்பவும் புகழ்ந்த அந்த யங் மேன். வெரிகுட்... வெரிகுட்...'' என்றார் மெல்லிய குரலில்.



சீஃப் பிஸிஷியன் சுந்தரேசனுக்கு நேர் எதிராக இவர் மெல்லிய குரலில் பேசினார். டென்ஷனே இல்லாமல் இயல்பாக இருந்தார்.

சியாமளனுக்குப் பெரிதான ஒரு விடுதலை உணர்வு தோன்றியது.

''நல்லவேளை... தான் ஒரு சர்ஜன் என்பதால் இவருக்குக் கீழேதான் வேலை செய்ய வேண்டும்,'' என்று எண்ணிய போதே, அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

அவனிடம் அவன் தகுதிகள் பற்றிச் சற்றுக் கேட்டுக் கொண்டார்.

''பரவாயில்லப்பா... சின்ன வயசுலயே பெரிய படிப்பை முடிச்சுட்டு வந்துட்டீங்க... வாழ்த்துக்கள். நம்மளுது ரொம்பப் பொறுப்பான வேலை. எல்லா முடிவும் ஆண்டவன் கையிலன்னாலும் இடையில சில திருத்தங்கள் செய்யறதுக்குக் கடவுள் நம்மளைக் கருவியாக்கிக்கறாரு. நிறத்துலயும் சரி, அளவிலயும் சரி, ஒரு தாமரையைப் போல இருக்கிற எல்லையில்லாத சக்தியோட அருள் நமக்குப் புரியும்,'' என்று ஒரு கணம் தன்னை மறந்து பேசியவர் அவனது லயித்த பார்வையைக் கண்டு புன்னகைத்தார்.

''ரொம்ப... பிலாசஃபி பேசறேனோ? அதுக்காக எப்பவும் சீரியஸா இருக்கணும்ங்கறது இல்லே... ஃப்ரீயா வேலை செய்யலாம்.... என்ன,'' என்றார்.

அவன் உற்சாகமாகத் தலையாட்டிக் கொண்டான் அன்றைக்கு அவனுக்குப் புரிந்து போனது, பாஸ்கரனின் கீழே வேலை செய்வது ஒரு அற்புதமான அனுபவமாக இருக்கும் என்று.

## 3

மூன்று மாதங்கள் வேகமாக ஓடிவிட்டன.

பாஸ்கரன் அவனை மிகவும் மதித்து வைத்துக் கொண்டார். இவர்களைத் தவிர

இன்னும் மூன்று பேர் அறுவைச் சிகிச்சைத் துறையில் சிறப்பாகப் படித்து விட்டு வந்திருந்தார்கள்.

பாஸ்கரன் ஒரு நாள் அவனிடம் தனியாகச் சொன்னார்.

"ஷ்யாம். இதே உற்சாகத்தோடும், ஆர்வத்தோடும் நீ வேலை செஞ்சா, நீயும் ஒரு பெரிய சர்ஜனா வர்றதுக்கு எல்லா வாய்ப்பும் இருக்கு..." என்றார்.

அன்றைக்கெல்லாம் ஏதோ வானத்தில் மிதப்பது போல் உணர்ந்தான்.

நிறைய அனுபவங்களும் ஏற்பட்டன. அன்றைக்கு அவன் முக்கியமான ஒரு அறுவைச் சிகிச்சையில் பாஸ்கரனுக்கு உதவியாக இருந்து விட்டு வெளியே வந்தான்.

அறுபத்தைந்து வயது முதியவர் ஒருவரை அட்மிட் செய்தார்கள்.

அன்றைக்கு மறுநாள் அவருக்குப் பிறந்த நாளாம். அமெரிக்காவில் இருந்து ஒரு மகனும், டெல்லியில் இருந்து ஒரு மகளும் அன்று வருவதாக இருந்தார்கள்.

உறவினர்களிலேயே சற்று ஏழ்மையான குடும்பம் ஒன்றைத் தங்கள் அவுட்ஹவுசில் குடி வைத்து விட்டுத் தான் அந்தச் சிறிய பங்களாவில் இருந்தாராம்.

குழந்தைகளைப் பல நாட்களுக்குப் பிறகு சந்திக்கிறோம் என்ற மகிழ்ச்சியில் உணர்ச்சி வசப்பட்டிருந்தாராம்.

உறவினர் குடும்பத்தில் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த ஒரு பெண் ரீடா அவரிடம் பாசமாக இருப்பாளாம்.

திடீரென்று பிற்பகல் மாரடைப்பு என்று கொண்டு வந்தார்கள். டாக்டர்கள் கடுமையாக முயற்சி செய்தும் முடியவில்லை. உறவினர்கள் வரும்வரை உள்ளேயே வைத்திருந்தார்கள். உடன் ஐ.சி.யூ.வில் இருக்கிற நோயாளிகளுக்குக்கூடத் தெரியவில்லை.



ஆழ்ந்த வருத்தத்தோடு அவன் வெளியே வந்தபோது, காரிடாரில் அந்தக் கடைசி மூலையில் அந்த ரீடா என்கிற பெண் மண்டியிட்டுக் கரைந்து அழுத வண்ணம் பிரார்த்தனை செய்த காட்சியைப் பார்க்க நேர்ந்தது அவன் நெஞ்சைப் பிசைந்தது.

கடவுள் ஏன் அந்தக் குழந்தையின் பிரார்த்தனைக்குச் செவி சாயக்கவில்லை? பல நாட்கள் கழித்துப் பார்க்க வருகிற குழந்தைகளோடு ஓரிரு நாள் செலவழிக்கிற அதிர்ஷ்டம் கூட அந்த முதியவருக்கு ஏன் கிடைக்காமல் போனது என்று பலவும் எண்ணி மூட் அவுட்டாகி விட்டான்.

தங்கதுரைதான் தேறுதல் சொன்னார்..

"வாழ்க்கையில் எல்லாக் கேள்விகளுக்கும் விடை கிடைப்பது கடினம், ஷ்யாம். இருக்கிற விஷயங்களை இருக்கிற வாக்கில் எடுத்துக் கொள்வது நல்லது." என்று சொன்னபோது ஓரளவு மனம் தேறிக் கொண்டான்.

கசப்பான அனுபவங்களையெல்லாம் பெற்றோரிடம் சொல்ல மாட்டான். வாசுகியிடமும், நந்துவிடமும் மட்டும் பகிர்ந்து கொள்வான்.

"அடப்போ! உடம்பு உடம்புன்னு பயந்துக் கிட்டு இருந்தா வேலையாகாது அம்மிணி, உன்ற சோலியப் பாரு... போ... நீ!" என்று மனைவியை அதட்டியபடியே கையில் டிரிப்ஸ் ஏறிக் கொண்டிருக்க, இடுப்பில் கை வைத்துக் கொண்டு நன்கு தெம்பாக நிற்கிற கிராமத்துப் பெரியவரை ரசித்துப் பார்த்த அனுபவமும் உண்டு.

அந்த ஆஸ்பத்திரியில் இரண்டு விதமாக நோயாளிகளைப் பிரித்தார்கள்.

வசதியானவர்களிடம் அதற்கேற்ற வகையில் நியாயமான தொகையை வசூலித்தார்கள். ஏழ்மையானவர்களுக்குச் சலுகையில் அறுவைச் சிகிச்சை செய்தார்கள்.

மருத்துவமனையில் கிடைக்கக் கூடிய வருவாயைத் திரும்ப மருத்துவமனை நிர்வாகத்திலேயே முதலீடு செய்ததோடு, இதய

மருத்துவத் துறையில் வரக்கூடிய எல்லாப் புதிய சாதனங்களையும் மருத்துவமனையில் வரவழைத்தார்கள்.

மருத்துவமனை நவீன மயமாகி இருந்தது. அங்கே வேலை செய்வது நல்ல அனுபவமாகவும் இருந்தது.

ஒவ்வொரு நாளும் ஒரு புதிய விஷயம் கற்றுக் கொண்டான். பாஸ்கரனின் இதயத்தில் அவனுக்கு ஒரு நல்ல இடம் கிடைத்தது. அதே சமயம் சுந்தரேசன் ஏனோ அவனைச் சிறு பிள்ளையைப் போலவே நடத்தினார்.

''நாங்களெல்லாம் அந்தக் காலத்தில் ஒரு நல்ல இடத்தைப் பிடிப்பதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டோம். ஆனா, இப்பல்லாம் சின்னப் பசங்கள்ளாம் ஃபீல்டுக்கு வந்தர்றாங்க...'' என்று பேசும்போது கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். ஆனால் எதையும் காட்டிக் கொள்ள மாட்டான்.

பத்து நாட்களுக்கொரு முறை துறையின் எல்லா டாக்டர்களும் அமர்ந்து அறுவைச் சிகிச்சை யார் யாருக்குச் செய்ய வேண்டும் என்று தீர்மானிப்பார்கள். அந்தச் சமயங்களில் விவாதங்கள் நடக்கும். ஆனால், தீப்பொறி பறக்கும் வசனங்கள் இருக்காது. காரசாரமான விவாதம் இருக்காது. ஆனால், கருத்துக்கள் அழுத்தமாக எடுத்து வைக்கப்படும். அவன் ஆச்சரியத்தோடு அவைகளையெல்லாம் மனதில் குறித்துக் கொள்வான்.

நோயாளிகளிடம் பாஸ்கரன் எவ்வளவுக்கெவ்வளவு மென்மையாகப் பேசுகிறாரோ. அந்த அளவுக்குச் சுந்தரேசன் கடுமையாகப் பேசுவார். அவனுக்கு இப்போது அது பழகிப் போனது.

நோயாளிகளை ஐ.சி.யூனிட்டில் வைத்திருக்கும்போது, வெளியிலே அமர்ந்து யாராவது நெஞ்சு வெடிக்கிறாற்போல் அழுதால் மட்டும் நின்று விசாரிப்பான்.

''அம்மா... அழாதீங்க... கடவுளை வேண்டிக்குங்க. இங்க இருக்கறவங்க எல்லாம் பெரிய பெரிய டாக்டருங்க. அவங்க உங்களுக்காக எவ்வளவு முயற்சி செய்யணுமோ, அவ்வளவு



செய்வாங்க கடவுள் கிருபை இருந்தா எல்லாம் வெற்றியாய் முடியும்...'' என்று தேறுதல் சொல்வான்.

தங்கதுரையிடம் இருந்து இதை அவன் கற்றுக் கொண்டான் என்று சொல்ல வேண்டும். சுந்தரேசன் தேவையில்லாமல் கோபப்படுகிறார் என்று தெரிந்தபோதும் கூட அவனிடமோ நோயாளிகளிடமோ அவரை விமர்சித்துப் பேசியதேயில்லை. மாறாக விட்டுக் கொடுக்காமல் பேசுவார்.

''பாஸ்கரன் சர்ஜரி மட்டும் பார்த்துட்டுப் போயிடறார். சுந்தருக்கு நிர்வாகமும் பார்க்க வேண்டியிருக்கு. அதுதான் பிரச்சினை... டென்ஷன்...'' என்பார்.

ஒரு நாள்...!

ஒரு பேஷண்ட்டிடம் சுந்தரேசன் அநியாயத்துக்குச் சத்தம் போடுவதைப் பார்த்தபடி இருவரும் கேன்டீன் போய்க் கொண்டிருந்தார்கள். அப்போது இப்படி விளக்கம் சொல்லிக் கொண்டு வந்த தங்கதுரையைப் பார்த்து அவன் வாஞ்சையாகப் புன்னகைத்தான்.

''வர வர உங்களை எனக்கு ரொம்பப் பிடிக்குது சார்...!'' என்றான்.

அவர் இதை எதிர்பார்க்கவில்லை. திரும்பி அவனைப் பார்த்துச் சிரித்தார்.

''இத தப்பாச்சேப்பா...'' என்றார்.

''எது...?''

''இந்த வயசிலே என்னை மாதிரி வயசானவங்களைப் பிடிக்குதுங்கறே? எத்தனை நர்ஸ் பொண்ணுங்க சுத்தி வர இருக்குதுங்கோ... திரும்பியும் கூடப் பாக்க மாட்டேங்கறே!'' என்று கேலி செய்தார்.

அவன் மௌனமாகி விட்டான்.

''என்னப்பா... சத்தத்தையே காணோம்?'' என்றார்.

''சார்... எனக்கு ரெண்டு சிஸ்டர்ஸ் கல்யாண வயசு தாண்டி இருக்காங்க... என்னை இந்த நிலைமைக்குக் கொண்டுவர என்

குடும்பமே நிறையத் தியாகம் செய்திருக்கு... என் முதல் கடமை குடும்பத்துக்குத்தான்...'' என்றான்.

''தட்ஸ் குட்...'' என்று அவரும் பாராட்டிக் கொண்டார்.

அன்றொரு நாள்.

வார்டின் உள்ளே 'சுந்தரேசன் சாரால் ஏகத்துக்கும் பய முறுத்தப்பட்ட குடும்பம் ஒன்று கதிகலங்கிப் போய்ப் புலம்பிக் கொண்டிருந்தார்கள்.

நோயாளி ஒன்றும் அவ்வளவு மோசமான நிலையில் இருக்கவில்லை.

அவனுக்கே பொறுக்கவில்லை. அவர்களை அழைத்து, 'ரொம்ப பயப்படவேண்டாம்,' என்று அவர்கள் மனதில் பதிகிற மாதிரி ஆறுதல் சொல்லித் திரும்பினான்.

உடனே அறைக்குள் நுழையுமிடத்தில் டாக்டர் சுந்தரேசன் நின்று கொண்டிருந்தார்.

அவர் கண்களில் கட்டுக்கடங்காக் கோபம் தெரிந்தது.

''என்னப்பா... நாங்க தேவையில்லாமக் கத்தற மாதிரி சீன் கிரியேட் செய்றீங்களா, என்ன?'' என்றார்.

''ஐயய்யோ... அப்படியில்லை, சார். அவங்க ரொம்பப் பயந்து கிடக்கறாங்க. அதான்...'' என்றான்.

''ம்...!'' என்று உறுமி விட்டுப் போனார்.

தங்கதுரை அன்று அவர்கள் உணவருந்தும் போது மௌன மாகவே வந்தார்.

''ஷ்யாம்!'' என்று ஏதோ சொல்ல வந்து விட்டு நிறுத்தினார்.

அவன் அவர் தயக்கத்தைப் பார்த்து...

''எதுவானாலும் சொல்லுங்க... சார்...'' என்றான்.

''ம்... என்னோட விஷயம் வேற... நான் விஷயங்களை டாக்கிள் செய்யற விதம் வேற... நீ எதுக்கும் சுந்தர் விஷயத்துல கிராஸ் பண்ணாம இருக்கறது நல்லது. ஹி ஹேஸ் இன்ஃப்புளுயன்ஸ்!''



என்றார். அந்த 'ஹேஸ்' என்ற வார்த்தையைச் சற்றே அழுத்திச் சொன்னார். அவன் புரிந்து கொண்டதற்கு அடையாளமாய்த் தலையை அசைத்தான்.

அன்றைக்கெல்லாம் மனமும், முகமும் வாடி விட்டது.

''வாட்ஸ் ராங் வித் யூ?'' என்று மற்றவர்கள் விசாரித்தபோது கூட அவன் ஏதும் சொல்லவில்லை.

* * *

வெகு நேரம்வரை உறக்கம் வரவில்லை.

எழுந்து மொட்டை மாடிக்காவது போகலாம் என்று போனான்.

தான் மட்டுமில்லை, வேறு இரண்டு பேரும் அந்த நேரத்தில் உறங்காமல் இருக்கிறவர்கள் என்று புரிந்து கொண்டான்.

அம்மாவும், அப்பாவும் மொட்டை மாடியில் இருந்தார்கள்.

அப்பாவுக்கென்று ஒரு ஈஸிசேர் எப்போதும் மொட்டை மாடியில் இருக்கும். அதில் அவர் அமர்ந்திருக்க, அம்மா அருகில் அமர்ந்திருந்தாள்.

'இல்லே, பாவம் குழந்தை வரும்போதே களைச்சு வர்றான். எப்படி அவனை மேலும் தொல்லை பண்றதுன்னு புரியலை,' என்று சொல்லிக் கொண்டிருந்தார் கார்த்திகாயினி.

''ஆமா... கஷ்டமாத்தான் இருக்கு... ஆனா... சொல்லித்தான் ஆகணும். ஜெயாவுக்கும் வயசு ஏறிண்டே போறதே!'' என்றார் அப்பா.

''அவன்தான் மொத்தச் சம்பளத்தையும் கொண்டு வந்து குடுத்திண்டிருக்கானே. வேற எந்த விதத்துல அவனைப் பணம் கேக்கறது?'' என்றார் அம்மா.

''நேக்கும் புரியலடி. எப்படியோ அவன்தான் கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணணும். அதுக்கு முன்னாடி நல்ல வரன் பார்க் கணும். வாசுகிக்கும் ஏதாவது வழி பண்ணணும். வீட்டு மேலே ஏற்கெனவே கடன் வாங்கியாச்சு... என்னடி செய்யறது?'' என்று

அப்பா தன் வருத்தத்தையெல்லாம் கொட்டிக் கொண்டிருப்பதைக் கேட்டு அவன் திகைத்து நின்று விட்டான்.

மெல்லத் திரும்பித் தன் அறைக்கு வந்து விட்டான். படுக்கையில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான்.

ஆமாம்... தன்னை விட இரண்டு, மூன்று வயது பெரியவள் அக்கா. உயரம் சற்றுக் குறைவாக இருந்தாலும், அழகாகப் பொம்மை போல் இருப்பாள். வயசு தெரியாது என்றாலும் அவள் வயசுக்கு ஏற்றபடி வரன் பிடிக்க வேண்டுமே.

கடந்த மூன்று மாதமாக வேலை, அது தொடர்பான விஷயங்கள் என்று அதிலேயே மூழ்கியதில் இந்த விஷயங்கள் எல்லாம் மறந்து போய் விட்டன. எப்படி மறக்கலாம்? கூடவே இதற்கான முயற்சிகளிலும் ஈடுபட வேண்டும்.

பணம்? பணத்துக்கு ஏதாவது செய்யத்தான் வேண்டும். யோசனையுடன் படுக்கையில் சாய்ந்தான்.

சென்ற வாரத்தில்தான் நண்பன் ஒருவனின் சகோதரி காதல் திருமணம் செய்து வெளியேறினதைச் சொல்லி வருத்தப்பட்டுக் கொண்டிருந்தான்.. ஆனால் தன் சகோதரிகள் குடும்ப நிலை உணர்ந்து பொறுமையாக இருக்கிறார்கள். அதற்காகத் தாங்களும் அப்படியே பொறுப்பில்லாமல் விட்டு விடுவதா...?

சிந்தனையில் ஆழ்ந்தவனுக்கு உறக்கமே வரவில்லை.

அவன் கவலை யெல்லாம் அவன் முகத்திலேயே தெரிந்தது போலும். கடவுள் அடுத்த நாள் வேறுவிதமாக உதவிக்கு வந்தார்.

## 4

பாஸ்கரனின் அந்தப் பெருந்தன்மையான கேள்வியைக் கேட்டு ஷ்யாம் உண்மையாகவே மலைத்துப் போனான்.

இரண்டாவது சகோதரிக்குத் திருமணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அவன் கவலையுடன் சொன்னதைக் கேட்டுத்தான் அவர் அப்படிச் சொன்னார்.



"ஷ்யாம், நீ வந்ததில் இருந்து நான் ரொம்ப ஃப்ரீயா இருக்கேன். ஆபரேஷன்ஸ்ல எல்லாம் முக்கால்வாசி நீயே பாத்துக்கறே. எனக்கும் பணத்துக்கு ஒண்ணும் பிரச்சினையில்லை. மகன்தான் அமெரிக்காவில் கம்ப்யூட்டர் என்ஜினியரா சம்பாதிக்கறானே. ஒவ்வொரு ஆபரேஷன்லயும் எனக்குக் கிடைக்கிற ஃபீஸ்ல ஒரு ஷேர் (ஒரு தொகையைக் குறிப்பிட்டார்) உன் ஷேராக் கொடுத்துரட்டுமா?" என்றார்.

அதைக் கேட்டுத்தான் அவன் அப்படி மலைத்துப் போனது.

ஒரு நிமிடம் மௌனமாக மேஜையைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான். பிறகு நிமிர்ந்து அவரைப் பார்த்தான். வாஞ்சையாய்ப் புன்னகைத்தான்.

"ரொம்பத் தாங்க்ஸ் ஸார். உங்களுக்கு ரொம்பப் பெரிய மனசு. ஆனா, அது உங்களுக்குக் கொடுக்கப்படற ஃபீஸ்... அதை நான் வாங்கக் கூடாது. அதுமட்டுமில்லே... சார். இந்த மாதிரிக் குடுக்கல் வாங்கல்கள் நாளடைவில் நம்ம உறவைக் கெடுத்துடும். உங்க உறவை நான் எந்தக் காரணத்துக்காகவும் இழக்கத் தயாராயில்லே," என்றான்.

இப்போது மலைத்துப் போய் அமர்வது பாஸ்கரனின் முறையாயிற்று.

சற்று நேரம் கனத்த மௌனம் நிலவியது. பின் பாஸ்கரனின் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

"குட்... தட்ஸ் ரியலி குட்..." என்றார்.

"சரி... சாப்பிடு," என்றார் தொடர்ந்து.

அதிகமாகக் கான்டீன் பக்கம் வராத பாஸ்கரன் கூட ஷ்யாமுடன் வருகிறார் என்பது அந்த ஆஸ்பத்திரியில் ஒரு ஆச்சரியக் கிசுகிசுப்பை உலாவச் செய்திருந்தது.

அன்றைக்குப் பாஸ்கரனின் வீட்டில் வெளியில் போய் விட்டார்களாம். வீட்டுச் சாப்பாடு வரவில்லை. கான்டீன் பக்கம் ஷ்யாமுடன் வந்தார்.

ஷ்யாம், பாஸ்கரன் தன்னைச் சரியாய்ப் புரிந்துகொண்டாரோ என்ற கவலையுடன், அவர் முகத்தை முகத்தைப் பார்க்க, அவர் மறுபடியும் புன்னகைத்தார்.

''டோண்ட் வொரி யங் மேன்... நான் சரியான கோணத்துலதான் இதை எடுத்துக்கிட்டேன்...'' என்றார்.

அவன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

அவர் பொரியலைக் கொஞ்சம் எடுத்து வாயில் போட்டபடி,

''அதுசரி... உனக்கு எப்படியாவது ஹெல்ப் செய்யணும். எப்படி?'' என்றார்.

''சார்... எங்கயாவது நல்ல மாப்பிள்ளை இருந்தா சஜ்ஜஸ்ட் செய்ங்க... அப்புறம் எங்கயாவது ஈஸி டர்ம்ஸ்ல ஃபைனான்ஸ் அரேன்ஜ் பண்ணிக் குடுங்க. உங்க பேரைக் கெடுக்காம ஒழுங்காகக் கட்டிடறேன்...'' என்றான்.

''ஓ...! அது செய்யலாம்... தாராளமாச் செய்யலாமே!'' என்றார்.

ஷ்யாமுக்கு உலகமே வெளிச்சமானாற் போல் தோன்றியது. அவன் முக மலர்ச்சியைப் பார்த்து அவரும் உள்ளூர நெகிழ்ந்து போனார்.

* * *

''சார், நீங்க எங்க வால்யுபிள் கஸ்டமர். நீங்க கை காட்டுற இடத்துக்கு நாங்க லோன் குடுப்போம். ஏன்னா, நீங்க சரியான ஆளா இல்லாதவங்களைக் கை காட்ட மாட்டீங்க...'' என்று கலகலவெனச் சிரித்தார் பாங்க் மானேஜர்..

அரசு வங்கி ஒன்றில் பாஸ்கரன் தனது சொந்த ஜாமீனில் ஷ்யாமுக்குக் கடன் ஏற்பாடு செய்து கொடுத்தார்.

முதலில் ஏழு இலட்சம் ரூபாய் கொடுப்பதென்றும் மறுபடியும் தேவைப்படும்போது அதிகரித்துக் கொடுப்பதென்றும் ஏற்பாடு.

பேச்சினூடே பாஸ்கரன் ஷ்யாமின் சகோதரிகள் இரண்டு பேருக்குக் கல்யாணம் செய்ய வேண்டியிருக்கிறது என்பது பற்றிச் சொன்னார். உடனே பாங்க் மேனேஜர் ஒரு நிமிடம் யோசித்து விட்டு,



''சார், எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் ஸ்டேட் பேங்க் மானேஜரா இருக்கார். முப்பத்து நாலு வயசு. ரொம்பப் பொறுப்பானவர். மூணு சிஸ்டர்ஸுக்கு மேரேஜ் முடிச்சுட்டு இப்பத்தான் ஃப்ரீயாகி இருக்கார். இப்பத்தான் கல்யாணம் பண்ற ஐடியா வந்திருக்கு. பாக்கலாமா?'' என்றார்.

பாஸ்கரனும், ஷ்யாமும் உற்சாகமானார்கள்.

நரேந்திரன், அந்த மாப்பிள்ளை, ஷ்யாம் குடும்பத்துக்கு ஏற்றவராக அமைந்தார்.

முதலில் தானும் தன் பெற்றோரும் மட்டுமே பெண் பார்க்க வருவதாகச் சொன்னார்.

''ஷ்யாம், நடுத்தரக் குடும்பத்தோட கஷ்டங்கள் என்னன்னு நேக்கு நல்லாத் தெரியும். ஜாதகம் பொருத்தி வந்துருச்சுன்னா வுடனே பொண்ணு கூடப் பார்க்க வேண்டாம்னு நெனச்சேன். ஆனா, அம்மா, அப்பா பார்க்கப் பிரியப்படறா. வர்றோம். சிம்பிளா நடத்தாப் போதும். தடபுடல் பண்ணாதீங்கோ,'' என்றார்.

வந்தார்கள்.

''ஜெயாக்காவைப் பிடிக்காமப் போகுமாம்மா?'' என்று நம்பிக்கையாக இருந்தான் ஷ்யாம்.

''அதானே? அது சரி, மூணு பொண்ணுங்களுக்குக் கல்யாணம் பண்ணி வச்சிருக்கறாருங்கறே. மாப்பிள்ளை ரொம்ப வயசானவரா இருப்பாரோ?'' என்றாள் வாசுகி.

அப்போது அம்மா, ''வாசுகி... நம்ம ஜெயாவுக்கும் முப்பது வயசு தாண்டிடுச்சுடி. விவரமில்லாமல் பேசாதேடி,'' என்றார்.

ஷ்யாமுக்குச் சுருக்கென்று பட்டது. ''ஆமாம்மா... நானோ, அப்பாவோ இதைப் பத்தி முன்னமேயே யோசிச்சிருக்கணும் இல்லே?'' என்றவன் புன்னகையை வருவித்துக் கொண்டான்.

''டீ... வாசுகி... நோக்கு எந்தக் கவலையும் வாண்டாம். நம்ம ஜெயாக்காவுக்கு எப்படி பாக்கறப்போ வயசு தெரியலையோ... அதே மாதிரி நரேந்திரனுக்கும் வயசு தெரியாது. பொருத்தம் தான்... போதுமோ?'' என்றான்.

"அப்பாடா!" என்று நகர்ந்தாள் வாசுகி.

ஷ்யாம் சொன்ன மாதிரி இருபத்தைந்து, இருபத்தாறு தாண்டாத அளவுக்குத்தான் தோற்றம் அளித்தான் நரேந்திரன்.

நரேந்திரனின் அம்மாவும், அப்பாவும் ஜெயலட்சுமியைப் பார்த்தவுடன் மகிழ்ந்து போனார்கள்.

"வாம்மா... உட்காரு...!" என்று எதிரே உட்கார வைத்துக் கொண்டார்கள்.

நரேந்திரனை நேரடியாக ஒரு நிமிடம் பார்த்து விட்டு வணக்கம் சொன்னாள். அவனும் புன்னகைத்தபடி அவர்கள் பள்ளி பற்றி யெல்லாம் விசாரித்தான். ஒரு நிமிடம் அமர்ந்து விட்டு எழுந்து போனான்.

உண்மையிலேயே பொம்மை போல அழகாக இருந்த ஜெயலட்சுமியைப் பார்த்து நரேந்திரன் கருண்டுதான் போனான். ஷ்யாமும், நந்துவும், வாசுகியும் ஒருவர் மாற்றி ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

நரேந்திரனின் அம்மா சாவித்திரி, 'ஷ்யாம்... எங்காத்துப் பையன் ரொம்ப நல்லவன், தெரியுமோ? எல்லாக் கஷ்டங்களையும் சிரிச்சுண்டே சமாளிச்சக் குடும்பத்தைத் தாங்கி நிறுத்தினவன் தெரியுமோ? உங்காத்தலயும் நீ அந்த மாதிரித்தான்னு எல்லாரும் பேசிக்கறா," என்றாள்.

"அப்படியெல்லாம் இல்லே... மாமி. நேக்கு வாய்ச்ச சிஸ்டர்ஸும் எத்தனையோ தியாகம் செஞ்சிருக்கா..." என்றான் ஷ்யாம் அடக்கமாக.

மகனின் முகத்தைப் பார்த்த சாவித்திரியம்மா என்ன நினைத்தாரோ, திடீரென்று, 'நரேன், நோக்கு ஏதானும் பொண்ணுகிட்டே கேட்க வேண்டியிருந்தா கேட்டுக்கயேன்,' என்றார்.

சற்றே தயங்குகிறாற்போல் காட்டிக் கொண்டாலும் எழுந்து போனான்.



"பிடிச்சது பிடிக்கலேன்னு தைரியமா சொல்லீரலாம், என்ன?" என்றான் அவள் முகம் பார்த்து.

"பேரண்ட்ஸும், ஷ்யாமும் ஓகேன்னா?" என்று அவள் இழுத்தாள்.

"நோ... நோ... நோ... வாழப்போறது நீங்க... நீங்கதான் முடிவெடுக்கணும். ஷ்யாமுக்கோ, பேரண்ட்ஸுக்கோ என்னைப் பிடிக்கலேன்னா... ஆத்துக்குள்ள விட்டுருப்பாளா? நவ் டெஸிஷன் இஸ் யுவர்ஸ்..." என்றான்.

அவள் மௌனமாய் நின்றாள்.

"ஹலோ... நாசூக்கா சொன்னாலும் புரிஞ்சுப்பேன்," என்று சிரித்தான்.

அவள் முகம் சிவந்தாள். தலையைக் குனிந்து கொண்டாள். அந்தக் கணத்தில் அவள் பதில் அவனுக்குப் புரிந்து போனது.

தொடர்ந்து மௌனம் நிலவவே மெதுவாக நிமிர்ந்து பார்த்தாள். அவனுடைய ஆழ்ந்த பார்வை பார்த்துத் திகைத்துப் போய் நின்றாள்.

அவன் கிசுகிசுப்பான குரலில், 'ஜெயா... ரொம்ப அழகா இருக்கே நேக்குக்கூட இப்படி அதிர்ஷ்டமெல்லாம் கிடைக்கும்னு நெனைக்கலே,' என்றான்.

பதில் பேச இயலாமல் அவள் தவிப்பைப் பார்த்து அவன் பேச்சை மாற்றினான்.

"மூணு பேரு சிஸ்டர்ஸ்... கொஞ்சம் லோக்கல் பாலிடிக்ஸ் இருந்துண்டேயிருக்கும். கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கணும்... என்ன?" என்றான்.

அவள் தலையாட்டிக் கொண்டாள்.

"ஆனா... எந்த இடத்துல கோடு போடணும்னு நேக்குத் தெரியும்... பயப்பட வேண்டாம்!" என்றான்.

அதற்கும் தலையாட்டினாள்.

''ஹலோ! பேசறதிலேன்னு முடிவா?'' என்று குனிந்து முகம் பார்த்தான்.

அவள் கண்கள் படபடக்க, ''என்ன சொல்லணும்?'' என்றாள்.

''அப்பாடா! வாய் முத்து உதிர்ந்துருச்சு!'' என்றபடி, ஏதோ அவள் வாயிலிருந்து உதிர்ந்த வார்த்தைகளை அப்படியே இரு கைகளிலும் வாங்கித் தன் சட்டைப்பையில் பத்திரப்படுத்துவது போல் நடித்துக் காட்டவும், அதை வியப்பாய்ப் பார்த்த ஜெயலட்சுமி தன்னை மறந்து சிரித்து விட்டாள்.

''போதும்... அடுத்த சந்திப்பு வரை தாங்கும்,'' என்று அவன் சிரிக்க, அவள் வெட்கத்துடன் நகர்ந்து விட்டாள்.

சிரித்த முகத்துடன் அவன் வருவதைப் பார்த்த ஷ்யாம், பஞ்சாபகேசன் எல்லார் முகத்திலும் நிறைவான உணர்வு தெரிந்தது.

* * *

மறுபடியும் ஒரு முறை -

குடும்பத்துடன் வந்தார்கள். நரேந்திரனின் சகோதரிகள் கூட ஜெயலட்சுமியின் அழகைப் பார்த்த பின் எந்த விமரிசனமும் செய்யவில்லை.

''ரொம்ப தடபுடல் வேண்டாம்,'' என்று நரேந்திரன் சொன்ன போதும், ஷ்யாம் நிறைவாகவே பேசி முடித்தான்.

நரேந்திரனிடம் ஒரு நட்பு ஏற்பட்டிருந்தது. நரேந்திரன் ஜாலியாக விஷயங்களைக் கையாண்டாலும், பொறுப்பானவன் என்று புரிந்து கொண்டான். இரண்டு, மூன்று முறை சந்தித்துக் கொண்டார்கள். ஒவ்வொரு முறையும், 'ஹவ் இஸ் ஜெயா?' என்று மேலோட்டமாகக் கேட்டுக் கொண்டாலும், சகோதரியைப் பார்க்க விரும்புகிறான் என்று புரிந்து கொண்டான்.

ஒரு நாள் ஃபோன் செய்தான்.

''ஹலோ... நரேன், இன்றைக்கு நீங்க ஃப்ரீயா?'' என்றான்..

''என்ன விஷயம்?'' என்றான் நரேந்திரன்.



''இல்லே... ஜெயாவுக்கும் உங்களுக்கும் ஒரு ட்ரீட் கொடுக்கலாம்னு பார்த்தேன்...'' என்றான்.

''நோ பிராப்ளம். எங்க வரணும்?'' என்றான்.

ஹோட்டல் பெயர் சொன்னான்.

''அப்புறம்... நீங்க வரேள்ங்கறது ஜெயாவுக்குத் தெரியாது. சர்ப்ரைஸா வச்சிருக்கேன். காஷுவலா வர்ற மாதிரி வாங்கோ!'' என்றான்.

''ஓஹோ... அது வேற அப்படியா?''

என்று சிரித்த போதும், நரேந்திரன் வந்தான்.

''வாங்கோ...நரேன். நீங்க எங்கே இங்கே!'' என்று வரவேற்றான் ஷ்யாம்.

''ஏன்? வரக் கூடாதா?'' என்று சிரித்தான் நரேந்திரன்.

''உட்காருங்கோ...'' என்றான் ஷ்யாம்.

''என்ன ஷ்யாம்! ஒரு ட்ரீட் குடுங்கோன்னு நானும் கேட்டுண்டே இருக்கேன்...'' என்று நரேந்திரன் இழுத்தபடி அமர.

''அதுக்கென்ன? இப்பவே குடுத்தாப் போச்சு...'' என்று பதில் கொடுத்தான் ஷ்யாம்.

இப்படி அவர்கள் இருவரும் தங்கள் பொய்யை நிலைநிறுத்த முயன்று கொண்டிருக்கையில் ஜெயா இருவரையும் மாற்றி மாற்றிப் பார்த்தவள், விஷயம் புரிந்துகொண்டாள்.

'போதும்... ரெண்டு பேருக்கும் பொய் சொல்ல வர்லே! விட்டுருங்கோ!'' என்றாள்.

அகப்பட்டுக் கொண்டவர்கள் போல் விழித்த நரேந்திரனும், ஷ்யாமும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பிறகு இருவரும் சிரித்து விட்டார்கள்.

''இருங்கோ. என்ன ஸ்வீட் இருக்குன்னு பாத்துண்டு வரேன்,'' என்று தனிமை கொடுத்து விலகிப் போனான் ஷ்யாம்.

"எப்படிடா பாக்கறதுன்னு தவிச்சுண்டிருந்தேன். பரவா யில்லை. உன் தம்பி விஷயம் புரிஞ்சுண்டுட்டான்," என்று சிரித்தான் நரேந்திரன்.

ஜெயலட்சுமி ஒன்றும் பேசவில்லை. மேஜையைப் பார்த்தபடி அமர்ந்து இருந்தாள்.

"ம்...!" என்று பெருமூச்சு விடுவது போல் நடித்த நரேந்திரன்,

"இப்பத்தான்... என்னமோ இருபது வயசுப் பையனாட்டம், உலகமே பசுமையா இருக்கு. படுத்தாத் தூக்கம் வர்றதில்லை தெரியுமோ! தேவியார் ஞாபகம் படுத்தறது. ஆஃபீஸ்லயும்தான். ஃபைல்ல எல்லாம் முகம் தெரியறது..." என்றான்.

அதற்குள் சர்வர் ஸ்வீட் கொண்டு வந்தான்.

"சார், உங்களோட வந்தவர் அவசரமா ரெண்டு கால் பேச வேண்டியிருக்காம். உங்களைச் சாப்பிடச் சொன்னார்," என்று அடுத்த ஐட்டத்துக்கு ஆர்டர் எடுத்துக் கொண்டு போனான்.

அவன் விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்தான்.

"என்ன... அந்தப் பக்கம் அப்படியொண்ணும் இல்லை போலிருக்கே... நெனப்பே வர்றதில்லையா... என்ன?' என்றான் சோகமாக.

"ப்ளீஸ்!" என்றாள் கெஞ்சுதலாக.

"என்ன... ப்ளீஸ்? நேச்சுரலா இருக்கணும். ஐயா நினைப்பு வர்றதா... இல்லையா? சொல்லு!" என்றான் மிரட்டல் போல்.

அவள் நிமிரவில்லை. ஆனால் மெதுவான குரலில், 'வராம இருக்குமா?' என்றாள்.

"அப்பாடா! இப்ப... இப்பத்தான் மனசுக்கே நிம்மதியாச்சு..." என்றான். அவள் நாணம் பார்த்துச் சிரித்துக் கொண்டான்.

மெதுவாக ஷ்யாமும் வந்து சேர்ந்தான். அதற்குப் பிறகு திருமணம் நடத்த வேண்டிய விதம் பற்றிப் பேசிக் கொண்டார்கள்.

"ஷ்யாம்... எல்லா விஷயத்துலயும் ஜெயாவைக் கலந்து பேசி முடிவுக்கு வரணும், என்ன?" என்றான்.



ஷ்யாம் உண்மையாகவே மகிழ்ச்சி அடைந்தான்.

அந்தப் பெரிய ஹோட்டலுக்கு அருகில் இருந்த புகழ் பெற்ற நகைக் கடையில் ஜெயலட்சுமிக்கு ஒரு மோதிரம் வாங்கி அன்பளிப்பாக அளித்தான் நரேந்திரன்.

ஒரு நிமிடம் கடைக்கு முன்பு தனிமை கிடைத்தபோது, 'நான் என்ன பரிசு உங்களுக்கு வாங்கிக் கொடுக்கட்டும்...' என்றாள் ஜெயா.

அவன் நின்றான். குறும்பாகப் பார்த்தான்.

"நான் என்ன வேணா வாங்கிக்கலாம். நீயும் கொடுக்கலாம்..." என்றான்.

அவள் முகம் வெகுவாகச் சிவந்தது.

"சே! உங்ககிட்டே கேட்டேன், பாருங்கோ!" என்று அவள் முணுமுணுக்க,

"தட்ஸ் த பாயின்ட். கேக்காமலே குடுக்கணும்," என்று வெடிச் சிரிப்புச் சிரித்தபடி தலையசைத்து விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

சற்றுத் தொலைவில் நின்றபடி, அதைப் பார்த்தும் பாராதவன் போல் ரசித்துக் கொண்டான் சியாமளகிருஷ்ணன்.

## 5

அம்மா பூஜையறையில் அமர்ந்து வேண்டாத தெய்வத்தையெல்லாம் வேண்டிக் கொண்டிருந்தாள்.

முதல் முதலாகச் சியாமள கிருஷ்ணன் தனியாக ஒரு ஆபரேஷன் செய்கிறானாம். ஒரு குழுவாக டாக்டர்கள் இயங்கினாலும் முழுப் பொறுப்பும் இவனைச் சார்ந்ததாக இருக்குமாம்.

கருணாகரன், ஷாநவாஸ், அமரேந்திரன் என்று அந்த ஆஸ்பத்திரியில் அவனைப் போலவே சர்ஜன்கள் இருந்தாலும், ஷ்யாம் திறமையான ஒரு சர்ஜன் என்று பெயரெடுத்துக் கொண்டிருந்தான்.

ஒவ்வொரு அறுவைச் சிகிச்சைக்கு முன்னும் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட அந்தப் பிரபஞ்ச சக்தியை ஆத்மார்த்தமாகத் தியானித்து விட்டு, உதவிக்குப் போவான். இன்றும் அதே போல் பிரார்த்தனை முடித்து விட்டுத்தான் கிளம்பினான்.

ஓபன் ஹார்ட் சர்ஜரி எனப்படும் இதயத்தினுள்ளே இருந்த குறைபாட்டை நீக்கும் அந்த அறுவைச் சிகிச்சையை ஆரம்பித்த பின்னர் அவன் வேறு உலகத்திற்குப் போய் விட்டான்.

பாஸ்கரனும் வந்திருந்தார். மேற்பார்வை செய்பவர் போல் அருகில் நின்றிருந்தாலும், அவர் எதிலும் தலையிடவில்லை.

ஆரம்பிக்கும் வரைதான் எல்லா நடுக்கமும். ஆரம்பித்த பின்னர் முழுமையான ஈடுபாட்டுடன் அவன் அறுவைச் சிகிச்சையைச் செய்வதை அவர் ஒரு திருப்தியுடன் பார்த்துக் கொண்டு நின்றார்.

அந்த மருத்துவமனையைப் பொறுத்தவரை எந்தெந்த நோயாளிக்கு எந்த விதமான அறுவைச் சிகிச்சை தேவைப்படும், வைத்தியம் என்ன என்பதை ஒரு குழுவாகவே அமர்ந்து விவாதிப்பார்கள்.

வாரத்தில் இரண்டு நாட்கள் வெளி நோயாளிகளைப் பார்ப்பதும், வாரத்தில் மூன்று நாட்கள் அறுவைச் சிகிச்சையும் என்று வைத்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு சனிக்கிழமை காலையிலும் இந்த விவாதங்கள் நடக்கும்.

எந்த நேரமும் அவசர அவசியமென்றால் உடனே வந்து விடுவார்கள். ஷ்யாமைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் எம்.எஸ். முடித்திருந்தாலும், ஷ்யாம் எம்.சி.எச். முடித்திருந்ததால் அவனுக்கு அந்த மருத்துவ மனையில் ஒரு முக்கியத்துவம் இருந்தது. உடன் திறமையும் சேர்ந்து கொள்ளவே, சேர்ந்த ஒரே மாதத்தில், "புதுசா ஒரு டாக்டர் திறமையானவரு வந்திருக்காராம்!" என்று பெயர் பரவ ஆரம்பித்திருந்தது.

அன்றைய அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது. எனினும் களைப்பு அவனை ஆட்கொண்டது.



பிற்பகல் பாஸ்கரன் அறைக்குப் போய் அவரிடம் கருத்துக்கள் கேட்டுக் கொண்டான். "எல்லாம் சரியாகவே இருந்தது, ஷ்யாம், இல்லைன்னா அங்கயே கரெக்ட் பண்ணியிருப்பேனே," என்றார் பாஸ்கரன்.

உற்சாகமானான்.

கருணாகரன், ஷாநவாஸ் அமரேந்திரன் மூவரும் ஒன்றாக இருப்பார்கள். உள்ளூர ஷ்யாமின் மேல ஒரு லேசான பொறாமை இருந்தது. அதிலும் கருணாகரன் எம்.பி.பி.எஸ்.ஸில் அவனோடு படித்தவன். எம்.எஸ். முடிப்பதற்கே அவனுக்குக் காலம் பிடித்தது. ஆனால், இன்றைக்கு அவன் திறமை பார்த்து மலைத்துத்தான் போனார்கள்.

தங்களுக்குள்ளே அவனைப் பற்றிப் புகழ்ந்து பேசிக் கொண்டிருக்கையிலேயே அவனும் ரவுண்ட்ஸ் வந்தான்.

போன வாரத்தில் ஒரு நாள், 'சார்...' என்று கருணாகரன் ஏதோ சொல்ல வர,

"அதென்ன... எப்பப் பார், என்னை வேற்றுக் கிரக உயிரினம் மாதிரி வச்சிருக்கே. ஃபீல் ஃப்ரீ...." என்றான் ஷ்யாம்.

அதிலிருந்து பழைய மாதிரி நண்பர்களாகிவிட்டார்கள். அமரேந்திரன் பெண்களிடம் கொஞ்சம் அசடு வழிவதுண்டு. ஆனால், எல்லாவற்றையும் அவனிடம் பேசலாம் என்பது போல நல்ல நண்பனாகவும் இருக்கக் கூடியவன்.

கருணாகரன், "ஷ்யாம், இதைக் கேளுடா, ஓ.பி. வார்டிக் தமயந்தி இல்லே? அவங்ககிட்டே நம்ம அமரு... ரூட் போட்டு பார்த்தால் அந்தம்மா... கடைசியில 'அண்ணே, எனக்குக் கல்யாண மாகி ஒரு குழந்தை இருக்கு தெரியுமா?'ன்னு அதிர்ச்சி வைத்திய குடுத்துட்டாப்பல. அதான்... மனுஷன் போனவாரம் தாடியோ அலைஞ்சான். பார்க்கலையா?" என்று கலாட்டா செய்வான்.

கொஞ்சம் உண்மையும் மீதிக் கற்பனையும் கலந்த அ மாதிரிப் பேச்சுக்களை அமரேந்திரனும் பெரிதாக எடுத்

கொள்ளமாட்டான். கூடச் சேர்ந்து சிரிப்பான். ஆனால், ரவுண்ட்ஸ் வரும்போது பாஸ்கரனிடம் பவ்யமாக நிற்பார்கள்.

மருத்துவ உலகின் விந்தைகளையும் ஆச்சரியங்களையும் அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள்.

ஏதாவது எதிர்பாராத சாவுகள் நேரும்போதும், இளைஞர்கள் மாரடைப்பு என்று மாய்கிற போதும், எவ்வளவு முயன்றும் சில சமயம் குழந்தைகளைக் காப்பாற்ற முடியாமல் போகும்போதும் ஓரிரு நாள் சோகத்துடன் நடமாடுவார்கள். பிறகு தேறிக் கொள்வார்கள்.

அன்றைக்கு அந்த அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நடந்து முடிந்த மகிழ்ச்சியுடன் வீட்டுக்குப் போனால், அம்மா கவலையுடன் காத்திருந்தாள்.

அம்மாவை மகிழ்ச்சியுடன் கட்டிப்பிடித்துக் கொண்டான். கன்னத்தில் முத்தம் வைத்தான்.

''சக்ஸஸ்ம்மா!'' என்றான். அம்மா அவசர அவசரமாகப் பால் அல்வா செய்தாள்.

''ஷ்யாம், ∴போன்!'' என்றாள் ஜெயலட்சுமி, எடுத்தான். அந்தப்புறம் நரேந்திரன் வாழ்த்துக்கள் சொன்னான்.

''ஜெயா ரொம்பக் கவலையா இருந்தாப்ல,'' என்று விளக்கம் வேறு சொன்னான்.

பேசி முடித்துவிட்டு வந்து, ''வாசுகி, பாரு, விஷயம் அங்க போயாச்சு...'' என்று அவன் சகோதரியைக் கலாட்டா செய்து மகிழ்ந்தான்.

வாழ்க்கையிலேயே முதல் முறையாக அம்மா ஹோட்டலில் சாப்பிட ஒத்துக்கொண்டாள். பைக்கில் நந்துவும், வாசுகியும் வர, தான் வாங்கியிருந்த அந்த செகண்ட் ஹாண்ட் மாருதி காரில் பெற்றோரையும், சகோதரியையும் அழைத்துக் கொண்டு போய் ஒரு விருந்து கொடுத்தான் ஷ்யாம்.

இரவு...!

அளவு கடந்த உற்சாகத்தினால் உறக்கம் வரவில்லை ஷ்யாமுக்கு.



அன்றைய நிகழ்வுகளெல்லாம் நினைவுக்கு வந்தன.

''சார்... ப்ளெஸ் பண்ணுங்க... சார்...'' என்று போய் சுந்தரேசனிடம் நின்றான்.

''உனக்கென்னப்பா! பாஸ்கரன் மாதிரிப் பெரிய இடமே உனக்கு சப்போர்ட்டா இருக்காப்ல... எனி ஹௌ மே காட் பிளஸ் யூ!'' என்றார்.

அவன் இப்படி வந்து நின்று ஆசிர்வாதம் செய்யச் சொல்லிக் கேட்பான் என்று எதிர் பார்க்கவில்லை போலும். பனிப்பாறை கொஞ்சம் உருகித்தான் போனது.

''விஷ் யு ஆல் சக்ஸஸ்!'' என்று மனதார வாழ்த்தினார் தங்கதுரை.

பாஸ்கரன் ஏதோ தன் குழந்தை ஒன்று தேர்வு எழுதப் போகிற மாதிரி ஒரு விதமான பரபரப்பில் இருந்தார்.

பிறகுதான் அவனுக்குத் தெரிந்தது. நிர்வாகம் ஷ்யாமள கிருஷ்ணனின் திறமைகளைப் புரிந்து கொண்டு, மாதச் சம்பளத்துக்காரராக வைத்திருக்காமல் ஒரு அறுவைச் சிகிச்சைக்கு இவ்வளவு என்று கொடுத்து அவனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வாதாடி இப்படி ஒரு வாய்ப்பைப் பெற்றுத் தந்தார் என்பது.

நெகிழ்ந்து போனான். அவரருகில் போய் ஒரு குழந்தையைப் போல் நின்று கொண்டு நன்றி சொன்னான்.

இடத் தோளோடு சேர்ந்து அணைத்துக் கொண்டு, மகிழ்ச்சியாகச் சிரித்தார் பாஸ்கரன்.

''ஷ்யாம்... ஒண்ணு சொல்லட்டா... உன்னைப் பார்க்கும்போது என்னையே பாத்துக்கற மாதிரி இருக்கு. என்னைச் சில பேர் என்கரேஜ் பண்ணித்தான் இந்த நிலைமைக்கு வந்தேன். அதை உனக்கும் நான் செய்யறேன். அவ்வளவுதான்...'' என்றார்.

''அதைச் செய்யறதுக்கும் ஒரு மனசு வேணுமில்லிங்களா... சார்?'' என்றான் மனமெல்லாம் நிறைந்த நன்றியுடன்.

தோளில் தட்டிக் கொடுத்து விட்டு நகர்ந்தார். இப்படி ஒரு ஃப்ரெண்ட், ஃபிலாசஃபர், கைடு கிடைத்தது தனக்குப் பெரிய அதிர்ஷ்டம் என்று நினைத்துக் கொண்டான்.

மெதுவாக வந்து முற்றத்தின் அருகில் சேர் போட்டு அமர்ந்து கொண்டான்.

அருகில் அசைவு தெரியவும் திரும்பிப் பார்த்தான்.

அப்பா!

ஏதோ கனவில் இருப்பது போல் நின்று கொண்டிருந்தார்.

"என்னப்பா... தூக்கம் வர்லையா?" என்று கேட்டார் பஞ்சாபகேசன்.

அருகில் ஒரு சேரைப் போட்டு அமர்ந்தார்.

"ஆமாப்பா... என்னன்னு தெரியலை..." என்றான்.

"அது வேற ஒண்ணுமில்லப்பா... முதல் தடவையா ஜெயிச்சிருக்கே... அந்த சந்தோஷம். டேய்! எப்பவும் ஒண்ணு ஞாபகம் வச்சக்கோ... இந்தத் தொழில் இருக்கே... ரொம்ப அற்புதமான தொழில். இதை நீ தொழிலா நினைக்கப்படாது. சேவையா நினைக்கணும். தெரியுதோ?" என்றார் நெகிழ்ந்த குரலில்.

"ஆமப்பா... இன்னைக்குக்கூடப் பாருங்கோளேன்... அந்தப் பேஷண்டோட வைஃப் கையைக் கூப்பிண்டு, ரொம்ப தேங்க்ஸ்... டாக்டர்... சார்... நேக்கு வாழ்க்கை குடுத்திருக்கேள்ன்னு ரெண்டு சொட்டுக் கண்ணீர் விட்டப்ப... நோக்கு இந்த லோகத்தையே ஜெயிச்ச மாதிரி கர்வம்..." என்றான்.

"அது சரிதான். சில நேரம் தோல்வியும் வரும்... விமர்சனமும் வரும்... அதுக்கும் தயாராகிக்கணும்...' என்றார்.

"ஆமாப்பா... அதுக்கும் தயாராயிருக்கணும்," என்றான் ஷ்யாம்.

"ரொம்ப தேங்க்ஸ்டா... ராஜா... ஜெயா கல்யாண விஷயத்துல தோள் குடுத்தப்பவே நேக்குத் தெரியும்டா... நீ தங்கமான பிள்ளைன்னு... நேக்கும் ஒண்ணு கேக்கறதுக்கு இருக்குடா..." என்றார்.



"கேளுங்கோப்பா..." என்றான்.

"எங்க அப்பா... அவரோட காலத்துல, பெரிய தொட்டிக் கட்டு வீடா இருந்த இந்த வீட்டைப் பாகம் பண்ணி வித்துட்டார். நம்மாத்துல பாதியை வாங்கினவர் இப்ப வயசாயிப் போனதால விக்கத் தயாராயிருக்கார். வாங்க முடியுமான்னு பாரு. உன் பேர்லயே வாங்கு... வாங்கினா என்னோட ரொம்ப நாள் ஏக்கம் தீரும்..." என்றார்.

"ஓ...!" என்றான்.

"ரொம்ப சிரமம்னா விட்டுடு..." என்றார்.

"பார்க்கறேம்ப்பா..." என்றான். பிறகு அப்பாவின் முகத்தை நேராகப் பார்த்து வாஞ்சையாகப் புன்னகைத்தான்.

"அப்பா... நான் இந்த இடத்துக்கு வர்றதுக்கு எவ்வளவு தியாகம் செஞ்சிருக்கேள்ன்னு நேக்குத் தெரியும்பா... இனிமே எல்லாக் கவலையும் என்கிட்டே விட்டுருங்கோ... நீயும் அம்மாவும் நிம்மதியா இருங்கோ, என்ன?" என்றான்.

பஞ்சாபகேசனின் முகம் மலர்ந்தது. 'சரியப்பா...' என்றார். மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

எழுந்தார்கள்.

"அப்பா..." என்றான் ஷ்யாம்.

அப்பா நின்றார்.

"முந்தியெல்லாம் வயிறு வலிக்கச் சிரிக்கிற மாதிரி ஜோக் அடிப்பியே... அதெல்லாம் எங்கே போச்சு?" என்றான் புன்னகையுடன்.

"அதெல்லாம் ரீசைக்கிள் பின்ல போட்டு வச்சிருக்கேன்டா... வெளிய எடுப்போம்," என்றார் புன்னகையுடன்.

"தட்ஸ் த ஸ்பிரிட்ப்பா... குட்நைட்" என்று படுக்கைக்குப் போனான்.

உழைப்பும், உள்ளேயொரு சலிப்புமாக இருந்த வீட்டில் இனிமேல் சிரிப்புத்தான் ஒலிக்க வேண்டும் என்று சபதம் எடுத்துக்

கொண்டான். ஆனால், அது அத்தனை சுலபமாக இருக்கப் போவதில்லை என்று அப்போது அவனுக்குத் தெரியவில்லை.

## 6

''அண்ணா!'' என்று தயங்கியபடி வந்தாள் வாசுகி.

''என்னடா?'' என்றான் ஷ்யாம்.

''நேத்து நீ ரொம்ப சந்தோஷமான மூட்ல இருந்தே. சொல்ல வேண்டாம்னு விட்டுட்டேன்,'' என்று தயங்கினாள்.

''பரவாயில்லே... சொல்லு...'' என்றான்.

''நேத்து... நரேன் அத்திம்பேரோட சிஸ்டர் ரேகா வந்திருந்தா...'' என்றாள்.

''ம்...'' என்றான் முகத்தில் எந்த உணர்வையும் காட்டாமல்.

''மெதுவா... உன் சிஸ்டருக்கு எத்தனை நகை போடுவேள்னு கேட்டா. ஒண்ணும் டிமாண்ட்ஸ் இல்லேன்னு சொன்னாளே... அப்படீன்னேன்... எங்காத்து மனுஷா அப்படித்தான் சொல்லுவா. ஆனா... நேக்கு அண்ணா இருபது பவுன் போட்டார். மூணு பேருக்கும் ஒரே மாதிரி செஞ்சார் அப்படீன்னா... அப்புறம்... மூணு பேருக்கும் செஞ்சதெல்லாம் சேத்து அவனுக்கு வர வேண்டாமோன்னு சொல்றா...'' என்றாள்.

''ம்...!'' என்று உள்வாங்கிக் கொண்டான்.

''அப்படின்னா, அறுபது பவுன் கேக்கறாளோ!'' என்றாள் வாசுகி.

''அநேகமா இது நரேன் அத்திம்பேருக்குத் தெரியாதுன்னு நெனைக்கறேன்,'' என்றான் ஷ்யாம்.

''அண்ணா, அதில்லை பாயின்ட் அத்திம்பேர் நல்லவரா இருக்கலாம். இந்த ரேகா மாதிரி அவாத்துப் பொம்மனாட்டிகள் போக வர ஏதேனும் பேசினா ஜெயாக்கா தாங்க மாட்டா... தெரியுமோ?'' என்றாள்.



''ஆமா... அதுவும் யோசிக்கணும்,'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

சற்று நேரம் கழித்து நரேந்திரனின் அலுவலகத்துக்கு ஃபோன் செய்து, ''அத்திம்பேர் நகை விஷயம் கொஞ்சம் பேசணும். அறுபது பவுன் சரியா இருக்குமா... சொல்லுங்கோ,'' என்றான்.

நரேந்திரன் திகைத்துப் போனான். ''என்ன திடீர்னு... நாந்தான் டிமாண்ட்ஸ் இல்லேன்னு சொல்லியாச்சே?'' என்றான்.

''நாம ஜென்ட்ஸ்... எல்லாத்தையும் லைட்டா எடுத்துக்குவோம்... லேடீஸ் அப்படி இருக்க மாட்டாளே அத்திம்பேர்...'' என்றான் ஷ்யாம்.

''சரி... நான் ஈவ்னிங் உங்களை அன்னபூர்ணா ஹோட்டல்ல வச்சு பாக்கறேன். ஃபைவ் ஒ கிளாக். சௌகரியப்படுமா?'' என்றான் நரேந்திரன்.

''ம்... வரேன்!'' என்றான் ஷ்யாம். ரிசீவரை வைத்த நரேந்திரன் யோசனையில் ஆழ்ந்தான். ஏதோ நடந்திருக்கிறது என்பது புரிந்தது. ஜெயலட்சுமியை ஃபோனில் அழைத்தான்.

''அப்புறம்... என்ன கலர் சாரியில் இருக்கே?'' என்று வம்பு பேசினான்.

''சிவப்பு...'' என்றாள்.

''ஓம்... சக்தி... ஓம் சக்தி...!'' என்று மந்திரம் போல் உச்சரித்தான்.

அவள் சிரித்தாள். ''என்ன இப்ப? வேலை ஒண்ணும் இல்லையாக்கும்!'' என்றாள்.

''இப்பல்லாம் இருபத்து நாலு மணி நேரமும் சக்தி ஜெபம்தான்... தெரியுமோ?'' என்று விளையாட்டாகப் பேசியவன் விஷயத்துக்கு வந்தான். ''அப்புறம்... எங்காத்துல இருந்து சிஸ்டர்ஸ் யாராவது வந்தாளோ? ரேகா கூட உன்னைப் பாக்கணும்னு சொல்லிண்டிருந்தா,'' என்றான்.

''ஆமா... வந்திருந்தாளே... நேக்கு பால்கோவா பிடிக்கும்னு வாங்கிண்டு வந்திருந்தாளே!'' என்று யதார்த்தமாகச் சொல்கிற

வருங்கால மனைவியைக் குறித்துப் பாவமாக இருந்தது. நல்ல மனசுள்ளவள். தன் சகோதரிகள் பந்தாடி விடாமல் இருக்க வேண்டுமே என்று எண்ணிக் கொண்டான். யதார்த்தம் போலவே வாசுகியிடம் பேசி விஷயம் கறந்தான்.

மதிய உணவின் போதே மைத்துனனைச் சந்தித்தான்.

''பாருங்கோ ஷ்யாம்... ஏதோ ரேகா சொன்னதை சீரியஸாய் எடுத்துக்காதீங்கோ!'' என்றான்.

''இல்லே அத்திம்பேர். ஜெயாக்கா ரொம்ப சாஃப்ட் டைப். அவளை யாரேனும் ஏதாவது சொன்னா... எங்காத்துல யாருக்குமே தாங்காது. உண்மையா சொல்லப்போனா... உங்க குணம் பார்த்துத்தான் தைரியமா அவளைக் குடுக்கறேன்... அறுபது பவுன் போட்டர்றேன். அது நேக்கு ப்ராப்ளமில்லே... அவளைச் சந்தோஷமா வச்சக்குங்கோ. அது போதும்...'' என்றான்.

நரேந்திரன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

''முடிவு பண்ணிட்டேள்... இனி என்ன செய்ய... ம்... இப்படிச் செய்யலாம். கல்யாணச் செலவுல பாதி நான் குடுத்துடுவேன். இது நமக்குள்ள ஒப்பந்தம்... லேடீஸ்க்குத் தெரியத் தேவையில்லே,'' என்றான்.

ஷ்யாம் தயங்கினான்.

நரேந்திரன் அந்த நேரம் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

''ஷ்யாம்! முப்பத்து நாலு வயசுல இப்படிப் பேசினா தமாஷாத் தெரியும். ஆனா... அன்பு... காதல் இதெல்லாம் எந்த வயசுலயும் வரலாமாம்... ஜெயாவை நேக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. ஆள் மட்டும் தங்க விக்கிரம் இல்லே! மனசும் தங்கம்தான்... உங்க மனுஷா... எங்க மனுஷான்னு இனிமே பிரிக்கக் கூடாது. தெரியுமோ? நம்ம மனுஷான்னு பேசுங்கோ... அப்படீங்கறா. அவளையே நேக்குக் கொடுக்கறேள். என் அதிர்ஷ்டம் பார்த்து நானே பித்துப் பிடிச்ச மாதிரி அலைஞ்சுண்டிருக்கேன்... ப்ளீஸ்... பணம் ஒரு பிரச்சினையேயில்லை. சரின்னு சொல்லுங்கோ...'' என்றான் நரேந்திரன்.



ஷ்யாம் உண்மையாகவே மகிழ்ந்தான்.

''சரி அத்திம்பேர்... அப்புறம் நான் உங்களை விடச் சின்னவன்தான்... வா... போன்னே பேசலாம்,'' என்று தங்கள் நட்பையும் உறுதி செய்தான்.

அப்பாவிடம் மட்டும் பகிர்ந்து கொண்டான்.

''பரவாயில்லைடா... ஷ்யாம். அதிர்ஷ்ட தேவதை நம்மாத்துக் கதவைக் கொஞ்சம் லேட்டாத் தட்டினாலும் ஸ்ட்ராங்காத்தான் தட்றா...!'' என்று சிரித்தார் அப்பா...

பல நாட்களுக்குப் பிறகு மலர்கிற அந்தச் சிரிப்பை அன்புடன் பார்த்துக் கொண்டு நின்றான் ஷ்யாம்.

அதே சமயம் நரேந்திரன் தன் வீட்டில் புயல் கிளப்பிக் கொண்டிருந்தான்.

* * *

''டேய்... நவாஸ், இன்னைக்கு ஷ்யாம் புளியோதரை கொண்டு வந்திருக்காப்ல. அம்மா நமக்கும் சேர்த்துத்தான் குடுத்திருக்காங்களாம்,'' என்று உற்சாகமாய் முணுமுணுத்தான் கருணாகரன்.

''சரி... மத்தியானம் கேண்டீன் கட். இரண்டு மணிக்குக் கூடிடுவோம்,'' என்றார்கள். ஆனால் அரை மணி நேரத்துக்குள் எல்லாரும் பரபரப்பானார்கள்.

ஒரு குழந்தைக்கு மூச்சிரைப்பு என்று வந்தார்கள்.

அவசர சிகிச்சை தேவைப்பட்டது. எல்லாரும் பரபரப்பானார்கள். அறுவைச் சிகிச்சை உடனடியாகத் தேவைப்பட்டது. பாஸ்கரனும் ஷ்யாமும் சுறுசுறுப்பாய்த் தியேட்டருக்குள் போனார்கள்.

அறுவைச் சிகிச்சை முடிக்கப் பிற்பகல் ஆகிவிட்டது. மூன்று மணிக்குத்தான் வர முடிந்தது. எனினும் மற்றவர்கள் காத்திருந்தார்கள்.

குழந்தையைக் காப்பாற்றிய மனநிறைவோடு உணவு உண்ண அமர்ந்தான்.

"எப்படி ஷ்யாம் அண்ணா, உங்க அம்மா புளியோதரைக்கு மட்டும் இப்படி டேஸ்ட்!" என்றான் ஷாநவாஸ்.

நல்லெண்ணெய், நிலக்கடலை எல்லாம் கலந்து ஒரு சுகமான மணத்துடன் இருந்த புளியோதரையை அவர்கள் விரும்பி உண்டார்கள்.

"தெரியலடா. நான் மூணு வருஷம் சென்னையில் எம்.சி.எச். படிக்கப் போயிருந்தப்ப ரொம்ப மிஸ் பண்ணினதுன்னா எங்கம்மா கைச் சமையல்தான்டா..." என்றான் ஷ்யாம்.

"ஏதோ கொஞ்ச நாள் இதெல்லாம் சொல்லிகிட்டிருப்பீங்க... அப்புறம்... அவங்கவங்களுக்கு வீட்டம்மா வந்தா... அம்மா கைச்சமையலாவது... ஒண்ணாவது." என்றான் அமரேந்திரன்.

"டேய்... அது உன் விஷயம்..." என்றான் கருணாகரன்.

"டேய்... உங்களுக்குத் தெரியாதுடா... எங்கம்மா எங்களையெல்லாம் உருவாக்கறதுக்கு எவ்வளவு கஷ்டப்பட்டாங்கன்னு. நான் இந்தப் படிப்பு படிக்கணுங்கறதுக்காக என் சிஸ்டர்ஸ் அவங்களோட படிப்பை வற்புறுத்தல.... வருத்தம் தெரிஞ்சு நடந்துட்டாங்க. அதனால குடும்பம்தான்டா எனக்கு முதல்ல. எல்லாரையும் கைதூக்கி விட்டதுக்கப்புறம்தான்டா நான் என்னைப் பத்தியே யோசிக்கப் போறேன்..." என்றான் ஷ்யாம்.

சற்று நேரம் மௌனம் நிலவியது.

"உண்மைதான்.... எது நமக்கு முக்கியம்னு தீர்மானிச்சுக்கத் தான் வேணும்..." என்றான் கருணாகரன்.

"அதெல்லாம் சும்மா ஒரு அழகான பொண்ணு மனசுக்குப் பிடிச்சுப் போய் வந்தா அதையும்தான் ஒத்துக்கணும். நம்ம கடமையையும்தான் செய்யணும்..." என்றான் ஷா நவாஸ்.

"நான் உன் கட்சி நவாஸ். சும்மா எப்ப பார் தியாகம். தியாகம்னு திரிய வேண்டியதில்லை..." என்றான் அமரேந்திரன் காட்டமாக.

கருணாகரன் திடுக்கிட்டுப் போய் ஷ்யாம் கோபித்துக் கொள்வானோ என்பது போல் அவன் முகம் பார்த்தான்... மாறாக ஷ்யாம் புன்னகைத்தான்.



"ஹேய்... அமரு... நீங்கள்லாம் என்னை ரொம்ப சீரியஸ் டைப்புன்னு நினைச்சுக்கிட்டுப் பேசறீங்க... நான் அப்படியில்லே... எங்க வீட்ல வந்து பாருங்க... கலகலன்னு சிரிப்பாத்தான் இருப்போம். ஆனா, வாழ்க்கை பத்தி எனக்குச் சில ஐடியாஸ் இருக்கு... அதை நான் சொல்றேன். அது என் வாழ்க்கையைப் பத்தின என்னோட திட்டம். நீங்க அதை ஒத்துக்கணும்னு நான் எதிர்பார்க்கலை!" என்றான்.

அமரேந்திரன் அடங்கி விட்டான்.

"அல்லா!" என்றான் ஷா நவாஸ்.

'என்ன?' என்பது போல் மற்றவர்கள் பார்க்க...

"இந்த ஷ்யாம் மசையே மாத்தறதுக்கு ஒரு பொண்ணை எங்கயாவது படைச்சிருப்பயில்ல, ஆண்டவா! சீக்கிரம் இவர் கண்ணுல பட வை - அப்படீன்னு வேண்டினேன்."

"டேய்! நான் வேண்டாம்னு சொல்லலைடா... கொஞ்சம் கழிச்சு வரச் சொல்லு. அதுக்குள்ள வாசுகி மேரேஜையும் முடிச்சு வச்சர்றேன்," என்று சிரித்தான் ஷ்யாம்.

சிரித்துக் கொண்டிருக்கும் போதே பி.ஏ. வந்து,

"சார்! சாப்பிட்டு முடிச்சாச்சுன்னா சீ்ஃப் டாக்டரோட ரூமுக்கு வரச் சொன்னாங்க," என்று சொல்லிப் போனான்.

டாக்டர் சுந்தரேசனுக்கு 'ஈஷ்' என்று பெயர் வைத்திருந்தான் அமரேந்திரன்.

"ஈஷ் கூப்பிடறாராம்டா. சீக்கிரம்!" என்று பரபரப்பாய்ப் போனார்கள்.

அங்கே ஒரு இளம் பெண் டாக்டர் சுந்தரேசன் அறையில் சேரில் அமர்ந்திருந்தாள். பாஸ்கரனும், தங்க துரையும் கூட இருந்தார்கள்.

"வாப்பா... ஷ்யாம்!" என்று வரவேற்றார்கள்.

"இவங்க நம்ம ஹாஸ்பிட்டலுக்குப் புது வருகை. மிஸ் ஆனந்தி, எம்.டி. கார்டியாலஜி!" என்று சீஃப் அறிமுகப்படுத்தவும், திகைத்துப் போனார்கள்.

ஒரு கணம் அந்தப் பெண்ணின் கண்களில் குறும்பு கூத்தாடினாற் போல் இருந்தது.

இந்தியாவில் வளர்ந்தவள் போல் தெரியவில்லையே என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே பாஸ்கரன் சொன்னார்.

"அமெரிக்காவில் படிச்சவங்க..." என்றார்.

இதழ்களில் நீட்டிய உதட்டுச் சாயமும், மிகையான மேக்கப்பும், சுடிதார் டிரஸ்ஸும் ஆக, அந்தப் பெண்ணிடம் எல்லாரையும் அறிமுகப்படுத்த இயல்பாய்க் கைகுலுக்கினாள்.

பொதுவாக இதய நோய்ப் பிரிவில் ஆண்கள்தான், பெண்கள் அவ்வளவாக வருவதில்லை என்பதால் எல்லாருமே சற்று ஆச்சரியத்தில் இருந்தார்கள்.

ஆனந்தி கலகலவெனச் சிரித்தாள்.

"அப்பா... நீங்கள்ளாம் இப்பவே இப்படி முழிக்கறீங்களே... டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி... அந்தக் காலத்துல எப்படிக் கஷ்டப்பட்டிருப்பாங்க...!" என்றாள்.

மற்ற மூவரும் அசடு வழிய நிற்க, ஷ்யாம்தான் பேசினான்.

"அப்படியெல்லாம் ஒன்னும் இல்லே. கொஞ்சம் ஆச்சரியமாய் இருந்தது. அவ்வளவுதான். யு ஆர் மோஸ்ட் வெல்கம்," என்று நிலைமையைச் சீர்ப்படுத்தினான்.

அவள் அதற்கும் சிரித்தாள்.

அமரேந்திரனும், ஷாநவாஸும் மெதுவாக ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டார்கள். அந்த ஆனந்தியின் வருகையால் அந்த மருத்துவ மனையில் எத்தனையோ விஷயங்கள் தலைகீழாக மாறப் போகின்றன என்பது அப்போது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

## 7

அம்மா சாவித்திரி நடந்த எல்லாவற்றையும் பொறுமையாக மகனிடம் கேட்டு அறிந்து கொண்டார். பிறகு சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார்.



"சரி... நரேன்... இதை நீ என்னண்ட விட்டு," என்றார்.

சாவித்திரி துவக்கப்பள்ளியில் ஆசிரியை வேலை பார்த்து எட்டு வருடங்களுக்கு முன் ஓய்வு பெற்றிருந்தார். நரேந்திரனின் அப்பா நீலகண்டன் ஒரு அரசு அலுவலகத்தில் கிளார்க் உத்தியோகம் பார்த்துப் பத்து வருடங்களுக்கு முன் ரிடையராகி இருந்தார்.

சாவித்திரியம்மாவுக்குத் திருமணமே லேட்டாகத்தான் ஆனது. அதற்குப் பிறகும் குழந்தையும் ஏழெட்டு வருடங்கள் கழித்துத் தான் பிறந்தது. நரேந்திரன்தான் முதல் குழந்தை. வெகுவாக ஏங்கி வேண்டாத தெய்வங்களையெல்லாம் வேண்டிய பின் பிறந்த குழந்தை.

குழந்தைக்காக ஏங்கிய ஏக்கத்தாலோ என்னவோ அடுத்தடுத்த குழந்தைகள் பிறந்த போதும் ஆபரேஷன் செய்து கொள்ள நினைக்கவில்லை.

மூன்று பெண் குழந்தைகள் பிறந்த பின்தான் விழித்துக் கொண்டு கருத்தடை ஆபரேஷன் செய்து கொண்டார். முப்பத்து மூன்று வயதில் நரேந்திரன் பிறந்தான். அடுத்த ஆறு வருடங்களுக்குள் பெண்கள் வரிசையாகப் பிறந்து விட்டார்கள்.

நான்கு குழந்தைகளையும் வயிறு வாடாமல் வளர்க்கவும், நீலகண்டனின் பெற்றோரைக் கவனிக்கவுமே அவர்களுக்குப் பொருளும், பணமும் நிறையச் செலவழிந்தது.

அப்பா ரிடையராகி விட்டார். அம்மாவுக்கு இன்னும் இரண்டாண்டுகள் சர்வீஸ் செய்கிற நிலையில் ஸ்டேட் பாங்கில் ப்ரொபேஷனரி ஆஃபீஸராக வேலைக்குச் சேர்ந்தான் நரேந்திரன்.

அன்றையிலிருந்து ஒரு தகப்பனைப் போல் குடும்பத்தைத் தாங்கி நிறுத்தினான் என்பது மட்டுமல்லாமல், மூன்று பெண் குழந்தைகளுக்கும் திருமணம் செய்த பின்தான் தன்னைப் பற்றியே யோசிப்பது என்று பிடிவாதமாக நின்றவன் என்பதால், பெற்றோருக்கு அவன் மேல் எல்லையில்லாத பாசம். அவன் குடும்ப வாழ்க்கையை நல்லபடியாய் அமைத்துக் கொடுக்க

வேண்டும் என்பதில் சாவித்திரியும், நீலகண்டனும் உறுதியாய் இருந்தார்கள்.

''சரிப்பா... நீ போய் ரெஸ்ட் எடு. ரேகா, ரூபா, மாலா எல்லாரும் இன்னைக்கு வரேன்னிருக்கா... நான் பேசிடறேன்,'' என்றார் சாவித்திரி.

''அம்மா! எதுவும் ஹார்ஷா பேசிடாதே...!'' என்று தயங்கினான் நரேந்திரன்.

''ஒண்ணும் கவலைப்படாதேப்பா. ஆனா, நீ எதுவும் வாயைத் திறக்க வேண்டாம்...'' என்றார்.

நரேந்திரன் சற்றே கவலையுடன்தான் தன்னறைக்கு ஓய்வெடுக்கப் போனான்.

* * *

அம்மாவின் சமையலில் வயிறாரச் சாப்பிட்டு விட்டு வழக்கம் போல் விச்ராந்தியாகச் சற்று நேரம் அமர்ந்திருந்தார்கள் எல்லாரும்.

அம்மா சோஃபாவில் அமர்ந்திருந்தார். அப்பா கட்டிலின் மேல் உட்கார்ந்திருந்தார். அம்மாவின் அருகில் மாலாவும், ரூபாவும் அமர்ந்திருக்க, எதிர் சோஃபாவில் நரேந்திரனும், ரேகாவும் அமர்ந்திருந்தார்கள்.

ரேகாவின் ஒன்றரை வயதுப் பையன் நரேந்திரனின் மடியில் அமர்ந்திருந்தான்.

அம்மா மெதுவாக ஆரம்பித்தார்.

''ஏண்டி ரேகா... நீ ஜெயாவாத்துக்குப் போயிருந்தியா என்ன?'' என்றார்.

''ஆமா...'' என்றாள் ரேகா.

''அங்க போய் நகை விஷயம் ஏதும் பேசினியா?'' என்றார்.

ரேகாவின் பார்வை கூர்மையாகியது.

''ஏன்... அதுக்குள்ளே போட்டுக் குடுத்துட்டாளாக்கும்...'' என்றாள் கேலியாக.



நரேந்திரன் அதிர்ந்தாற்போல் அம்மாவைப் பார்த்தான்.

''நாந்தாண்டி விசாரிக்கச் சொன்னேன். திடீர்னு அந்த ஷ்யாம் பையன் ஃபோன் பண்ணி நகை விஷயம் பேசணும்னு சொல்றான்னா... அது என்னன்னு பாக்க வேண்டாமோ? அதான் விசாரிக்கச் சொன்னேன். அப்புறம் பாத்தா நீதான் போயிருக்கே...'' என்றார் சற்றே கடுமையான குரலில்.

ரேகா திகைத்துப் போனாள்.

''அப்படி என்னத்தைடீ சொல்லித் தொலைச்சே?'' என்றார் சாவித்திரி.

''நான் ஒண்ணும் சொல்லலையே... எங்கண்ணா எங்களுக்கெல்லாம் இருபது பவுன் போட்டான். அவனுக்குச் சேர்த்து வர வேண்டாமோன்னேன். அண்ணாவுக்கு நல்லதுதானே செஞ்சேன்...'' என்றாள்.

சாவித்திரி மகனின் முகத்தைப் பார்த்தார். அதில் படிந்திருந்த வேதனை பார்த்தார். பிறகு தன் மகள்களைப் பார்த்து உறுதியான குரலில் தொடர்ந்தார்.

''இத பாருங்கோடி பொண்ணுகளா, இப்படி நல்லது செய்யற மாதிரி நெனச்சுண்டு குட்டையைக் குழப்பி வைக்காதீங்கோ... உங்கண்ணன் இருக்கானே... அவன்தான் இந்தக் குடும்பத்தையே தூக்கி நிறுத்தினவன். அவன் பதினோரு வருஷமா வேலைக்குப் போறான். அவன் வேலைக்குப் போக ஆரம்பிக்கறச்சேயே உங்க அப்பா ரிடையராயிட்டார். அவருக்கு வந்த பணத்தை அப்படியே இடம் வாங்கிப் போடுங்கோப்பா... சிஸ்டர்ஸ் மேரேஜ் நான் பாத்துக்கறேன்னான். அப்பா புறநகர்ப் பகுதியிலே அங்க இங்கேன்னு ஆறு சைட் வாங்கிப் போட்டார். நான் ரிடையராய் வந்த பணத்துல ஒரு வீடு கட்டினான். அப்புறம் அஞ்சாறு வருஷம் கழிச்சு ரெண்டு சைட்டை வித்துரெண்டு வீடு கட்டினான். இன்னும் ஒரு சைட் அவனுக்குன்னு வீடு கட்ட வச்சிண்டிருக்கான். அப்பா... உன்னோட ரிடையர்மெண்ட் பெனிஃபிட்டை வச்சு பொண்ணுங்களுக்குக் கல்யாணம் செஞ்சுக்கோ... என்னை ஆளை விடுங்கோன்னு சொல்லலை. பொறுப்பேத்துண்டுட்டு உங்க

கல்யாணம்வாம் செய்தான். இப்ப இருபது பவுன் போதும்மா... பின்னாடி பிராப்பர்ட்டியா குடுத்தா அவாளுக்கும் பாதுகாப்புன்னான்... அப்படிப் பிள்ளைடி அவன். அவன் வாழ்க்கையில் குழப்பம் பண்ணாதீங்கோ...'' என்றார்.

''அதான்... இவ்வளவு கஷ்டப்பட்டிருக்கானே... கொஞ்சம் கூடுதலா நகை வாங்கிக் கொடுக்கலாமேன்னு நெனைச்சேன்...''

அம்மா சிரித்தார்.

''அட பொண்ணே! கூடக் குறையன்னு பேரம் பேச இதென்ன வியாபாரமா? வாழ்க்கைடி... நம்ம பொம்மனாட்டிகள்ட்டயே ஒரு விசித்திரமான குணம்டி. அவளாலே தெய்வம் போலவும் நடத்துக்க முடியறது. ரொம்பக் கீழயும் போக முடியறது. நம்மாத்துப் பொண்ணுங்களுக்குக் கல்யாணம் பேசறச்சே... உங்க புக்காத்து மனுஷா வந்து இப்படியெல்லாம் பேசினப்போ... நாம எத்தனை வேதனைப்பட்டோம். அதை நெனச்சுப் பாத்திருக்க வேண்டாமோ?'' என்றார்.

பெண்கள் மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தார்கள்.

''பிரச்சினையே எங்கே ஆரம்பிக்கறது, தெரியுமா? பொம்மனாட்டிகள் புக்காத்துல அவாத்து மனுஷா கிட்ட ஒட்டறதில்லே. ஆனா, அதே பிறந்தாத்துல வந்த மன்னிகள் அதையே செஞ்சா வருத்தப்படறா... பிறந்தாத்துலயும் சரி... புக்காத்துலயும் சரி... ஆதிக்கம் பண்ணாம எல்லாரையும் நம்ம மனுஷான்னு நெனச்சா எந்தப் பிரச்சினையும் வராது. புரியறதோ?'' என்றார்.

''அப்ப... என்னைத் தலையிடாதேன்னு சொல்றேளா?'' என்றாள் ரேகா.

''அப்படிச் சொல்லலைடி கலந்து பேசி முடிவு செஞ்சு அப்புறமான்னா நீ அவாகிட்டே பேசியிருக்கணும்? அந்த ஜெயாப் பொண்ணு நல்ல பொண்ணாத் தெரியறா. அவளையும் உங்க மூணு பேரோட நாலாவதா நெனச்சேன்னா... நீங்க எப்பவும் சந்தோஷமா இங்க வந்து போயிண்டிருக்கலாம். இல்லே...



சின்னச் சின்னதா ஏதாவது கிளம்பிண்டே இருக்கும். வயசான காலத்துல நாங்க நிம்மதியா இருக்க வேண்டாமோ? உங்கண்ணா என்ன சொல்றான் தெரியுமோ? அம்மா... எப்பவும் சிஸ்டர்ஸ் நம்மாத்துக்கு சந்தோஷமா வந்து போற மாதிரி நீ பாத்துக்கணும், ஜெயான்னு அவகிட்டே சொல்லீருக்கேம்மாங்கறான். அதுக்கு நீங்களும் ஒத்துழைக்க வேண்டாமோ?'' என்றார்.

சற்று நேரம் கனத்த அமைதி நிலவியது.

ரூபாதான், ''சரி... விடும்மா. அவ விவரமில்லாம ஏதோ பேசிட்டா....'' என்று அம்மாவைச் சமாதானப்படுத்தினாள். அம்மாவும், அப்பாவும் சற்று நேரம் ஓய்வெடுக்கிறதாகச் சொல்லவே, சகோதரிகள் மூவரும் வேறு அறைக்குப் போனார்கள்.

நரேந்திரன் வேறு வேலை இருக்கிறதென்று வெளியே போனான்.

அந்த நேரம் -

ரூபாவும், மாலாவும் ரேகாவைப் பிலுபிலுவென்று பிடித்துக் கொண்டார்கள்.

''நாத்தி கொழுந்தின்னாலே பொம்மனாட்டிங்க வெறுக்கறதுக்குக் காரணமே இப்படி பிஹேவ் பண்றதுதான்டி... உன்னை யாருடி அவாத்துக்குப் போய் இப்படிப் பேசச் சொன்னா. நம்மண்ணா மாதிரி யாருக்குடி கிடைப்பா? இந்த ஆதரவு, பிரியம் இதுக்கெல்லாம் நாம திருப்பி என்னடி குடுக்கறது. அவனை நிம்மதியா இருக்க விடேன்டி!'' என்று மாற்றி மாற்றிப் பேச, அவள் பயந்து போனாள்.

''மரியாதையா அண்ணாகிட்டே சாரி சொல்லு...'' என்றார்கள். ஒத்துக் கொண்டாள்.

நான்கு மணி வாக்கில் தனது அறையில் ஏதோ புத்தகத்தைக் கையில வைத்துக் கொண்டு கட்டிலில் அமர்ந்து கொண்டிருந்தவனிடம் ரேகாவின் குழந்தை தாவி வந்து ஏறிக் கொண்டான்.

''மாமா... பெரிய யானையா வாங்கிக் குடுப்பியா? நெஜ யானை!'' என்றான். நரேந்திரன் யோசிக்கிறாற்போல் நடித்தான்.

''வாங்கலாம்... கஷ்டம் ஒன்னுமில்லே... ஆனா தினம் அதை யார் பாத்துப்பா? நிறைய்ய... நிறைய்ய சாப்பிடும்.''

''எவ்வளவு?'' என்றான் குழந்தை.

''இவ்வளவு...'' என்று இரு கைகளையும் முடிந்த மட்டும் அகலமாக்கிக் காட்டினான் நரேந்திரன்.

''அவ்வளவா? அப்ப வேண்டாம்!'' என்றான்.

''சரி... சின்னதா பொம்மை யானை வாங்கிக்கலாமா?'' என்று கேட்டான்.

''சரி மாமா..'' என்று மகிழ்ச்சியானான்.

குழந்தையை அவன் மகிழ்விப்பதை மகிழ்ச்சியாகப் பார்த்துக் கொண்டு சகோதரிகள் அவனது அறைக் கதவருகே நின்றார்கள்.

ரேகா அவன் கட்டிலில் அமர்ந்தாள்.

''அண்ணா, மன்னிகிட்டே நான் சாரி கேட்கட்டா?'' என்றாள்.

நரேந்திரன் நெகிழ்ந்து விட்டான். ''வேண்டாம், ரேகா. உங்க மன்னிக்கு இந்த விஷயமே புரியலே... அவளுக்கு இதெல்லாம் தெரியவும் தெரியாது...'' என்றான் நரேந்திரன்.

''அப்ப ஷ்யாம் கிட்டே மன்னிப்புக் கேட்கறேன்...'' என்றாள்.

நரேந்திரன் ஆழ்ந்த சிந்தனையுடன் பேசினான்.

''வேண்டாம்மா... தப்போ ரைட்டோ... நீ பேசியாச்சு. உன் கௌரவத்தையும் விட்டுக் கொடுக்கக் கூடாதில்லே. விடு... இதை வேற மாதிரி டீல் செஞ்சுக்கறேன்!'' என்றான்.

''பார்த்தியா?''என்பது போல ரூபாவும் மாலாவும் ரேகாவைப் பார்க்க, தன் கௌரவத்தை விட்டுக் கொடுக்கக் கூடாது என்று நினைக்கிற அண்ணனை ரேகா பெருமையுடன் பார்த்தாள்.

''இல்லண்ணா. ஷ்யாம் நம்பர் போட்டுக் குடு...' என்றாள் பிடிவாதமாக.



நரேந்திரன் தயக்கத்துடன் போட்டுக் கொடுத்தான்.

'ஷ்யாம் அண்ணா... நான் ரேகா பேசறேன். நீங்க அண்ணாகிட்டே நகை போடறது பத்தி ஏதோ பேசினீங்களாம். நான் வாசுகிகிட்டே சும்மா தமாஷுக்குத்தான் பேசினேன். அதைப் பெரிசா எடுத்துண்டு நீங்க புதுசா நகையெல்லாம் செய்ய வேண்டாம்... என்ன? அண்ணா சொல்றதையெல்லாம் கேட்டா... மன்னியே குணத்திலே தங்கம்னு தெரியறது. அப்படி மன்னி எங்களுக்குக் கிடைச்சாப் போறாதா? நகையெல்லாம் ரெண்டாம் பட்சம்தான். கல்யாண மேட்டரெல்லாம் அம்மா டெஸிஷன்தான். நாங்க எதுவும் விளையாட்டாச் சொன்னா நீங்க சீரியஸா எடுத்துக்காதீங்கோ... என்ன?'' என்றாள். மேலும் சற்று நேரம் பேசினாள். சிரித்துக் கொண்டே ஃபோனை வைத்தாள்.

''உங்களை மாதிரி ஃபேமிலி கிடைக்கறதும் அவாளுக்கு அதிர்ஷ்டம்தான்ங்கறார்!'' என்றாள்.

மூவரிலும் பெரியவளான ரூபா நரேந்திரன் அருகில் அமர்ந்தாள்.

'அதென்ன? அடிக்கடி சந்திக்கறாப்போலத் தெரியுது... ஃபோன்ல பேசறயோ?' என்று கிண்டல் செய்தாள்.

நரேந்திரன் முகம் சிவப்பதைக் கண்டு சிரித்தார்கள்.

''ம்... நடத்து நடத்து... எல்லாம் இருக்கறதுதான்!'' என்றாள் மாலா.

''நேர்ல யெல்லாம் பாக்கறது இல்லம்மா... சும்மா... எப்பவாவதும்... ஃபோன் செய்வேன்'' என்றான்.

''பாவம்டி. நேர்ல பாக்கறது இல்லேன்னு ரொம்பக் கவலைப் படறார் அண்ணா. ஒன்னு செய்வமா? நீ இன்னைக்கு எங்களை எதுக்கு வரச் சொன்னே? கல்யாணத்துக்குப் புடவை எடுக்கத்தானே? போகலாம். புறப்படு. எப்படியும் மன்னிக்குத் தனியா ஒன்னு எடுப்பியோன்னா? அவளையும் வரச்சொல்லு. அப்புறம்... அந்த வாசுகி என்ன பாவம் செஞ்சா... அவளையும் வரச் சொல்லு... அவளுக்கும் ஒன்னு எடுக்கலாம்... சங்கரிக் காவுக்கும் எடுத்தர்லாம். பட்ஜெட் போட்டர்லாம்,'' என்றாள் மாலா.

கலகலப்பும் மகிழ்ச்சியுமாக அன்றையப் பொழுது கழிந்தது. ரேகாவும், வாசுகியும் தோழிகளாகி விட்டார்கள். இவுளிக் கடையே கலகலத்தது. நடுவில் நரேனும் ஜெயாவும் சிக்கிக் கொண்டு விழித்தார்கள்.

இடையிலே அவர்களுக்குத் தனியாகவும் நேரம் ஒதுக்கி னார்கள்.

நரேந்திரன் மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன் வருங்கால மனைவியை ஆழ்ந்து பார்க்க, அவள் முகம் சிவந்தது.

'ஐயோ! என்ன இப்படி முழுங்கற மாதிரிப் பாக்கறேள்! உங்க சிஸ்டர்ஸ் வேற இப்படிக் கலாட்டா செய்யறா!'' என்றாள் ஜெயலட்சுமி வெட்கத்துடன்.

'கல்யாணம் வரைக்கும் இப்படித்தான் ஆளாளுக்குக் கேலி செய்வா... பொறுத்துக்க வேண்டியதுதான்... அப்புறம்... என்ன சொன்னே? முழுங்கற மாதிரிப் பாக்கறனா! இப்போதைக்குக் கொஞ்சம் தேராப் பார்க்கறதுக்கு வாய்ப்புக் கிடைச்சுருக்கேன்னு ஐயா மயக்கத்திலே இருக்கிறேன். அதுவும் கூடாதுன்னா எப்படி?' என்றான்.

அவள் வெட்கத்தில் தவிப்பதையும் சகோதரிகள் வருவதையும் பார்த்து அவன் தன்னை மீட்டுக் கொண்டான்.

''ரூபா! அத்திம்பேர் இருக்காரே, கல்யாணம் நிச்சயம் ஆனதிலே இருந்து ஏதோ ஒரு காரணம் சொல்லிண்டு ரெண்டு நாளைக்கொரு தரம் வந்து நிப்பாரு!'' என்று சொல்லிக் கொண்டு வந்தாள் மாலா.

சிரித்தார்கள்.

இனிமையாகப் பொழுது கழிந்தது. ஜெயாவையும், வாசகியையும் அவர்கள் வீட்டில் விட்டுவிட்டு வந்தார்கள்.

இரவு புறப்பட்ட தங்கைகளிடம் நரேந்திரன், ''ரொம்பத் தாங்க்ஸ்ம்மா!'' என்றான்.



''எதுக்கு?'' என்றாள் ரூபா.

''எல்லாத்துக்குந்தான்!'' என்றான். முகம் சிவந்தது.

பெண்கள் சிரித்தார்கள்.

அம்மாவிடம் சொல்லிக் கொண்டு புறப்படுகையில் அம்மா சொன்னார்.

''இதுதான்டி விஷயம்... ரிலேஷன்ஷிப்பை எப்படி வச்சுக்கறதுங்கறது உங்க கையிலேதான் இருக்கு. உறவுன்னா எப்பவும் காயப்படுத்தறது இல்லடி... கைகொடுக்கறதுலதான் இருக்கு... பாத்தியோ... உங்கண்ணா முகத்துல எவ்வளவு சந்தோஷம்னு...'' என்றார்.

''ஆமாம்மா... மன்னியும் நல்லவளாத்தான் தெரியுறா!'' என்றாள் ரூபா.

''பார்த்துப் பார்த்து... தங்கைகளை அனுசரிக்கிறவளா வேணும்னு இருந்து... முப்பத்து நாலு வயசுல கல்யாணம் பண்றான்டி. அவளைச் சந்தோஷமா வச்சுக்குங்கோ...!'' என்றார் மறுபடியும்.

'நிச்சயமா...' என்றார்கள் கோரஸாக. அடுத்த அறையில் இருந்து நரேந்திரன் தங்கைகள் போன பிறகு அம்மாவிடம் வந்து...

''அம்மா... தேங்க்ஸ்...'' என்றான்.

அம்மா அழகாகச் சிரித்தார்.

''நரேன்... கவலைப்படாதே... சந்தோஷமா இரு. இருப்பே... ஏன்னா நான் உன்னோட ஜெயாவுக்கும் மாமியாரா இல்லே. அம்மாவா இருக்கறதுன்னு எப்பவோ முடிவு செஞ்சாச்சு. நம்மாத்துல எந்தக் குழப்பமும் வராது...'' என்றார்.

சாவித்திரியின் வார்த்தைகள் அவனுக்குள் ஒரு பெரிய சிந்தனையை ஏற்படுத்தின. எல்லா மாமியார்களும் மனத் தினளவில் அம்மாக்களாக மாறினால் குடும்பத்தில் பிரச்சினைகளே இருக்காது என்று எண்ணிக் கொண்டான்.

சிரித்துக் கொண்டான்.

சிறிது நேரம் போயிருக்கும்.

ரேகாவிடமிருந்து ஃபோன்

"அண்ணா,நீ எடுத்துக் குடுத்த புடவை இங்க எல்லாருக்கும் ரொம்பப் பிடிச்சது!" என்றாள்.

'சரிம்மா. உங்க மாமனார், மாமியார், உங்காத்துக்காரர் - அப்புறம் என்ன? உங்க மச்சினர் ஒருத்தர்தானே. எல்லாருக்குமா நீங்களே போய் செலக்ட் பண்ணி எடுத்துண்டு சொன்னா நான் உடனே வந்து பில்லுக்குப் பணம் குடுத்தர்றேன்..." என்றான்.

"அண்ணா, செலவு ரொம்ப ஆகுமே!"

"இல்லம்மா... நம்மாத்துல கடைசிக் கல்யாணம். செலவைப் பத்தி யோசிக்க வேண்டாம்!" என்றான்.

'சரிண்ணா...' என்றவள் குரலைத் தாழ்த்தி,

"அண்ணா, மன்னி ரொம்ப அழகு. நோக்கு ரொம்பப் பொருத்தம். குணத்துலயும் ரொம்ப நல்ல மாதிரியா தெரியறா..." என்றாள்.

"தாங்க்ஸ்ம்மா!" என்றான்.

"அப்புறம்... கல்யாணத்துக்கு ரெண்டு மாசம் இருக்கு. மன்னியை எப்பப்ப பாக்கணும்னு நெனக்கிறியோ... அப்பப்ப சொல்லு... நானும், வாசுகியும் ஏதாவது ஏற்பாடு செஞ்சர்றோம்..." என்றாள். கலகலவெனச் சிரித்தாள்.

"சும்மாயிரும்மா... நீ..." என்று சிரித்தபடி ஃபோனை வைத்தான்.

மனம் நிம்மதியடைந்தாற்போல் உணர்ந்தான்.

## 8

இரண்டு மாதங்கள் வேகமாக ஓடி விட்டன.



ஷ்யாமுக்கு மருத்துவமனை வேலை, கல்யாண வேலை என்று நேரம் பிய்த்துக் கொண்டு ஓடியது. ஆனாலும், வேலைக்கு நடுவே சிரித்துக் கொள்ளவும் செய்தான்.

அவர்கள் துறையில் எத்தனையோ நர்ஸ்கள், பெண்கள் இருந்தார்கள். வேலை நேரங்களில் சற்று வேடிக்கையாகவும் பேசவும் செய்வார்கள். அதிலும் ஷாநவாஸ் ஜாலியாக ஒவ்வொரு பேஷண்டையும் பற்றி விமர்சிப்பான். சிரிப்பார்கள். ஆனால், நேரில் அவர்களிடம் அன்பாகவே நடந்து கொள்வார்கள். அதிலும் சீஃப் டாக்டரின் உருட்டல், மிரட்டல்களை அவரைப் போலவே செய்து காண்பிப்பான்.

அங்கேயும் ஷ்யாமை ஒரு குடும்பத் தலைவனாகவே அவர்கள் நடத்தினார்கள். அவன் குடும்பத்துடன் எல்லாரும் எளிதாக ஒட்டிக் கொள்வார்கள். அம்மா, அம்மா என்று அவனது அம்மாவிடமும் பழகிக் கொள்வார்கள். அவனது சகோதரிகளிடமும் சகோதர பாசத்துடன் பழகிக் கொள்வார்கள்.

ஆனந்தியின் வருகையும் அவர்களிடையே ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. அவளும் இயல்பாகப் பழகினாள். நன்றாக வாயடிக்கவும் செய்தாள்.

ஒரு நாள் அவர்கள் இளைப்பாறும் அறையில் சாப்பிட அமர்ந்திருந்தார்கள். ஆனந்தி திடீரென்று வந்தாள்.

ஆனந்திக்கு ஆஸ்பத்திரியில் கொடுத்திருந்த குவார்ட்டர்ஸில் குடியிருந்தாள். துணைக்கு ஒரு வயதான உறவுக்காரப் பெண்மணி. அந்த அம்மாவை அவள் பாட்டி என்றுதான் குறிப்பிடுவாள்.

"நான் இனிமே உங்களோடதான் சாப்பிடப் போறேன். தனியாச் சாப்பிடப் பிடிக்கலே!" என்றாள்.

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

'பயப்பட வேண்டாம். ஃபீல் ஃப்ரீ... கண்டுக்கமாட்டேன்," என்றாள்.

அவள் பேசுகிற தமிழ் மழலையைப் போல் இருக்கும்.

''பாட்டி கிட்டே சாப்பாடு பிடிக்கலே. டிஃப்பன் செஞ்சு குடுன்னு கேட்டேனா... கோதுமை ரொட்டி சுட்டுத் தந்தாங்க...'' என்றாள் குழந்தையைப் போல்.

யாரும் எதிர்பாராத விதமாக ஷாநவாஸ், ''ஏன்... பாட்டி வாலிபாப் தர்லையாக்கும்?'' என்றான்.

மற்றவர்கள் எல்லாரும் திகைத்துப் போய் அமர்ந்திருக்க, ஆனந்தி அலட்டிக் கொள்ளாமல், ''அட... ஆமா! தந்தாங்க. இங்க கோட்டாக்கெட்டில் வச்சிருந்தேனே...'' என்று துழாவ அமர் சிரித்தான்.

'ஷா நவாஸ்ன்னு ஒரு சின்னப் பையன் இருக்குமில்லே... அதுக்குக் குடுன்னு குடுத்தாங்க... மறந்து வச்சுட்டேன் போலிருக்கு...'' என்றவுடன் ஷாநவாஸ் வாயடைத்துப் போனான்.

ஷ்யாமும் கூடத் தன்னை மறந்து மேஜைஙை:த் தட்டி, ''அப்படிப் போடுங்க... ஆனந்தி!'' என்று சிரித்தான். சற்று நேரம் வெடிச்சிரிப்பு மலர்ந்தது. கருணாகரன் கூட ஷாநவாஸிடம், ''டேய், உன் கொழுப்பு இன்னைக்கு அடங்கிச்சுடா...!'' என்றான்.

உணவுண்டு முடித்த பின், இங்கிதம் தெரிந்த அவள் சற்று நேரம் பேசிக் கொண்டிருக்கட்டும் என்று கிளம்பி விடுவாள்.

அவள் நல்ல புத்திசாலி என்றும், தொழிலில் ஆர்வமாகச் செயல்படுகிறாள் என்றும் ஷ்யாமுக்கும் புரிந்திருந்தது. அமெரிக் காவில் உள்ள மருத்துவமனையின் நிறுவனரின் பரிந்துரையில் வேலைக்கு வந்திருக்கிறாள் என்றும், நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவள் என்றும் பேச்சாக இருந்தது.

நிறுவனருக்கு வேண்டியவள் என்பதால் எல்லாருமே அவ ளிடம் அதிகம் நெருங்கவும் இல்லை, விலகி விடவும் இல்லை.

ஷ்யாமிடமும், பாஸ்கரனிடமும், தங்கதுரையிடமும் மிகுந்த மரியாதையுடன் பழகினாள். சந்திரேசன்தான் அவளுக்கு நேரடியான தலைவர் என்றபோதும், அவரிடம் பயபக்தியுடன் விலகியே நின் றாள். ஆனால், எல்லாருக்கும் ஆச்சரியம் எதுவென்றால் சந்திரேசன் கூட அவளிடம் கனிவாகப் பேசினார். அன்பாக நடந்து கொண்டார்.



ஆனந்தி ஒரு நாள் ஷ்யாமிடம் பேசியபோது, அமெரிக்காவில் படிப்புக்கு ஆகும் செலவு அதிகம் என்றும், 'நான் படிக்கும்போதே வேலைக்குப் போய்த்தான் படித்தேன்' என்றும் சொன்னாள். ஷ்யாம் நெகிழ்ந்து போனான்.

இதற்கிடையில் திருமணத்திற்கு முன்பு ஏதோ ஒரு வீட்டு நிகழ்ச்சிக்காக எல்லாரையும் அழைத்திருந்தான்.

ஆனந்தியும் வந்தாள். எல்லாரிடமும் இயல்பாக ஒட்டிக் கொண்டாள். அடிக்கடி வந்தாள்.

''மாமி... சட்னி ரொம்ப நன்னாருக்கு!'' என்றாள். சட்னி என்ற வார்த்தையை நாக்கு நுனி மேலண்ணத்தில் ஒட்ட ஒரு ஆங்கிலத் தன்மையோடு உச்சரிக்க, எல்லாரும் சிரித்தார்கள்.

''ஹேய்! யு பீப்பிள் ஆர் டீஸிங் மீ...'' என்று செல்லமாகச் சிணுங்கினாள்.

ஷ்யாம் கூட அந்தச் செல்லச் சிணுங்கலை ரசித்தான்.

''ஆனந்தி மேடம்... இங்கயெல்லாம் நாங்க இவ்வளவு லிப்ஸ்டிக் தீட்டிக்க மாட்டோம்,'' என்றாள் வாசுகி.

''புடவை கட்டிப் பழகிக்குங்களேன்,'' என்றாள். ஷ்யாம் கூட இயல்பாகப் பேச ஆரம்பித்தான்.

''வாசு சொல்றது சரி... ஆனந்தி. உங்க ஊர் குளிர்தேசம்... அங்கே உதடு வெடிக்காம இருக்க லிப்ஸ்டிக் அவசியம். இங்க அப்படி இல்லையே... அதே மாதிரி ஹாட் ட்ரிங்க்ஸ் அங்க சில சமயம் ஹெல்ப்பா இருக்கும். ஆனா, இங்கே எல்லாத்தையும் இமிடேட் பண்றாங்க... தேவையில்லாம மொடா மொடாவா ஊத்திக் குடலைக் கெடுத்துக்கறானுங்க...'' என்று சிரித்தான் ஷ்யாம்.

''யா... தட்ஸ் ட்ரு...'' என்றாள். பிறகு, ''நீங்க எல்லாரும் நன்னா... இங்லீஸ்... பேஷறீங்கோ...'' என்றாள்.

அந்தக் காலத்து எஸ்.எஸ்.எல்.சி. என்றபோதும், பஞ்சாப கேசன் பேசுகிற ஆங்கிலம் அவளை அசத்தியது. கார்த்திகாயினி

பேசுகிற இலக்கியம், மகாபாரதம், ராமாயணம் போன்ற இதிகாசங்களின் கதைகளை எல்லாம் அவர் சொல்லும் விதம் பார்த்து ஆர்வமாகக் கேட்டாள்.

வாசகிக்கு ஒன்று புரிந்தது. ஆனந்திக்குத் தன் சகோதரனை மிகவும் பிடிக்கிறது என்று. ஆனால், ஷ்யாமுக்கு அது புரியவே இல்லை. அவன் தன்னுடைய உலகத்தில் ஆழ்ந்து விட்டான் என்றுதான் சொல்ல வேண்டும்.

* * *

ஜெயலட்சுமியின் திருமணத்திற்கு முதல் நாள் ரிசப்ஷன் வெகு சிறப்பாக நடந்து கொண்டிருந்தது.

ஷ்யாமின் நண்பர்கள், பெரியவர்கள் என்று எல்லாரும் வந்திருந்தார்கள்.

இவ்வளவு சிறப்பாக ஷ்யாம் நடத்துவான் என்று நரேந்திரன் எதிர்பார்க்கவில்லை. இத்தனைக்கும் ஷ்யாமுக்கு எதையும் நிர்வகிக்க நேரம் இருக்கவில்லை. இருந்த போதும் ஒவ்வொரு நாள் இரவும் ஷ்யாம், பஞ்சாபகேசன், நந்து மூவரும் அமர்ந்து டிஸ்கஸ் செய்வார்கள். போக வேண்டிய இடங்களுக்குப் போய் வாங்க வேண்டியவற்றை எல்லாம் வாசகியும் நந்துவும் வாங்கினார்கள் சங்கரியும் அவர் கணவரும் ஒரு வாரம் முன்பு வந்தார்கள். அப்பாவும், அம்மாவும் விஷயங்களை ஒழுங்கு படுத்த, அனாவசிய ஆடம்பரங்கள் இல்லாமல் ஒரு கச்சேரியுடன் ரிசப்ஷன் அழகாக நடந்து கொண்டிருந்தது.

நரேந்திரன் கோட் சூட் அணிந்து அழகாக நிற்க, ஜெயலட்சுமி பியூட்டிஷியனின் அலங்காரத்தில் பளிச்சென்று நின்றாள். அழகும், நிறமும் பொருந்த நிற்கிற அவர்களைப் பார்த்துத் தன் மகிழ்ச்சியை ஆனந்தியிடம் கூடப் பங்கிட்டுக் கொண்டான் ஷ்யாம்.

ஆனந்தி திருமண நாட்களில் எல்லாம் அவர்கள் வீட்டிலேயே தங்கிக் கொண்டாள். உறவினர்கள் கூட்டம் வேறு இருந்தது. கருணாகரன், அமரேந்திரன், ஷாநவாஸ் என்று எல்லாரும் நன்றாக உதவி செய்தார்கள்.



திருமணத்துக்கு மறுநாள் இரவு முதலிரவு என்று வைத்தார்கள்.

ஷ்யாமும், கருணாகரனும் இளைஞர் பட்டாளத்தைத் தியேட்டருக்கு சினிமா பார்க்க அழைத்துப் போய்விட்டார்கள்.

மிக நாசூக்காக வீட்டுப் பெரியவர்கள் அதைக் கையாள, தியேட்டரில் வைத்து ஆனந்தி, ஷ்யாமிடம்,

"வாட் இஸ் திஸ்! இந்தியா இன்னும் ஏன் இப்படி இருக்கு...? ஃபர்ஸ்ட் நைட்டை இப்படி வெளிச்சம் போடணுமா?" என்றாள் காட்டமாக.

"என்ன பண்றது ஆனந்தி? சில விஷயங்களையெல்லாம் மெதுமெதுவாய்த்தான் மாத்தணும். ஆனா... ஒண்ணு தெரியுமோ? நலங்கு வைத்து... வாழ்த்தின்னு... இங்க எல்லாச் சடங்கையும் ஒரு விதமா வெளிப்படையா நடத்திருவாங்க... தெரியுமா?" என்று சிரித்தான்.

வாசகிக்கு ஒரே ஆச்சரியம்.

'என்னண்ணா, இது? இதையெல்லாம் உன்கிட்டே டிஸ்கஸ் பண்றா..." என்றாள் முணுமுணுப்பாக.

"அது... ஆனந்திக்கு நம்ம ஊர்ப் பழக்க வழக்கங்கள் பத்தி ஒரே ஆச்சரியம். இங்கே ஆண், பெண் உறவுகள்ல அனாவசியமா ஒரு இறுக்கம் இருக்கு. இயல்பா இருக்கலாம். அப்படீங்கறா..." என்றான்.

ஆனாலும் வாசகிக்கு ஆச்சரியம்தான். "அங்கேயெல்லாம் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையேயான நட்பு வெளிப் படையானது. ஆனா, இன்னொரு விஷயம் இருக்கு. அங்க எல்லாமே ஃப்ரீ... ஆனா, இங்கே... விஷயங்களை முறைப் படுத்தியிருக்காங்க... அதை வெளிப்படையாய்ச் செய்யாமே எல்லாமே சடங்கா ஆக்கிட்டாங்க...' என்றான்.

"தட்ஸ் திபாயிண்ட்," என்றாள் ஆனந்தி. 'மிஸ்டர் ஷ்யாம்! நீங்க சாமியார்ன்னு நெனைச்சேன்... ஆனா... எல்லாத்தையும் பத்தியும் யோசிக்கத்தான் வச்சிருக்கீங்க..." என்றாள்.

ஷ்யாம் சிரித்தான்.

அண்ணன் ஆனந்தியிடம் இயல்பாக எல்லா விஷயங்களையும் பகிர்ந்து கொள்வது வாசுகிக்கே ஆச்சரியம்தான். ஆனால் அவன் மனதில் எந்தச் சலனமும் இல்லை என்பதும் அவளுக்குப் புரிந்தது.

"அதான் ஆனந்தி... நாளையிலிருந்து ஒரு வாரம் ஜெயாவுக்கும், அத்திம்பேருக்கும் வெளியூர் ட்ரிப் அரேன்ஜ் பண்ணியிருக்கேன்." என்றான்.

"ஹனிமூன்னு சொல்லுங்க..." என்றாள்.

'யா...!' என்றான் புன்னகையுடன். வேறு பேச ஆரம்பித்தான்.

* * *

அன்றைக்கு ஒரு ஏ.எஸ்.டி. ஆபரேஷன்.

ஷ்யாம் அதில் இருந்தான்.

சந்தரேசன் என்ஜியோகிராம் செய்து கொண்டிருந்தார். நோயாளி மிகவும் பயந்த சுபாவமாய் இருந்தார்.

"சார்... ரொம்பக் கஷ்டமா இருக்கே... என்னென்னமோ செய்யறது..." என்று ஒரே புலம்பல். "தலையெல்லாம் சுடுதே..." என்றார்.

சந்தரேசன் ஒன்றும் கண்டு கொள்ளவில்லை.

"அப்படித்தான் இருக்கும். பொறுத்துக்கய்யா..." என்றார் கடுப்பாக.

மறுபடியும் புலம்ப -

"இத பாருய்யா, இப்படியே பண்ணிகிட்டிருந்தே. பத்து நாள்ல போற உயிர் இப்பவே போயிரும்!" என்றார்.

ஆனந்தி திகைத்துப் போய்க் கருணாகரனைப் பார்த்தாள்.

"சார்... நான் சொல்றேன்..." என்று அவன் முன்வந்தான்.

"சார்... கொஞ்சம் பொறுத்துக்குங்க... இப்பக் கொஞ்சம் கஷ்டப்பட்டா... என்ன பிரச்சினைன்னு தெரிஞ்சுக்கலாமில்லே...



பாக்கப் போனா... உங்களுக்கு ஒண்ணும் பெரிய பிரச்சினையில்லே... ஒரு அடைப்புத்தான்... சரி பண்ணிரலாம்... என்ன..." என்று ஆறுதலாகப் பேசினான்.

ஆன்ஜியோ கிராம் முடிந்தவுடன் இந்தப் பக்கம் வந்த சந்தரேசன்,

"ஆமாய்யா... ஓசி வைத்தியம் பார்க்க வர்றவனையெல்லாம்... இந்தத் தாங்கு தாங்குங்க..." என்று எரிந்து விழுந்தார்.

கருணாகரன் அதைப் பொறுமையாக வாங்கிக் கொண்டான். நர்ஸ்களிடம் நோயாளியை இன்டென்சிவ் யூனிட்டுக்கு அழைத்துப் போகச் சொன்னான்.

"கொஞ்சமே கொஞ்ச நேரந்தான். அப்புறம்... நீங்க ஏதாவது சாப்பிடலாம்..." என்ன?" என்றான்.

ஆனந்தியும், கருணாகரனும் வெளியே வந்தவுடன் ஆனந்தி,

"நீங்க... நல்லதுதானே சொன்னீங்க கருணா... அப்புறம் எதுக்கு சீ·ப் கோபிக்கக்கறாரு..." என்றாள்.

"அவரு கெடக்கறாரு..." என்று கருணா அதைச் சற்றும் கண்டு கொள்ளாமல் அலட்சியப் படுத்துவதை ஆச்சரியமாகப் பார்த்தாள். தங்கதுரையிடம் பகிர்ந்து கொண்டாள்.

'அதும்மா... சீ·ப் டென்ஷன் பார்ட்டி... இந்தப் பசங்க எல்லாம் கூடிப் பேசி முடிவு பண்ணி வச்சிருக்கானுங்க. அவர் என்ன பேசினாலும் கண்டுக்கறதில்லை. முடிஞ்ச வரைக்கும் பேஷண்ட்ஸுக்கு ஹெல்ப் பண்ணணும்னு." என்றார்.

சற்று நேரத்தில் ரவுண்ட்ஸ் வந்த சீ·புடன் அவளும் போனாள். அன்றைக்கு சீ·ப் கருணாகரன் மேல் கோபமாக இருந்தார். அந்தக் கோபத்தையெல்லாம் நோயாளிகள் மேல் காட்டினார். ஒரு இளைஞன் மிகவும் இளைத்துப் போய்க் கிடந்தான். அவன் மனைவி அருகில் நின்றவளிடம்,

"ஏம்மா... எல்லாருக்கும் சேதி சொல்ல வேண்டிய ஸ்டேஜ்ல இருக்காரு. இந்த ஆளு... இந்தாளை நாங்க காப்பாத்தணும்

இல்லே... உங்களையெல்லாம் நாங்க எதுவும் பேசிடக் கூடாது... இவங்களுக்கெல்லாம் கோபம் வந்துடும்!" என்று கருணாகரனை ஜாடையாகக் காட்டிக் குத்தினார்.

அதற்கும் கருணாகரன் ஒன்றும் பேசவில்லை. பிறகுதான் அவர் கோபம் அடங்கியது.

ரவுண்ட்ஸ் முடிந்தவுடன் சீஃப் அந்தப்புறம் போன பிறகு, "கருணா! ஃபீல் பண்ணாதீங்க!" என்றாள் ஆனந்தி.

அவன் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான். "பழக்கமாயி டுச்சு... நாளைக்கே கூப்பிட்டுச் சிரிச்சுகிட்டுப் பேசுவார்..." என்றபடி நகர்ந்து விட்டான்.

"துரை... சார்... நாவேண்ணா இவரோட பிஹேவியர் மேலே தெரியற மாதிரி செய்யட்டா?" என்றாள்.

உடனே தங்கதுரை அவசரமாக, "வேண்டாம்மா... பேச்சு இப்படின்னாலும் ஆள் ரொம்பக் கெட்டிக்காரர். அவசரப்படாதே," என்றார்.

'ஓ...!' என்று அடங்கி விட்டாள்.

'அது மட்டுமில்லே' என்று மேலும் ஏதோ சொல்ல வந்தவர் தயங்கினார்.

"சொல்லுங்க... சார்... யார் கிட்டேயும் சொல்ல மாட்டேன்," என்றாள்.

"ஈஷ்வர் ரொம்ப இன்ஃப்ளுயன்ஷியல்... அமெரிக்காவுல மெடிசின் படிக்கறதுக்கு ரொம்ப செலவாகுதாமே. நீ ரொம்பக் கஷ்டப்பட்டுப் படிச்சிருக்கே. இங்க ஈஷ்வரைப் பகைச்சுக் கிட்டின்னா... தமிழ்நாட்ல எங்கயுமே வேலை செய்ய முடியாது கெடுத்து விட்டுடுவாரு..." என்றார் தங்கதுரை.

"ஓ...!" என்றாள் ஆனந்தி ஒரு நிமிடம் கழித்து. "நான் கஷ்டப் பட்டுப் படிச்சேன்னு உங்களுக்கு யாரு சொன்னா?" என்றாள் ஆர்வமாக.



"ஷ்யாம்தாம்மா சொன்னான். ஆனந்தி ரொம்ப இன்டலி ஜென்ட். போராடி மேல வந்திருக்கா... பார்ட் டைம் ஜாப் செஞ்சு படிச்சாளாம். ரொம்ப ஷார்ப்... ஹார்ட் வொர்க்கின்னு... ரொம்பப் புகழ்றான்," என்று அவர் சொல்ல, ஆனந்தியின் இதழ்களில் ஒரு மர்மப் புன்னகை மலர்ந்து மறைந்தது.

## 9

அன்றைக்கு ஷ்யாமுக்கு ஓ.பி.டே. உணவு நேரத்துக்குச் சாப்பிடுவதற்காக ஓய்வறைக்கு வந்தான். ஆனந்தி மட்டுந்தான் அன்றைக்கு இருந்தாள்.

"ஆனந்தி... ஜெயாக்காவும், அத்திம்பேரும் வந்துட்டா..." என்றான், முகமெல்லாம் சிரிப்பாக.

"ஓ...! எப்படி இருக்கா... ஜெயாக்கா?" என்றாள்.

"வெரி ஹாப்பி... நாலைஞ்சு வயசு குறைஞ்சு போன மாதிரி இருக்கா... தெரியுமோ? அத்திம்பேர் அதுக்கு மேலே...!" என்றான்.

ஆனந்தி புன்னகைத்தாள்.

"ஜெயாக்காவுக்கு என்ன வயசு!" என்றாள்.

"முப்பத்திரண்டு முடிந்தது. எனக்கு மூணு வயசு பெரியவள். சங்கரிக்கும் அவளுக்கும் மூணு வயசு இடைவெளி. அப்பாவோட சேமிப்புல ஜெயாக்காவுக்கு மேரேஜ் செய்வோம். அப்புறம் சங்கரிக்குப் பார்க்கலாம்னு நெனச்சப்போ... எனக்கு எம்.சி.எச். என்ட்ரன்ஸ்ல செலக்ஷன் கிடைச்சது. நீ படிக்கப் போ தம்பி. நீ மட்டும் படிச்சு ஜெயிச்சு வந்துட்டா... குடும்பமே தலை தூக்கிடும். நீ போய்ப் படிச்சுட்டு வந்தா... நான் லேட்டாவாவது கல்யாணம் செஞ்சுக்கறேன்... படிக்கப் போகலைன்னா கல் யாணமே பண்ணிக்க மாட்டேன்னு பிடிவாதமா நின்னு அனுப்பி வச்சா... அப்பாவோட பி.எஃப். ரிடையர்மென்ட் பெனிஃபிட் எல்லாத்தையும் வச்சுண்டு குடும்பத்தையும் நடத்தி என்னையும் படிக்க வச்சா எங்கம்மா...' என்றான்.

ஆனந்தி மலைத்துப் போனாள்.

"எவ்வளவு அருமையான ஃபேமிலி உங்களுது..." என்றாள்.

"ஆமா... உண்மையாகவே நல்ல ஃபேமிலிதான். நடுத்தரக் குடும்பங்களும், கீழ் நடுத்தரக் குடும்பங்களும் இங்கே ரொம்பக் கஷ்டப்பட்டுத்தான் முன்னேற்றம்," என்றான்.

"நான் இன்னைக்கு நம்மாத்துக்கு வரேன்," என்றாள், ஆனந்தி உரிமையாக.

"வா... வந்து பாரு அவா ரெண்டு பேர் முகத்தையும்," என்றான் ஷ்யாம். வந்தாள்.

"நிஜந்தான்... ஷ்யாம்," என்றாள் அவனிடம் தனியாக.

அன்றிரவு.

எட்டு மணி இருக்கும்.

அம்மா ஒரு பெரிய பாத்திரம் நிறையச் சூடாகச் சாதம் பிசைந்து வைத்துக் கொண்டு எல்லாரையும் அழைத்தாள்.

"ஷ்யாம் அண்ணா... உருண்டைச் சாதம்டா, வா..." என்று அழைத்தான் நந்தகோபால் குதூகலமாக.

ஒரு கூடை நிறைய அப்பளம் வேறு வைத்திருந்தாள் அம்மா.

"விருந்தாளிகள் நிறைய வந்திருக்காளேன்னு சாதம் வச்சேன். மீதியாப் போச்சு. அதான் சாம்பார்ச் சாதம்..." என்று சிரித்தாள் அம்மா.

அம்மாவிற்கு எதிராக எல்லாரும் அரை வட்டமாக அமர்ந்தார்கள்.

ஷ்யாம், அடுத்து வாகி, அடுத்து நந்து என்று அமர, 'நானும் வரேன்' என்று ஆனந்தி வேகமாக வந்து ஷ்யாமின் வலப் பக்கத்தில் அமர்ந்தாள்.

ஷ்யாம் இதை எதிர்பார்க்கவில்லை. திகைத்துப் போய் அவளைப் பார்த்தான். அவள் அவனைக் கண்டு கொள்ளாமல் வலக்கையைக் குவித்து நீட்டினாள்.



"அம்மா... ஜெயாக்கா எங்கே?" என்று கிசுகிசுத்தான் நந்தகோபால்.

"மேல இருக்காடா... மெதுவாப் பேசு..." என்றாள் கார்த்திகாயினி.

அதற்குள் ஜெயலட்சுமி கீழே வர, பின்னாலேயே நரேந்திரன் வந்தான்.

"அம்மா... என்னை விட்டுட்டியே... நேக்கு..." என்று ஜெயலட்சுமி வந்து ஆனந்தியின் அருகில் அமர, ஆனந்தி ஷ்யாமிடம் நெருங்கி அமர்ந்திருந்தாள்.

"மாமி! என்னை விடலாமோ. இதோ நானும் வரேன்... நேக்கும் ஒரு கை போடுங்கோ," என்று அவனும் ஜெயலட்சுமியின் அருகில் அமர்ந்தான்.

அம்மா வரிசையாக உருண்டைகளை வைத்துக் கொண்டு வர, சிரிப்பும் கலாட்டாவுமாக உண்டார்கள். ஆனந்தி இதையெல்லாம் வெகுவாக ரசித்தாள். அதற்குள் அவர்கள் வீட்டு நாய்க்குட்டி குரல் கொடுக்க,

'குடுக்கறேன்டா... ராஜா... பொறு...' என்று அம்மா பதில் குரல் கொடுக்க, எல்லாரும் திரும்பிப் பார்க்கிற அந்த இடைவெளியில் நரேந்திரன் தன் இடக்கையால் ஜெயலட்சுமியின் கையைத் தூக்கி அவள் கையிலிருந்த பாதி உருண்டையை விழுங்கிக் கொண்டு விட, ஜெயலட்சுமி தவித்துப் போனாள்.

எதிர்பாராமல் திரும்பி இதைக் கவனித்த ஆனந்தி, சிரிப்பை அடக்கிக் கொண்டு, பார்வையைத் திருப்ப, வாகினியும் பார்வையைப் பகிர்ந்து கொள்ள, இருவரும் சிரித்தார்கள்.

"ஹேய் ஆனந்தி... நீ அங்கே வாகிகிட்டே போய் உட்காரேன்," என்றான் ஷ்யாம்.

"ஏன்... நான் இங்கதான் உட்காருவேன். நீங்களும்தான் என் ஃப்ரெண்ட்," என்றாள் அவள்.

இதையெல்லாம் எல்லாரும் இயல்பாகவே எடுத்துக் கொண்டார்கள்.

ஜெயலட்சுமியும், நரேந்திரனும் மாடிக்குப் போன பின், ஆனந்தியும், வாசுகியும் குசுகுசுவென்று பேசிச் சிரித்துக் கொண்டார்கள்.

"என்ன... ரெண்டு பொம்மனாட்டிகளுக்கும் இப்படிச் சிரிப்பு..." என்று அம்மா கூட விசாரித்தார்.

'ஒண்ணுமில்லே...' என்று அந்தப் பக்கம் போக, எதிரே வந்த ஷ்யாம் அன்றைக்கு நல்ல மூடில் இருந்தான்.

"என்னதான் விஷயம்... சொல்லேண்டி... வாசு..." என்றான்.

"வேண்டாம்... விட்டு..." என்றார்கள்.

"பரவாயில்லை... சொல்லு..." என்றான்.

"இல்லே... அத்திம்பேர்..." என்று சிரித்தபடி நரேந்திரனின் விஷமத்தைச் சொல்ல... ஷ்யாம் இதை எதிர்பார்க்கவில்லை.

இரண்டு பேரையும் மாறி மாறிப் பார்த்தான். ஆனந்தி கலுக்கென்று சிரித்தாள். ஒரு நிமிடம் விழித்து விட்டுக் குறுஞ் சிரிப்புடன் நகர்ந்தான்.

இரண்டு பெண்களின் சிரிப்பும் அவனைத் தொடர்ந்தது. முகம் சிவந்து விட்டது.

* * *

வழக்கமான அந்த டிஸ்கஷனில் அமர்ந்திருந்தார்கள்.

வரும் பதினைந்து நாட்களில் நடத்த வேண்டிய ஆபரேஷன் பற்றி விவாதித்தார்கள். இப்போது ஷ்யாமும் ஒரு தனி டீமுடன் ஆபரேஷன்கள் செய்ததால் பாஸ்கரனுக்குப் பளு குறைந்திருந்தது.

அந்த வாரத்தில் ஒரு வித்தியாசமான கேஸ் இருந்தது. ஆபரேஷன் தேவையா இல்லையா என்று ஆராய வேண்டிய நோயாளி அட்மிட் ஆகி இருந்தார். ஏஞ்சியோ முடித்து விட்டார்கள்.

இரண்டு குறைபாடுகள் ஒன்றையொன்று சரிக்கட்டிக் கொண்டு போகிற விதத்தில் இருந்ததால் காம்பன்ஸேட்டிங் மெக்கானிஸம் அறுவைச் சிகிச்சை தேவையில்லை என்றான் ஷ்யாம். ஒத்துக் கொண்டார் பாஸ்கரன்.



யார் யாருக்கு முன்னுரிமை கொடுப்பது என்று விவாதம் வந்தபோது, இரண்டு பேருக்குச் சற்று விரைவாகவே செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது என்றார் பாஸ்கரன். ஆனால், வேறு இரண்டு பேருக்குத் தான் வாக்குக் கொடுத்துவிட்டதாக சீஃப் சொன்னார்.

ஷ்யாம் இருவருக்கும் பொதுவாக, ''அவசர அவசியம் யாருக்குன்னு பாக்கலாமே!'' என்றான்.

''நான்தான் இங்கே சீஃப்!'' என்றார் சுந்தரேசன்.

பாஸ்கரனோ, ஷ்யாமோ இப்படி ஒரு பதிலை எதிர் பார்க்கவில்லை.

''கேள்வி இங்கே சீஃப் யாருங்கறது இல்லே. எந்த நோயாளிக்கு முதலில் ஆபரேஷன் செய்யறது அவசியம்கறது தான். ஷ்யாம் சொன்னதுதான் சரி...'' என்றார், பாஸ்கரன் - குரலை உயர்த்தாமல், ஆனால் அழுத்தமாக.

கண நேரம் பாஸ்கரன் பார்வையும், சுந்தரேசன் பார்வையும் சந்தித்துக் கொண்டன. இரண்டு வாட்கள் உரசிக் கொண்டாற் போல் இருந்தது. பாஸ்கரனின் கூர்மையான பார்வையிலிருந்து தன் கண்களை ஒரு விதமான அசௌகரியத்துடன் திருப்பிக் கொண்ட சுந்தரேசன்,

''ஓ....கே! அவங்களுக்கே முதலில் செய்ங்க... ஆனா, அடுத்தது நான் சொல்ற ரெண்டு பேரும்தான் லிஸ்ட்ல வரணும்...'' என்றார் பிடிவாதமாக.

''ஈஷ்வர்... ப்ளீஸ்...'' என்று பாஸ்கரன் ஏதோ சொல்ல வர,

'இனஃப் ஈஸ் இனஃப்' என்று எழுந்தார் சுந்தரேசன். ''கொஞ்சம் அவசர வேலை... ப்ளீஸ்... எக்ஸ்க்யூஸ் மீ...'' என்றார்.

வெளியேறி விட்டார்.

மீட்டிங் முடிந்து கலைந்தார்கள். ஆனால் பாஸ்கரன் விட வில்லை. இறுக்கமான முகத்தோடு ஈஷ்வரின் அறைக்குப் போனார்

மற்றவர்கள் தயக்கத்துடன் பின் தொடர்ந்து அறைக்கு வெளியே நின்றார்கள்.

"ஈஷ்வர்... ஸ்டாப் திஸ் டைப் ஆஃப் பிஹேவியர். எப்படி ஷ்யாம் கிட்டே அப்படிப் பேசலாம்? ஜூனியர்ஸ் முன்னால பேசக் கூடாதுன்னுதான் இங்க கேக்கறேன்." என்றார்.

"இதபாருங்க... பாஸ்கி! ரெண்டு பேஷண்ட்ஸ் என்னோட பேஷண்ட்ஸ்.. ப்ரையாரிட்டி குடுங்கன்னா என்ன தப்பு?"

"ஈஷ்வர், டயக்னோஸ் பண்ற வரைக்கும்தான் உங்க பேஷண்ட்ஸ், சர்ஜரின்னு வந்தா எங்க பேஷண்ட்ஸ். யு அண்டர்ஸ்டாண்ட்?" என்றார்.

"அப்ப நீங்களே ஃசீப்பா இருங்க." என்றார்.

பாஸ்கரன் சிரித்தார்.

"ஈஷ்வர், ப்ளீஸ்... இன்டர்நேஷனல் லெவல் ஹாஸ்பிட்டல்ல இருந்தெல்லாம் எனக்கு அழைப்பு வருது. ஏன், இங்கயே இந்த ஃசீப் போஸ்ட் எனக்குத்தான் குடுத்தாங்க. நான் வேண்டாம் னுட்டேன். நாந்தான் உங்களை சஜ்ஜஸ்ட் செய்தேன்... ஞாபகம் வச்சுக்குங்க..." என்றார்.

நெற்றிப் பொட்டில் அறைந்த அந்த உண்மையைக் கேட்டுச் சந்தரேசன் திகைத்துப் போனார்.

"நான் ஏன் இங்க வேலை செய்யறேன், தெரியுமா? இந்த ஹாஸ்பிட்டல்லதான் உண்மையாவே ஏழை பாளைங்களுக்குச் சேவை செய்யறாங்க. நான் வேண்டப்பட்ட பணம் சம்பாதிச்சாச்சு. ஆத்ம திருப்தி. அதுக்காகத்தான் வேலை செய்யறேன்... அப்புறம்... இந்தக் கூட வேலை செய்யறவங்களையெல்லாம் கொஞ்சம் மரியாதையா நடத்துங்க. பேஷண்ட்ஸ்கிட்டே பரிவாப் பேச முடியல்லேன்னாலும் அட்லீஸ்ட் புண்படுத்தாமயாவது பேசுங்க. இதெல்லாம் உங்களைத் திருத்தறதுக்காக இல்லே... ஆஸ்பத்திரி பேர் கெட்டுடக்கூடாதுங்கறதுக்காகச் சொல்றேன்." என்றார்.

சந்தரேசனின் பதிலை எதிர்பார்க்காமல் கம்பீரமாக நடந்து வெளியேறினார் பாஸ்கரன்.

* * *



'நன்னாக் குடுத்தாரு இல்லே?' என்று சொல்லிச் சொல்லிச் சிரிக்கிற ஆனந்தியைக் கவலையுடன் பார்த்தான் ஷ்யாம்.

"என்ன?" என்றாள் ஆனந்தி.

"ஆனந்தி... பாஸ்கரன் சார் ஸ்ட்ரெயிட் ஃபார்வர்ட் டைப்... ஆனா... ஈஷ்வர் சார் அப்படியில்லே... என்ன ஆகுமோ?" என்றான்.

"எல்லாம் நல்லதாவே ஆகும். கவலைப்பட வேண்டாம்... இது உத்தமம்!" என்றாள் ஆனந்தி.

"நேரங்காலம் தெரியாம நீ வேற ஆருடம் சொல்லிகிட்டு. சித்த எழுந்து போ... நீ." என்று அவன் எரிந்து விழுந்ததையும், அவள் சற்றும் அலட்டிக் கொள்ளாமல்,

'உத்தரவு பாஸ்!' என்று எழுந்து போவதையும் ஆழமாகப் பார்த்துக் கொண்டு நின்றான் கருணாகரன்.

அன்று பகலிலேயே கிளம்பி விட்டான் ஷ்யாம் - வீட்டில் என்ன காத்திருக்கிறதென்று தெரியாமல்.

* * *

வீட்டுக் கதவை வேலைக்காரப் பெண் திறந்தாள். பின்கட்டுப் பகுதியில் மாட்டுத் தொழுவத்தைச் சுத்தம் செய்வதற்காக வருபவள்.

"எல்லாரும் வெளிய போயிருக்காங்க... டாக்டரய்யா, ஜெயாம்மாவும், அந்த ஐயாவும் மட்டும் மேலே ரெஸ்ட்ல இருக்காங்க... பெரியம்மா ஃபில்டர்ல டிகாக்ஷன் போட்டுருக்காங்களாம்." வேணும்னா சாயங்காலம் காஃபி கலக்கிக்கறதாம்..." என்று சொல்லி விட்டுப் போனாள்.

அவன் களைத்துப் போன மனதுடன் படுக்கையில் படுத்தவன் உறங்கி விட்டான். நாலரை மணி வாக்கில் கண் விழித்தான். எழுந்து வாஷ் பேஸினில் முகம் கழுவிக் கொண்டு காஃபி கலக்கலாம் என்று போனவன்

அந்த எதிர்பாராத காட்சியைக் கண்டான்.

* * *

"என்ன இது... யாரேனும் வரப்போறா!" என்று சமையல் கட்டில் தன்னிடம் நெருங்கி இழைகிற கணவரிடம் சொல்லிக் கொண்டிருந்தாள் ஜெயலட்சுமி.

'யார் வருவா? உன் தம்பி வருவானா? வரட்டுமே... பார்க்கட்டுமே... யாருக்காகவும் கிடைக்கிற நேரத்தையெல்லாம் நான் இழக்கறதா இல்லை... அம்மணி!" என்றான் நரேந்திரன்.

ஷ்யாம் திகைத்து நின்று விட்டான்.

"அது மட்டுமில்லே... நம்மளைப் பார்த்தாலும் உன் தம்பிக்குக் கல்யாணம் பண்ணனும்னு நினைப்பு வருமோன்னா? வரட்டும்... இப்படியாவது புரிய வைக்கலாம். நீ வா... நீ..." என்று அவள் இடுப்பை வளைத்துக் கழுத்தில் முகம் புதைக்க, ஷ்யாம் விதிர் விதிர்த்துப் போய் வந்த சுவடு தெரியாமல் தன்னறைக்கு வந்து விட்டான்.

லேசான சிரிப்புடன் தலையணையை அடுக்கி அதில் சாய்ந்து அமர்ந்தான். ஆமாம்... தனக்கும் முப்பது வயதாகிறது. தான் ஒரு முடிவெடுக்கு முன்னே வாசுகி கல்யாணத்தை முடித்துவிட வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

திருமணம் என்று நினைத்தவுடனே, ஆனந்தியின் முகம் மனக்கண்ணில் மின்னி மறைய அதிர்ந்து போனான். வெகு நேரம் பேச்சற்று அமர்ந்திருந்தான்.

## 10

**உ**லகம் ஏனோ வித்தியாசமாகத் தெரிவது போல் இருந்தது ஷ்யாமுக்கு.

முதல் நாள் வெகுவாக யோசித்தான். அத்திம்பேரின் பேச்சு தனக்குள் ஒரு சலனத்தை ஏற்படுத்தியது உண்மை. அந்தச் சலனத்தின் அடிப்படையில் சட்டென்று முடிவு எடுத்துவிடக் கூடாது என்று முடிவு செய்து கொண்டான்.



எப்போதும் போல் இருக்கலாம். ஏதாவது முடிவு தெரிய வேண்டுமென்றால் அது ஆனந்தியின் பக்கமிருந்துதான் வர வேண்டும். அவள்தான் அமெரிக்காவில் வளர்ந்தவளாயிற்றே. எல்லாரிடமும் சகஜமாகப் பழகுகிறாள். சரளமாகப் பேசுகிறாள். தனியாக இருப்பதால் தன் குடும்பத்தோடு ஒட்டுதலோடு பழகுகிறாள். அதை வைத்துக் கொண்டு எந்த முடிவுக்கும் வந்து விடக்கூடாது என்று தெளிவாக யோசித்து ஒரு முடிவு செய்து கொண்டான்.

'ஹலோ... ஷ்யாம்!' என்று அன்றைக்கு ஆனந்தி வந்தபோது, தன் முகத்தை இயல்பாக வைத்துக் கொள்ள அரும்பாடு பட்டு விட்டான். ஓரிரு நாட்கள் கடினமாக இருந்தது. பிறகு சரியாகப் போய்விட்டது. ஆனால், தன்னையும் மீறித் தன் விருப்பு வெறுப்புகளை அவளிடம் தெரிவிப்பதைத் தடுக்க முடியவில்லை.

இரண்டு, மூன்று நாட்கள் கழித்து, 'ஆனந்தி, புடவை கட்டினா நோக்கு ரொம்ப அழகா இருக்கும்...' என்றான். சற்றுக் கழித்து, 'அதிலயும் கைத்தறி ரொம்ப சிம்பிளாவும், அழகாவும் இருக்கும்..' என்றான்.

இரண்டு, மூன்று நாட்கள் கழித்து அவள் புடவை அணிந்து வந்தபோது மருத்துவமனையே அதிசயமாய்ப் பார்த்தது.

ஷாநவாஸ் கிறுகிறுத்து விழுகிறாற்போல் நடித்தான். மற்றவர்கள் சிரித்தார்கள். பாஸ்கரன் கூடப் புன்னகைத்தார்.

'ஹலோ! யாரோ புது ஆள் மாதிரித் தெரியுது...' என்று கேலி செய்தார்.

ஷ்யாம்தான் கருத்தே சொல்லவில்லை. அன்றைக்குக் காண்டீனுக்கு அவன் காஃபி சாப்பிடப் போகிற நேரம் அவளும் வந்தாள்.

"என்ன ஷ்யாம், ஒண்ணுமே சொல்லலை..." என்றாள்.

"நான்தான் அன்னைக்கே சொன்னேனே, அழகா இருக்கு...!" என்றான்.

ஆனந்தி அவன் சுருக்கமான பதிலை ஏனோ ஏமாற்றமாக உணர்ந்தாள். வருத்தமான குரலில், "ஷ்யாம்... இப்பல்லாம் நீங்க கலகலப்பா இருக்கறதில்லை..." என்றாள்.

"கொஞ்சம் யோசனைதான்," என்றான்.

"என்ன யோசனை?" என்றாள்.

"இல்லே... அப்பா பக்கத்து வீட்டை விலைக்கு வாங்கிடணும்னு நினைக்கிறார். பூர்வீக வீடு, தாத்தா காலத்துல வீட்டைப் பாதியா மறைக்க வித்தது ஒரு காயமா அப்பா மனசுல இருக்கு. எனக் கானா வாக கல்யாணத்தை முடிச்சர்லாம்னு இருக்கு..." என்றான்.

சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்த ஆனந்தி சொன்னாள்.

'ஒன்னு செய்ங்கோ... ஷ்யாம். எப்படியும் நான் இன்கம் டாக்ஸுக்காகவாவது ஹவுஸ்லோன் போட்டாகணும். நான் அந்த வீட்டை வாங்கிக்கறேன் உங்களுக்கு இப்போதைக்கு வாடகைக்குத் தர்றேன். அப்புறம் வாக கல்யாணம் முடிஞ்சவுடனே கொஞ்ச நாள்ல என்கிட்டே இருந்து விலைக்கு வாங்கிக்குங்க...' என்றாள்.

"குட் ஐடியா. அப்புறம் நோக்கு வீடு...?"

அவள் சிரித்தாள்.

"நீங்க வாங்கிப்பேளே... அந்தப் பணத்தில் வாங்கிப் பெரிசாக் கட்டிக்கறேன்..." என்றாள்.

ஷ்யாம் யோசித்தான்.

"ஷ்யாம்... உங்களோட வேல்யூ என்னன்னு உங்களுக்குப் புரியலே. இன்னும் கொஞ்ச நாள்தான். அப்புறம் ஒரு சர்ஜரிக்கு இவ்வளவுன்னு வாங்கப் போறேள். எல்லா ஆஸ்பிட்டல்ஸும் காம்பிளிகேட்ட் கேஸ்ன்னா உங்களைக் கூப்பிடப் போறா... பாஸ்கரன் அங்கிள் வேற உங்களைப் பத்தி எல்லா இடத்திலயும் சொல்றார்," என்றாள்.

"அது எப்படியோ இருக்கட்டும்... ஆனா எப்படியும் உடனடியா வீட்டை வாங்கலேன்னா... ஓனர் வேறு யாருக்கோ விப்பார்



போல இருக்கு. ஆனா, சீக்கிரம் பணத்தைத் திருப்பித்தர முடியும்னு நேக்கு நம்பிக்கை இருக்கு..." என்றான்.

தன்னுடைய யோசனைக்கு அவன் மறைமுகமாகச் சம்மதம் தெரிவிக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்தது.

அவளே பஞ்சாபகேசனிடம் பேசிச் சம்மதிக்க வைத்தாள். ஒரே மாதத்தில் வீட்டை வாங்கினார்கள். குறுக்குச் சுவரை உடைத்து முடித்ததும் பஞ்சாபகேசனின் கண்களில் கண்ணீர் கரகரவென்று வழிந்தது.

"அம்மா... நீ தீர்க்காயுசா நன்னா இருப்பே...!" என்று ஆனந்தியை ஆசிர்வதித்தபோது ஆனந்தி அன்புடன் புன்னகைத்தாள்.

'மாமா... கொஞ்ச நாள் கழிச்சு யு.எஸ். போய் பிராக்டீஸ் பண்ண ஆரம்பிச்சேன்னா வேண்டப்பட்ட பணம் சம்பாதிச்சுருவேன். ஆனா, இங்கே வந்து லோன்லியா ஃபீல் பண்ணினப்போ, நீங்களும், மாமியும் நேக்கு ஒரு அப்பா, அம்மாவா அமைஞ்சேள் பாருங்கோ... அதுக்கு நான் என்ன கைம்மாறு செய்யறது?" என்றாள்.

"நீயும் இங்கயே வந்துடேம்மா..." என்றார் பஞ்சாபகேசன்.

"வேண்டாம் மாமா... ரொம்பப் பக்கத்துல இருந்தா அது உறவைக் கெடுக்கும். நான்தான் எப்ப வேண்ணா வந்துர்றேனே..." என்றாள்.

இடையில் சற்றே விலகினாற் போல் இருந்த ஷ்யாம் மீண்டும் இயல்பாய்ப் பேச ஆரம்பித்தான்.

* * *

அன்றைக்கு ஓ.பி. டே...

நிறையக் கூட்டம். மாலையில் களைப்பாக அயர்ந்தான்.

அவன் காரை எடுக்கிற நேரம் ஆனந்தி வந்தாள்.

"நானும் நம்மாத்துக்கு வரேன்..." என்றாள்.

"வா..." என்றான்.

காரில் ஏறி அமர்ந்தாள்.

அமைதியாகவே காரோட்டினான்.

"என்ன ஷ்யாம்... ஐயாவுக்கு மூட் அவுட்?" என்றாள்.

தான் மகிழ்ச்சியாய் இருக்கும்போதும், மூட்அவுட் ஆகி விடும்போதும் என்று தன்னுடைய உணர்வுகளை எப்படி அவள் சரியாகப் புரிந்து கொள்கிறாள் என்று அவனுக்கு ஆச்சரியம்.

"எப்படிக் கண்டுபிடிச்சே?" என்றான்.

"உள்ளுணர்வு! ஐயா மூட் அவுட்டானா, கண்ல சிரிப்பே இருக்காது. முகம் இறுகினாப்பல இருக்கும். பேச்சு வராது!" என்று அவள் விவரிக்க... அவன் வியப்படைந்தான்.

"நீ எங்கம்மா மாதிரி ஆனந்தி. அம்மாதான் என் மனசை நன்னாப் புரிஞ்சப்பா..." என்றான்.

"அது மட்டுமில்லே... உங்க மனசுக்குள்ளே இருக்கற உங்களுக்குத் தெரியாத விஷயமெல்லாம் நான் தெரிஞ்சு வச்சிருக்கேன்... தெரியுமா?" என்றாள்.

அவன் திடுக்கிட்டுப் போய்த் திரும்பிப் பார்த்தான். அவள் பார்க் காதவள் போல் முகத்தைத் திருப்பிக் கொண்டு வெளியே பார்த்தாள்.

அவன் பேச்சைத் தொடரவில்லை. தொடர அவனுக்குத் துணிவு இருக்கவில்லை.

* * *

'ஷ்யாம்... ஷ்யாம்..' என்ற அப்பாவின் உற்சாகக் குரலைக் கேட்டு, அவன் தன் அறையில் இருந்து இறங்கி வந்தான்.

"என்னடா... ஆனந்தி நம்ம வாசுவுக்கு ஏதோ ஜாதகம் கொண்டு வந்திருக்கா... நோக்குத் தெரியாதோ?" என்றார்.

"இல்லையேப்பா..." என்று அவன் ஆனந்தியைப் பார்க்க... அவள் பஞ்சாபகேசனுக்குப் பின்னால் நின்றபடி அழகு காட்டினாள். அதில் இன்னும் திகைத்துப் போய் அப்பாவைப் பார்த்து விழித்தான்.



"உட்கார்றா..." என்றார் அப்பா.

அமர்ந்தான்.

"என்னம்மா... நீ இவனுக்குச் சொல்லலையா?" என்றார் ஆச்சரியமாக.

'மாமா... ஷ்யாம் இப்போ ரொம்பப் பெரிய மனுஷராயிட்டார். பேசறதுக்கு நேரமே கிடைக்கறதாயில்லை. அப்படியே கிடைச் சாலும்... பேசறத்துக்குக் கூடக் காசு கேப்பார் போல இருக்கு. அதான், நான் நேரா உங்ககிட்டேயே கொண்டு வந்துட்டேன். பாத்துப் பிடிச்சா சொல்லுங்கோ... இதோ ஃபோட்டோ...' என்று ஃபோட்டோவையும் நீட்டினாள்.

'மாமா... வரன் பேரு கீர்த்திவாசன். இப்போதைக்கு மதுரையில் டாக்டர். எம்.டி. ஜெனரல் மெடிசின். அமெரிக்கா வர்றதா ஐடியா இருக்கு... அடுத்த வருஷம்... நேக்கு முறைக்கு அண்ணன் ஆகணும். தூரத்துச் சொந்தம். அவருக்குப் பொண் ணோட ஃபோட்டோவைப் பாத்துப் பிடிச்சிருக்கு. அவா ஜாதகம் பாத்தாச்சு..." என்றாள்.

பஞ்சாபகேசன் பேசவே வாயெழாமல் பார்க்க.

'ஜாதகம் எப்படிக் கிடைச்சதுன்னு பாக்கறேளா? மாமிகிட்ட வாங்கிண்டு போனேன் அதுமட்டுமில்ல. அமெரிக்கா போனா... வாய்ப்புக் கிடைச்சா... வாசுகியையும் டாக்டருக்குப் படிக்க வக்கறேங்கறார். அதுவரைக்கும், வாசுகி லேப்ல டெஸ்ட் பண்ணி ரிசல்ட் குடுத்தா... அவர் மருந்து பிரிஸ்கிரைப் செய்வாராம்,' என்றாள் குறும்புச் சிரிப்புடன்.

பஞ்சாபகேசனின் முகத்தில் புன்னகை மலர்ந்தது. இத்தனை பேசும்போதும் அவள் ஷ்யாமின் முகத்தைப் பார்க்கவில்லை.

"அப்புறம் இந்தப் பெரிய மனுஷர்கிட்டே கலந்துபேசி முடி வெடுங்கோ... ஐ வோன்ட் டாக் டு ஹிம்..." என்று போய்விட்டாள்.

ஷ்யாம் உண்மையாகவே திணறிப் போனான். 'என்னடா போர்க்கொடி தூக்கறா?' என்றார் சிரித்தபடி. அவர் பார்வை மகனின் முகத்தில் ஆழப் பதிந்திருந்தது.

"உண்மையாலே நேரம் இல்லைப்பா. அப்புறம் ஹாஸ்பிட்டல்ல ரொம்பவும் இழைஞ்சா வேற மாதிரிப் பேசுவாப்பா..." என்றான்.

சிந்தனை படர்ந்த முகத்துடன், "யாரோ என்னவோ சொல்லிண்டு போறா... நமக்கு மனசிலே கல்மிஷம் இல்லாதவரை யாரைப் பத்தியும் கவலைப்பட வேண்டாம்..." என்றார்.

'நேக்கும் கல்மிஷம் இருக்கேப்பா...' என்று மனதில் எண்ணிக் கொண்டான். ஆனால் சொல்லவில்லை.

"பாருப்பா. நீங்கள்ளாம் டாக்டர்ஸ். பிடிச்சது பிடிக்காதது உங்களுக்குத் தெரியும்... லேசா இரு. ஃபிரன்ட்ஷிப்னா இதெல்லாம் சகஜந்தான். அவளைச் சமாதானப்படுத்து. போ..." என்று புன்னகைத்தார்.

'சரிப்பா...' என்றான் சிம்பிளாக.

அப்பா உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார்.

"அப்புறம்.... இந்த அலையன்ஸ்?" என்று அவர் இழுக்கவும்,

"ப்ரொசீட் பண்ணுங்கோப்பா... ஆனந்தி சொன்னா நல்ல இடமாத்தான் இருக்கும்..." என்றான்.

அப்பா மறுபடியும் புன்னகைத்தார்.

* * *

"ஆனந்தி... ப்ளீஸ் அன்டர்ஸ்டான்ட்," என்றான் கெஞ்சுதலாக.

"என்னத்தை அன்டர்ஸ்டான்ட் பண்றது? கருணாகிட்டே பேச நேரமிருக்கு. ஷாகிட்டே அரட்டை அடிக்கறேள். பாஸ்கரன் அங்கிள் கூட மட்டும் நெறய நேரம் செலவழிக்கறேள்... என்கிட்டே மட்டும் பேச நேரமில்லையோ?" என்றாள்.

அவனுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே!" என்றான் மெல்லிய குரலில். தன் பதிலில் அழுத்தமில்லை என்பது அவனுக்கே புரிந்தது.



"என்கிட்டே பேச விருப்பம் இல்லேன்னா... சொல்லிடுங்கோ. நான் தொல்லை பண்ண மாட்டேன்," என்று சொல்லும்போது அவள் கண்கள் கலங்கி விட்டன.

'ஓ... காட்!' என்று அவன் தன்னைத் தானே நொந்து கொண்டான்.

அவள் இளகவில்லை. மீண்டும் கோபமானாள்.

"யு ஆர்... எ... ஹிப்பாகிரட்!" என்றாள்.

கார் போய்க் கொண்டிருந்தது. அவனும் கோபமானான். 'ஹேய்! சும்மா நீ பாட்டுக்குப் பேசாதே... நான் வேற ஒரு பிரச்சினையில் இருக்கேன். இல்லேன்னா ரெண்டு... ரெண்டு முக்கியமான விஷயம் நம்மாத்துல நடந்துருக்கு. எவ்வளவு சந்தோஷமாகி இருக்கணும். வீடு வாங்கணும்கற ஆசை நிறைவேறியாச்சு... இப்போ... நல்ல அலையன்ஸ் வந்திருக்கு. ஆனா, இந்த சந்தோஷத்தையெல்லாம் கொண்டாட முடியாத அளவுக்கு என் மனசில் ஏதோ கஷ்டம் இருக்குன்னு நீ புரிஞ்சுக்க வேண்டாமோ? இதுவே வாசுவா இருந்தா என்னடி புரியாம தொல்லை பண்ணிண்டிருக்கேன்னு ரெண்டு வச்சிருப்பேன்..." என்றவன் சட்டென்று நிறுத்தி விட்டான்.

அவள் அதிர்ச்சியாய்ப் பார்த்துக் கொண்டே அமர்ந்திருந்தாள். அவன் இடக்கையால் நெற்றிப் பொட்டைத் தேய்த்துக் கொண்டு, 'ஐ'ம்... சாரி...' என்றான்.

'பரவாயில்லே!' என்றாள் அடங்கிய குரலில். அவனுக்கே பாவமாகிப் போனது. தன் குடும்பத்துக்கென்று தேடித்தேடி எவ்வளவு நல்லது செய்கிறாள். அவளைப் போய்க் கடிந்து கொண்டு என்று தன் மீதே கோபம் வந்தது...

"ஐ'ம்... சாரி... உன்கிட்டே... நான் கோபிச்சிருக்கக் கூடாது..." என்றான் கலங்கியகுரலில்.

"பரவால்லே... உண்மையான ஃபிரண்ட்ஷிப்புன்னா ஒரு நேரம் கோபிச்சுக்கவும்தான் செய்வா..." என்றாள்.

"ஐ'ம் சாரி..." என்றான் மறுபடியும்.

"பிரச்சினை ரொம்பப் பெரிசோ?" என்றாள்.

"ம்..." என்றான்.

"என்கிட்டே சொல்லக் கூடாதோ?" என்றாள் மறுபடியும்.

"சொல்றேன்... ஆனா இப்ப இல்லே..." என்றான்.

"ஓ...!" என்றாள், அமைதியாகி விட்டாள்.

"ஆனா... ஆனந்தி, நீ எப்பவும் என் ஃபிரண்ட்தான். ப்ளீஸ் அன்டர்ஸ்டான்ட்," என்றான்.

"அதான் உரிமையாச் சண்டை போட்டேன்..." என்றாள் ஆனந்தி விளக்கம் போல.

"நீயும் சண்டை போடலாம். என்கிட்டே சண்டை போடற தற்கான எல்லா உரிமையும் நோக்கு இருக்கு... சரியா?" என்றான். தன்னையும் மீறித் தன் குரல் குழைவது அவனுக்கே புரிந்தது. அந்தக் கணத்தில் தன் மனக் கருத்தை வெளியிட்டு விடலாமா என்று கூட நினைத்தான்.

'வேண்டாம்... வாக கல்யாணம் முடியட்டும்...' என்று முடிவு செய்து கொண்டான்.

இருவருக்குமே ஏதோ ஒரு விதமான வித்தியாசம் புரிய அமைதியாய் வந்தார்கள். அவள் இறங்கிக் கொள்கிற நேரத்தில் அவன் மீண்டும்,

"ஆனந்தி... என் ஃபிரண்ட்ஷிப்பை டவுட் பண்ணாதே. ஐ ஆல்வேஸ் லைக் யு..." என்றான்.

அவள் இறங்குவதற்கு முன் அவனை ஒரு கணம் நேராகப் பார்த்தாள். மறுபடியும், "இப்பவும் சொல்றேன்... ஷ்யாம்... யு ஆர் எ ஹிப்பாகிரட்..." என்றாள். அதில் கோபத்தை விட ஒரு உரிமை தெரிந்தது. அவன் லேசாக உள்ளுக்குள் நடுங்கினாற்போல் உணர்ந்தான். அதைப் புன்னகைத் திரையிட்டு மறைத்துக் கொண்டான்.



"நீ சொன்னா சரியாத்தான் இருக்கும்!" என்றான், அடிக்குரலில் சிரித்தான்.

"கோயம்புத்தூர் லொள்ளு!" என்று மெல்ல முணுமுணுத்துக் கொண்டு அவள் இறங்கிப் போனாள்.

திரும்பக் காரை ஓட்டும்போதும், படுக்கைக்குப் போகும் போதும், அவள் கோபித்துக் கொண்டதும், திட்டியதும் நினைவுக்கு வரச் சுகமாக இருந்தது போல் உணர்ந்தான். ஆனால் அடுத்த நிமிடமே அந்தப் பிரச்சினையோடு கூட அந்த ஃபோன் கால் நினைவுக்கு வரச் சிந்தனையில் ஆழ்ந்தான்.

மனதில் கவலை மண்டியது.

## 11

சொல்லுவது எவ்வளவு பிரச்சினைகளைத் தோற்றுவிக்குமோ, அந்த அளவுக்குச் சொல்லாமல் இருப்பதும் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் எனத் தோன்றியது.

ஒரு வாரத்துக்கு மேல் உறக்கம் வராமல் தவித்தான். இரண்டு பிரச்சினைகள். ஒன்று தன் வாழ்க்கையைப் பற்றியது. இரண்டாவது தன் தொழில் தொடர்பானது.

வாழ்க்கைப் பிரச்சினையைக் கூட இப்போதைக்குத் தள்ளி வைக்கலாம். தலை போய் விடப் போவதில்லை. ஆனால் மற்றொரு பிரச்சினை மருத்துவமனையின் நற்பெயர் தொடர்பானது. அதைத் தள்ளி வைக்கவே முடியாது என்று ஆழ்மனது கடுமையாக எச்சரித்தது.

வெகுவாக யோசித்த பின் பாஸ்கரனிடம் ஆலோசனை பெறுவது என்று முடிவு செய்து கொண்டான்.

பாஸ்கரனின் அறைக்கு அவர் ஓய்வாக இருக்கும் நேரம் பார்த்துப் போனான். உடனேயே அவர் இங்கே பேச வேண்டாம். வெளியே வைத்துப் பேசலாம் என்று சொல்லி ஒரு ஹோட்டலில் டின்னர் ஏற்பாடு செய்தார்.

அவன் மெதுவாக உணவைக் கொறித்துக் கொண்டே சொல்லச் சொல்ல அவர் முகத்தில் சொல்ல வொண்ணாத வேதனை படர்ந்தது.

* * *

பத்து நாட்களுக்கு முன்பு ஒரு நாள்.

சந்தரேசனின் பி.ஏ. அவனை ஃபோனில் அழைத்து சீ.ஃப் டாக்டர் ஷ்யாமைப் பார்க்க விரும்புவதாகச் சொன்னார்.

அவனும் அன்று பகலுணவு முடித்து விட்டு, அவரது அறைக்குப் போனான். அவர் ஏதோ அவசரக் கேஸ் என்று போயிருந்தார். பி.ஏ. கூட இருக்கவில்லை.

சற்று நேரம் அமர்ந்திருந்தான். அப்போது ஒரு ஃபோன்கால் வந்தது. வெகுநேரம் அடிக்கவும் எடுத்தான். அவர் செல்போனை மறந்துவிட்டுப் போயிருந்தார்.

அந்தப் பக்கத்தில், "ஹலோ டாக்டருங்களா?" என்றார்கள். அவனும் ஆமாம் என்றான். ஏதோ நோயாளியை அட்மிட் செய்யக் கேட்கிறார்கள் போலும் என்று அவன் பேச ஆரம்பிக்க, அந்தப் பக்கம் அவனைப் பேச விடாமல் படபடவென்று பேசினார்கள்.

அந்தப் பேச்சின் சாராம்சம் புரியவும் அவன் திகைத்துப் போனான்.

''ஹலோ! பெரிய டாக்டர் அந்தப்புறம் போயிருக்காரு. கொஞ்ச நேரம் கழித்துப் பேசுங்க,'' என்று ஆஃப் செய்தான்.

பல விஷயங்கள் அவனுக்குப் புரியத் தொடங்கின. புரியத் தொடங்கியதுமே திகில் அடித்தவன் போல் ஆகிவிட்டான். உணவு இறங்கவில்லை. உறக்கம் பிடிக்கவில்லை.

தெரியாதவன் போல் இருக்கவும் மனசு ஒப்பவில்லை. தெரிந்தவனாக மேற்கொண்டு என்ன செய்வது என்றும் தெரிய வில்லை.

தீர யோசித்த பின்தான் பாஸ்கரனிடம் கலந்தாலோசிக்க முடிவு செய்தான். இப்போது கொட்டியும் விட்டான்.



பாஸ்கரன் வெகுவாக அதிர்ந்து போனார்.

'ஏம்ப்பா ஷ்யாம்... இது இவ்வளவு சீரியஸ் பிரச்சினையா இருக்கும்னு நான் நெனைக்கலையே. வெறும் ஆதிக்க மனப்பான்மைன்னுல்ல நெனச்சேன்,'' என்றார் மெல்லிய குரலில்

''சார். நான் இந்தத் தொழிலுக்கு வந்தப்ப இது ஒரு புனிதமான தொழில். இது நோயாளிக்கு உயிரும், ஆறுதலும் கொடுக்கக் கூடிய தொழில்ன்னுதான் விரும்பி வந்தேன். பல சமயம் இங்க சிலர் கோபமாகப் பேசும்போது நான் நெனச்சுப்பேன். நோயாளி யோட நோயைக் குணப்படுத்தலேன்னாக் கூடப் பரவாயில்லை. ரெண்டு வார்த்தை ஆறுதலா, அன்பாப் பேசினாக் கூட அவங்க தெம்பாயிடுவாங்களேன்னு... அப்புறம் சிலர் சொன்னாங்க... இது ஒரு விதமான பயமுறுத்தல்... இன்னொரு விதத்துல ஒரு டெக்னிக்... இப்படிப் பயமுறுத்திட்டா மேற்கொண்டு வாழ்க்கை பற்றி ஒரு பயம் வந்துரும். அப்புறம் டாக்டர்ஸ் எப்படிச் சொல்றாங்களோ அப்படிக் கேட்பாங்கன்னு இப்படி விதவிதமான அணுகு முறைகள். ஆனா, அல்ட்டிமேட்டா இந்தத் தொழில்ல ஒவ்வொரு முறை ஜெயிக்கும்போதும் ஒரு சந்தோஷம். மகிழ்ச்சி. கர்வம். மற்றப்படி பணமெல்லாம் இரண்டாம் பட்சம்தான்!'' என்றான் உணர்ச்சி பூர்வமாக.

பாஸ்கரன் கண்கள் மின்ன அதைக் கேட்டார். ''ஆமாம்ப்பா... அப்படி விருப்பத்துலதான் நான் கூட இந்தத் தொழிலுக்கு வந்தேன். அதுமட்டுமில்ல. அஞ்சு ஆபரேஷன் செஞ்சா அதுல ஒரு ஆபரேஷன் யாராவது ஒரு ஏழைக்கு இலவசமாச் செய்யக் கூடத் தயார்தான். ஆனா, இதுவரைக்கும் இருந்த மருத்துவ மனையிலெல்லாம். அதுக்கு ஒத்துக்கலை. நமக்கு வர வேண்டிய பணத்தை வேணுமானா நிர்வாகம் வாங்கிக்கத் தயாராய் இருக்காங்க. ஆனா, இந்த ஆஸ்பத்திரியிலதான் உண்மையாவே சேவை மனப்பான்மை இருக்கு,'' என்றார்.

''தட்ஸ் குட் ஐடியா சார்!'' என்றான் ஷ்யாம். ''நான் கூட அதுக்குத் தயார்தான்,'' என்றான்.

"சரி... அப்ப மெதுமெதுவா இதை நடைமுறைக்கும் கொண்டு வரலாம். சரியா..." என்றார். பிறகு ஒரு நிமிடம் சிந்தனையில் ஆழ்ந்தார். பிறகு.

"இப்ப நீ சொன்ன விஷயம் இருக்கில்ல... அதை உன் மனசுலயே பூட்டி வச்சுக்க. எதுக்கும் ஆதாரம் இல்லாம நாம எதையும் பேச முடியாது. விளக்கவும் முடியாது. பொறு. ஒரு டைம் வரும்..." என்றார்.

"சரிங்க சார்." என்றான்.

ஷ்யாமள கிருஷ்ணனுக்கு அப்பாடா என்றிருந்தது.

"ஆனா... பிரச்சினை சால்வ் ஆகறதுக்குக் கொஞ்சம் டைம் எடுக்கும். அதுக்குள்ள உன் குடும்பப் பிரச்சினைகளைத் தீர்க்கப் பாரு."

"குடும்பப் பிரச்சினையா?" என்று அவன் திகைக்க,

"அதாம்பா வாசுவோட கல்யாணம்." என்றார். அவரது கண்களில் குறும்பு மின்னினாற் போல் தோன்றியது.

* * *

கீர்த்திவாசன் அமர்த்தலாக இருந்தான். அளவாகப் பேசினான். வாசுகியின் அரட்டைக்கு நேர் எதிர். ஆனால், வாசுகிக்குப் பொருத்தமானவனாக இருந்தான்.

வாசுகி சற்றே உடம்பு பூசினாற் போல் தோற்றத்தில் இருப்பாள். கீர்த்திவாசனும் நெடுநெடுவென்று நல்ல ஆகிருதியாக இருந்தான். சங்கரியும், ஜெயாக்காவும் சற்றே குள்ளம். ஆனால், வாசுகி ஷ்யாமைப் போலவும், நந்துவைப் போலவும் உயரம். அதனால், கீர்த்தி வாசனுக்கு வெகுவாகப் பிடித்துப் போனது.

ஆனந்திதான் இரு வீட்டுக்கும் பொதுவான சொந்தம் என்பதால், முக்கியமான விஷயங்கள் எதுவும் கேட்க வேண்டியிருந்தால், அவள் மூலமாகத்தான் பேசினார்கள்.

"ஹலோ! வாசு மேரேஜ் நன்னா நடக்கணும்னா என்னைத் தான் தாங்கி வச்சுக்கணும்... தெரியறதோ! இல்லே... சொதப்



பிடுவேன்..." என்று செல்லமாக மிரட்டுவாள். எதிர்பாராத விதமாக ஒரு நாள் ஷ்யாம் இடையில் புகுந்து.

"அது நல்லாச் செயவியே?" என்றான்.

"எது?" என்றாள் ஆர்வமாக.

"சொதப்பறது..." என்று அவன் தோள் குலுங்கச் சிரிக்க, முறைத்தாள். அவன் விடவில்லை. மேலும் தொடர்ந்து.

"அது சரி? நீயென்ன... இப்ப டபுள் ரோலா... பொண்ணாத்துக்காரியா? பிள்ளையாத்துக்காரியா?" என்று கேட்க,

'என் சந்தேகம்? உங்காத்துக்காரிதான்!" என்றாள். ஷ்யாம் திடுக்கிட்டுப் போனான். அவள் சிரித்துக் கொண்டே அந்தப் பக்கம் போய் விட்டாள்.

"உங்கண்ணா முழிக்கறார் பாரு..." என்று தங்கையிடம் முணுமுணுப்பது காதில் விழுந்தது.

திருமணம் வீட்டு விசேஷம் ஏதோவொன்றில் மடிசாரில் வந்து நின்று. 'எப்படியிருக்கு?' என்றாள் ஷ்யாமிடம்.

ஷ்யாம் உண்மையாகவே மலைத்துப் போனான். "ஹேய்...! ரொம்ப அழகா இருக்கே!" என்றான் குழைந்து போன குரலில்.

குடும்பமாக ஃபோட்டோவுக்கு நிற்கையில் இயல்பாக நிற்பது போல் அவனருகில் வந்து நின்றாள். வாசுகி சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

ரிசப்ஷனின்போது கீர்த்திவாசன், "அதென்ன. நீயும் ஆனந்தியும் எப்பப்பார், என்னவோ ரகசியம் பேசறேள்" என்று அக்கறையாகக் கேட்க,

"எல்லாம் அண்ணாக்களைப் பத்தித்தான்!" என்றாள் வாசுகி.

அவன் புரியாமல் பார்க்க, "ஆமா... நீங்க ஆனந்திக்கு அண்ணாவோ இல்லியோ!" என்றாள்.

அவன் குளிர்ந்து போனான். "என்ன பேசிப்பேள்?" என்றான்.

"ஆனந்தி பாவம்... ரொம்பக் கவலைப்படறா... இப்படி எங்கண்ணாகிட்ட சிக்கிக்கப் போறயேன்னு..." என்றாள்.

அவன் குறும்பாகச் சிரித்தான். 'அப்படியா விஷயம்?' என்றான். சற்றே நெருங்கி நின்று மற்றவர்களுக்குக் கேட்காத வண்ணம்,

''எப்படா கல்யாண நாள் வரும்னு ஒரு மாசமா வேலையே ஓடாம இருக்கேன். நீ என்னைச் சிக்கிக்கிட்டேங்கறே... சரி சரி... நாளைக்கு அதைப் பேசித் தீர்த்துக்கலாம் என்ன...'' என்றான்.

வாசகி வாயடைத்துப் போய் நின்றாள்.

மறுநாள் திருமணம் வரையிலும் கூட மௌனம் சாதித்த அவளிடம் தாலி முடிந்த பின் கீர்த்திவாசன் உணவுண்ணும் போது,

''ஹேய்! ரொம்பப் பயந்துட்டியா... என்ன? சும்மா கலாட்டா செய்தேன்... ரெண்டு பொம்மனாட்டிகளும் களுக்களுக்கென்று சிரிச்சுட்டிருந்தேளே... அப்படியே இருங்கோ...'' என்றான்.

அவள் தலையாட்டிக் கொண்டாள்.

சடங்குகளெல்லாம் வேடிக்கைப் பேச்சுக்கு நடுவே நடந்தன.

குடத்தில் மோதிரம் தேடி எடுக்கும்போது கீர்த்திவாசன் கையில் மோதிரம் கிடைக்க... அவன் குடத்துக்குள்ளேயே வாசகியின் கையை இறுகப் பிடித்து அவள் கையில் மோதிரத்தை வைக்க... வாசகி விதிர்விதிர்த்துப் போனாள். இதைப் புரிந்த ஆனந்தி சுவரோரமாய் நின்று இடிஇடியென்று சிரிக்க, அந்தப் பக்கம் வந்த சங்கரி,

''டேய் ஷ்யாம்... உன் ஃபிரண்ட் என்னத்துக்கு இப்படிச் சிரிக்கிறான்னு கேளு...'' என்று அவனை அழைக்க, என்னவோ ஏதோவென்று வந்து அவளிடம் கேட்க, அவள்,

''எங்கண்ணா மோதிரத்தை வாசகிக்கு விட்டுக் கொடுத்துட்டார்!'' என்று மறுபடியும் சிரித்தாள்.

அதே நேரம் சடங்குகள் முடிந்து ரிலாக்ஸடாக அந்தப் பக்கம் வந்த கீர்த்திவாசன்,

''ஆமா... எல்லாத்தையும் விட்டுக் குடுக்கத் தயாராயாச்சு... மோதிரத்திலே என்ன இருக்கு!'' என்றான் சற்றும் வெட்கமில்லாமல்.

''ஐயே! வெட்கமேயில்லாமச் சொல்றான் பாரு...'' என்று ஆனந்தி மறுபடியும் சிரித்தாள்.



'ஹேய்! ஆனந்தி... நான் ஒப்பனாச் சொல்றேன். ஆனா... ஷ்யாம் மாதிரி ஆட்கள் எப்படித் தெரியுமோ? உள்ளயே வச்சுண்டிருப்பா. ஆனா... கடைசியில்... தாயே! சரணம் தேவிதான்!'' என்று கலாட்டா செய்ய... எல்லாரும் சிரித்தார்கள்.

'அப்படிப் போடுங்க... அத்திம்பேர்!' என்று நந்தகோபால் எல்லாரையும் விடப் பெரிதாகச் சிரித்தான்.

'அடப்பாவி! சேம் சைட் கோல் போடறியேடா...'' என்று ஷ்யாம் முணுமுணுத்துக் கொண்டே அந்தப்புறம் நகர்ந்தான்.

முக்கியப் பொறுப்பொன்று நிறைவேறிய மகிழ்வில் இருந்தான். அதனால் நண்பர்களுடன் சேர்ந்து ஆனந்தி செய்த கலாட்டாவையும் ரசித்துக் கொண்டான். அது மட்டும் அல்லாமல் ஆனந்தியும் அன்று வெகு அழகாக உடுத்திக் கொண்டிருந்தாள்.

அவனுக்கு மிகையான மேக்-அப் பிடிப்பதில்லையென்று புரிந்து கொண்டு இது மேக்-அப் என்று தெரியாத அளவுக்கு மேக்-அப் செய்து கொள்ள ஆரம்பித்தாள். ஆனால், குடும்பத்தவரிடம் இயல்பாய்ப் பழகினாலும் மற்றவர்கள் கண்ணை உறுத்துகிற அளவுக்கு முன்னால் நடமாடிக் கொள்ளாததும் அவனுக்குப் பிடித்திருந்தது.

பந்தியில் ஜெயா, நரேந்திரன், ஷ்யாம், நந்து, ஆனந்தி என்று எல்லாரும் ஒன்றாக அமர்ந்தார்கள். ஸ்வீட் பரிமாறுகிறவனை அழைத்துக் கூடுதலாக ஒரு ஸ்வீட்டை வாங்கி அவள் இலையில் வைத்தான் ஷ்யாம்.

'ரொம்பத் தாங்க்ஸ் ஆனந்தி... வாசுவுக்கு இவ்வளவு நல்ல வரன் கொண்டு வந்ததுக்கு...!'' என்றான் ஆத்மார்த்தமாக.

ஒரு நிமிடம் அவளும் நெகிழ்ந்தாள். ஆனால் உடனே தனது வழக்கமான குறும்புக் குணம் மேலிட,

'ஜெயாக்கா... உங்க தம்பியோட சாமர்த்தியம் பார்த்தேளா? இங்கயே ஒரு ஸ்வீட்டை எடுத்துக் குடுத்துக் கல்யாணச் செலவுலயே எனக்குத்தரவேண்டிய ட்ரீட்டையும் கழிச்சுக்

கட்றார்!'' என்றவள், அந்தப் பக்கம் எதற்காகவோ வந்த ஷாநவாஸைக் கூப்பிட்டு நியாயம் கேட்டாள்.

அவன், ''சரி ஆனந்தி... ஷ்யாம்கிட்டே நான் ஒரு பெரிய ட்ரீட்டுக்கு உறுதி வாங்கித் தந்தா எனக்கு என்ன தருவே?'' என்று பேரம் பேசினான்.

''என்ன வேணும்?'' என்றாள் ஆனந்தி.

''ஒரு சினிமாவுக்குக் கூப்பிட்டுப் போவியா?'' என்றான்.

''ம்... நாளைக்கே!'' என்றாள்.

''சரி... அப்ப ட்ரீட் குடுத்துடுங்க ஷ்யாம் அண்ணா!'' என்றான் நவாஸ்.

''பெரிய இடத்து ரெகமன்டேஷன்... குடுத்தாப்போச்சு...'' என்றான்.

'குட்' என்று காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு அவன் போக...

''ஏன்? நீயே கேட்க வேண்டியதுதானே? அதென்ன ரெகமன்டேஷன்?'' என்றான் மெல்லிய குரலில்.

''நான் கேட்டா... என்னென்னமோ கேட்பேன்,'' என்றாள். நேராகப் பார்த்தாள். ஷ்யாம் அன்று நல்ல மூடில் இருந்தான்.

''உன்னால என்னென்ன முடியுமோ கேளு, நானும் என்னால முடிஞ்ச வரைக்கும் தரேன்,'' என்றான். பதில் பார்வை பார்த்தான்.

சுற்றுப்புறம் மறந்தது.

பார்வைகள் மோதிக் கொண்டன. விநாடிகள் யுகங்களாகக் கழிந்தன.

ஷ்யாம் தன்னை மீட்டுக் கொண்டான். அமைதியாகச் சாப்பிட ஆரம்பித்தான்.

மெதுவாக... ஆனால், அடிக்குரலில், ''ஹேய்! ஆனந்தி... நான் வம்பு பேச ஆரம்பிச்சேன், நீ தாங்க மாட்டே... ஆமா,'' என்றான் மிரட்டலாக.

ஆனந்தி அதற்கப்புறம் அமைதியாகி விட்டாள்.



இருவருக்கும் இடையே ஒரு கண்ணாமூச்சியாட்டம் நடந்து கொண்டிருந்தது இருவருக்குமே புரிந்தது. ஆனால், சட்டென்று வெளியிட்டு விட அவன் மனம் தயங்கியது.

அவளுடைய சுற்றம், சூழல் பற்றித் தனக்கு என்ன தெரியும் என்ற கேள்வி எழுந்தது. கூடவே அவளைத் தெரிய வேண்டியதுதானே முக்கியம். மற்றவற்றைப் பற்றி ஏன் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற கேள்வியும் எழுந்தது.

மெது மெதுவாக அவளைப் பற்றித் தெரிந்து கொள்ள முயற்சி செய்தபோதுதான் அவனுக்கு ஒன்று புரிந்தது.

அவள் ஒரு எல்லைக்கோடு வைத்திருக்கிறாள். அதைத் தாண்டி யாரையுமே அவள் அனுமதிப்பதில்லை என்பது. இதைத் தாண்டி வேறொரு விஷயமும் நடந்தது.

## 12

மாப்பிள்ளை அழைப்பு, பெண் அழைப்பு என்றெல்லாம் கீர்த்திவாசனின் கிராமத்துக்குப் போனபோது மட்டும் ஆனந்தி கழன்று கொண்டாள்.

சொந்தம் விட்டுப் போய் ரொம்ப நாளாச்சு.. இனி எதுக்கு அங்கே என்று சொல்லி விட்டாள்.

கீர்த்திவாசன் கூட அவளைப் பெரிதாக வற்புறுத்தவில்லை.

ஒரு வாரம் சென்றிருக்கும்.

''ஷ்யாம்...'' என்று பரபரப்பாக வந்தாள் ஆனந்தி.

''என்னம்மா?'' என்றான் ஷ்யாம்.

''அமெரிக்காவிலிருந்து தாத்தாவுக்கு ரொம்ப வேண்டியவர் ஒருத்தர் இங்கே ஆபரேஷனுக்கு வர்றார்.. என்னோட வளர்ப்புத் தந்தைன்னு சொல்லலாம். அப்பாதான் அவருக்காகச் செலவு செய்யறார். இப்ப லிஸ்டிலே அவரை நுழைக்க முடியுமா?'' என்றாள்.

"எமர்ஜென்சி ஒன்னும் இல்லையே?" என்று கேட்டான்.

"எமர்ஜென்சி கேஸ்ன்னு சொல்ல முடியாது. ஆனா, அவரு திரும்பச் சீக்கிரம் போகலேன்னா அவங்க குடும்பமே அவஸ்தைப் பட்டுடும்," என்றாள்.

"சரி.. பாஸ்கரன் சார் கிட்டே சொல்லிப் பார்ப்போம்," என்றான். பாஸ்கரன் போய்ச் சந்தரேசனிடம் என்ன பேசினாரோ தெரியவில்லை. வேண்டா வெறுப்பாக ஒத்துக் கொண்டார்.

பத்து நாட்களில் ஆபரேஷன் என்று முடிவு செய்தார்கள். ஆனந்தி அவரைத் தன் வீட்டிலேயே தங்க வைத்துக் கொண்டாள்.

ஒன்றிரண்டு முறை ஷ்யாம் அவரைப் போய்ப் பார்த்தான். சத்தியமூர்த்தி என்று பெயராம்.

அப்போதுதான் ஆனந்தி தன்னைப் பற்றிக் கொஞ்சம் சொன்னாள். ஆனந்தி சிறு வயதிலேயே தாத்தா பாட்டியிடம் வந்து விட்டாளாம். பாட்டி லாஸ் ஏஞ்சல்ஸில் விழுந்து விழுந்து கவனித்துக் கொண்டாள்.

"எப்படி.. எங்க ஆனந்தி நன்னா வேலை செய்யறாளா?" என்று அவர் ஆசையாக விசாரித்தார்.

"வேலையும் நன்னா செய்வா. குறும்பும் நன்னா செய்வா!" என்றான் ஷ்யாம் கலகலவென்று சிரித்தபடி.

"அது எப்பவும் தெரிஞ்சதுதானே" என்றார் அவரும் சளைக்காமல்.

"இவ அண்ணன் ரொம்ப அமைதி தெரியுமோ?" என்றார்.

அண்ணன் பெயர் ஆதித்யாவாம்.

ஷ்யாம் கூட அவளிடம் தனியாக, "என்ன, ஆனந்தி, உன்னைப் பத்தின எல்லா விஷயத்தையும் ஏதோ மூடு மந்திரமா வச்சிருந்தே. இப்பத்தான் ஏதோ மந்திரவாதி தொப்பிக்குள்ள இருந்து எடுக்கற மாதிரி ஒன்னொன்னா வருது," என்று கேலி செய்தான்.

"மறைக்கணும்னு இல்லே! சொல்ல அவசியம் வர்லே," என்றாள்.



"நன்னாப் பேசறே ஆனந்தி," என்று சிரித்தான்.

அவளும் சிரித்துக் கொண்டாள்.

"இது எப்படி இருக்கு தெரியுமா? ஒரு தடவை முல்லா நஸ்ருதீன் வீட்டிலே ஒரு சம்பவம் நடந்துச்சாம். தொப்புன்னு யாரோ விழுந்த சத்தம் கேட்டதாம். சமையலறையில் வேலையா இருந்த முல்லாவின் மனைவி யாரோ விழுகற சத்தம் கேட்டுதேன்னாளாம். அதற்கு முல்லா அது ஒன்னுமில்லே, என் சட்டையும், கால்சராயும்தான் விழுந்துச்சு என்றார். அதுக்கா அப்படிச் சத்தம் கேட்டுச்சு என்று மனைவி மறுபடியும் கேட்க, 'இல்லே! அதுக்குள்ள நான் இருந்தேன்,' அப்படின்னாராம். அது மாதிரி இருக்கு," என்றான்.

ஆனந்தி கலகலவென்று சிரித்தாள்.

அந்தக் கலகலவென்ற சிரிப்பில் ஒரு கணம் தன்னை மறந்தான் ஷ்யாம். சட்டெனத் தன்னைக் கட்டுப்படுத்தியவனாய் அங்கிருந்து விலகிச் சென்றான்.

* * *

அந்த முறை டிஸ்கஷனில் சத்தியமூர்த்திக்கு அடுத்த வாரத்தில் அறுவைச் சிகிச்சை செய்யத் தீர்மானித்த போதும் சந்தரேசன் தன்னுடைய ஒரு முக்கியமான நோயாளி இருப்பதாக வாதாடினார். பாஸ்கரன் சத்தியமூர்த்தி நம் டாக்டர் ஒருத்தரோட வளர்ப்புத் தந்தைங்கற ஒரு பக்கம், நீங்க சொல்ற பேஷண்டைக் காட்டிலும் இவருக்குச் சீக்கிரம் செய்ய வேண்டியது அவசியமாயிருக்கு, என்று சொல்ல இறங்கி வந்தார்.

ஆனந்தி தலையிடாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். சத்தியமூர்த்திக்கு ஆனந்தி பணிவிடைகள் செய்கிற விதம் பார்த்து ஷ்யாமுக்கு ஆச்சரியம். அமெரிக்காவில் வளர்ந்த பெண். அவுட்ஸ்போக்கன் என்றெல்லாம் உள்ளூர ஒரு எண்ணம் இருந்தது உடைபட்டுப் போனது.

ஷ்யாமின் குடும்பத்தவர்கள் எல்லாரும் அவரை வந்து பார்த்துப் போனார்கள். சத்தியமூர்த்திக்கு ஒரே மகிழ்ச்சி.

"ரொம்ப நல்லவளாத் தெரியறா?" என்று சிலாகித்துக் கொண்டார்.

அறுவைச் சிகிச்சைக்கு முன் அட்மிட் ஆனபோதும் ஐ.சி.யூவில் இருந்த போதும் அலட்டிக் கொள்ளாமல் இருந்தார். சிரித்த முகமாய் இருந்தார். ஷ்யாமுக்கும் அவருக்கும் இடையே ஒரு நட்புக் கூட வளர்ந்தது.

பைபாஸ் சர்ஜரி. இரத்தக் குழாய்களில் இரண்டு இடங்களில் அடைப்பு என்றார்கள். அருமையாக ஒத்துழைத்தார். எளிய தோற்றத்தில் இருந்தாலும் அனுபவமும் ஆழ்ந்த அறிவும் மிக்கவராக இருந்தார். ஆனால், அவருடைய எளிய தோற்றம் பார்த்தோ என்னவோ, சந்தரேசன் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. என்றாலும் ஷ்யாம் ஒரு விஷயம் கவனித்து வைத்திருந்தான். ஆனந்தி இருக்கும்போது அவர் அதிகமாகக் கோபப்படுவது இல்லை.

இயல்பு எப்படியிருந்தாலும் வெளிப்படத்தானே செய்யும்? அதற்கேற்ப அன்றைக்கு யாரோ ஒரு பேஷண்டிடம் அவர் சத்தம் போடுவதைச் சத்தியமூர்த்தி பார்க்க நேர்ந்தது.

"இது என்னப்பா?" என்று ஷ்யாமிடம் விசாரித்தார், அவர் - புன்னகையுடன்.

"அது.. அவர் கொஞ்சம் கோபக்காரர். ஆனால், திறமைசாலி," என்று வழக்கம்போல் சமாளித்தான்.

அதற்கு அவர்,

"இல்லையேப்பா. சிலர்கிட்டே மட்டும் ரொம்ப இழைஞ்சு இழைஞ்சு பேசறார்," என்றார்.

அதற்கும் நழுவலாக ஒரு புன்னகையை மட்டும் பதிலாக அளித்து விட்டுப் போய் விட்டான். தனக்குள் 'மனிதர் விவரம்தான்...' என்று சத்தியமூர்த்தியைப் பற்றி எண்ணிக்



கொண்டான். தான் பல நாட்கள் கழித்துக் கண்டு பிடித்த ஒரு விஷயத்தை எளிதாகக் கண்டு பிடித்து விட்டாரே என்று எண்ணிக் கொண்டான்.

"ஆனந்தி, ரொம்ப மாடர்னா இருக்கேன்னு நெனச்சேன். ஆனா, பணிவிடையெல்லாம் பலமா இருக்கு," என்றான் கேலி போல.

"ஆள் மாடர்னா இருந்தா பாசமா இருக்கக் கூடாதுன்னு ஏதாவது இருக்கா என்ன?" என்றாள்.

"அது கரெக்ட்தான்..." என்றான்.

* * *

அறுவைச் சிகிச்சை நாளும் வந்தது.

பாஸ்கரன் அறுவைச் சிகிச்சை செய்ய.. ஷ்யாம் உதவிக்கு நின்றான்.

ஆனந்தி எத்தனையோ நோயாளிகளை இந்த ஆறு மாதத்தில் பார்த்து விட்டாள் என்ற போதும் பதட்டத்தில் இருந்தாள்.

ஷ்யாம் தியேட்டருக்குள் நுழைந்தபோது. "நீ வேண்ணா வரியா?" என்றான்.

"இல்லே!" என்றாள்.

"ஏன்?" என்றான் வியப்பாக.

"பாக்கற சக்தியில்லே!" என்றாள். அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது. அவளுக்குள் பயம் ஏற்பட்டிருக்கிறது என்று. நின்றான்.

"ஆனந்தி! டோன்ட் வொர்ரி. பாஸ்கரன் சார் பற்றித் தெரியுமில்லே? நன்னாத் தேறி வருவார் பார்... அப்பா," என்றான் ஆதுரத்துடன்.

"வளர்த்த பாசம்!" என்று புன்னகைக்க முயன்றாள்.

"டோன்ட்... வொர்ரி ம்மா..." என்று தேற்றிவிட்டு உள்ளே சென்றான்.

அறுவைச் சிகிச்சை முடிந்தவுடன் பாஸ்கரன் முகம் பார்த்தான்.

"சார்... ஆனந்தி ரொம்பக் கவலையா இருக்கா?" என்றான்.

''சரி. நீ போ. பேஷண்ட் நன்னா இருக்கார் ஒன்னும் கவலைப்பட வேண்டாம்னு சொல்லு.'' என்றார்.

போனான். அவன் சொல்லி முடித்தவுடனே சட்டென்று அவன் தோளில் சாய்ந்து கொண்டு அழுதாள்.

''ஹேய்! என்ன இது? நீ ரொம்ப போல்ட்னு நெனச்சுட்டிருக்கேன்,'' என்றான்.

''என்னதான் தைரியம்னாலும் பிரியமானவங்களுக்கு ஏதாவதுன்னா மனசு தாங்குமாக்கும்,'' என்றாள்.

''தட்ஸ் ட்ரூ..'' என்று ஒத்துக் கொண்டான். அருகில் சற்று நேரம் அமர்த்திக் கொண்டான். தட்டிக் கொடுத்தான். சற்றுக் கழித்துச் சுயநினைவு வந்தவள் போல் விலகிக் கொண்டாள்.

''ஐ'ம் சாரி!'' என்றாள்.

''டட் வொய்? ஆம் ஐ நாட் யுவர் ஃப்ரண்ட்?'' என்றான். சிரித்தார்கள்.

கருணாகரன், ஷாநவாஸ், அமரேந்திரன் என்று எல்லா டாக்டர்களும் மாற்றி மாற்றிச் சத்தியமூர்த்தியைக் கவனித்துக் கொண்டார்கள்.

ஆனந்தியின் வளர்ப்புத் தந்தை என்ற முறையில் நர்ஸ்களும் கூட அவரிடம் மரியாதையுடன் நடந்து கொண்டார்கள்.

சத்தியமூர்த்தி ஒரு மாதம் அங்கே தங்கி ஓய்வெடுப்பதாக முடிவாகியது.

* * *

ஒரு நாள் இரவு.

எட்டு மணியிருக்கும்.

கார்த்திகாயினி, ''ஷ்யாம், ஆனந்திக்குப் பிடிச்ச திரட்டுப்பால் குடுத்துட்டு வாடா,'' என்றார்.

''அம்மா, இந்த நேரத்துலயா?'' என்றான் வியப்புடன்.

''ஆமாடா. ஆசையா சாப்பிடுவா,'' என்று வற்புறுத்தவும்... புறப்பட்டான்.



அப்போதுதான் அந்த விசித்திரக் காட்சியைக் கண்டான்.

ஆனந்தி நைட்டியில் இருந்தாள். ஏதோ புத்தகம் படித்துக் கொண்டு அமர்ந்திருக்க, சத்தியமூர்த்தியும், அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆஃபீசரும் புல்வெளியில் நின்றபடி மற்றவர்களுக்கு எதுவும் கேட்காதபடி மெல்லிய குரலில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவன் காரிலிருந்து இறங்கியதைப் பார்த்தவுடன் தலை யசைத்து விட்டுப் போய் விட்டார்.

''அது ஒண்ணுமில்லே, இவ தாத்தாவுக்கு இந்த ஹாஸ்பிடல் ஃபவுண்டர் ரொம்ப வேண்டியவராக்கும். அவர் ஏதோ மெசேஜ் அனுப்பியிருக்கார்,'' என்றார்.

''ஓ...!'' என்று ஆச்சரியமானான்.

''என்ன ஆனந்தி? மேஜிக் பாக்ஸ்லேயிருந்து இன்னொரு அதிசயமா?'' என்று அவன் கேட்க, ஆனந்தி சிரித்தாள்.

''என்னம்மா?'' என்று சத்தியமூர்த்தி கேட்க, அவள் ஷ்யாம் கிண்டல் செய்வதைச் சொன்னாள். அவர் அதற்கு மேல் வளர்க்காமல் சிரித்துப் பேச்சை மாற்றி விட்டார்.

மறுநாள் வேறொன்றும் நடந்தது.

பஞ்சாபகேசனும் கார்த்திகாயினியும் சத்தியமூர்த்தியைப் பார்க்க வந்தார்கள். சற்று நேரம் அளவளாவிவிட்டு,

''ஆனந்தி ரொம்ப நல்ல பொண்ணு. எங்காத்துப் பொண்ணுக்கு நல்ல வரன் வேற பாத்துக் குடுத்துட்டா. உறவுக்காரா வேற ஆயிட்டோம். ஆனந்திக்கு வரன் பார்க்கறதா ஐடியா இல்லையோ?'' என்றாள் கார்த்திகாயினி.

''பாக்கணும். ஆத்துல இதைப் பத்திப் பேச்செடுத்தாலே ஆனந்தி கோபப் படறா. இப்பத்தான் ஏதோ பண்ணிக்க மாட்டேன்னா சொல்றேன். கொஞ்சம் டைம் குடுங்கோ, அப்படீங்கறா,'' என்றார்.

''ஆமாமா, அவ போக்கிலதான் போகணும். அமெரிக்காவுல வளர்ந்த பொண்ணு. ஆனா இந்தியாவுக்கும் ஏத்த மாதிரி அட்ஜஸ்ட் ஆகிட்டா,'' என்றார் பஞ்சாபகேசன்.

"ஆனா ஒரு விஷயத்துல பிடிவாதமா இருக்கா. அவ மனசுக்குப் பிடிக்கணுமாம். பழகிப் பார்த்துத்தான் தெரிஞ்சுக்கணுங்கறா. நாங்களும் சம்மதம் சொல்லியிருக்கோம்," என்றார்.

மேலும் சற்று நேரம் பேசினார்கள்.

திரும்ப வீட்டுக்கு வரும்போது...

"என்னது? என்னமோ அர்த்தம் வச்சுப் பேசினாப்பல இருந்தது?" என்றார் கார்த்திகாயினி.

பஞ்சாபகேசன் ஒரு பெருமூச்சு விட்டுச் சொன்னார்.

"என்னவோ நேக்கு ஷ்யாமுக்கும் இந்தப் பொண்ணுக்கும் இடையே ஒரு ஒட்டுதல் இருக்காப்ல மனசுக்குப் படுது. இந்தப் பொண்ணு எதுனா அவாத்துல அதைப் பத்திப் பேசியிருப்பாளோன்னு ஆழம் பார்த்தேன்," என்றார்.

"ஒண்ணு கவனிச்சியோ? வரன் பாக்கறச்சே குடும்பக் கஷ்டம் தெரிஞ்சவளாப் பாக்கணும்னு சொன்னாரே! அப்போ அப்பாவும் பொண்ணும் ஒருத்தரை யொருத்தர் பாத்துண்டா... கவனிச்சியோ?" என்றார் பஞ்சாபகேசன்.

"ஆமா.. கவனிச்சேன். பார்க்கலாம். நாம ஆயிரம் மனசுலே நினைக்கலாம். கடவுள் என்ன நினைக்கறாரோ, அதுதானே நடக்கும்," என்றார்.

காலம் அவர்களின் கனவுகளுக்குக் கட்டுப் படப் போவதில்லை என்பது அப்போது அவர்களுக்குப் புரிந்திருக்கவில்லை.

## 13

'ஷ்யாம்..' என்று அன்றைக்கு வந்தபோது ஏதோ சிந்தனையிலேயே இருக்கிறாற்போல் இருந்தது.

"என்ன.. ஆனந்தி!" என்றான்.

"இல்லே! அப்பா கூடவே அமெரிக்கா வரச் சொல்றார். இரண்டு மாசம் லீவ் போடச் சொல்றார்," என்றாள்.



"ஓ..!" என்றான் ஷ்யாம்.

"எங்கப்பா வரச் சொல்றதோட, தாத்தாவும் பாட்டியும் ரொம்பக் கோபமா இருக்காங்களாம். இங்கே வந்து இப்படி உட்கார்ந்துட்டேன்னு," என்றாள்.

"ஒரு வேளை அங்கேயே வரன் பார்ப்பாங்களோ?" என்றான்.

"இல்லலே.. அப்படி எதுவும் என்னைக் கேட்காம செய்ய மாட்டா," என்றாள்.

"ஆனந்தி!" என்றான்.

"ம்.." என்றாள், யோசனையாக.

"நீ யில்லாம ரொம்பப் போரடிக்கும். வாசவும் புக்காத்துக்குப் போயிட்டா. நீயாவது அப்பப்ப வர்றே! கலகலப்பா இருக்கு. நீயில்லேன்னா வீடே வெறிச்சோடிப் போயிடும்," என்றான்.

"நேக்குந்தான். உங்களையெல்லாம் விட்டுண்டு இருக்கறதுன்னா ரொம்பக் கஷ்டமா இருக்கும். என்ன செய்யட்டும். மேக்ஸிமம் மூணு மாசம். ஓடி வந்துர்றேன்," என்றாள்.

"ஒண்ணும் செய்யறதுக்கில்லே. போய்த்தான் ஆகணும்," என்றான்.

அடுத்த வாரத்தில் அவர்கள் புறப்பட்டபோது ஷ்யாமின் குடும்பமே சென்று வழியனுப்பி விட்டு வந்தார்கள்.

* * *

அன்றிரவு!

ஷ்யாமுக்கு முதல் முறையாக வெறிச்சோடிப் போன மாதிரி ஒரு உணர்வு தோன்றியது. இத்தனைக்கும் ஆனந்தி எப்போதும் அவர்கள் வீட்டிலா இருந்தாள்? இல்லையே, ஏன் உலகமே இப்படி வெறிச்சோடிப் போன மாதிரி இருக்கிறது என்று எண்ணிக் கொண்டான்.

வழக்கமாக மருத்துவம் தொடர்பான புத்தகங்கள் படிப்பான். அல்லது அன்று - மருத்துவமனையில் பார்த்த நோயாளிகளைப்

''ஆனா ஒரு விஷயத்துல பிடிவாதமா இருக்கா. அவ மனசுக்குப் பிடிக்கணுமாம். பழகிப் பார்த்துத்தான் தெரிஞ்சுக் கணுங்கறா. நாங்களும் சம்மதம் சொல்லியிருக்கோம்,'' என்றார். மேலும் சற்று நேரம் பேசினார்கள்.

திரும்ப வீட்டுக்கு வரும்போது...

''என்னது? என்னமோ அர்த்தம் வச்சுப் பேசினாப்பல இருந்தது?'' என்றார் கார்த்திகாயினி.

பஞ்சாபகேசன் ஒரு பெருமூச்சு விட்டுச் சொன்னார்.

''என்னவோ நேக்கு ஷ்யாமுக்கும் இந்தப் பொண்ணுக்கும் இடையே ஒரு ஒட்டுதல் இருக்காப்ல மனசுக்குப் படுது. இந்தப் பொண்ணு எதுனா அவாத்துல அதைப் பத்திப் பேசியிருப் பாளோன்னு ஆழம் பார்த்தேன்,'' என்றார்.

''ஒன்னு கவனிச்சியோ? வரன் பாக்கறச்சே குடும்பக் கஷ்டம் தெரிஞ்சவனாப் பாக்கணும்னு சொன்னாரே! அப்போ அப்பாவும் பொண்ணும் ஒருத்தரை யொருத்தர் பாத்துண்டா... கவனிச் சியோ?'' என்றார் பஞ்சாபகேசன்.

''ஆமா.. கவனிச்சேன். பார்க்கலாம். நாம ஆயிரம் மனசுலே நினைக்கலாம். கடவுள் என்ன நினைக்கறாரோ, அதுதானே நடக்கும்,'' என்றார்.

காலம் அவர்களின் கனவுகளுக்குக் கட்டுப் படப் போவ தில்லை என்பது அப்போது அவர்களுக்குப் புரிந்திருக்கவில்லை.

## 13

'ஷ்யாம்..' என்று அன்றைக்கு வந்தபோது ஏதோ சிந்தனையிலேயே இருக்கிறாற்போல் இருந்தது.

''என்ன.. ஆனந்தி!'' என்றான்.

''இல்லே! அப்பா கூடவே அமெரிக்கா வரச் சொல்றார். இரண்டு மாசம் லீவ் போடச் சொல்றார்,'' என்றாள்.



''ஓ..!'' என்றான் ஷ்யாம்.

''எங்கப்பா வரச் சொல்றதோட, தாத்தாவும் பாட்டியும் ரொம்பக் கோபமா இருக்காங்களாம். இங்கே வந்து இப்படி உட்கார்ந்துட்டேன்னு,'' என்றாள்.

''ஒரு வேளை அங்கேயே வரன் பார்ப்பாங்களோ?'' என்றான்.

''இல்லல்லே.. அப்படி எதுவும் என்னைக் கேட்காம செய்ய மாட்டா,'' என்றாள்.

''ஆனந்தி!'' என்றான்.

''ம்..'' என்றாள், யோசனையாக.

''நீ யில்லாம ரொம்பப் போரடிக்கும். வாசுவும் புக்காத்துக்குப் போயிட்டா. நீயாவது அப்பப்ப வர்றே! கலகலப்பா இருக்கு. நீயில்லேன்னா வீடே வெறிச்சோடிப் போயிடும்,'' என்றான்.

''நேக்குந்தான். உங்களையெல்லாம் விட்டுண்டு இருக் கறதுன்னா ரொம்பக் கஷ்டமா இருக்கும். என்ன செய்யட்டும். மேக்ஸிமம் மூணு மாசம். ஓடி வந்துர்றேன்,'' என்றாள்.

''ஒண்ணும் செய்யறதுக்கில்லே. போய்த்தான் ஆகணும்,'' என்றாள்.

அடுத்த வாரத்தில் அவர்கள் புறப்பட்டபோது ஷ்யாமின் குடும்பமே சென்று வழியனுப்பி விட்டு வந்தார்கள்.

* * *

அன்றிரவு!

ஷ்யாமுக்கு முதல் முறையாக வெறிச்சோடிப் போன மாதிரி ஒரு உணர்வு தோன்றியது. இத்தனைக்கும் ஆனந்தி எப்போதும் அவர்கள் வீட்டிலா இருந்தாள்? இல்லையே, ஏன் உலகமே இப்படி வெறிச்சோடிப் போன மாதிரி இருக்கிறது என்று எண்ணிக் கொண்டான்.

வழக்கமாக மருத்துவம் தொடர்பான புத்தகங்கள் படிப்பான். அல்லது அன்று - மருத்துவமனையில் பார்த்த நோயாளிகளைப்

பற்றி ஏதாவது குறிப்பிடத்தக்க விஷயம் இருந்தால் டைரியில் குறித்துக் கொள்வான்.

இன்று எதிலும் மனம் செல்லவில்லை.

கட்டிலில் கால் நீட்டி அமர்ந்து கொண்டு எதையெதையோ யோசித்துக் கொண்டிருந்தான்.

வாசுகியின் திருமணத்தின் போது முதல் நாள் வீட்டில் சாமி கும்பிடுவது என்று ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தபோது ஆனந்தி மடிசாரில் வந்து நிற்க, நந்தகுமார் 'ஹோ' என்று குரலெடுத்துக் கத்தினான்.

எல்லோரும் என்னவோ ஏதோவென்று பார்க்க.

"ஆனந்தி மேடம் மடிசார் கட்டிண்டிருக்கா, பாக்கலையோ! கண் கொள்ளாக் காட்சி!" என்றான்.

சற்று நேரம் அவளைச் சுற்றி நின்று எல்லாரும் சிரித்தார்கள்.

"ஆனந்தி! கல்யாண நேரத்துல எங்கயாவது தடுக்கி விழுந்து கிழுந்து வைக்காதே!" என்றான் ஷ்யாம்.

"ஹலோ! அண்ணா! மேடம் ஒரு வாரமா ரகசியமா பிராக்டிஸ் செஞ்சுண்டு இருக்கா, தெரியுமோ!" என்றாள் வாசுகி.

"ஷெரி.. ஷெரி. தலைக்கு மேல வேலை கிடக்கிறது. இங்க என்ன வேடிக்கை? போங்கோ எல்லோரும்," என்று ஆனந்தி விரட்ட எல்லாரும் புன்னகைத்துக் கொண்டு நகர்ந்தார்கள்.

முதல் நாள் நலுங்கு வைப்பதிலிருந்தே எடுப்பதற்காக ஃபோட்டோகிராபரை வரவழைத்திருந்தார்கள். வரிசையாக எல்லாரும் நிற்கையில் வாசுகியின் அருகில் ஆனந்தி நின்றாள்.

ஃபோட்டோகிராபர் மிகவும் எச்சரிக்கையாகச் சில ஃபோட்டோக்களை மட்டும் இரண்டு இரண்டாக எடுத்து வைத்தார் போலும். திருமணம் முடிந்தவுடன் ஃபோட்டோக்கள் வந்தபோது அந்த ஃபோட்டோ மட்டும் ஷேக்காகியிருந்தது. அதைப் பார்த்த நந்தகுமார் -



"ஆனந்தி மன்னி.. நீங்க நிக்கற விதத்தைப் பார்த்து மடிசார்க் கட்டைப் பார்த்து காமிராவே அதிர்ந்து போச்சு போங்கோ!" என்று கலாட்டா செய்தான்.

எல்லாரும் சிரித்தார்கள். பிறகுதான் அவன் 'மன்னி' என்று அழைத்ததை அறிந்து விழித்தார்கள். அவன் அதற்கும் விளக்கம் வைத்திருந்தான்.

"என்ன பாக்கறே வாசு! உங்காத்துக்காரர் ஆனந்திக்கு அண்ணா வோன்னா, இப்போ ஆனந்தி மேடம் நமக்கு உறவுக்காரா ஆயிட்டா தெரியுமோ. அதனாலே இனிமே நோ மேடம்.. மன்னி தான்!" என்றான்.

ஷ்யாம் சட்டென்று எதையோ எடுக்க மறந்தவன் போல் தன்னுடைய அறைக்குப் போனான்.

சற்றுக் கழித்து. "ஏன்னா, ஆனந்தி மன்னி இந்த ஃபோட்டோவில கூட நன்னாத்தான் இருக்கா. இந்தப் பக்கமாத்தான் ஷேக் ஆயிருக்கு," என்றபடி வாசு வந்தாள். பிறகு -

"அண்ணா இந்த அதிகப்படி ஃபோட்டோவெல்லாம் உன்னோட அந்த டேபிள்ல கீழ் டிராயர்ல போட்டு வைக்கறேன்," என்று அவன் பதிலை எதிர்பாராமல் போட்டு வைத்து விட்டுப் போனாள்.

இப்போது அந்த ஃபோட்டோக்களை யெல்லாம் தேடி எடுத்தான். நான்கைந்து ஃபோட்டோக்கள் இருந்தன. அதில் ஆனந்தி நிற்கிற ஃபோட்டோக்கள் இரண்டு இருந்தன. ஒன்றில் முழுத் தோற்றமும் நன்றாக இருந்தது. ஒன்றில் பாதிக்குக் கீழ் வெளுப்பாக விழுந்திருந்தது.

ஷ்யாமள கிருஷ்ணன் சற்று நேரம் அந்த ஃபோட்டோக்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்தப் பாதிவரை இருந்த ஃபோட்டோவை ஸ்டாம்பு சைஸுக்கு வெட்டித் தன் பர்ஸில் பத்திரப்படுத்தினான். இன்னொன்றில் அவளுடைய உருவப் படத்தை மட்டுமே வெட்டி ஒரு கவரில் போட்டுத் தன்னுடைய ஃப்ரீஃப் கேஸில் வைத்தான். அவனுக்கு மட்டுமே தெரிகிற மாதிரி

''ஆனந்தி, நீ எங்கயும் என்னை விட்டுப் போயிட முடியாது. விட மாட்டேன்,'' என்று எண்ணிக் கொண்டான்.

அதே நேரத்தில் -

தன்னைப் பற்றி முழுமையாக எல்லாம் தெரிந்தால் ஷ்யாம் தன்னைப் பற்றி என்ன நினைப்பார் என்ற கவலையுடன் ஆனந்தி பயணித்துக் கொண்டிருந்ததை அவன் அறியவில்லை.

* * *

''உங்களுக்கு எத்தனை வயசு சார்?'' என்றான் ஷாநாவாஸ் கோபமாக.

''இருபத்தஞ்சு சார்,'' என்றான் அந்த இளைஞன்.

''இருபத்தஞ்சு வயசுக்கு இப்படி ஹார்ட்டைக் கெடுத்து வச்சுகிட்டிருக்கீங்க!'' என்று கடித்து கொண்டான்.

அந்த இளைஞனின் தாய், ''கேளுங்க சார். நல்லாக் கேளுங்க. எப்பப்பார்.. சிகரெட்டும் கையுமாத்தான் அலையறது. ஸ்டைல்னு நினைச்சுக்கிட்டுச் செய்த விஷயங்கள்ளாம் இந்த நிலைமைக்குக் கொண்டு வந்திடுச்சு,'' என்றார்.

''சார், இனிமே இதெல்லாம் விட்டுடுங்க,'' என்றான் ஷாநவாஸ்.

அன்றைக்கு உணவருந்திக் கொண்டிருக்கும்போது ஷா நவாஸ் அதைச் சொன்னான்.

ஷ்யாமள கிருஷ்ணன் மிகவும் வருத்தப்பட்டான். ''சின்ன வயசுல இப்படிப் பழக்கங்கள். ரெண்டு நாளைக்கு முன்னாலே, ஒரு பையன் ரத்தம் குடுக்கறேன்னுட்டு வந்தான். பார்த்தா கடைசியில அவனுக்கு எச்.ஐ.வி. பாசிட்டிவ். ரொம்ப அதிர்ந்து போயிட்டான். எங்கயோ சும்மா ஜாலிக்காகச் செய்த தப்பு இப்படியாயிடுச்சன்னு கதர்றான்,'' என்றான் வருத்தத்துடன்.

''இன்னொன்னு தெரியுமா, ஷ்யாம். போன வாரம் ஒரு விஷயம் கேள்விப்பட்டேன். நம்ம கிளாஸ் மேட் வந்தனாவுக்கு ஒரு நல்ல வரன் வந்துச்சாம். அப்ப.. மாப்பிள்ளை வீட்டு லேடி ஒருத்தர் டாக்டர்ன்னா நம்பக் கூடாது. தெரியுமோ! அவாளுக்குத்



தப்பு செய்யவும் தெரியும். தப்பிக்கவும் தெரியும் என்று சொல்லி அந்தச் சம்பந்தத்தையே கெடுத்து விட்டாளாம்,'' என்றான் கருணாகரன்.

வழக்கம் போல் அமரேந்திரனுக்குக் கோபம் வந்தது. 'அதெல்லாம் வழிமுறை தெரியாம இருக்கறதெல்லாம் முந்தி.. இப்பத்தான் இந்த எயிட்ஸ் பிராப்ளம் வந்ததுக்கப்புறம் எல்லாருக்கும் எல்லாத்தையும் விளக்கமாச் சொல்றமே!'' என்றான்.

ஷா நவாஸ், ''கெட்டுப் போறவங்க எங்கயும் கெட்டுப் போவாங்க. நம்ம ஆனந்தி அமெரிக்காவுல வளர்ந்தவங்க. எல்லார்கிட்டயும் இயல்பாய்ப் பழகுவாங்கதான். ஆனா, தப்பா ஒரு பார்வை பார்த்தா.. வச்சு வாங்கு வாங்குன்னு வாங்கிடுவா. ஒரு தரம் அந்த டாக்டர் ஒரு மாதிரிப் பாக்கறதைப் பாத்துட்டு நேரா அவங்கிட்டேயே போயி, 'மிஸ்டர், ஐ டோண்ட் லைக் யுவர் லுக். பி கேர்ஃபுல்'ன்னு மிரட்டிட்டு வந்துட்டா தெரியுமா?'' என்றான்.

எல்லாரும் சிரித்தார்கள்.

அமரேந்திரன், 'வி மிஸ் ஹெர் எ லாட்.. இல்லே? ஷ்யாம் அண்ணா, உங்க புளியோதரையை ரொம்ப லைக் பண்ணிச் சாப்பிடுவா,'' என்றான்.

ஷ்யாமுக்குப் பேச வாய் எழவில்லை. மற்றவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

ஏற்கெனவே அவனுக்குப் பார்க்கிற இடம் எல்லாம் அவள் நிற்பது போலவே இருந்தது. வெராண்டாவில் நடக்கிற போது திடீரென்று அந்த மூலையில் இருந்து அவள் வரமாட்டாளா என்ற ஏக்கம் தோன்றும். இப்போது இவர்களும் இதையே கிளறுகிறார்களே என்று சற்று எரிச்சல் கூட வந்தது.

''என்ன.. ஷ்யாம், நீ ஆனந்தியை மிஸ் பண்ணலையா?'' என்றான் கருணாகரன்.

ஷ்யாம் மறுக்கவில்லை. ''வெரி மச்!'' என்றான் சுருக்கமாக. சற்று நேரம் கனமான அமைதி நிலவியது.

''சே ஓவர் சென்டிமென்ட்டா இருக்கு. வேற பேசலாம்ப்பா,'' என்றான் அமரேந்திரன்.

பேச்சை மாற்றினார்கள்.

* * *

அன்றிரவு ஆனந்தி ஃபோனில் அழைத்தாள்.

''பரவால்லையே, என்னைக் கூட மிஸ் பண்றேளாம்!'' என்றாள் கேலி போல.

அவனுக்குள் மகிழ்ச்சி குப்பென்று ஊற்றெடுத்தாற்போல உணர்ந்தான். நெகிழ்ந்த குரலில்,

''ஆனந்தி.. எப்படி இருக்கே?'' என்றான்.

''இருக்கேன்.. இருக்கேன்.. நன்னாத்தான் இருக்கேன்,'' என்றாள். பிறகு, ''ஷ்யாம், நான் வந்ததுல, தாத்தாவுக்கும் பாட்டிக்கும் ஒரே சந்தோஷம். ஆனா, என்ன, ரெண்டு பேரும் செல்லம் கொஞ்சி என்னைக் குழந்தையாப் பண்ணிடறா,'' என்றாள். கலகலவென்று சிரித்தாள்.

''சரி.. அந்த லைஃபையும் என்ஜாய் பண்ணு. எப்ப வரப் போறே இந்தியாவுக்கு?'' என்றான்.

''அதை ஏன் கேக்கறேள் போங்கோ? தாத்தாவும் பாட்டியும் 'இப்ப எதுக்கு இந்தியா போகணுங்கறே. இங்க சம்பாதிக்க முடியாததா என்ன! இங்கயே இரு' அப்படீங்கறா!'' என்றாள் ஒரு மாதிரிக் குரலில்.

''ஓ!'' என்றான் இறங்கிய குரலில்.

அவள் அதைக் கவனிக்காதவள் போல் தொடர்ந்தாள்.

''ஆனா... அப்பா சொல்றார் பணம் சம்பாதிக்கறதா பிரச்சினை. அந்த மாதிரி ஆஸ்பத்திரில சேவகம் பண்றதுதான் முக்கியம்கறார்,'' என்றாள்.



அவன் ''ம்..'' என்றான். ''அப்புறம் உன் முடிவு என்ன?'' என்றான் எச்சரிக்கையான குரலில்.

''இப்போதைக்கு இந்தியாதான். நாளைக்கு என்ன நடக்கறதோ பார்க்கலாம்,'' என்றாள்.

''என்னம்மா தத்துவம் அலையலையாய்க் கிளம்புது!'' என்றான். அவள் அவன் பதிலில் ஏற்பட்ட மகிழ்ச்சியால் மறுபடியும் சிரித்தாள். அவள் சிரிப்பொலி அவன் காதில் குளுமையாக நிறைந்தது.

''அதிருக்கட்டும். நீங்க என்ன சொல்றேள்? எனக்கு வரவேற்பிருக்கா இல்லையா?'' என்றாள்.

அவன் உற்சாகமாக, ''வந்தாரை வாழ வைக்கும் நாடு அம்மணி இது,'' என்றான்.

''அதில்லை கேள்வி. நான் வந்தா நீங்க வரவேற்பேளா?'' என்றாள்.

''நானும் இந்த நாட்டுக்காரன்தானே? கண்டிப்பா வரவேற்பேன்,'' என்றான்.

''அப்போ.. வந்தா வாழ வைப்பேன்கறேள். இல்லே?'' என்றாள் மறுபடியும் குறும்புச் சிரிப்புடன்.

''அதிலென்ன சந்தேகம்?'' என்றவன், ''ஹேய், ஆனந்தி! இந்தியா வந்து தொழில் கத்துக்கிட்டியோ இல்லியோ. நன்னா வாயடிக்கக் கத்துக்கிட்டே!'' என்றான்.

''எல்லாம் பழக்க தோஷம்தான்!'' என்று சற்று நேரம் வேடிக்கை பேசினார்கள்.

ஃபோனை வைத்தவுடன் சற்று நேரம் தன்னைச் சுற்றி இருக்கும் உலகம் ஒளி மயமானதாகத் தோன்றியது. ஆனால், உறங்கச் செல்லும் போதுதான் அந்த எண்ணம் தோன்றியது.

இன்றைக்குப் பேசும்போது ஆனந்தி தனக்குச் சில கேள்விகளை வைத்து விட்டாள் என்று தோன்றியது.

நல்ல வேளையாக இந்தக் கேள்விகளை இப்போதே எழுப்பி விட்டாள்.

விளையாட்டுப் போல் பேசுகிறாற் போல் தோன்றினாலும், நீ அமெரிக்கா வரத் தயாரா என்று கேட்கிறாற் போல் தோன்றியது.

தான் போகத் தயாரா? தன்னுடைய வாழ்க்கையின் நோக்கம் என்னவாக இருக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொள்கிற நேரம் வந்து விட்டதோ?

யோசித்துக் கொண்டே நார்மன் வின்சென்ட் பீல் என்பவருடைய ஆங்கிலப் புத்தகத்தை எடுத்து ஒரு பக்கம் பிரித்தான்.

''வெற்றி யென்பது எப்போதும் பணம் சம்பாதிப்பதாக மட்டுமே இருப்பதில்லை. உங்கள் வெற்றி எது எனத் தீர்மானித்துக் கொள்ளுங்கள். பணமா, புகழா, நிம்மதியான குடும்ப வாழ்க்கையா எனத் தீர்மானித்துக் கொண்டு, அதை அடைய முற்படுங்கள்,'' என்ற பொன் மின்னல் வரிகள் அவன் இதயத்துக்குள் ஊற்றாகப் பாய்ந்தன.

ஒரு வேளை அவள் அமெரிக்கா வந்தேயாக வேண்டும் என்று வற்புறுத்தினால் -

அமெரிக்காவில் அதிக பட்சப் பணம் ஈட்டுபவர்கள் டாக்டர்களே என்றும் அவனுக்குத் தெரியும். ஆனால் ஏனோ அவனுக்கு இதுவரை வெளிநாடு போய்ப் பணம் பண்ண வேண்டும் என்று தோன்றவேயில்லை.

அவனுக்கு இன்னொன்றும் புரிந்தது.

இப்படி அமெரிக்கக் குடியுரிமையுள்ள ஒரு பெண் மனைவியாக வாய்த்தால் அந்த மாதிரிக் கனவுகள் உள்ள எந்த ஒரு டாக்டரும் வாய்ப்பைக் கொத்திக் கொண்டு போகத்தான் விரும்புவார் என்பது.

தான் எந்த மாதிரி?



அவன் முடிவு செய்து கொள்ள வேண்டியிருந்தது. ஆனந்தியின் மேல் வைத்த அன்பும் தன் வாழ்க்கை முறை பற்றிய முடிவுகளும் ஒரு புள்ளியில் இணையக் கூடுமா அல்லது இணைகோடுகளாகத்தான் இருக்குமா?

யோசிக்க ஆரம்பித்தான்.

அதன் விளைவாக இனி என்னென்ன குழப்பங்கள் வர இருக்கிறது என்பதை அறியாதவனாக.

## 14

கீர்த்தி வாசனுக்கு அன்றைக்கு நிறையப் பேர் நோயாளிகள்.

மதுரையில் ஒரு முக்கியமான இடத்தில் அவன் கிளினிக் வைத்திருந்தான். மதுரையில் அவனுக்கு நல்ல பெயரும் இருந்தது. இப்போது கிளினிக்கும் சொந்தக் கட்டடத்திலேயே இருந்தது. அதனால் வாசுகிக்கு இரண்டு அறைகள் ஒதுக்கி ஒரு லேப் ஏற்பாடு செய்து கொடுத்தான். ஆனால், அதற்காக வருகிற நோயாளிகளுக்கெல்லாம் அந்த டெஸ்ட் செய்ய வேண்டும், இந்த டெஸ்ட் செய்ய வேண்டும் என்றெல்லாம் அவன் வற்புறுத்துவது இல்லை.

வாசுகிக்கு அவன் கிளினிக்குக்கு முதன் முறையாகப் போன போது ஆச்சரியம். 'தேவையானபோது மட்டுமே மருந்து மாத்திரைகள் சாப்பிட வேண்டும். ஊசியை அனாவசியமாகப் போட வேண்டாம். காய்ச்சலுக்கு வெறும் பாராஸிட்டமால் மட்டுமே போதும்...' என்றெல்லாம் வாசகங்கள் எழுதி வைத்திருந்தான்.

''என்னன்னா இது?'' என்று அவள் ஆச்சரியமாகப் பார்க்க, ''உண்மையைத்தானே சொல்றேன்,'' என்றான். அது மட்டுமல்லாமல் ஏழை நோயாளிகளுக்கு அவன் சாம்பிளாக

கொடுப்பது. வருகிற மருந்துகளை இலவசமாகக் அரசு மருத்துவமனைக்குப் பரிந்துரைப்பது என்பதையெல்லாம் பார்த்து மதிப்பேற்பட்டது. ஒரு நாள்.. தனிமையின் போது...

"நீங்களும் எங்கண்ணா மாதிரியேதான். நல்ல மனசு!" என்றாள் பெருமையாக.

"ஹேய் வாசுகி! நோக்கு ஒரு விஷயம் தெரியுமோ? உங்கண்ணா புகழ் மதுரை வரைக்கும் வந்தாச்சு. நானே ரெண்டு மூனு பேரை அங்கே அனுப்பியிருக்கேன். அவா திரும்பி வந்து என்னண்டை சொன்னதெல்லாம் கேட்டு எனக்கு ரொம்ப ஆச்சரியம். கடைசில பாத்தா ஆனந்தி வந்து அவரோட சிஸ்டரை நோக்குக் கேட்கலாமான்னு ஃபோன் பண்ணினாளா? உடனே சான்ஸைக் கப்புன்னு புடிச்சண்டுட்டேன்," என்றான்.

உடனே வாசுகி, "அப்போ எங்கண்ணாவுக்காகத்தான் என்னைப் பண்ணிண்டேளாக்கும். எனக்காகப் பண்ணிக்கலையா?" என்று ஊடல் செய்த விதம் பார்த்து அவன் மயங்கிச் சிரித்தான்.

"இரு இரு. அதையும் சொல்ல வரேன். ஆனந்தி என்னமோ இவ்வளவு வருணிக்கறாளே என்னடான்னு யோசனை. நிஜம்மாவே வாசுகி தேவியார் அழகுதாண்டாப்பா சாமின்னு நேர்ல பார்த்தப்பதான் புரிஞ்சது. அப்புறம் எம்.எஸ்ஸி பயோகெமிஸ்ட்ரி வேறயாப் போச்சு!" என்றான் அருகில் இழுத்தபடி.

அவளும் இழைந்து கொண்டாள். அவன் தொடர்ந்தான்.

"இதில் இன்னொரு வேடிக்கை தெரியுமோ? ஆனந்தி எப்பப் பாரு கீர்த்தின்னா வாசுகி லேப்ல டெஸ்ட் பண்ணிக் குடுப்பா. நீ டயக்னோஸ் பண்ணுவே. என்ன மாதிரி காம்பினேஷன்ப்பா நீங்க ரெண்டு பேரும்னு ஒரே கலாட்டா!" என்றான். அவள் கழுத்தில் முகம் புதைத்துச் சிரித்தான்.

"ஏன்னா!" என்றாள்.



"ம்."

"இல்லே! அண்ணாவுக்கு ஆனந்தி மன்னி பொருத்தமா இருப்பாளோன்னா?" என்றாள்.

"ம். பொருத்தம்தான்.." என்றான், தன் காரியத்தில் கண் வைத்தபடி.

"அதிலயும் ஆனந்தி கஷ்டப்பட்டுப் படிச்சவளாமே? அப்படிக் கஷ்டப்பட்ட குடும்பத்திலேதான் பொண் எடுக்கணும்னு அண்ணா சொல்வான்," என்றாள்.

அவன் விசித்திரமாகத் தன் மனைவியைப் பார்த்தான்.

"ஹேய்! ஆனந்தியை யாருன்னு நினைச்சே?" என்றான்.

"ஏன்! யாருன்னு நினைக்கணும்? ஒரு பொண்ணுன்னு நெனைக்கணும். வேறென்ன நினைக்கணும்?" என்றாள்.

அவன் முகபாவம் மாறியது. மீண்டும் சிரிப்புக்கு மாறினான்.

"ஹேய்! நான் அதுக்குச் சொல்லலே... அவளை யாருன்னு நினைச்சே? என் தங்கையாக்கும்!" என்றான். பிறகு சிந்தனை வயப்பட்டவனாக -

"வாசு! ஆனா, நம்ம கிராமத்துல யாருகிட்டயும் ஆனந்தியைப் பத்திப் பேசாதே," என்றான்.

"ஏன்?"

"இல்லே! அவா போன தலைமுறையிலயே அமெரிக்கா போயிட்டா. அதுவுமில்லாம அவங்க ஃபேமிலி மேலே இங்க இருக்கறவாளுக்கெல்லாம் ஒரு மாதிரி துவேஷம் அதனால நானா சொல்லாத வரைக்கும் நீ இந்த ஊர்ல ஆனந்தியைத் தெரியாத மாதிரி இருக்கணும், என்ன?" என்றான்.

"ம்..." என்றாள்.

"வெறும் 'ம்' எல்லாம் இல்லே... பிராமிஸ் பண்ணணும்," என்றான்.

"சரி.. ப்ராமிஸ்..." என்றாள்.

தான் எது சொன்னாலும் தயங்காமல் ஒத்துக் கொள்கிற மனைவியை அவன் பரிவுடன் பார்த்தான்.

"குட்" என்றான். பிறகு கலகலவென்று சிரித்தபடி, "நான் எது சொன்னாலும் எப்படிச் சரின்னு ஒத்துக்கறியோ, அது மாதிரி நான் எது கேட்டாலும் மறுக்காமக் குடுக்கணும்," என்றான்.

அவள் சிரித்தாள். "இதுக்கு எங்க ஊர் இளவட்டங்கள்ளாம் ஒரு பேரு சொல்லுவா," என்றாள்.

"என்னது?"

"சந்தடி சாக்கிலே சிந்து பாடறதும்பா!" என்றாள்.

"என்ன இருந்தாலும் உங்க ஊரு கொங்கு பாஷையே தனிதான், பொண்ணே," என்று அவன் கிறக்கக் குரலில் ஆரம்பிக்க -

"ஆச்சு. பொண்ணே.. கண்ணேன்னு ஆரம்பிச்சாச்சு..." என்று அவள் சிரித்துக் கொண்டு அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

* * *

"ஏ.. வாசு.. ஜெயா உன்னண்டை பேசணுமாம்," என்று அம்மாவிடம் இருந்து ஃபோன் வந்தபோது வாசுகிக்கு ஒரே ஆச்சரியம்.

"இந்தாடி.. நீயே சொல்லு," என்று சொல்லிக் கொண்டே ரிசீவரைத் தர ஜெயாக்கா அந்தப் பக்கம் தயங்கியதும் தெரிந்தது.

"ஜெயாக்கா.. என்ன.. என்ன விஷயம்?" என்றாள் கவலையுடன்.

"எல்லாம் நல்ல விஷயம்தான்டி.. வந்து.. வந்து.. ஜூனியர் நரேன் வரப்போறான்," என்றாள்.

"ஹை! ஜெயாக்கா!" என்று வாசுகியின் ஆனந்தக் குரல் கேட்டுக் கீர்த்திவாசன் எட்டிப் பார்த்தான்.



அவர்கள் மாடியில் இருந்தார்கள். கீழ்ப் பகுதியில் அவனது அம்மாவும், அப்பாவும் இருந்தார்கள். ஒரேயொரு சகோதரன். மூத்தவன் அவன். படிப்பில் ஆர்வம் காட்டவில்லை. விவசாயம் பார்த்துக் கொண்டிருந்தான். ஸ்ரீனிவாசன் என்று பெயர். அவனும் அவன் மனைவி தேவிகாவும் பக்கத்திலேயே ஒரு வீட்டில் இருந்தார்கள்.

பெரும்பாலும் சமையல் ஏதாவதொரு வீட்டில் தான் நடக்கும் என்பதோடு வாசுகியின் எளிமையான சுபாவம் பார்த்துத் தேவிகாவும் அவளோடு ஒட்டிக் கொண்டாள்.

அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை. சங்கரன் என்று பெயர் வைத்திருந்தார்கள். ஒற்றுமையாக இருந்தார்கள். மாடியில்தான் கீர்த்திவாசனும், வாசுகியும் தங்கள் தனியான நேரத்தைச் செலவழிப்பார்கள். இப்போதும் அப்படித்தான் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும்போது ஜெயலட்சுமியின் ஃபோன் வந்தது.

"என்ன வாசு.." என்று அவனும் அருகில் வர, "ஜெயாக்கா.." என்று கிசுகிசுத்தாள்.

"வெரிகுட். கன்கிராஜுலேஷன்ஸ். அத்திம்பேர் என்ன சொல்றார்?" என்றான்.

"என்ன சொல்வார்? பெருமையாத்தான் நடமாடிண்டிருக்கார்," என்றாள்.

"இருக்காதா பின்னே?" சற்று நேரம் சிரித்துப் பேசியபின் வைத்தாள். அவன் அருகில் நின்றபடி அவள் முகத்தில் தோன்றும் பாவங்களை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்னவாம்?" என்றான் சுவாரசியத்துடன்.

"அக்கா.. அக்கா.. உண்டாகியிருக்காளாம்," என்றாள் கலகலச் சிரிப்புடன்.

"ஓ தட்ஸ் ரியலி குட்!" என்று அவனும் மகிழ்ச்சியடைந்தான்.

"அதான்.. உங்ககிட்டே பேசறதுக்குக் கூச்சப்பட்டா," என்றாள்.

"சரி சரி. நான் நரேன் அண்ணாகிட்டே பேசிக்கறேன்," என்று அவனும் குறும்பாகச் சிரித்தான்.

"ஹேய், நாம கூட சீக்கிரமா ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டியதுதான்," என்றான்.

வாசுகியின் முகம் சீரியஸானது. ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

"என்ன ரொம்ப யோசனை?" என்றான் மறுபடியும்.

"இல்லே. நாம எல்லாம் வாரிசுகளைப் பத்தி யோசிக்க ஆரம்பிச்சுட்டோம். ஆனா, ஷ்யாம் அண்ணா வாழ்க்கையைப் பத்தித்தான் யோசிக்கலே," என்றாள்.

அந்த வார்த்தைகள் கீர்த்திவாசன் மனதைச் சுருக்கென்று தாக்கியது என்றுதான் சொல்ல வேண்டும்.

அன்றைக்கெல்லாமும் மறுநாளும் கூட அவன் மனதில் ஷ்யாம் விஷயமாக ஏதாவது முடிவெடுக்க வேண்டும் என்ற எண்ணமே தோன்றிக் கொண்டிருந்தது. பெருத்த யோசனைக்குப் பிறகு அவன் ஆனந்தியிடம் தொடர்பு கொண்டு பேசினான். அப்படிப் பேசப் போவதைப் பற்றி அவன் வாசுகியிடம் கூடத் தெரிவிக்கவில்லை. முதலில் ஆனந்தியின் மனம் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொண்டு ஷ்யாமிடம் பேசலாம் என்று முடிவு செய்து கொண்டான்.

உற்சாகமாகப் பேச ஆரம்பித்தவன், பேசி முடித்தவுடன், கவலையுடன் ரிசீவரை வைத்தான். இந்தக் காரியம் எந்த அளவுக்கு வெற்றியடைக் கூடும் என்ற சந்தேகம் கூட அவனுக்குத் தோன்றி விட்டது. வாசுகியிடம் அதைப் பகிர்ந்து கொள்வது உசிதமல்ல என்று முடிவு செய்தான். அதே நேரம் விதி வேறு விதமாகத் திட்டம் போட்டுக் கொண்டிருந்தது.

* * *

அன்றைக்கு அறுவைச் சிகிச்சை நாள்!



ஷ்யாம் அன்றைக்கு இரண்டு ஆபரேஷன்களை முடிக்கும் போது மணி மூன்றாகி விட்டது. ஒரு வழியாக முடித்து விட்டு வந்துதான் உணவருந்தப் புறப்பட்டான். இப்போதெல்லாம் நேரம் கிடைத்தால் வீட்டுக்கு உணவருந்தப் போவான்.

அம்மாவும் அப்பாவும் தனியாய் இருக்கிறோம் என்று நினைக்கக் கூடாது என்பதற்காக வாய்ப்புகள் கிடைத்த போதெல்லாம் அவர்களோடு நேரம் செலவழித்தான்.

இன்றைக்கும் கிளம்பலாம் என்ற எண்ணம் தோன்றி விட்டது.

அப்போது பாஸ்கரன் அழைப்பதாகச் சொன்னார்கள்.

போனான்.

"ஹலோ! ஷ்யாம். ஆபரேஷன் எப்படிப் போச்சு?" என்றார்.

"சார்.. இந்தக் கேஸ் கொஞ்சம் பயமாத்தான் இருந்தது. வயசானவர் வேறயா! பார்த்துப் பார்த்துதான் செஞ்சேன்," என்றான்.

"ஆனா, சக்ஸஸ் - அப்படித்தானே?" என்று முறுவலித்தார்.

அப்புறம்,

"உட்கார்!" என்றார்.

அமர்ந்தான்.

"உனக்கு ஒரு லட்டு மாதிரியான விஷயம் வச்சிருக்கேன்!" என்றார்.

"சொல்லுங்க சார்," என்றான் பணிவுடன்.

"நீ அமெரிக்கா போகப் போறே?" என்றார் புன்னகையுடன்.

அவன் எச்சரிக்கையானான். அவன் எது குறித்துத் தீவிரக் கவலையுடன் யோசித்துக் கொண்டிருந்தானோ அதையே பேசுகிறாரே என்று எண்ணிக் கொண்டு எந்த விதமான உணர்ச்சிகளையும் முகத்தில் வெளிக்காட்டாமல் பார்த்தான்.

"எஸ் யங் மேன். ஒரு பேப்பர் பிரசன்ட் பண்ணப் போறே," என்றார்.

"அப்பாடா!" என்று ஆனது அவனுக்கு. ஆனால் அதே சமயம் மகிழ்ச்சியும் பொங்கியது - ஆனந்தியைப் பார்க்கலாமே என்ற எண்ணமும் கூடவே தோன்றவும்.

"ஒரு கான்ஃபரன்ஸ் நடக்கப் போகுது. அதிலே பேப்பர் பிரசன்ட் பண்ணப் போறே." என்றார்.

அது குறித்துச் சற்று நேரம் பேசினார்கள். பிறகு அவன் புறப்படும்போது,

"யார் ஏற்பாடு தெரியுமா? உன் க்ளோஸ் ஃபிரண்ட் ஆனந்திதான்." என்றார்.

அவன் இதை எதிர்பார்க்கவில்லை.

"அப்படியா சார்?" என்றான் வியப்புடன். "அதிலயும் என் சோகக் கதையைக் கேளு. உன் ஃபிரண்ட் ஒரு வார்த்தை கூட என்கிட்டே, நீங்க ஒரு பேப்பர் பிரசன்ட் செய்யுங்கன்னு சொல்லவே இல்லை, தெரியுமா?" என்றார்.

"ஓ!" என்றான். ஆனந்தி ஏன் இப்படிச் செய்கிறாள் என்று லேசான கோபம் கூட எழுந்தது.

பாஸ்கரன் மீண்டும் சிரித்தார். "சும்மா சொன்னேன். ம். கேட்டா. சும்மா பேருக்கு எங்கே நான் சரின்னு சொல்லிடு வேனோன்னு பயந்துகிட்டே கேட்ட மாதிரி இருந்தது!" என்று மறுபடியும் பகபகவென்று சிரித்தார்.

"சார்.. நீங்க என்ன சொல்றீங்க..." என்று இழுக்கவும்.

"புரியலயாக்கும். விட்டுரு விட்டுரு. அப்படியே இருக்கட்டும்." என்றார். பிறகு வாஞ்சையாகப் புன்னகைத்து.

"எல்லாம் இறைவன் இஷ்டப்படிதாம்ப்பா நடக்கும்." என்றார்.

உற்சாகமாகப் புறப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தான் ஷ்யாம். ஆனால் அப்போது அவனுக்குத் தெரியவில்லை. அவன் வாழ்க்கையையே புரட்டிப் போடப்



போகிற விஷயங்கள் அமெரிக்காவில் நடக்கப் போகின்றன என்று.

## 15

அழகான ஷர்ட் பேண்ட் அணிந்து வந்து நின்ற ஆனந்தியைப் பார்த்த போது அதுவும் கூட அழகாகத்தான் இருந்தது.

பிளேனில் லாஸ் ஏஞ்சல்லை நெருங்க நெருங்க அவன் உள்ளம் துள்ள ஆரம்பித்து விட்டது. ஆனந்தியைப் பார்த்தே இரண்டு மாதமாகி இருந்தது என்ற எண்ணம் இப்போதுதான் முழுமையாகத் தாக்கியது.

பரபரப்பாகவும், பரவசமாகவும் இருந்தது. முதல் விமானப் பயணம் வேறு. அந்த த்ரில்லும் அவனுக்குப் பிடித்திருந்தது.

"வாங்க! சர்ஜன் அவர்களே!" என்று ஆனந்தி போலி மரியாதை யுடன் குனிந்து வணக்கம் போட, அவன் கலகலவென்று சிரித்தான்.

"ஹேய்! சும்மா கலாட்டா செய்யாதே!" என்று லேசாகத் தோளில் தட்டினான். இரண்டு பேரும் மீண்டும் ஒருவரையொருவர் மகிழ்ச்சியாகப் பார்த்துக் கொண்டார்கள். முகம் மலரப் புன்னகைத்துக் கொண்டார்கள்.

ஏர்போர்ட்டில் கஸ்டம்ஸ் விவகாரங்கள் முடித்து வெளியே வந்தார்கள். அவர்கள் வந்திருந்த காரை வேறு ஒருவர் ஓட்டி வந்திருந்தார். கான்ஃபரன்ஸ் ஏற்பாடு செய்த அமைப்பின் சார்பாக வந்திருந்தார்.

'மிஸ்டர் ரிச்சர்ட்ஸ்' என்று அறிமுகப் படுத்தினாள். பிறகு அவர்களுக்குத் தங்குவதற்காக ஏற்பாடு செய்திருந்த ஹோட்டலுக்குப் போனார்கள்.

'ஷ்யாம்! ஜெட் லாக் படுத்தும்! நன்னாத் தூங்கி ரெஸ்ட் எடுங்கோ! நிறையப் பேசணும். ஆனா, எல்லாம் இந்த மூணு நாள் கான்ஃபரன்ஸுக்கு அப்புறந்தான்." என்றாள்.

உணவு வரவழைத்து அவனைச் சாப்பிடச் சொல்லி விட்டு ரிச்சர்ட்ஸுடன் கிளம்பினாள். சற்று தூரம் சென்று தலையாட்டி விட்டுப் போனாள்.

ஷ்யாம் வெகு ஏமாற்றமாக உணர்ந்தான். ஒரு வேளை ரிச்சர்ட்ஸ் முன்னால் எதையும் காட்ட வேண்டாம் என்று நினைக்கிறாளோ என்று தோன்றியது. சரி.. அப்படியானால் அவள் போக்கிலே போகலாம் என்று எண்ணிக் கொண்டான்.

உறக்கம் அவன் கண்களை அழுத்தியது. உறங்கி எழுந்த பின் கான்ஃபரன்ஸ் தொடர்பான சிந்தனைகள் அவனை ஆக்கிரமித்துக் கொண்டதால் இரண்டு நாட்களும் வேகமாக ஓடி விட்டன.

மூன்றாம் நாள் காலை கான்ஃபரன்ஸ் துவங்குவதாக இருந்தது. இடையிலே டெலிஃபோனில் ஆனந்தி தொடர்பு கொண்டாள். விசாரித்தாள். ஆனால், நேரில் வரவில்லை.

''கான்ஃபரன்ஸ் நல்லா வரணும்னு அலைஞ்சுகிட்டிருக்கேன், ஷ்யாம்.. எமினென்ட் பர்ஸனாலிட்டிகள் வர்றாங்க. எதுவும் குறையில்லாம இருக்கணும்,'' என்று சொல்லிக் கொண்டே நேரில் வருவதைத் தவிர்த்து விட்டாள்.

அவனுக்கும் அப்போது அது பெரிதாகத் தோன்றவில்லை.

ஆழ்ந்த நிறத்திலான அந்தக் கோட் சூட்டில் நின்று கொண்டு, 'யுஸீ ஐம் எ டீடோட்டலர்' என்று மென்மையாகச் சொல்லியபடி கூல்டிரிங்க்ஸைக் குடித்தபடி அவன் நின்று கொண்டிருக்க, கான்ஃபரன்ஸ் மேடைக்கு அவன் போகும் வரையிலும் கூட ஆனந்தி வரவில்லை.

அன்று காலை அவனும், இன்னொரு மருத்துவரும் கட்டுரை படிப்பதாக ஏற்பாடு. இரண்டு பேரும் மேடையில் அமர்ந்திருக்க. சரியாக விழாத் துவங்குகிற அந்த நேரத்தில் பக்கவாட்டுக் கதவு வழியாக ஆனந்தி நுழைந்தாள்.

கைத்தறிப் புடவையில் குட்டை முடிக்கு அழகாக ரப்பர் பாண்ட் அணிந்து அவள் மேடைக்கு வந்து வரவேற்புரை சொன்ன அந்தக் கணத்தில் உலகமே ஒளி மயமானதாக இருந்தது.



அவன் தனது கட்டுரையை முடித்த பின்பு சரமாரியாக எழுந்த கேள்விகளுக்கு அவனும் அமர்த்தலாகவே பதில் சொன்னான். ஆனந்திதான் ஒரு விதப் பதட்டத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நகைச்சுவையுடன் இயல்பாக அவன் கருத்துக்கள் சொன்ன விதம், அழுத்தமாக அவன் வாதிட்ட விதம், அவனது ஆங்கிலம் எல்லாமும் அவர்களைக் கவர்ந்தன.

பிற்பகல் உணவுக்குக் கலைந்தபோது நிறையப் பேர் அவனிடம் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

ஒரு விஷயம் அவனுக்கு நேரடியாகப் புரிந்தது. அமெரிக்கர்கள் என்றால் ஏதோ விளையாட்டானவர்களாகவே இருக்கிறார்கள் என்பதுதான் அது. பார்வையாளர்கள் கூட 'ஹோம்' ஒர்க் செய்து தயாராக வந்திருந்தார்கள் என்பதுதான் அது. உணவின் போது ஆனந்தியை அருகில் அழைத்து அமர்த்திக் கொண்டான்.

'ஹேய்! என்ன பெரிய வி.ஐ.பி. மாதிரி ஆளே சிக்க மாட்டேங்கறே!'' என்று செல்லமாகக் கோபித்துக் கொண்டான்.

''ஐயய்யோ! அப்படியெல்லாம் இல்லே! ஏற்பாடுகள். அதுவுமில்லாம உங்களை மாதிரி ஜீனியஸ் எல்லாம் வர்றப்போ எதுவும் தப்பாய்ப் போயிடக் கூடாது இல்லே?'' என்றாள்.

''இங்க பார்! எனக்கு முக்கியமான ஆள் நீதான். கொஞ்சம் அப்பப்பக் கண்ல படற மாதிரி இரு...'' என்றான். அந்த வார்த்தைகள் அவன் இதயத்திலிருந்து தெறித்து விழுந்தாற் போல் விழுந்ததை அவனே அறியவில்லை.

''சரி..!'' என்றாள் புன்னகையுடன். அதற்குள் அவள் இடது பக்கம் அமர்ந்திருந்தவர் ஏதோ கேட்க.. அவள் கவனம் மாறியது.

''ஹேய்! என்னை நீ உங்க வீட்டுக்குக் கூப்பிட மாட்டியா?'' என்று கேட்க நினைத்தான் ஆனால், கேட்கவில்லை.

அவனும் ஏனோ அவனை அழைப்பதைத் தவிர்க்கிற மாதிரியே தோன்றியது.

முக்கிய விருந்தினர்களை மரியாதை செய்து அனுப்பும்வரை அவனும் கூட இருந்தான். மூன்றாம் நாள் இரவு பத்து மணிக்கு மேல் ஆகி விட்டது.

ரிச்சர்ட்ஸும் விடைபெற்றுக் கொண்டு போய் விட்டான். காரை ஆனந்தியே ஓட்டிக் கொண்டு ஹோட்டலுக்கு அழைத்துக் கொண்டு போனாள்.

"அப்பாடா! எல்லாம் நல்லபடியாய் முடிந்தது." என்றாள்.

அறைக்கே உணவு வரவழைத்து உண்டார்கள். "நானும் இன்னைக்கு உங்களோடதான் தங்கப் போறேன்," என்றாள். அவனுக்கு மகிழ்ச்சியாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. அவளே தாத்தாவுக்கு ஃபோன் செய்து, "தாத்தா.. நான் காலையிலே ஷ்யாமோட வரேன். ஐ'ம் ஸ்டேயிங் ஹியர்," என்றாள்.

அந்தப் பக்கம் தாத்தா என்ன சொன்னாரோ, தெரியவில்லை. கலகலவென்று சிரித்தாள்.

"தாத்தா.. ஷ்யாம் ரொம்ப நல்ல பையன், தெரியுமோ?" என்றாள்.

அதற்கும் தாத்தா ஏதோ சொல்ல மறுபடியும் சிரித்தாள்.

"ஓ.கே. ஓ.கே.! வி வெகேட் அண்ட் ஸ்டார்ட் ஃப்ரம் ஹியர் அட் ஃபைவ் ஓ கிளாக்," என்றாள்.

ஃபோனை வைத்தாள்.

"ஹேய்! விஐபியைக் கேட்காமயே ப்ளான் போடறே!" என்றான் ஷ்யாம்.

"யார் வி.ஐ.பி.? நீங்களா?" என்று அவள் கேலியாகச் சிரித்தாள். பிறகு மறுபடியும் சிரித்தாள். "தாத்தா சொல்றார்,



ரொம்ப நல்ல பசங்களா இருக்கறவங்களைத்தான் நம்பக் கூடாதாம்," என்றாள்.

"ஐயோ! பேத்திக்கு மேலே தாத்தா இருப்பார் போல இருக்கு," என்றான் பயந்தவன் போல்.

அதற்கும் சிரித்தாள்.

"அப்புறம்.. தூங்கறேளா?" என்றாள்.

"தூங்கறதா? உட்காரு பொண்ணே! பேசலாம். உங்கிட்டே பேசி எத்தனை நாளாச்சு. ஊருக்கு வர்றதுக்கு வேற இன்னும் ரெண்டு மாசமாகுங்கறே," என்றான்.

"சரி..!" என்று பணிந்தாள்.

ஏர் பேக்கில் இருந்து எடுத்து நைட்டிக்கு மாறிக் கொண்டு வந்தாள். அவனும் கைலி பனியனுக்கு மாறி வந்தான்.

"ஆனந்தி, ஒண்ணு சொல்லட்டா? நிஜம்மாவே அமெரிக்காவில நேக்கு ஒரு விஷயம் பிடிச்சிருக்கு. கான்ஃப்ரன்ஸுக்கு வந்தவா எல்லாம் நன்னா விஷயம் தெரிஞ்சவாளா இருந்தா பாத்தியோ. இப்படியெல்லாம் டீப்பாக் கேள்வி கேப்பான்னு நான் நினைக்கலே," என்றான்.

அவளும் அதை ஏற்றுக் கொண்டாள்.

"இங்க இருக்கிற ஒரு முக்கியமான விஷயம், எதைச் செஞ்சாலும்.. ஒரு சின்சியாரிட்டியோட செய்யறது. ஆனா நம்ம நாட்ல அது மிஸ்ஸிங் தெரியுமோ?" என்றாள்.

அவனும் கொஞ்சம் சங்கடத்துடன் ஒத்துக் கொண்டான். ஒரு ஃபேமஸ் அனக்டோட் கேட்டிருக்கியோ! ஒரு விஞ்ஞானி. அவருக்கு நிறைய லெக்சர்ஸ் குடுத்து அலுத்துப் போச்சாம். அதனால என்ன செஞ்சாராம். தான் ப்ரிபேர் செஞ்ச பேப்பரை ஒரு கூட்டத்தில டிரைவர் கிட்டே குடுத்துப் படிக்கச் சொன்னாராம்," என்றான்.

''ம்?''

''பேப்பர் முடிச்சவுடனே... எல்லாரும் கேள்விகள் கேட்க ஆரம்பிச்சாங்களாம். அப்ப அந்த டிரைவர் சமயோசிதமா இந்தக் கேள்விக்கெல்லாம் நான் பதில் சொல்ல வேண்டியதே இல்லை, என் டிரைவரே சொல்வார் என்று இழுத்து விட்டாராம். எப்படி?'' என்றான்.

''ம்... ஜோக் பரவாயில்லை. ஏதோ சிரிக்கிற மாதிரி இருக்கு ஆனா.. அதை எதுக்கு இப்பச் சொல்றேள்?'' என்றாள்.

''எதுக்குன்னா? நேக்கும் ஒன்னு ரெண்டு கேள்விக்குப் பதில் தெரியலேன்னா இதுக்கெல்லாம் நான் பதில் சொல்ல வேண்டியதில்லை. என் அசிஸ்டென்ட் மிஸ் ஆனந்தி இருக்காங்க. அவங்க சொல்வாங்கன்னு இழுத்து விட்டர்லாமான்னு பார்த்தேன்...'' என்றான். கலகலவென்று சிரித்தான்.

அவன் சற்றும் எதிர்பாராத விதமாக அவள் எழுந்து அவன் வலக் காதைப் பிடித்துத் திருகியபடி ''என்ன லொள்ளா பண்றேள்? இது எங்க ஊராக்கும். வாலை ஒட்ட நறுக்கிடுவேன்'' என்று மிரட்டுவது போல நடித்தாள். பிறகு இருவரும் சற்று நேரம் வரை சிரித்தார்கள்.

இரண்டு இதய நோய் நிபுணர்கள் அங்கே மனம் விட்டுப் பேசிக் கொண்டார்கள். சிரித்தார்கள், விளையாடிக் கொண்டார்கள்.

மீண்டும் எதிரில் வந்து அமர்ந்தான். ''அப்புறம்.. ஜெயாக்கா.. இப்பப் பாக்கறதுக்கு ரொம்ப அழகா இருக்காளாமே! வாசு சொன்னா,'' என்று குடும்ப விஷயங்களை விசாரித்தாள்.

ஏதோ வெகுநாள் கழித்துப் பார்ப்பவர்கள் போல் அவன் நரேந்திரன் நன்கு பழகுவதை, ஜெயாக்காவும் அத்திம்பேரும் வெகு அந்நியோன்னியமாய் இருப்பதை, வாசுகியும் கீர்த்தி வாசனும் வாழ்கிற வாழ்க்கையை, நந்தகுமார் மெடிகல்



காலேஜுக்குப் போயே தீருவேன் என்று பிடிவாதம் பிடிப்பதை, வீட்டில் முன்போல் ஆட்கள் இல்லாததால் அம்மாவும், அப்பாவும் அடிக்கடி கோவில் போய் விடுவதை எல்லாம் விவரமாக அவளிடம் பகிர்ந்து கொண்டான்.

அவளும் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டாள்.

பிறகு தன் பெட்டியிலிருந்து பாஸ்கரன், ஷாநவாஸ், கருணாகரன், அமரேந்திரன் எல்லாரும் அவளுக்காக அனுப்பியிருந்த பரிசுகளை எடுத்துக் கொடுத்தான்.

''அது சரி! நீங்க என்ன வாங்கிண்டு வந்தேள்?'' என்றாள் குழந்தையைப் போல்.

அவன் பெட்டியின் மூலையிலிருக்கும் ஒரு சின்ன நகைப் பெட்டியை எடுத்தான். அதில் நிலாப்பிறை வடிவத்தில் மூன்று வளையங்கள் அடுத்தடுத்துத் தொங்கிய மாதிரி தொங்கட்டான் வாங்கி வந்திருந்தான். பார்த்தால் பெரியதாகவும் ஆனால் எடையில் இலேசாகவும் ஒரு பவுனுக்குள்ளாக பல நிறக் கற்கள் பதித்து அழகாக இருந்த அந்தத் தொங்கட்டான் அவளுக்கு மிகவும் பிடித்தது. அப்போதே அணிந்து பார்த்தாள்.

ஆனந்திக்குத் தமிழ்நாட்டுப் பெண்கள் அணிகிற இது மாதிரிக் கம்மல்கள், வித விதமான வளையல்கள், பலநிறப் பொட்டுக்கள் இதிலெல்லாம் மிகவும் விருப்பம். சாதாரணமாக மற்றவர்கள் அணிந்தால் வேடிக்கையாகத் தெரிகிற இது மாதிரி அணிகலன்கள் கூட அவள் அணியும் போது ஒரு அழகு பெறுவதாக வாசுகி அவளிடம் சொல்வதுண்டு. அதற்காக அதிகமாக அணிகலன்களை அவள் பயன்படுத்துவதில்லை என்பதும் தெரியும்.

''ரொம்ப அழகா இருக்கு!'' என்றாள் மகிழ்ச்சியுடன்.

''அப்பாடா! எங்கே பிடிக்காமப் போயிடுமோன்னு பயந்து போயிருந்தேன். வாசுகிதான் ஐடியா குடுத்தா. ஆனா நீயே போய்

செலக்ட் செய் அண்ணான்னும் சொன்னா. நானே போய் செலக்ட் பண்ணி வாங்கினேன்,'' என்றான். அதைச் சொல்லும் போது அவன் முகம் சிவந்து விட்டது.

''நீங்களேவா போனேள்? உலக அதிசயம்தான். அப்ப இதை நான் ரொம்பப் பாதுகாப்பா வச்சக்கணும்..'' என்று மீண்டும் மகிழ்ந்தாள் ஆனந்தி.

நேரம் போனதே தெரியாமல் பேசிவிட்டு மணி பார்க்கையில் மூன்றாகி விட்டது.

''ஹேய்! மணி மூணு. கொஞ்சம் தூங்கலாண்டா. அஞ்சு மணிக்கே புறப்படணும்கிறே,'' என்றான்.

''ஆமா.. இல்லே!'' என்று அவளும் எழுந்தாள். ''குட் நைட்'' சொல்லிவிட்டு அவள் ஒரு அறைக்குள் நுழைந்தவள் திரும்பி வந்து அவன் சற்றும் எதிர்பாராமல் நிற்கையில் லேசாக அவன் கன்னத்தில் இதழ் பதித்து. ''தாங்க்ஸ்... ஃபார் யுவர் கிஃப்ட்!'' என்று சொல்லிவிட்டுப் போனாள்.

தன் வாழ்வில் முதல் முதலாக ஏற்பட்ட அந்த அனுபவத்தில் சற்று நேரம் உறைந்து போய் நின்றவன் மெதுவாக அடுத்த அறைக்குப் போனான்.

மறுநாள் ஒரு பேரிடி காத்திருக்கிறது என்பதை அறியாமல்.

## 16

கார் போய்க் கொண்டிருந்தது.

அந்த அதிகாலை நேரப் பயணத்தை அனுப வித்து ரசிக்க விரும்பிய ஷ்யாம் அமைதியாக அமர்ந்து இருந்தான்.

ஆனந்தி அருகில்தான் இருந்தாள். ஆனால் ஏனோ அவளும் அமைதியாக வெளியே பார்த்துக் கொண்டு இருந்தாள். அவளுக்குள் ஏதோ போராட்டம் நிகழ்வது போல் ஷ்யாமின் மனதுக்குள் ஒரு எண்ணம் கூட உதித்தது.



தங்கள் வீட்டுக்கு அவனை அழைத்துச் செல்வதில் அவளுக்கு அவ்வளவாக விருப்பம் இல்லையோ என்று கூடத் தோன்றியது. கூடவே இதெல்லாம் தன் கற்பனைகள் என்று இன்னொரு எண்ணமும் தோன்றியது.

லாஸ் ஏஞ்சல்ஸில் இருந்து ஒன்றரை மணி நேரப் பயணம் என்றார்கள். நேற்றைய இரவு நிகழ்வை இப்போது நினைத்த போது ஷ்யாமுக்குக் கொஞ்சம் சிரிப்பாகக் கூட இருந்தது.

இந்த ஒரு வார கால அனுபவத்தில் கன்னத்தில் முத்தம் வைப்பது என்பது அமெரிக்காவில் ரொம்ப சாதாரண விஷயம் என்று அவனுக்குத் தெரிந்திருந்தது. இயல்பாகத் தன் மகிழ்ச்சியை அவள் வெளிப்படுத்தி இருக்கிறாள் என்பதும் புரிந்தது. அதனால் இரவே சற்று நேரத்திற்குள்ளேயே அதற்கு ஒன்றும் பெரிய முக்கியத்துவம் தரத் தேவையில்லை என்று அவன் முடிவெடுத்துக் கொண்டான்.

அதிகாலை நேரப் பயணத்தின் சோர்வும், இரவு நேரம் தூக்கம் கெட்டதும் சற்றுக் கண்ணயரச் செய்து விட்டது. பாதிப் பயணம் முடிகிற நேரம்.

''ஷ்யாம்! ஷ்யாம்!'' என்று ஆனந்தி எழுப்பினாள். அவன் திடுக்கிட்டு விழித்தான்.

''ஷ்யாம்.. இன்னும் கொஞ்ச நேரத்தில் வீட்டுக்குப் போயிடுவோம். இந்தக் காஃப்டீரியாவில் காபி சாப்பிட்டு ஃப்ரெஷ் பண்ணிக்கலாம்,'' என்றாள். உள்ளே போனார்கள்.

மீண்டும் பயணம் தொடங்கி, சற்று நேரத்தில் அந்தப் பெரிய காம்பவுண்டுக்குள் கார் நுழைந்தது.

உள்ளே ஒரு இருநூறு அடி தூரம் கார் சென்ற பின்புதான் வீடு இல்லையில்லை. அந்த பங்களா தெரிந்தது.

கார் வழுக்கிக் கொண்டு போய் போர்ட்டிகோவில் நிற்க, டிரைவர் கார் கதவைத் திறந்து விட்டான். ஷ்யாம் ஒரு விதத் திகைப்புடன் இறங்கினான்.

''வெல்கம் ஃமை பாய்!'' என்று வரவேற்ற முதியவர் வேட்டி சட்டையில் இருந்தார். அருகில் அவர் மனைவி போலும், புடவையில் வைர மூக்குத்தி ஜொலிக்க நின்றார்.

''இது எங்க தாத்தா சந்திரகுடன்.. எங்க பாட்டி கற்பகாம்பாள்,'' என்று ஆனந்தி அவர்களை அறிமுகப்படுத்தினாள்.

வணக்கம் சொன்னான். ஒரு விதமான மலைப்புடனே உள்ளே போனான்.

''கற்பகம்! சூடா ஒரு ஃபில்டர் காபி குடு. பிள்ளையாண்டான் குளிச்சுட்டுப் பூஜைக்கு வரட்டும். ஏன்டி பொண்ணே! நோக்கு வேற தனியாச் சொல்லணுமா, ஓடு!'' என்றார்.

ஒவ்வொன்றும் அந்த வீட்டில் பார்த்துப் பிரமிக்கிற விதத்தில் தான் இருந்தது. வீட்டின் உள்ளே நுழைகிற வரைக்கும் தான் வேற்று நாட்டில் இருக்கிறோம் என்ற உணர்வு இருந்தது. உள்ளே நுழைந்தவுடனேயே சொந்த ஊரில் இருப்பது போலவே இருந்தது. அத்தனை வேலையாட்களும் தமிழர்கள். செல்வச் செழிப்பும் தெரிந்தது.

பூஜையறையில் இருந்த விக்கிரகங்களும், அந்த விசாலமான பூஜை அறையும் அற்புதமான தெய்வீக உணர்வை ஏற்படுத்தின. ஷ்யாம் வாயடைத்துப் போய் ஒவ்வொன்றையும் பார்த்தான். அவனும் வேட்டி அணிந்து கொண்டு வந்தான். ஆனந்தி கூட மேக்ஸி மாதிரியான ஒரு உடை உடுத்து வந்தாள்.

பூஜை முடிந்ததும், ''பாடுவாயாப்பா?'' என்றார். அவனும் 'ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்' என்ற திருவருட்பாவைப் பாடினான். ரசித்துக் கேட்டார்கள்.

''காதுக்கு அமிர்தமா இருக்கு. சர்ஜனாச்சே. படிப்பிலயே இருந்திருப்பியோன்னு நெனச்சேன்,'' என்றார் சந்திரகுடன்.

''அப்பா நன்னாப் பாடுவார். எங்களுக்குக் கொஞ்சம் சொல்லிக் குடுத்திருக்கார்,'' என்றான் ஷ்யாம் பணிவுடன்.



''ஆனந்தி சொன்னா... உங்க ஃபாமிலியைப் பத்தி நன்னா விவரமாச் சொன்னா.. நான் இப்போ அவசரமாக் கிளம்பறேன். ஃபாக்டரிக்குப் போக வேண்டியிருக்கு. ஈவ்னிங் பேசுவோம். அதுவரைக்கும் இந்தப் பொம்மனாட்டிகளைச் சமாளிச்சுண்டு இரு...'' என்று கிளம்பினார்.

ஆனந்தி தாத்தாவின் முன்னிலையில் மௌனமாகவே இருந்தாள். அவர் போனதற்குப் பிறகு கற்பகாம்பாள் ஆவலோடு அமர்ந்து கொண்டார். ஊரைப் பற்றியெல்லாம் ஆசையாக விசாரித்தார்.

ஆனந்தி ஏதோ வேலையாகப் போய்விட்டு வருகிறேன் என்று போனாள்.

''உங்காத்து மனுஷா சிநேகம் ஆனந்திக்குக் கிடைச்சதுல இவருக்கு ரொம்பச் சந்தோஷம். ஆஸ்பத்திரியிலே நோக்கு நல்ல பேராமே. பேசிண்டா. ஆனந்தியை நாங்கதான் வளர்த்தோம்.''

''அப்போ அந்த வளர்த்த அப்பான்னு..'' என்று ஷ்யாம் இழுக்க,

''ஆமாமா.. அவனும்தான். அவன் இப்போ டல்லாஸ் போயிருக்கான். அங்கே இருக்கான்,'' என்று அந்த விவரத்தை வெட்டி விட்டு விட்டு ஆனந்தியைப் பற்றிச் சொன்னார்.

''ஆனந்தி இங்கே வளர்ந்திருந்தாலும் நம்ம கல்ச்சர்படிதா வளர்ந்திருக்கா. சின்னதிலே இருந்தே நம்ம ஊரு வாழ்க்கை முறை பத்தி விவரமாச் சொன்னதினாலோ என்னமோ நன்னா கட்டுப்பாடா வளர்ந்தா. இவரும் எதெதுக்குச் சுதந்திர குடுக்கணுமோ அதுக்கெல்லாம் குடுப்பார். அதனாலேதான் உங் ஃபாமிலியோட அவளாலே ஈஸியாப் பழக முடிந்தது.'' என்ற

ஷ்யாம் அவரோடு இயல்பாகப் பழகினான் என்ற போது அவனுக்குள்ளே நிறையக் கேள்விகள். அவன் கேள்விகளுக்கு பயந்துதான் ஆனந்தி போக்குக் காட்டுகிறாள் என்பதும் புரிந்த எனினும் பொறுத்திருந்தான்.

பிற்பகல் உணவுக்குப் பிறகு அந்த பங்களாவைச் சுற்றி வந்தான். ஏதோ பூங்காவில் இருப்பது போல இருந்தது. இவ்வளவு வசதியான வீட்டுப் பெண்ணா ஆனந்தி? நல்ல வேளையாகத் தன் மனத்தை அவளுக்குத் திறந்து காட்டவில்லை என்ற ஒரு விடுதலை உணர்வும் தோன்றியது. கூடவே மனத்தை ஒரு விதப் பாரமும் அழுத்தியது.

சலனமில்லாமல் தெளிந்த ஆறு போல் ஓடிக் கொண்டு இருந்த தன் வாழ்வில் இவள் ஏன் வந்தாள் என்ற கொந்தளிப்பும் உள்ளே ஓடிக் கொண்டிருந்தது.

ஒன்று மட்டும் முடிவு செய்து கொண்டான்.

நட்பாக இருப்பதால் ஒரு தவறும் இல்லை. அதே நட்புடன் நடந்து கொண்டு ஊருக்குப் போனதற்குப் பிறகுதான் இது குறித்து முடிவெடுக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

"சாய்ஸ் இஸ் நாட் யுவர்ஸ் மேன்!" என்று உள் மனது கொக்கரித்தது. ஒரு வேளை ஆனந்திக்குத் தன் மேல் அந்த மாதிரி ஆர்வம் இருந்தால்...

யோசிக்க வேண்டும். நிறைய யோசிக்க வேண்டும்!

தனக்கென்று ஒரு பெரிய குடும்பம் இருக்கிறது! பொறுப்பு இருக்கிறது! கடமைகள் காத்திருக்கின்றன. இத்தனைக்கும் இடையில் தனது வாழ்க்கையில் ஆனந்திக்கு என்ன இடம்? ஆனந்தியின் மனதில் தனக்கு என்ன இடம்?

எல்லாவற்றைப் பற்றியும் நிறைய யோசிக்க வேண்டியிருக்கிறது. நிதானமாக, அவசரமில்லாமல். அதனால் ஆனந்தியிடம் இயல்பாகவே வழக்கம் போலவே இருக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டான்.

பிற்பகலில்தான் ஆனந்தி வந்தாள். அவள் வந்த நேரம் அவன் அந்த வீட்டைச் சுற்றியிருந்த பின் கட்டுப் பகுதியில் ஒரு சேரைப் போட்டுக் கொண்டு ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டு இருந்தான்.



"ஹலோ..." என்று இனிய புன்னகையுடன் வரவேற்றான்.

"அம்மணி எங்கே கண்ணுக்குச் சிக்கவே மாட்டேங்கறேள்!" என்றான் கேலியாக.

"தாத்தா ஒரு வேலை குடுத்துட்டார். ஃபேக்டரி சம்பந்தமாக." என்றாள்.

"என்ன ஃபேக்டரி ஆனந்தி? உன்னைப் பத்தி ரொம்பத் தெரிஞ்சுண்டதா நான் நெனச்சுண்டிருக்கேன். ஆனா நீ என்னென்னமோ சர்ப்ரைஸ் எல்லாம் வச்சுண்டிருக்கே!" என்றான் பாதி விளையாட்டும், பாதி உண்மையுமாக.

"தாத்தா பெரிய ஃபாக்டரி ஒண்ணு நடத்திண்டிருக்கார் ஜாம், டின்னில் அடைத்த உணவு வகைகள், ஊறுகாய், ஃப்ரூட் ஜூஸ்ன்னு நிறையத் தயாரிக்கிறார். 'ஆனந்தி புராடக்ட்ஸ்'ன்னு பேரு..." என்றாள்.

"ஓ!" என்றான். "பின்னே நடுத்தரக் குடும்பம்னு சொன்னியே!" என்றான்.

"ஆமா! இந்த ஊரு ஸ்கேல்ல நாங்க நடுத்தரக் குடும்பம் தான்..." என்றாள்.

"கஷ்டப்பட்டுப் படிச்சேன். பார்ட் டைம் வேலை செஞ்சு படிச்சேன்னு சொன்னே!"

"ஆமா! இங்க மெடிக்கல் கோர்ஸ் படிக்கறது அவ்வளவு ஈஸியில்லே! அதைச் சொன்னேன். அது மட்டுமில்லே. இங்கேயெல்லாம் பெரும்பாலான பேரு பார்ட் டைம் ஜாப் செஞ்சுதான் படிப்பா! அதோட தாத்தா.. ஆனந்தி, நீ செல்ஃப் டிப்பெண்டண்ட்டா இருக்கணும். வாழ்க்கையைப் புரிஞ்சுக்கணும். அதனால வேலை செய்து சம்பாதிச்சுப் படி. பத்தலேன்னா நான் தரேன்னுட்டார். நான் உங்ககிட்டே பொய் சொல்லலே," என்றாள்.

"ஓஹோ...!" என்றான்.

சற்று நேரம் கனமான மௌனம் நிலவியது. பிறகு அவளே தொடர்ந்தாள்.

"ஷ்யாம்! நேக்கு உங்க ஃப்ரெண்ட்ஷிப் பிடிச்சிருந்தது. உங்க ஃபாமிலியை ரொம்பப் பிடிச்சிருந்தது. ஆனா மனுஷா பணக்காரங்கன்னா ஒரு மாதிரிப் பழகறா. ஒன்னு ஏதாவது எதிர்பார்ப்பு வச்சுண்டு பழகறா. இல்லே ஒதுக்கிடறா. இது ரெண்டுமே இல்லாம என்னோட இயல்பாய்ப் பழகறவங்க நட்புக்குத் தேவையிருந்தது. அதுதான்." என்றாள்.

அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

"நட்புக்கு நடுவிலே அந்தஸ்து ஒரு தடையாய் இருக்கப் படாதுன்னு நினைச்சேன்," என்றாள்.

"ப்ளீஸ்! ஷ்யாம். அண்டர்ஸ்டாண்ட். உங்க நட்பு நேக்குத் தேவையாய் இருந்தது." என்றாள்.

அவன் இளகினான். என்னத்துக்காக இந்தப் பெண் இப்படிக் கெஞ்ச வேண்டும் என்று தோன்றவே -

"ஓகே ஓகே! ஐ அண்டர்ஸ்டாண்ட்," என்றான். புன்னகைத்தான்.

அவள் முகம் பிரகாசமானது. "தென் வி ஆர் ஃப்ரெண்ட்ஸ். ஓகே!" என்று கையை நீட்டினாள்.

"யா! ஆல்வேஸ்!" என்று அவனும் தன் கையைக் கொடுத்தான். அப்புறம் பெருமூச்சு விடுவது போல் நடித்தான்.

"வேற வழியும் இல்லே!" என்றான்.

"ஏன்?" என்று அவள் ஆச்சரியமாய்ப் பார்க்க,

"இப்போதைக்கு உன்னை விட்டா நேக்கு வேற வழியும் இல்லே! நீ தூரத்தியடிச்சேன்னு வச்சுக்க, ஊருக்கு போய்ச் சேர வேண்டாமோ? வேற வழியில்லே! டாலரேட் பண்ணிக்கறேன்தான்," என்றான்.



அவள் கலகலவென்று சிரித்தாள்.

அந்த நிமிடம் அவன் முடிவு செய்து கொண்டான்.

நட்புக்கு என்ன கண்டிஷன்? எதுவும் இல்லை! இந்த நட்பைத் தொடர்வதிலே எந்த நஷ்டமும் இல்லை. ஆனால், மிக எச்சரிக்கையாக நட்புக்கு மேல் மனது அலை பாய்கிற நிலைக்குப் போகக் கூடாது என்று எண்ணிக் கொண்டான்.

அதற்குப் பிறகு அங்கே தங்கியிருந்த மூன்று நாட்களையும் அவன் சொர்க்கமாக உணர்ந்தான். போதும். இந்தக் குடும்பத்தின் நட்புக் கிடைத்ததே தனது பாக்கியம்தான் என்று எண்ணிக் கொண்டான்.

எல்லாம் ஊர் வந்த சேர்கிற வரைதான். வந்து சேர்ந்ததற்குப் பிறகுதான், ஒரு வாரம் ஆஸ்பத்திரி வேலைப்பளு எல்லாம் முடித்த விச்ராந்தியுடன் இரவின் தனிமை கிடைத்தபோதுதான் அவனுக்குத் தன்னையே புரிந்தது. எப்படி ஆனந்தியின் நினைவு தனது உயிருக்குள் கரைந்திருக்கிறதோ அதே அளவு அவன் தொட்டு விட முடியாத தூரத்திலும் அவள் இருக்கிறாள் என்பதும் புரிந்தது.

அந்த இரவின் தனிமையின் போது அவன் ஆனந்தியின் படத்தை எடுத்துப் பார்த்த போது அவள் இதுவரை தனக்குப் போட்டுக் கொண்ட முகமூடியைக் கழற்றிக் கொண்ட அந்த நிமிடத்தில் அவன் நெஞ்சம் வெடிப்பதாய் உணர்ந்தான்.

அழுதான்.. தன் உள்ளத்து உணர்வுகள் எல்லாம் கண்ணீர் முத்துக்களாகக் கரைந்து போகட்டும் என்ற நம்பிக்கையில் அழுதான். வெடித்து அழுதான்.

முதலும் கடைசியுமாக இதுவே தனது அழுகை என்று அழுதான். பிறகு மறுநாள் முதலாகத் தன் குடும்பத்தினரிடமே கூட நடிக்க ஆரம்பித்தான்.

## 17

அதிகாலையில் பூஜை மணிச் சத்தம் கேட்டு விழித்தான் ஷ்யாம். ஏனோ உடனடியாக எழுந்திருக்க மனமில்லாமல் படுத்துக் கொண்டான்.

அமெரிக்காவில் கழித்த மூன்று நாட்கள் நினைவுக்கு வந்தது. ஆனந்தியின் தாத்தா அதிகாலையில் எழுந்து குளித்து விட்டு மந்திரங்கள் சொல்கிற அழகும், கற்பகம் பாட்டி பண்ட பாத்திரங்களைத் தானே தேய்த்து அவருக்குப் பூஜைக்குக் கூட மாட உதவி செய்கிற விதமும் பார்க்க வெகு பாந்தமாக இருந்தது.

அமெரிக்கக் கலாசாரத்துக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டிய இடங்களில் நடந்து கொள்வதும், இல்லத்தில் தங்கள் பாரம்பரிய முறைகளின் பெருமையைக் காப்பாற்றிக் கொள்வதுமாக ஒரு வாழ்க்கை வாழ்ந்தார்கள் என்பது புரிந்தது.

தனது முதிய வயதிலும் கூடச் சந்திரசூடன் மிகத் திறமையும், சுறுசுறுப்பும் உடையவராக இருந்தார். ஆனந்தியின் குடும்பத்தின் அந்தஸ்து பார்த்து முதலில் அவனுக்கு அதிர்ச்சியே ஏற்பட்டு விட்டது. பிறகு மெதுவாக மீட்டுக் கொண்டான். ஆனந்தி சொன்னது போல நட்புக்கு என்ன அந்தஸ்து என்று எண்ணிக் கொண்டான்.

அவனும் இயல்பாகப் போய்ப் பூஜையில் கலந்து கொண்டான்.

மறுநாள் ஒரு பெரிய நட்சத்திர ஹோட்டலுக்கு அழைத்துப் போனாள். அங்கே இளம் ஜோடிகள் இயல்பாய்ப் பழகுவதைப் பார்த்து அவன் முகம் சிவந்து போனதைக் கண்டு ஆனந்தி சிரித்தாள்.

"ஐயோ! ஷ்யாம்!" என்றாள்.

அவன் புன்னகைத்தான்.



"ஆனந்தி! நீ என்ன வேணா நினைச்சுக்க... சில விஷயங்கள் வாழ்க்கையில் இலை மறைவு காய் மறைவா இருந்தாத்தான் நன்னா இருக்கு." என்றான்.

"அது வேற இஷ்யூ. அந்த விவாதம் இன்னொரு நாளைக்கு வச்சுக்கலாம்." என்றாள் அவள்.

டிஸ்னி லேண்ட் கூடப் போனார்கள். வேகமாக ஒரு ரவுண்ட் சுற்றினார்கள். நேரம் அவனுக்குப் போதவில்லை. நிறையப் பேசுவதற்கு நேரமும் இருக்கவில்லை. அவன் புறப்படும்போது ஏர்போர்ட் வரை வந்து வழியனுப்பினாள்.

நல்ல பெண்தான் என்று எண்ணிக் கொண்டவன், ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். நல்ல பெண் என்பதை விடத் தன் உள்ளம் கவர்ந்தவள் ஆனந்தி. இனித் தன் உள்ளக் கதவை மூடி விட வேண்டியதுதானா என்ற கேள்விக் குறியுடனே எழுந்தான்.

குளித்து விட்டுப் பூஜைக்குப் போனான். காலையில் எட்டு மணிக்கு ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டுமே! புறப்பட்டான். சில நாட்களில் பிற்பகலில் சற்று ஓய்வு கிடைக்கும். இப்போதெல்லாம் அதுவும் கிடைப்பதில்லை.

அன்றைக்குப் புறப்படும்போது ஆனந்தியிடம் வீட்டை விலைக்குக் கொடுக்கும்படி கேட்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

* * *

அதே நேரம்!

"என்னம்மா ஆனந்தி! உன் ஃபிரண்ட் என்ன சொல்றார்?" என்று ஆனந்தியிடம் கேட்டுக் கொண்டிருந்தார் சந்திரசூடன்.

அப்போதுதான் ஆனந்தி அந்த உண்மையைச் சொன்னாள்.

"தாத்தா! ஹி இஸ் எ குட் ஃபிரண்ட். ஆனா, விஷயம் என்னன்னா, இதுவரைக்கும் நான் ரொம்ப சாதாரணக் குடும்பத்துப்

பெண்ணுன்னு நெனைச்சுண்டிருக்கார், நம்ப ஸ்டேட்டஸ் பார்த்துக் கொஞ்சம் அரண்டுட்டார். எல்லாம் உங்களாலதான்,'' என்றாள்.

சந்திரசூடன் அவளைச் சிந்தனையுடன் பார்த்தார். ''நான் ஏன் சொன்னேன்னு நீ பின்னாடி புரிஞ்சுக்குவம்மா,'' என்றார்.

''நான் அப்ப அதைப் பெரிசா எடுத்துக்கல. ஆனா இப்ப ஷ்யாமோட ரியாக்ஷன் பார்க்கும்போதுதான் நான் சொன்னது தப்போன்னு தோணுது.'' என்றாள்.

சந்திரசூடன் பேத்தியின் கண்களை ஊடுருவிப் பார்த்தார். அவள் அவரை நேராகப் பார்க்க மறுத்தாள்.

''வேற நான் ஊகிப்பது சரிதானோ?'' என்றார்.

அவள் ஆம் என்பது போல் தலையாட்டினாள். அவரே மறுபடியும் சொன்னார்.

''அது சரிம்மா..! பையன் ரொம்ப நல்ல பையன்ம்மா. பணம் இனிமே அவனுக்கும் பெரிய பிரச்சினையா இருக்கப் போறதில்லே. ஆனா மனசு மனப்பாங்கு அதைப் பார்க்கணுமே. அதிலயும்.. உன்னைப் பத்தின எல்லாமே தெரியறப்ப எப்படி இருக்கும்,'' என்றார். அவள் முகம் சற்றே வாடியது.

தாத்தா தொடர்ந்தார்.

''அம்மாடி! இந்த ஒரு விஷயத்துல மட்டும் குறிப்பிட்ட ரெண்டு பேரும் முடிவு எடுக்கறதுதான் நல்லது. பொறுப்போம். பொறுத்துப் பார்ப்போம்,'' என்றார்.

இருவரும் சற்று நேரம் மௌனமாக அமர்ந்தார்கள்.

''பார்ப்போம். எல்லாத்துக்கும் கடவுள் இருக்கார்...'' என்றார். எழுந்தார்.

* * *

திடீரென்று ஆஸ்பத்திரி பரபரப்புக்குள்ளானது.



கண்ணீரும், கம்பலையுமாய் ஒரு இளம் பெண் ஓடி வர ஒரு எட்டு வயதுக் குழந்தையை ஸ்ட்ரெச்சரில் கொண்டு வந்தார்கள்.

அன்றைக்குப் பாஸ்கரன் வெளியூர் போயிருந்தார். ஷ்யாம் தானிருந்தான். அவனும் பரபரப்பாக ஓடி வந்தான். குழந்தையைப் பரிசோதித்தார்கள். உடனே ஆன்ஜியோகிராம் செய்தார்கள். உடனடியாக அறுவைச் சிகிச்சை செய்தாக வேண்டியிருந்தது.

ஷ்யாம் எல்லாவற்றையும் மறந்தான். அந்தக் குழந்தை ஒன்று மட்டுமே அவன் குறிக்கோளாக இருந்தது.

பல மணி நேர அறுவைச் சிகிச்சை. பொறுமையாகவும், திறமையோடும் அவன் அதைச் செய்ய வேண்டியிருந்தது. செய்தான்.

அறுவைச் சிகிச்சை முடித்து குழந்தையை ஐ.சி. யூனிட்டுக்கு அனுப்பி விட்டு அறைக்கு வந்தான்.

குழந்தையின் தாயைப் பார்த்தாலே ஏழ்மை தெரிந்தது. கடவுள் ஏன் இப்படிப் பட்டவர்களையெல்லாம் சோதிக்கிறான் என்ற வருத்தம் தோன்றியது. எனினும் தன் கடமையைச் சரிவரச் செய்தாயிற்று என்ற நிம்மதியும் கூடவே தோன்றியது.

வீட்டுக்குக் கிளம்பினான்.

வெகு நாட்களுக்குப் பிறகு வீட்டுக்கு விரைவில் வந்த மகனைப் பார்த்து அம்மாவுக்கு மகிழ்ச்சி.

''என்னப்பா! ஏதாவது சாப்பிடறியா?'' என்று அன்புடன் விசாரித்தார்.

''ம்.. நன்னா ஒரு காபி குடிச்சாத் தேவலை,'' என்றான்.

கொடுத்தார். அருகில் அமர்ந்தார்.

''என்னப்பா நோக்கு நேரமே கிடைக்கலை. இல்லேன்னா அமெரிக்கா ட்ரிப்பைப் பத்திப் பேசியிருப்பியோன்னா!'' என்றார்.

''ஆமா ம்மா..'' என்றான். பிறகு சன்னமான குரலில், ''நோக்கு ஒண்ணு தெரியுமோ? ஆனந்தி நாம்ப நெனச்சா மாதிரி

நடுத்தரக் குடும்பத்துப் பெண்ணில்லை. தெரியுமோ? கொய்ட் வெல் ஆஃப்," என்றான்.

அம்மா ஆச்சரியப்பட்டுப் போனாள்.

"ஓஹோ! அப்படியா என்ன? ஆனா, நம்மாத்துல வந்து ரொம்ப நன்னா ஒட்டிண்டாளே! நல்ல குணம்.." என்றார்.

"அது என்னமோ நிஜம்தான்!" என்றான். அந்த நிமிடம் அம்மாவுக்கு ஷ்யாம் அமெரிக்கா போய் வந்ததற்குப் பின் ஏன் முக வாட்டமாகவே இருந்தான் என்பதற்கான காரணம் ஓரளவு விளங்கியது. ஆனால் அவனாகத் தன் மனத்தைத் திறந்து காட்டாத வரையில் தான் அதைப் பற்றிக் கேட்பது நாகரீகமல்ல என்று உணர்ந்து கொண்டார். ஆனால், அதற்காகப் பேச்சை விட்டு விடவும் இல்லை.

ஆனந்தியின் தாத்தா பாட்டியின் வாழ்க்கை முறை, ஆய்வுக் கட்டுரைக்குக் கிடைத்த மதிப்பு பற்றியெல்லாம் அக்கறையுடன் கேட்டுக் கொண்டார். அவனும் ஆர்வமாகச் சொன்னான். இன்னொன்றும் சொன்னான்.

"அம்மா! ஏனோ தெரியலே! ஆனந்தி தன்னைப் பத்தின விவரங்கள் எதையும் இப்போதைக்கு யாராண்டையும் சொல்ல வேண்டாம்கறா" என்றான்.

"ஏனாம்?"

"இல்லே. அவா ஸ்டேட்டஸ் தெரிஞ்சா யாரும் உண்மையாப் பழக மாட்டான்னு அவளுக்கு ஒரு சந்தேகம்," என்றான்.

"அதுவும் சரிதான்ப்பா," என்றார் அம்மா. பிறகு,

"அது சரி உன்கிட்டே எப்படிப் பழகறா?" என்று கேட்டாள்.

"அம்மா நல்ல ஃபிரண்ட்ஷிப்புக்கு அந்தஸ்து எதுக்கும்மா? என்னோட நல்லாத்தான் பழகறா," என்றான். ஆனால் நான்தான் இனிமேல் சற்று விலகிவிட நினைக்கிறேன், என்று சொல்லவில்லை. நினைத்துக் கொண்டான்.



அதற்குப் பிறகு அவன் பேச்சைச் சுருக்கமாக முடித்துக் கொண்டு அறைக்குப் போனான். அறைக்குப் போன பின் தன் மனமே தனக்குத் துரோகம் செய்வது ஏன்? தன்னுடையதாக இருந்து கொண்டு எப்பொழுதும் அவளையே நினைத்துக் கொண்டிருக்கிறதே ஏன் என்று எண்ணிக் கொண்டான்.

அவளுக்கு என்று ஒரு வாழ்க்கை அமைகிறவரை அவளை மனதில் வைத்துப் பூஜிப்பதை யார் தடுக்க முடியும் என்றும் எண்ணிக் கொண்டான். ஆனால் இன்னொரு குடும்பத்துப் பெண்ணை அவளுடைய அனுமதியில்லாமல் எப்படி வேண்டுமானாலும் எண்ணி விடக் கூடாதே என்ற நாகரீகமும் தடுத்தது. நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

இப்போதைக்குச் சிறந்த முடிவு எல்லாவற்றையும் காலத்தின் கையில் விட்டு விடுவதுதான் என்று முடிவு செய்தான்.

* * *

"ஹலோ!" என்று உற்சாகமாக அந்தப்புறம் கீர்த்திவாசன் அழைத்தபோது ஷ்யாமும் உற்சாகமானான்.

"சொல்லுங்கோ, அத்திம்பேர்!" என்றான்.

"அமெரிக்காவிலே பேப்பர் வெளுத்துக் கட்டிட்டேளாமே!" யார் இந்த யங் மேன் என்று அங்கே எல்லாரும் விசாரிக்கறாளாமே! நேக்கும் ஒரு காப்பி அனுப்பி வைங்கோ!" கலகலவென்று சிரித்தான்.

எப்போதும் அளவாகவே பேசுகிற கீர்த்திவாசன் சிரிக்கவும் ஷ்யாமுக்கு ஆச்சரியம்.

"யார் சொன்னா?" என்றான் மெல்லிய குரலில்.

"சொன்னா ஆச்சரியப்படுவேள் அத்திம்பேர்! சந்திரசூடன் அங்கிள்," என்றான்.

சந்திரசூடன் என்று சொல்லும்போதே குரலில் ஒரு மரியாதை தெரிந்தது. மேலும் சற்று நேரம் அமெரிக்கப் பயணம் பற்றிப் பேசினார்கள். பிறகு சற்றுத் தயங்கிய பின் ஷ்யாம் கேட்டான்.

"அத்திம்பேர், நீங்களும் கூட ஆனந்தி பத்தின விஷயங்களை மறைச்சுட்டேளே?" என்றான் ஆற்றாமை நிறைந்த குரலில்.

"எந்த விஷயத்தை?"

"அதான். ஆனந்தி நல்ல வசதியான குடும்பத்துப் பொண்ணுன்னு..."

"ஓ! நான் உங்களுக்குத் தெரியும்னு நினைச்சுண்டிருந்தேன்," என்றான்.

ஷ்யாமுக்கு அவன் சமாளிப்பது புரிந்தது. கீர்த்திவாசன் தொடர்ந்தான்.

"அத்திம்பேர் சந்திரசூடன் அங்கிள் ரொம்ப ஸ்ட்ரிக்ட். தன் குடும்பத்தில யாரா இருந்தாலும் சொந்த முயற்சியாலதான் முன்னேறிப் பேர் வாங்கணுமே தவிர, குடும்பப் பின்னணியை வச்சுண்டு பேர் வாங்கக் கூடாதுங்கறதுல ரொம்ப ஸ்ட்ரிக்டா இருப்பார். அப்பத்தான் வாழ்க்கையோட கஷ்ட நஷ்டங்களை அவா புரிஞ்சுக்க முடியும்னு நினைப்பார்" என்றான்.

ஷ்யாமுக்கு 'ஓஹோ!' என்று சொல்வதைத் தவிர வேறு ஒன்றும் சொல்வதற்கில்லாமல் போய் விட்டது.

"ஆனந்திகிட்டே மட்டுமல்ல, அவளோட அண்ணா ஆதித்யா கிட்டே கூட அப்படித்தான்," என்றான்.

"ஓஹோ! ஒரு அண்ணன் வேறு இருக்கிறானோ?" என்று எண்ணிக் கொண்டான்.

சட்டென்று ஒரு சலிப்புத் தோன்றியது. என்னதான் நட்பு என்ற போதிலும் தன்னைப் பற்றி - தன் குடும்பத்தைப் பற்றிக் கூடப் பகிர்ந்து கொள்ள யோசிக்கிற அளவுக்குத்தான் தங்கள் குடும்பத்தின் மேல் அவள் எண்ணம் வைத்திருக்கிறாள் என்று நினைத்தபோது மனத்தில் லேசான வலி தோன்றியது.

ஆனந்தியிடமும் எதுவும் கேட்கக் கூடாது என்று அந்தக் கணத்தில் முடிவு செய்து கொண்டான்.



வாழ்க்கை மட்டும் ஒவ்வொருவரும் நினைக்கிற கோணத்திலேயே போய்க் கொண்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

ஆனந்தி தன் வாழ்க்கையில் நுழைந்து என்னென்ன புயல்களைக் கொண்டு வரப் போகிறாள் என்று அவனுக்கு அன்றைக்குப் புரிந்திருக்கவில்லை.

"என்ன அத்திம்பேர், சத்தத்தைக் காணோம்," என்ற குரல் கேட்டு இவ்வுலகுக்கு வந்தான்.

"இல்லே, ஒண்ணும் இல்லே!" என்றான்.

"நான் கேட்ட கேள்விக்கு நீங்க பதில் சொல்லலையே, அத்திம்பேர்?" என்றான் கீர்த்திவாசன்.

"என்ன கேட்டேள்?"

"இல்லே... அமெரிக்கா போய் செட்டிலாகிற மாதிரி வாய்ப்பு வந்தா போற ஐடியா இருக்கா.. என்ன?"

"எதுக்குக் கேட்கறேள்?"

"இல்லே.. சந்திரசூடன் அங்கிள் என்னமோ ஜாடை மாடையா இதை ஒரு கேள்வியா வச்ச மாதிரித் தெரிஞ்சுது," என்றான் கீர்த்திவாசன் ஒரு குறுகுறுப்புடன்.

"யோசிக்கலாம், அத்திம்பேர்," என்றவன், சற்று நேரம் வேறு பேச்சுப் பேசி விட்டு ஃபோனை வைத்தான்.

அன்றிரவு.

யாரோ பெரிய மீன் பிடிக்கிற தூண்டிலைக் கையில் வைத்துக் கொண்டு மீன் பிடிக்கிற மாதிரியும் அதில் தான் மாட்டிக் கொண்டு விழிப்பது போலவும் கனவு வந்தது.

திடுக்கிட்டு விழித்தான்.

முகமெல்லாம் வேர்த்துக் கொண்டது.

"சே.. கனவு!" என்று ஒரு நிமிடம் சுதித்துத்தான் நிம்மதியானான்

## 18

பாஸ்கரனும் வெளிநாட்டுப் பயணம் ஒன்றுக்காக முதல் வாரம்தான் புறப்பட்டுப் போயிருந்தார்.

பெரும்பாலும் அறுவைச் சிகிச்சைகளை முன் கூட்டியேதான் திட்டமிட்டுக் கொள்வார்கள். அவரது பயணமும் முன்கூட்டியே திட்டமிட்டுக் கொள்ளப்பட்டதுதான். என்றாலும் எதிர்பாராமல் வருகிற அவசரக் கேஸ்களை அவன் சமாளிக்க வேண்டியிருந்தது.

பாஸ்கரன் அறுவைச் சிகிச்சை செய்து முடித்திருந்த நோயாளிகளையும் அவன் பார்க்க வேண்டியிருந்தது.

கடுமையான உழைப்பு.

உடனிருந்தோர் எல்லாரும் ஒத்துழைத்தார்கள் என்றாலும் பல விஷயங்களை அவன் நேரடியாகப் பார்க்க வேண்டியிருந்தது.

அன்றைக்கு வெள்ளிக்கிழமை அறுவைச் சிகிச்சை நாள். பிறகு ஏற்கெனவே அறுவைச் சிகிச்சை ஆகியிருந்தோரை ஒரு ரவுண்ட் பார்த்து விட்டுக் கிளம்பினான்.

வீடு வந்து சேரும்போது மாலை ஏழு மணியாகியிருந்தது.

அப்போது அவன் வீட்டின் உள்ளே ஒரு குடும்பம் அமர்ந்திருந்தது.

சென்ற மாதத்தில் அறுவைச் சிகிச்சை செய்தானே, அந்தப் பையனின் குடும்பத்தாராம். அந்தப் பையனுக்கு அறுவைச் சிகிச்சை நடந்த நேரத்தில் அவன் தந்தை வெளியூரில் வேலை பார்த்து வந்தானாம். ஒப்பந்தத் தொழிலாளனாம். அதனால் வர முடியவில்லையாம்.

"போவ.. நீ கவலைப்படாம உன்ற வேலையைப் பாரு இங்க நான் கவனிக்கக்கறேன். அப்பன்.. அம்மா யாருமே இல்லாட்டியும் கூட ஒவ்வொரு உசுருக்கும் மதிப்பு என்னான்னு தெரிஞ்ச டாக்குட்டரு அய்யா இங்க இருக்காரு. அவுரு பாத்து எல்லாம் நல்லா நடத்திக் குடுப்பாரு.'' என்று சொன்னானாம்.



இப்போது பையன் ஓரளவு தேறி விட்டானாம். அவர்கள் கதை கேட்பதற்கு மிகவும் கொடுமையாக இருந்தது.

ஒரே குழந்தையாம், அந்தப் பையன். அந்த ஒன்றை நன்றாக வளர்த்து உருவாக்கினால் போதுமென்ற எண்ணத்தில் ஆபரேஷன் வேறு செய்து கொண்டார்களாம்.

நன்றாகப் படிக்கிற பையனாம். நாளுக்கு நாள் இளைத்துக் கொண்டு போன குழந்தையைப் பார்த்து ஊட்டச் சத்துக் குறைவு என்று எண்ணிக் கொண்டார்களே தவிர இதயக் கோளாறு என்று புரிந்து கொள்ளவில்லை.

நல்ல வேளையாக இப்போது குழந்தை தேறி வருகிறான் என்று தங்கள் கதையைச் சொல்லி முடித்த பின் அந்தக் கந்தசாமி- குழந்தையின் தந்தை -

''ஐயா.. நீங்க தெய்வமுங்க. என்ற வம்சத்து விளக்கேத் தினீங்க!'' என்று துண்டை எடுத்து வாயில் வைத்துக் கொண்டு அழ, ஷ்யாமின் பெற்றோர் கூடக் கண் கலங்கினார்கள்.

ஷ்யாமும் நெகிழ்ந்து விட்டான்.

''அம்மா.. எல்லாம் கடவுள் கிருபை. நான் என்ன பெருசாச் செஞ்சேன்? இப்படி ஒரு ஆஸ்பத்திரியைக் கட்டி அதுல இலவசமா இத்தனை பேருக்கு வைத்தியம் செய்யறாரே. அவருக்கு நன்றி சொல்லுங்க.''

''அது நிஜம்தானுங்க. இருந்தாலும் எங்க பையனுக்குப் பத்துப் பைசா ஃபீஸ்கூட வாங்க மாட்டேன்னு நீங்க சொல்லிட்டீங்களே ஐயா? அதுக்கு நாங்க ஏழேழு ஜென்மத்துக்கும் கடமைப் பட்டிருக்கோமுங்க ஐயா,'' என்று கணவனும், மனைவியும் இருவருமாகத் தடாலென்று அவன் காலில் விழ, அவன் திகைத்துப் போனான்.

பதறிப் போய் எழுப்பினான்.

''ஐயா.. எங்களாலே முடிஞ்சதுங்க ஐயா.. ஏத்துக்கணும்,'' என்று பழங்கள் ஒரு பையிலே நீட்டினார்கள்.

'ஷ்யாம் வாங்கிக் கொண்டான். பிறகு பையனிடம் ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசினான். துடியாகப் பேசுகிற பையனைப் பாராட்டினான்.

மறுபடியும் அவன் பெற்றோரிடமும் அவனிடமும் பையன் ஆசிர்வாதம் வாங்கிக் கொண்டான். கார்த்திகாயினியின் காபி உபசரிப்புக்குப் பின் அவர்கள் கிளம்பினார்கள்.

அந்தக் கணத்தில் ஷ்யாம் தன் வாழ்க்கையின் முதன்மையான லட்சியம் என்ன என்பதைப் புரிந்து கொண்டான்.

"போதும். இப்படி எத்தனையோ உயிர்களின் வாழ் நாட்களைப் புதுப்பித்துக் கொடுக்கிற வரத்தை நேக்குக் கடவுள் கொடுத்திருக்காருப்பா. நேக்கு வாழ்க்கையோட அர்த்தம் புரிஞ்சுடுதுப்பா. இதுக்கு இடைஞ்சலா எது வந்தாலும் - அது கல்யாணமாகவே இருந்தாலும், அதைத் தள்ளி வச்சுர வேண்டியதுதான்," என்று அன்றிரவு தன்னிடம் சொல்லி விட்டுப் போகிற மகனின் முதுகைத் தந்தையின் பார்வை வருடியது. அதில் பெருமிதமும் கவலையும் ஒரு சேர இருந்தது. ஆனால் அத்தனைக்கும் சேர்த்துக் கார்த்திகாயினியின் முகத்தில் கவலை தெரிந்தது.

"என்னன்னா இப்படிச் சொல்லிண்டு போனான்," என்றாள் இறங்கிய குரலில்.

அப்பா திரும்பிப் பார்த்தார். லேசான ஒரு புன்னகையை வெளியிட்டார்.

"கார்த்திகாயினி, சங்கரிக்குக் கல்யாணம் ஆகிறவரை இப்படி நாலஞ்சு பேரை யோசிக்காமப் பெத்துட்டோமோ, பாலுக்கும் மோருக்கும் நல்ல சாப்பாட்டுக்குமே வழியிருக்குமோ தெரியலை பேன்னு கவலைப்பட்டயே, அன்னைக்கு நினைச்சமோ இந்தக் குழந்தை இப்படி ஒரு மெச்சற சர்ஜனா வருவான்னு. கடவுளோட கணக்கு என்னன்னு யாருக்குத் தெரியும். எல்லாருக்கும் அப்பார் பட்ட சக்தி. அது எதை நினைக்கிறதோ அது நடக்கும்!" என்றார்.



கார்த்திகாயினி ஒரு நீண்ட பெருமூச்சுடன் நகர்ந்தாள்.

* * *

அன்றைக்கு உணவு இடைவேளை.

"அண்ணா, ஆனந்தி உங்களை ரொம்ப விசாரிச்சாப்ல," என்றான் ஷாநவாஸ்.

"அப்படியா?" என்றான் ஷ்யாம் புன்னகையுடன்.

"என்ன உங்க ஷ்யாம் ரொம்ப ஓவர் பிஸியா - ஃபோன்ல கிடைக்கவே மாட்டேங்கறார்ன்னு வேற கேட்டாங்க," என்றான்.

"ஆமாப்பா. இங்கே நீயே பார்க்கறயில்லே. நேரம் உண்மையாவே கிடைக்கத்தான் மாட்டேங்கிறது," என்றான் ஷ்யாம்.

"உண்மைதான். ஆனா, நம்ம சொந்த வாழ்க்கைக்கும் கொஞ்சம் நேரம் ஒதுக்கணும் அண்ணா!" என்று ஒரு குறுகுறுப் பார்வையுடனும் குறுஞ்சிரிப்புடனும் சொல்லி விட்டு ஷாநவாஸ் போவதை ஒரு வித வியப்புடன் பார்த்து விட்டு அமைதியாகச் சற்று நேரம் அமர்ந்து விட்டான் ஷ்யாம்.

வழக்கமில்லாத வழக்கமாக அம்மாவிடம் இருந்து ஃபோன்.

"என்னம்மா?" என்றான் பதட்டமாக.

"சங்கரி வந்திருக்காடா. இன்னைக்கும் சீக்கிரமே வரப்பாரு," என்றாள் அம்மா.

"சரிம்மா...!" என்றான். பிறகு, "என்ன விசேஷம்?" என்றான்.

"ஜெயாவைப் பாக்கணும்னு வந்தாளாம். இன்னைக்கு வாசுவும் வர்றா போலிருக்கு. நமக்கு ஜெயாவைப் போய்ப் பார்க்கணும்னு தோணல்லே... பாரு, ரெண்டும் பேசி வச்சுட்டு வந்திருக்குதுகள்," என்றாள் அம்மா ஒரு வகையான சிரிப்புடன். அவனும் கூடச் சேர்ந்து சிரித்தான்.

''ஆமா.. ஜெயாக்காவைப் போய்ப் பார்க்கணும்,'' என்று அவனும் சொல்லிக் கொண்டான்.

ஃபோனை ஆஃப் செய்தான்.

* * *

ஜெயா மிகவும் களைத்தாற் போல் படுத்துக் கிடந்தாள்.

தொடர்ந்து வாந்திபெடுத்துக் கொண்டிருந்ததாலோ என்னவோ, அதிகக் களைப்பு.

மாமியார் நன்றாகக் கவனித்தார். கணவனும் நன்றாகத்தான் தாங்கி வைத்துக் கொண்டான் என்ற போதும் தொடர்ந்து வாந்திக்கு என்ன செய்வதென்று அவளுக்குத் தெரியவில்லை. அதிகமாக மருந்தும் வேண்டாம் என்றார்கள்.

ஒன்றுமே வாய்க்குப் பிடிக்கவில்லை.

நரேந்திரன் விடுமுறை எடுத்துக் கொண்டு வீட்டில் இருந்தான்.

''என்னடா? என்ன பண்றது?'' என்றான் வாஞ்சையாய்.

''உங்க பையனோ, பொண்ணோ வர்றதுக்கு முன்னாலேயே இந்தப் பாடு படுத்தறா...'' என்று அவள் மென்மையாகச் சிரிக்கவும் வாஞ்சையாய்ப் புன்னகைத்தான். தொடர்ந்து இப்படி வாமிட் செய்தா குழந்தைக்குத் தலை முடி நிறைய இருக்குமாம் என்று விளக்கம் வேறு சொல்கிற மனைவியை அவன் அள்ளி மார்பில் சாய்த்துக் கொண்டான்.

நரேந்திரனுக்கும் உள்ளூர ஒரு பயம் இருந்தது. பெண்களுக்கு இருபத்தைந்து வயதுக்குள் குழந்தை பிறந்தால் நல்லது. இல்லாவிட்டால் இடுப்பெலும்புகள் பலப்பட்டு விடும். பிறகு பிரசவம் என்றால் கடினம் என்று யாரோ சொன்ன ஞாபகம். அம்மாவிடம் பகிர்ந்து கொண்டான். அம்மா சொன்னார்.

''அதென்னமோ நிஜம்தான். அதுக்காக நாம ஒன்றும் பயந்துக்க வேண்டியதில்லை. நிறையப் பேருக்கு முப்பது வயசிலே



கூட நல்லபடியா பிரசவம் ஆகறது உண்டு. நன்னா உழைப்பாளிகளா எப்பவும் வேலை செய்யறவாளுக்குப் பெரிசா பாதிப்பு இருக்காது. நம்ம ஜெயா எப்பவும் ஏதாவது செஞ்சுண்டுதானே இருக்கா,'' என்றார்.

பிறகுதான் மனம் தேறினான். எனினும் மனைவியின் அவஸ்தையைப் பார்த்து அவனுக்கு மனசு உருகிப் போனது.

''ஜெயா, நீ படற கஷ்டத்தைப் பார்த்தா குழந்தையே வேண்டாமோன்னு...'' என்று அவன் சொல்லி முடிப்பதற்குள் அவள் வாயைப் பொத்தினாள்.

''அப்படிச் சொல்லாதீங்கோ... இதெல்லாம் சுகம் தெரியுமோ? இப்ப இந்த வயித்துக்குள்ளே உங்களோட வாரிசு உருவாயிண்டிருக்குங்கறது எவ்வளவு பெரிய அற்புதம் தெரியுமோ! இதுக்காகப் படற அவஸ்தையெல்லாம் சுகம் தெரியுமோ?'' என்றாள், குரலில் அன்பைத் தேக்கியவளாக.

முன்னாலே கலகலப்பாகக் குரல்கள் கேட்கவும் நரேந்திரன் எழுந்து வந்தான்.

கார்த்திகாயினி, சங்கரி, வாசுகி, ஷ்யாம், நந்து என்று எல்லாரும் உட்கார்ந்திருந்தார்கள்.

''ஊ.. பொண்ணே! மசக்கையாக்கும், எழுந்துருச்சு வாடி.. எங்களோட சித்தே உக்காரு. எல்லாம் சரியாயிடும்,'' என்று அவளை ஹாலுக்கு அழைத்து வந்தாள் சங்கரி.

ஜெயாவை சோஃபாவில் அமர வைத்து விட்டு எல்லாரும் வாஞ்சையாய்ப் பார்த்தார்கள்.

''நோக்குப் பிடிச்ச அதிரசம் சுத்து முறுக்கு புளி அடை எல்லாம் செஞ்சு கொண்டு வந்துருக்கேன்,'' என்று சங்கரி ஒரு பாத்திரத்தையே எடுத்து முன்னால் வைக்க, எல்லாரும் சிரித்தார்கள்.

ஜெயா வாசுகியின் தோளில் சாய்ந்து கொண்டிருந்தவள் எழுந்து ஆசையாய் ஒரு புளி அடையை எடுத்து வாயில் வைக்க,

"இருடி பொண்ணே! தேங்காய்ச் சட்னி கொண்டு வர்றேன்," என்று அம்மா அவர்கள் வீட்டு அடுக்களையில் போய் ஒரு கிண்ணம் கொண்டு வந்து ஊற்றிக் கொடுத்தாள்.

"இதப் பாருங்கோ மாமி! நான் ஒருத்தன் வீட்ல இருந்திருக்கேன். என் கண்லயே காட்டலே. இதுக்காகவாவது மசக்கையா இருக்கலாம் போலிருக்கு," என்று கலகலவெனச் சிரித்தபடி நந்தகோபால் அதிரசத்தை எடுத்து வாயில் போட, எல்லாரும் சிரித்தார்கள்.

ஜெயா ஏற்கெனவே அழகு. மசக்கையில் அவள் முகத்தில் ஒரு களைப்புத் தெரிந்தபோது கூட அதைக் காட்டிலும் வெட்கம், ஒரு விதமான பெருமித உணர்வு, ஒரு விதமான ஜொலிப்பு என்று எல்லாமாய்ச் சேர்ந்து பார்க்க வெகு அழகாக இருந்தது.

ஷ்யாம் ஒரு நெகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

"அத்திம்பேர்.. ஆணா.. பொண்ணா - எது வேணும்?" என்று நந்தகோபால் கேலி செய்ய,

"என்னடா.. என்னமோ மசால் தோசை ஆர்டர் செய்ற மாதிரி கேக்கறே. எதுவானாலும் நேக்கு வாரிசுடா. எதுவானாலும் சரி.." என்று நரேந்திரன் பெருமையாய்ச் சொல்ல, அதையும் ஒரு குறுகுறுப் பார்வையுடன் ஷ்யாம் பார்த்துக் கொண்டான்.

சங்கரி அம்மாவிடம், "அம்மா, பிரசவ சமயம் ஃபோன் பண்ணிரு. நான் வந்துடறேன். தனியாய் அலையணுமேன்னு நினைக்காதே..." என்றாள்.

அம்மாவும் 'சரிடி' என்று மகிழ்ச்சியாய்த் தலையாட்டினாள்.

எல்லாரும் இரவு சாப்பிட்டு விட்டுத்தான் போக வேண்டும் என்று மாமியார் வற்புறுத்த,



"அதுக்கென்ன? சாப்பிட்டாப் போச்சு. நீங்க சிரமமில்லாம உட்கார்ந்தபடி எதெது எங்கிருக்குன்னு சொல்லுங்கோ. நாங்களே சமைச்சுடறோம்," என்றபடி சங்கரியும் வாசுகியும் எழுந்தார்கள்.

உணவு சமைத்துச் சாப்பிட்டுக் கலகலப்பாக இருக்கும்போது,

"இப்ப ஆனந்தி இருந்தா நன்னா இருக்குமோ இல்லியோ," என்றாள் வாசுகி.

அப்போது கார்த்திகாயினி, "டீ வாசு, நோக்கு விஷயம் தெரியுமோ? ஆனந்தி நாம நெனச்ச மாதிரி ஒண்ணும் சாதாரண ஃபாமிலி இல்லையாம். பணக்காராளாம்!" என்றாள் ஆச்சரியமாக.

"இருக்கட்டுமே. அதனாலென்ன? அவ நம்மாத்துல ஒருத்தியா நன்னா பழகினா.. நாமளும் அதே மாதிரி இருக்க வேண்டியது தான்," என்று சங்கரி சொல்ல, ஷ்யாமுக்கே கூட ஆச்சரியமாகிப் போனது.

இவர்கள் ஏன் இப்போது அவளை நினைவு படுத்துகிறார்கள் என்று உள்ளூர நொந்து கொண்டான். உடனே பேச்சை மாற்றி,

"ஜெயாக்கா, நோக்கு யூஸ்ஃபுல்லா நான் நெறைய்ய புக்ஸ் கொண்டு வந்திருக்கேன்," என்று காரில் இருந்து நிறையப் புத்தகங்களை அள்ளிக் கொண்டு வந்தான்.

'ப்ரெக்னன்ஸி', 'சைல்ட் கேர்' பேறு காலத்தில் கவனிக்க வேண்டியவை என்று நிறையக் கொடுத்தான்.

சுற்றிலும் பெண்கள் சிரித்தார்கள்.

"தம்பி! டாக்டர்ஸ் எல்லாத்தைக் காட்டிலும் எங்களோட அனுபவ அறிவு நிறையத் தெரிஞ்சு வச்சிருக்கு. தெரியுமோ?" என்று அவர்கள் சிரிக்க,

"இத பார்றா நந்து. கோயம்புத்தூரோட புகழ் பெற்ற சர்ஜனை நாலைஞ்சு பொம்மனாட்டிகள் சேர்ந்துண்டு முட்டாளாக்கறா, பார்த்தியோ!" என்று நரேந்திரன் சிரித்தான்.

காற்றில் மகிழ்ச்சி கலந்தது.

புறப்படுவதற்கு முன் மரியாதைக்காகச் சற்று நேரம் நரேந்திரனின் பெற்றோரிடம் பேசிவிட்டு வந்தான். அப்போது நரேந்திரன் நந்துவிடம்,

"என்னடா நந்து, உன்னோட மெடிக்கல் காலேஜ் பிளான் என்னவாச்சு?" என்று கேட்டுக் கொண்டிருந்தான்.

"அத்திம்பேர், இம்ப்ரூவ்மென்ட்ல நேக்கு வாய்ப்பிருக்கு. ஆனா பிரச்சினை என்னன்னா ஃபார்வர்டா இருக்கறதுனால மறுபடியும் பழைய மாதிரி பிரைவேட் காலேஜ்தான் போல இருக்கு. நேக்கு ஷ்யாம் அண்ணாவைத் தொல்லை செய்ய கஷ்டமா இருக்கு. பாவம்.. அவன்தான் எத்தனையைச் சுமப்பான். அதனால ஐடியாவை விட்டுட்டேன்," என்றான்.

ஷ்யாம் சிந்தனையில் ஆழ்ந்தான்.

வீட்டுக்கு வந்ததற்குப் பிறகு கூட அதே சிந்தனையில் இருந்தான்.

வாசுகி, "அண்ணா ஆனந்திகிட்டே பேசலாமா...?" என்று கேட்டபோது கூட, "நாளைக்குப் பார்க்கலாம்மா!" என்றபடி அறைக்குப் போய் விட்டான்.

## 19

ஸ்டேஷனுக்கே வந்து நின்ற ஷ்யாமள கிருஷ்ணனைப் பார்த்துப் பாஸ்கரனுக்கு ஒரே வியப்பு.

"என்னப்பா விசேஷம்?" என்றார் புன்னகையுடன்.

"சார். நீங்க இல்லாம இந்தப் பத்து நாளும் நல்லாவே இல்லை!" என்று அவருடைய ஃப்ரீப்கேஸை வாங்கிக் கொண்டான்.



அவர் சிரித்தார். அதில் மகிழ்ச்சியும் தெரிந்தது.

"என்னப்பா வேடிக்கை இது? வயசுப் பையன் நீ வயசுப் பொண்ணுங்ககிட்டே சொல்ல வேண்டிய வசனத்தை என்கிட்டே சொல்லிட்டிருக்கே!" என்று கலாட்டா செய்தார்.

அவன் சாமர்த்தியமாக அதற்குப் பதில் சொல்வதை விட்டு விட்டு வேறு பேச்சுக்குத் தாவுவதை ஒரு விசித்திரமான பார்வையுடன் பார்த்து விட்டு அவரும் அவனிடம் பேச ஆரம்பித்தார்.

பதினைந்து நாட்களில் நடந்த அறுவைச் சிகிச்சை விவரங்கள் வியப்பான விஷயங்கள் எல்லாவற்றையும் பேசினார்கள். அவர் அன்றைக்கு ஓய்வெடுத்து விட்டு மறுநாள்தான் மருத்துவ மனைக்கு வருவதாக இருந்தது. எனவே, அவரை வீட்டில் கொண்டு போய் விட்டு விட்டு மாலை வருவதாகச் சொல்லி விடை பெற்றான்.

அப்போதுதான் அந்த விஷயம் அவனுக்கு நினைவு வந்தது. ஏற்கெனவே அவன் பாஸ்கரனிடம் பேசிய விஷயம் அப்படியே கிணற்றுக்குள் போட்ட கல்லாக இருக்கிறது என்ற விஷயம்.

செய்ய வேண்டும். விரைவிலேயே ஏதாவது செய்ய வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

* * *

அன்று மாலை!

மீண்டும் அவரைச் சந்தித்தான்.

அவருடைய மனைவி ஒரு மாதம் கழித்துத்தான் வருவதாக இருந்தது. அதனால் தனியாகத்தான் இருந்தார். அம்மாவிடம் சொல்லி அவருக்குப் பிடித்த டிஃபனை எடுத்துக் கொண்டு போய் அவரிடம் பேசினான்.

போன வாரத்தில் நடந்த சம்பவம் அது.

அவன் அந்த வாரத்தில் நடக்க வேண்டிய அறுவைச் சிகிச்சைக்கான பட்டியலைப் பார்த்துக் கொண்டிருந்தான். இரண்டு நாட்களுக்கு முன்புதான் அதை அவன் பார்த்து ஒரு பிரிண்ட் அவுட் எடுத்து வைத்திருந்தான்.

இப்போது அதில் ஏதோ மாற்றம் இருந்தாற்போல் உணர்ந்தான்.

மீண்டும் சரி பார்த்தான்.

மாற்றம் இருந்தது.

அவன் அவசரமில்லை, அடுத்த மாதத்தில் செய்து கொள்ளலாம் என்று எண்ணியிருந்த ஒரு நோயாளியின் பெயர் முன்னே தள்ளப்பட்டிருந்தது.

அவன் சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்து கொள்வதற்காகச் சந்தரேசனிடம் போனான்.

"சார்! என்கிட்டே முதல்ல வந்த பிரிண்ட்டுக்கும், இதுக்கும் வித்தியாசம் இருக்கே!" என்றான்.

சந்தரேசன் வழக்கமில்லாத வழக்கமாக அவனிடம் அன்பாகப் புன்னகைத்தார்.

"ஆமாப்பா, ஷ்யாம்! ஏழைப்பட்டவங்க, பாவம்! ரொம்பப் பிரஷர். அப்புறம் நம்ம லிஸ்ட்ல இப்போதைக்கு எமர்ஜென்சி கேஸ் எதுவும் இல்லையே! அதனால பிரையாரிட்டி குடுத்திருக்கேன்," என்றார்.

அவன் எதுவும் சொல்லவில்லை. "சரிங்க சார்," என்று மட்டும் சொல்லி விட்டு வந்து விட்டான். ஆனால் அந்த பேஷண்ட் செக் அப்புக்கு வந்தபோது ஜாடை மாடையாக விசாரித்தான். அவர்கள் ஒன்றும் அவ்வளவு வசதிக் குறைவானவர்களாகத் தெரியவில்லை.

அவனுக்குப் புரிந்து விட்டது.

அந்த ஆஸ்பத்திரியில் வசதிக் குறைவானவர்களுக்குச் சலுகைக் கட்டணத்தில் ஆபரேஷன் செய்கிறார்கள். அதில் சந்தரேசன்



போன்றவர்கள் தங்களுக்கு வேண்டியவர்கள் வசதியுள்ளவர்களாக இருந்தாலும் அவர்களை வசதியற்றவர்களாகக் காட்டி உதவி செய்கிறார்கள் என்றுதான் நினைத்தான்.

சென்ற முறை ஃபோன் கால் ஒன்றை அவன் அட்டெண்ட் செய்தபோது கூட அவன் புரிந்து கொண்டது அதுதான். ஆனால் மேலும் பேசியபோது இந்த முறை விஷயம் அதை விட தீரியஸாக இருந்ததை அறிந்து அதிர்ந்து விட்டான்.

அந்த நோயாளியிடம் அவன் சிரித்துக் கொண்டே, "என்ன சார்! உங்களுக்கிருக்கிற வசதிக்கு நீங்க முழுக் கட்டணமே செலுத்தலாமே!" என்றான்.

அந்த நோயாளி யதார்த்தமாக "சார்! நாங்க அதெல்லாம் ஃபீஸ்கிட்டே பேசிட்டமே, உங்களுக்குச் சொல்லலையா?" என்றார்.

அவன் கேள்விக் குறியாய்ப் பார்க்க அவரே தொடர்ந்தார்.

"சார்! இதே ஆபரேஷனுக்கு அந்த ஆஸ்பத்திரியிலே செய்தா இவ்வளவு செலவாகுது என்று ஒரு தொகையைச் சொன்னார். பிறகு அதையே இங்கே செஞ்சா நான் உங்களுக்கு இவ்வளவு முடிச்சுத் தரேன். ஆனா அதுல ஒரு ஷேர் டாக்டர்ஸுக்குக் குடுத்தர்லாம்னு சொன்னாரே!" என்றார்.

அவன் திடுக்கிட்டுப் போனான்.

அவன் பார்வையைப் பார்த்து அவர் பயந்து விட்டார் போலும்.

"சார்! உங்களுக்கு வேணும்னாலும் ஒரு ஷேர் தந்தர்றேன்," என்றார்.

அவன் சட்டென்று தன்னை மீட்டுக் கொண்டான்.

"நோ! நோ! நாங்க அந்த விஷயத்துல எல்லாம் தலையிடறதில்லை. அந்த முடிவெல்லாம் ஃபீஸ்போடதுதான். ஆனா என்கிட்டே ஃப்ராங்க்கா பேசின மாதிரி வேற யார் கிட்டேயும் பேசிடாதீங்கோ..." என்றான்.

"ஏன்?" என்றார் அவர் அப்பாவியாய்.

"இல்லே சார் எதுக்குச் சொல்றேன்னா.. இங்கயும்.. ஃபைப் பிடிக்காதவங்க யாருக்காவது தெரிஞ்சா அவருக்கு ஆபத்து," என்றான்.

"ஓஹோ.. சரி.. சார்," என்றார் அந்த நோயாளி பவ்யமாய், பாரம் இறங்கினாற் போல. அவன் நெஞ்சுக்குள் பாரம் ஏறிக் கொண்டது.

பாஸ்கரனின் முகத்தில் முதலில் ஆர்வம் தென்பட்டது. ஷ்யாம் பேசப் பேச, அவர் அதைக் கேட்கக் கேட்க, அதுவே கவலை படிந்த முகமாக மாறியதைப் பார்த்துக் கொண்டே ஆனால் தான் சொல்ல வேண்டியதை முழுமையாகச் சொல்லி முடித்தான்.

அவர் நீண்டதொரு பெருமூச்சு விட்டார்.

"சரி.. இதுக்கு ஏதாவது செய்ய வேண்டியதுதான். அப்படியே இனியும் விட முடியாது," என்றார்.

"அப்புறம்..." என்று ஷ்யாம் இழுக்கவும் -

"என்னப்பா... சொல்லு!" என்றார்.

"சார்.. உங்களோட பழகினதுக்கப்புறம் எதுவானாலும் உங்ககிட்டே சொல்லணும், உங்க கைடன்ஸ் வாங்கிக்கணும்னு தோணுது," என்றான்.

"அப்பா.. கைடன்ஸ் வாங்கிக்கலாம். ஆனா முடிவு நீதான் எடுக்கணும்," என்றார்.

"டன் ஓகே!" என்றவன் தொடர்ந்தான்.

"சார் நந்துவுக்கு மெடிக்கல் சீட் கிடைக்கிறதுல மறுபடியும் சிக்கல். நல்ல பர்சன்டேஜ் இருக்கு. ஆனா, மறுபடியும் அதே மயிரிழை வித்தியாசத்துல பிரைவேட் காலேஜ்லதான் கிடைக்கும் போல. அதுக்கு வேற பணம் அரேஞ்ச் பண்ணணும்," என்றான் கவலையுடன்.



"ஒரு ரெண்டு நாள் டைம் குடு. நான் ஏதாவது செய்ய முடியுமான்னு பார்க்கறேன்," என்றார்.

"நீங்க இப்படிச் சொன்னதே போதும், ரொம்பத் தெம்பாயிருக்கு," என்றான்.

சற்று நேரம் வேறு விஷயங்கள் பேசியபின், அவன் சற்றும் எதிர்பாராத ஒரு தருணத்தில் பாஸ்கரன்,

"அப்புறம்... ஸ்டேட்ஸ்ல ஆனந்தியைப் பார்த்தியே... என்ன சொன்னா?" என்று விசாரிக்கவும், அவன் முகம் கூம்பியது.

"சார்! ஆனந்தி நம்மளையெல்லாம் முட்டாளாக்கிட்டா, தெரியுமோ?" என்றான்.

"ஏன் அப்படிச் சொல்றே?"

"சார்.. அவ ரொம்ப வசதியான பொண்ணு. நாம நினைச்ச மாதிரி நடுத்தரக் குடும்பமெல்லாம் இல்லை. ரிச். வெரி ரிச். சிம்ப்ளி வெரி ரிச்!" என்றான்.

"ஓ!" என்றார் பாஸ்கரன் வியப்பாக. பிறகு அவனிடம் கேள்விகள் கேட்டு விஷயம் வாங்கிக் கொண்டார். கடைசியில் அவர் பார்வை அவன் முகத்தில் கூர்மையாக நிலைத்தது.

"ஏம்ப்பா! நீங்க ரெண்டு பேரும் க்ளோஸ் ஃப்ரெண்ட்ஸ்ன்னு பேசிக்கறாங்களே," என்றார்.

"ஆமா சார். இப்ப வரைக்கும்..." என்றான்.

"அதுக்கும் மேல போறதுக்கு எதுவும் வாய்ப்பிருக்கா?" என்றார்.

ஒரு நிமிடம் அவன் பலத்த மௌனம் சாதித்தான். பிறகு மெல்லிய குரலில், "ஆனந்தி எப்பவும் எனக்கு ஃப்ரெண்ட்தான் சார்.. ஆனா இப்ப அதுக்கு மேலே யோசிக்கிற தைரியம் தேக்குப் போயிருக்க சார்," என்றான்.

"ம்!" என்று உள் வாங்கிக் கொண்டார். பிறகு அவரே,

"சரி.. விடு... அவ திரும்பி வரட்டும். மேற்கொண்டு அதைப் பத்தி யோசிக்கலாம்," என்றார்.

"தாங்க்ஸ் சார்," என்றான்.

"சரி.. நீ இப்ப என்னோட வா. ஒரு இடத்துக்குப் போகலாம்," என்றார். அவனும் சற்றும் தயங்காது அவருடன் போனான்.

* * *

பரணீதரன் முகவாய்க் கட்டையை அழுந்தத் தேய்த்துக் கொண்டார். பாஸ்கரன் மீண்டும் ஒரு முறை வலியுறுத்துவது போல் சொன்னார்.

"பரணி, இது ரொம்ப சீரியஸான விஷயம்.." என்று.

"ஆமாம்!" என்று ஆழ்ந்த குரலில் பரணீதரனும் ஒத்துக் கொண்டார்.

"அது மட்டுமில்ல! வேற ஒரு இடத்துல இருந்தும் இதே மாதிரி ஒரு புகார் மேலிடத்துக்குப் போயிருக்கு. நானும் இப்பதான் விசாரிக்க ஆரம்பிச்சிருக்கேன். எது எப்படின்னாலும் நிறுவனத் தோட பேர்தான் முக்கியம். அது பாதிக்குதுன்னா கண்டிப்பா மேலிடத்துல ஆக்ஷன் எடுப்பாங்க," என்றார்.

பாஸ்கரன் வந்து யோசனையில் ஆழ்ந்தார். "ஆக்ஷன் எடுக்கறதுங்கற அளவுக்குப் போகவேண்ணாலும் கூட இனிமே நடக்காம பார்த்துக்கிட்டால் கூடப் போதும்," என்றார்.

பரணீதரன் மென்மையாகப் புன்னகைத்தார். "பாஸ்கி, உன்னோட நல்ல மனசுக்கு நீ அப்படித்தான் சொல்வே!" என்றார்.

பாஸ்கரன், பரணீதரன், தங்கதுரை இவர்களிடையே ஓரிரண்டு வயது வித்தியாசம் இருந்தால் கூட அவர்கள் இடையே ஒரு உன்னார்ந்த நட்பு இருந்ததை அவன் அறிவான். பரணீதரனே தொடர்ந்து.

"சரி.. பார்க்கலாம்," என்றார்.



பாஸ்கரன் அந்த விஷயம் முடிந்தது என்பது போல் வேறு விஷயத்துக்குத் தாவினார்.

"அப்புறம் பரணி, இந்தப் பயல் இருக்கானே, வர வர நமக்கு ஒரு தத்துக் குழந்தை மாதிரி ஆயிட்டான்," என்று தன் வலக் கையால் ஷ்யாமின் தோளை இறுக்கிக் கொடுத்து விட்டுக் கலகலவெனச் சிரித்தார் பாஸ்கரன்.

"இவன் ஒரு ஐடியா குடுத்திருக்கான் தெரியுமோ?" என்றார்.

ஷ்யாம் வியப்பாகப் பார்த்தான்.

"நாம குறைந்தது ரெண்டு மாசத்துக்கு ஒரு தடவையாவது வில்லேஜ் பக்கத்துல ஒரு மெடிகல் காம்ப் போடணும்ங்கறான். ஆமா.. இஃப் மொகம்மட் டஸ் நாட் கம் டு மௌன்டன், மௌன்டன் கோஸ் டு மொகம்மட்!" என்றார்.

இருவரும் சிரித்தார்கள்.

"எத்தனையோ பேருக்கு இதய நோய் இருக்குங்கற ஐடியாவே இருக்கறதில்லை. நெஞ்சு வலிக்குதா, ஏதோ கேஸ் ப்ராப்ளமா யிருக்கும்னு பூண்டுக் குழம்பு சாப்பிட்டேங்கறார், ஒருத்தர்," என்றான் ஷ்யாம்.

மற்ற இருவரும் சிரித்தார்கள். "நல்ல வேளையா வந்ததாலே ட்ரீட்மென்ட் குடுக்க முடிஞ்சது," என்றான் ஷ்யாமும் சிரித்தபடி.

"பாஸ்கி.. இந்த ஷ்யாம் இந்த ஹாஸ்பிட்டலுக்கு ஜூனியர் பாஸ்கரன். போ..." என்றார் பரணீதரன்.

"பின்னே? நானே எம்.சி.எச். முடிக்கறச்சே, நாப்பது வயசு. இந்தப் பய முப்பது வயசலயே முடிச்சிட்டு வந்து நின்னவ னாச்சே!" என்றார் பாஸ்கரன்.

ஷ்யாம் ஒரு விதமான மலைப்புடன் அவர்கள் தன்னைப் பாராட்டுவதைப் பார்த்தான்.

"சார், நீங்க ரெண்டு பேரும் பெருந்தன்மையானவங்க, சார்!" என்றான்.

"உண்மையைத்தானே சொல்றோம்!" என்ற பரணீதரன், "பாஸ்டி இட்ஸ் எ குட் ஐடியா. நான் நிர்வாகத்துகிட்டே பேசறேன். அவங்க கண்டிப்பா இதை லைக் பண்ணுவாங்க," என்றார்.

மேலும் சற்று நேரம் பாஸ்கரனும், பரணீ தரனும் பேசிக் கொண்டிருக்க விட்டு விட்டு, அவன் அமைதியாக அமர்ந்திருந்தான்.

திரும்பவும் அவரை வீட்டில் டிராப் செய்யப் போனவனை உள்ளே அழைத்தார். அவரே தேநீர் தயாரித்துக் கொண்டு வந்தார்.

ஷ்யாம் ஏதோ சொல்ல விரும்புபவன் போல், அவர் முகத்தைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

"என்னப்பா.. கம் அவுட்!" என்றார்.

அவன் ஒரு மரியாதை கலந்த பார்வையுடன்,

"யு ஆர் சிம்ப்ளி கிரேட் சார். நான் எப்பவோ சொன்ன ஐடியாவை மனசுல வச்சுண்டு டைம் பார்த்து அதை எடுத்துச் சொல்லி..." என்றான்.

"இதிலென்னப்பா இருக்கு? உன்னோட ஐடியா நல்லா இருந்தது. இன்னும் கூட எனக்கு எவ்வளவோ ஆசைகள். ஒரு மொபைல் ஆபரேஷன் தியேட்டரே வந்தா எவ்வளவு நல்லா இருக்கும்!" என்றார்.

"சார்! நீங்க என்னை மாதிரியே கனவு நிறையக் காணறீங்க!" என்றான்.

"நல்ல கனவுகள்தான்ப்பா லட்சியமா மாறது. தப்பில்லையே?" என்றார்.

அப்புறம் கண்களில் குறும்பு மின்ன.. "இந்த லட்சியமெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். இன்னொரு பக்கம் ஆனந்தியைப் பத்தித் தெளிவா ஒரு முடிவுக்கு வா," என்றார்.

அவன் ஒரு வினாடி அவரை நேராகப் பார்த்தான். பின்னர்,

"நான் தெளிவாத்தான் இருக்கேன் சார். ஐ நோ தட் ஐ லைக் ஹர். ஆனா..." என்று அமெரிக்காவில் அவர்கள் அந்தஸ்து



பற்றியெல்லாம் விரிவாகச் சொன்னான். பிறகு தனது மைத்துனன் கீர்த்திவாசன் மூலமாகத் தனக்கு அமெரிக்காவில் வந்து செட்டிலாகிற ஐடியா ஏதாவது இருக்கிறதா என்று விசாரித்ததையும் சொன்னான். பிறகு,

"சார்! அமெரிக்காவுக்கென்ன, எத்தனையோ டாக்டர்ளை விலை குடுத்து வாங்கற அளவுக்குச் சக்தியுள்ள நாடு. ஆனா, இந்தியா நம்மளைப் போல் இருக்கறவங்களைத்தான் நம்பியிருக்கு..!" என்றான்.

பாஸ்கரன் அவனைக் கூர்மையாகப் பார்த்தபடி கேட்டார்.

"ஷ்யாம்.. நீ என்ன சொல்ல வர்றே! இப்ப என் சன் கூடத்தான் அமெரிக்காவுல இருக்கான். திறமைக்கு அந்த மாதிரி நாடுகள்ல தானே மதிப்பிருக்கு. பணமும் அங்கதானேப்பா பண்ண முடியுது." என்றார்.

"தட்ஸ் தி பாயிண்ட் சார்! அமெரிக்காவுக்கோ வேற எந்த நாட்டுக்கோ போறவங்களை நான் தப்புச் சொல்ல மாட்டேன். திறமைக்கு மதிப்புக் கிடைக்கிற இடத்தைப் பயன்படுத்திக்கத்தான் வேணும். ஆனா.. நேக்கு திறமைக்கு மதிப்பு, பணம் சம்பாதிக்கிற வாய்ப்பு ரெண்டுமே இங்கயே கிடைச்சுடுத்தே. அது மட்டுமில்லே, சார். என்னோட குடும்பத்துக்கும்.. இந்த ஜனங்களுக்கும் என்னோட தேவை இருக்குங்கற எண்ணமே எனக்குத் தீவிரமா இருக்கு." என்றான்.

"தட்ஸ் குட்..." என்றார் பாஸ்கரன்.

"அப்ப ஆனந்தி தேவையில்லையோ?" என்றார் தொடர்ந்து.

அவன் ஒரு நிமிடம் மௌனமானான். பிறகு அவர் முகத்தைப் பார்த்தான்.

"சார்! ஆனந்தியும் வேணுந்தான். ஆனா அவ்வளவு வசதியான பொண்ணு பர்மனன்டா இந்தியாவுல வந்து இருப்பாளாங்கறது தெரியலையே சார்!" என்றான்.

"பாக்கலாம். ஷ்யாம்.. அவசரப்படாதே! யோசிக்கலாம்."

## 20

முதல் மருத்துவ முகாமே மிகவும் வெற்றிகரமாக அமைந்தது.

'அம்மிணி! வந்திருக்கறவங்கள்ளாம் பெரிய பெரிய டாக்டருங்க. நம்ம ஊருக்கு வந்ததே பெருசு!'' என்று அந்தக் கிராமத்துப் பெரியவர்கள் விழுந்து விழுந்து உபசரித்தார்கள்.

கிராமத்திலிருந்து கிடைத்த அந்தக் கள்ளமில்லாத அன்பு அவர்கள் மனத்தை நிறைத்தது. நாள் முழுக்க நிறையப் பேரைப் பரிசோதித்ததில் ஒரு மூன்று பேர் அறுவைச் சிகிச்சை தேவைப் படக் கூடியவர்களாய் இருப்பார்கள் என்று தோன்றவே, அவர்களை மருத்துவ மனைக்கு வரச் சொல்லி எழுதிக் கொடுத்தார்கள்.

அன்றிரவு!

ஒரு விதமான மனநிறைவில் இருந்தான் ஷ்யாம்.

அப்பாவிடமும் அம்மாவிடமும், சகோதரிகளிடமும் தனது அனுபவங்களையெல்லாம் பகிர்ந்து கொண்டான்.

''வடை, பாயசத்தோட சாப்பாடு. அந்த ஊர்ப் பள்ளிக் கூடத்துக் குழந்தைங்க வந்து வாலண்டியர்ஸா வேலை செஞ்சது...'' என்று எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்டான்.

ஜெயலட்சுமி எல்லாவற்றையும் ஆர்வமாகக் கேட்டுக் கொண்டாள். அந்தச் சமயத்தில் வாசுவும் இங்கேதான் இருந்தாள். பத்து நாட்களாக இங்கேதான் இருந்தாள்.

அவன் அறைக்குப் போன பின் சற்று நேரம் அன்றைய அனுபவங்களை எண்ணிக் கொண்டான்.

முகாமுக்குப் புறப்படுவதற்கு முன்பே ஷாநவாஸை அமரேந்திரன் கலாட்டா செய்து கொண்டிருந்தான்.

''ஷா நவாஸ்! உனக்காகவே பெரிய பாத்திரத்தை எடுத்துட்டு வரணும்,'' என்றான்.



''எதுக்கு?'' என்றான்.

''இல்லை! இங்கயே நீ வழிகிற வழிச்சலைத் தாங்க முடியறதில்லே. இனிக் கிராமம் கிராமமா போகப் போறோம். அந்தந்த ஊர்ல நீ வழியப் போற விதம் பார்த்து அசடு பூராவும் புடிக்கணும்னா பாத்திரம்தான் வேணும்...'' என்று சொல்ல, எல்லாரும் சிரித்தார்கள்.

''ஐயோ! நீ ரொம்ப சாமியாராக்கும்! போப்பா.. சும்மா,'' என்று அவன் தாக்க, மறுபடியும் கலகலத்தது.

ஷாநவாஸ் தொடர்ந்து, ''ஷ்யாம் அண்ணா! நீங்களே சொல்லுங்க, இந்த இதயங்கறது எவ்வளவு அற்புதமான விஷயம்! இந்த உடம்புக்குள்ளே இருக்கற மெக்கானிஸத்தை விட உயர்ந்த மெக்கானிஸம் வேற இருக்கா என்ன? அப்ப இந்த வாழ்க்கையில கிடைக்கிற அன்பு பாசம் லவ் இதையெல்லாம் அனுபவிச்சா என்ன?'' என்றான்.

''யங்கப்பா சாமி! சூப்பர் தத்துவம்பா!'' என்று ஷாநவாஸ் கலாய்க்க, மறுபடியும் எல்லாரும் சிரித்தார்கள்.

ஷ்யாம் மட்டும் மிகவும் சீரியஸாக முகத்தை வைத்துக் கொண்டு,

''அமரு! அவன் சொல்வது உண்மையிலேயே பெரிய விஷயம்தான்,'' என்றான்.

சற்று நேரம் எல்லாரும் அமைதியாகி விட்டார்கள். ''அண்ணா! ஏன் அண்ணா இப்படி சீரியஸ் பண்ணிட்டீங்க?'' என்றான் அமரேந்திரன். ஷ்யாம் புன்னகையுடன் நகர்ந்து விட்டான். ஆனால், சிறிது நேரம் கழித்து அவன் அந்தப் பக்கம் போனபோது கருணாகரன், அமரேந்திரன், ஷாநவாஸ் மூவரும் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டு நின்றான்.

''எல்லாம் சரி, அமரு. அண்ணன் என்ன ஆனந்தியைப் பத்தி எதுவுமே பேச மாட்டேங்கறாரு. என்னடா அவர்களுக்குள்ளே நடக்குது?'' என்று குசுகுசுவென்று பேசிக் கொள்வதைக் கேட்டான். ஆனால், எதுவுமே தெரியாதவன் போல் நகர்ந்து விட்டான்.

அதெல்லாம் இப்போதைக்கு நினைவுக்கு வர, சிந்தனையில் ஆழ்ந்து விட்டான்.

அதே நேரம் -

"இந்தாப்பா, திரட்டுப் பால் செஞ்சேன்," என்று பரிவுடன் கொடுத்த அம்மாவிடம் மீண்டும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தான்.

"அண்ணா! ஆனந்திகிட்டே பேசினியோ," என்றாள் - வாசுகி - சற்றும் எதிர்பாராத விதமாக.

"இல்லம்மா," என்றான்.

"அண்ணா! ஷ்யாம் ரொம்ப பிஸியோ, கிடைக்கவே மாட்டேங்கறார் என்று எங்காத்துக்காரர் கிட்டே ஆனந்தி ரொம்ப வருத்தப்பட்டாளாம்," என்றாள்.

"இல்லடீ அவா அந்தஸ்து பார்த்து இவனுக்கு ஒரு மாதிரி பயமாப் போயிடுத்து போலருக்கு," என்றார் அம்மா.

"எதுக்கும்மா பயம்? நாமளாப் போயி ஈஷிக்கறமா என்ன? அவாளா வந்து பழகறா. பழகறதுல நமக்கென்ன நஷ்டம்?" என்று விஷயத்தை எளிமையாக்குகிற தங்கையைப் பார்க்க அவனுக்கு வியப்புத்தான்.

அதே நேரம் -

ஃபோன் மணியடிக்க எடுத்த வாசுகி,

"நூறாயுசு போ.. மன்னி! உன்னைப் பத்தித்தான் பேசிண்டிருந்தோம்," என்றாள்.

"ஓ! என்னைப் பத்திக்கூட நினைக்கறேளா.. என்ன?" என்றாள் ஆனந்தி, அந்தப்புறம்.

முதலில் வாசுகி பேசினாள். பிறகு அம்மாவிடம் கொடுத்தாள்.

"ஊ பொண்ணே, இன்னைக்குத் திரட்டுப் பால் செஞ்சேன். உன்னை நினைச்சுண்டேன் தெரியுமோ?" என்றார்.

"இப்பவே இந்தியா வந்துடலாம் போல இருக்கு மாமி!" என்றாள் ஆனந்தி.



மேலும் சற்று நேரம் பேசிய பின், "ஷ்யாம் கிட்டே பேசறியா?" என்று நீட்ட, ஷ்யாம் வேறு வழியின்றி ரிசீவரைக் கையில் வாங்கினான்.

"ரொம்பப் பெரிய ஆளா ஆயிட்டேள். லைன்ல கிடைக்கவே மாட்டேங்கறேள்," என்றாள் மனத்தாங்கலுடன்.

"இல்ல ஆனந்தி.. பாஸ்கரன் சார் பதினைந்து நாள் வெளிநாடு போயிட்டார். எல்லா பர்டனும் என் மேலே விழுந்துடுச்சு. இங்கே ஈஷ்வர் சார் கூட அட்ஜஸ்ட் பண்ணிண்டு காரியம் நடத்திண்டு போறது எவ்வளவு பெரிய கஷ்டம்னு நோக்குத் தெரியாதோ?" என்றான்.

அவள் அதை ஒத்துக் கொண்டாள்.

"காம்ப் எல்லாம் போறேளாம்!" என்றாள் ஆர்வமாக.

"ம்.." என்று அவன் அது பற்றி யெல்லாம் உற்சாகமாக விவரித்தான்.

கலகலப்பாகி விட்டாள்.

பத்து நிமிடங்களுக்கு மேல் பேசி விட்டு, 'ஆனந்தி!' என்றான் சற்றே மென்மையான குரலில்.

"சொல்லுங்கோ..!" என்றாள் உற்சாகமாக.

"உன்கிட்டே ஒரு முக்கியமான விஷயம் பேசணும்," என்றான்.

"ம்..!" என்றாள் குழைந்த குரலில்.

"இல்லே! நம்ம பக்கத்து வீட்டை வாங்கறச்சே எப்ப வேணுன்னாலும் நேக்கே தந்தர்றேன்னு சொன்னியே.. இப்ப நான் வாங்கற ஐடியால இருக்கேன். குடுக்கறியா?" என்றான்.

அவள் எதிர்பார்த்தது ஏதோ ஒன்றாகவும் அவன் கேட்டது வேறு ஏதோ ஒன்றாகவும் இருக்க, அவளுக்குக் கோபம் குப்பென்று தலைக்கேறியது.

"ஹலோ மிஸ்டர் ஷ்யாம். இப்போதைக்கு நான் அந்த வீட்டை விக்கறதாயில்லை. விக்கறச்சே பார்க்கலாம். குட்நைட்!" என்று வைத்தாள்.

வைக்கும்போதே, 'லையர்! ஹிப்பாகிரட்! போய்யா, உனக்கு ஒன்னும் நான் வீட்டை விக்கிறதாயில்லை,' என்று கோபமாகச் சொல்லிக் கொண்டே ஆனால் பொத்தென்று ரிசீவரை வைப்பது இந்தப்புறம் தெளிவாகப் புரிந்தது.

அவன் முகத்தில் புரிந்தும் புரியாததுமாக ஒரு விரக்திப் புன்னகை மலர்ந்து ஒரு வினாடியில் மறைந்தது.

"போய்யா.. உனக்கொன்னும் நான் வீட்டை விக்கறதாயில்லை." என்று கத்தியபடி ரிசீவரை டொக்கென்று வைக்கிற தங்கையைத் திரும்பிப் பார்த்தான் ஆதித்யா.

ஹாலில் சோஃபாவில் அமர்ந்து லேப்டாப்பில் ஏதோ கணக்கு வழக்குகள் பார்த்துக் கொண்டிருந்தவன் தங்கையின் செய்கையால் டிஸ்டர்ப் ஆனவனாக மேலும் கவனித்தான்.

"என்ன பெரிய தப்புப் பண்ணிட்டேன்? நான் பணக்காரின்னு இவருக்குச் சொல்லலையாம். பெரிய பூதத்தைக் கண்ட மாதிரி பிஹேவ் பண்றார். ஹிப்பாகிரட்! வீட்டை விக்கணுமாம். லையர்" என்று மேலும் கடுப்பாகி சோஃபாவின் மேல் பொத்தென்று அமர்ந்தாள்.

கால் மேல் காலைப் போட்டுக் கொண்டு தொடர்ந்து வாய்க்குள் முணுமுணுக்கிற அவளைப் பார்த்து ஆதித்யா லேப்டாப்பில் தான் பார்த்துக் கொண்டிருந்த ஃபைலை க்ளோஸ் செய்து விட்டு வந்தான்.

"என்ன, டாலி?" என்றான்.

சிறு வயதில் ஆனந்தி பார்ப்பதற்கு அழகாக ஒரு பொம்மையைப் போல் இருப்பாள். அவளைச் சீண்டுவதற்காக டால், டாலி என்று அவன் அழைக்க ஆரம்பித்து, அதுவே அவள் செல்லப் பெயராக நிலைத்தது.



பதிலாக அவனை அவள் 'ஆதித்' என்று அழைப்பாள்.

"என்னடா... என்ன விஷயம்?" என்றான்.

அவள் சொன்னாள். அவளுக்கும் ஷ்யாமின் குடும்பத்துக்கும் ஏற்பட்ட நட்புறவு, ஷ்யாமின் நட்பு, இப்போது அவன் விலகுவது போல் தோன்றுவது எல்லாவற்றையும் சொன்னாள்.

அவன் முகவாய்க்கட்டையை நீவிக் கொண்டே எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டான். ஆதித்யா அவன் தந்தைக்கும் தாத்தாவுக்கும் வலது கரமாய் விளங்கினான்.

தாத்தாவின் தொழில்களையும், அப்பாவின் விவசாயம் இரண்டையும் அவன்தான் மேற்பார்வை செய்தான். கெட்டிக்காரன். ஆறடி உயரத்தில் மெக்ஸிகோ நாட்டவர்களின் நிறத்தோடு கூடி, நாளைக்கொரு ஊருக்குப் பறந்து கொண்டிருப்பவன். என்ன வேலையிலிருந்தாலும் கூடத் தங்கையோடு ஏதாவது ஒரு வார இறுதியில் தங்கியிருக்கிற மாதிரிப் பார்த்துக் கொள்வான்.

"ஐ லைக் ஹிம் வெரி மச். ஐ லைக் ஹிஸ் ஃப்ரண்ட்ஷிப். யூ நோ ஆதித். அந்த மாதிரி ஒரு மிடில் கிளாஸ் ஃபாமிலியில பொறந்து தர்ட்டி இயர்ஸ்க்குள்ள எம்.சி.எச். முடிக்கறாரு. ரெண்டு சிஸ்டர்ஸ்க்கும் கல்யாணம் பண்றாரு. என்னா டாலன்டெட் தெரியுமா? இப்பவே பாஸ்கரன் அங்கிள் அப்படிப் புகழ்றார். எனக்கு அவரோட ஃப்ரண்ட்ஷிப் வேணும். பட் ஹி அவாய்ட்ஸ் மி!" என்றாள். சொல்லச் சொல்ல அழுது விட்டாள்.

"ஹேய்! டாலி! டோன்ட் க்ரை!" என்று தோளில் சாய்த்துக் கொண்டான்.

"ஹேய்! என்ன நீ! எப்பவும் பாய் ஃப்ரெண்ட்ஸைப் பத்தி பெருசா பண்ணிக்க மாட்டே? இது என்ன இன்டலெக்சுவல் ரிலேஷனா?" என்றான்.

அவள் குழந்தையைப் போல் வலக்கையால் வலக்கண்ணைத் துடைத்துக் கொண்டபடி,

"ஆமா.. யு வோன்ட் அன்டர்ஸ்டான்ட். ஐ லைக் ஹிம் வெரி மச்," என்றாள். தேம்பினாள்.

ஆதித்யா குனிந்து அவள் தலையைத் தடவிக் கொடுத்தான்.

"ஹேய்! யு மஸ்ட் அன்டர்ஸ்டான்ட் ஒன் திங். அவரும் உன்னோட ஃப்ரன்ட்ஷிப்பை லைக் பண்றாரு. ஆனா உன்னைப் பத்தி பயப்படறாரு. நீ அவரை டிஸ்டர்ப் பண்றே. புரியுதா?" என்றான் மெல்லிய குரலில்.

அவள் முகம் மலர்ந்தது.

"யு மீன் தட் அப்படியா சொல்றே!" என்றாள்.

"யெஸ். டாலி! வெறும் ஃப்ரன்ட்ஷிப்னா உன் ஸ்டேட்டஸ் பத்திக் கவலைப்படாம கன்டினியூ பண்ணியிருப்பாரு. பட், அதுக்கு மேலே ஏதுவோ இருக்கு. அதனால பயம். யு அன்டர்ஸ்டான்ட்?" என்றான்.

அவள் ஒரு நிமிடம் மௌனம் சாதித்தாள். பிறகு, "ஹேய்..." என்று குதித்தாள்.

ஆதித்யா சிரித்தான்.

"அப்ப நான் இனி என்ன செய்யட்டும்?" என்றாள் அப்பாவியாய்.

"எவ்வளவு முடியுமோ அவ்வளவு டிஸ்டர்ப் பண்ணு. அதுக்கு மேலே நான் பாத்துக்கறேன்," என்றான்.

"ஆதித்!" என்றாள். கவலையாக அவன் முகம் பார்த்தாள்.

"இன்னும்... இன்னும் அந்த விஷயம் தெரியாது..." என்று ஏதோ சொன்னாள்.

"போக்கரா..! அது தெரியறப்ப இன்னும் கொஞ்சம் ஷாக்கா இருக்கும் விடு.. விடு.. ஷ்யாம் இன்டியன். அதனாலதான் பயம்." என்றான்.



"இல்லே ஆதித்! அதுதான் ஷ்யாம்கிட்டே எனக்கு ரொம்பப் பிடிச்சது. பணக்காரங்கன்னு தெரிஞ்சவுடனே பயப்படறார் பார்த்தியா. அந்த சுய மரியாதை. ஐ லைக் இட்!" என்றாள்.

அந்தக் கணத்தில் அவள் முகத்தில் மின்னிய உணர்வுகளை ஆழ்ந்து பார்த்த ஆதித்யா, "சரி சரி!" என்று சிரித்தான். பிறகு தன்னிரு கைகளிலும் அவள் முகத்தை ஏந்தி, "இத பாரு டாலி! இந்த விஷயமெல்லாம் கிளியர் ஆகணும்னா நீ ஒரு எம்.டி., ஷி இஸ் எ சர்ஜன்ங்கறது எல்லாத்தையும் மறந்துரணும்," என்றான்.

அவள் புன்னகைத்தாள்.

"தாங்க்ஸ் அண்ணா!" என்றாள். அதை அன்றைக்கே செயல்படுத்த முடிவு செய்தாள்.

அன்றிரவே மறுபடியும் செல்ஃபோனில் அழைத்தாள். வம்பிழுத்தாள்.

"ஹலோ! எதுக்கு இப்ப வீட்டைக் கேக்கறேள்?"

"இல்லே ஆனந்தி! நீ ஒரு ஹெல்ப்பா செஞ்சே அதான்.." என்று இழுத்தான் ஷ்யாம்.

"நான் ஒண்ணும் ஹெல்ப்பா செய்யலே. எனக்கு அந்த வீடு வேணும்னுதான் வாங்கினேன்," என்றாள் வம்படியாக.

"ஹேய்! ஆனந்தி, ப்ளீஸ் அன்டர்ஸ்டான்ட். நான் வீட்டைக் கொஞ்சம் மாடர்னைஸ் பண்ணலாம்னு..." என்று தயங்கினான்.

"நம்மாத்துக்கு அந்தப்புறம் இருக்கற வீடு விலைக்கு வருதாம். வாங்கி மாடர்னைஸ் செய்ங்கோ. இதை நான் குடுக்கறதாயில்லை," என்றாள்.

"ஆனந்தி!" என்றான் கெஞ்சுதலாக.

"என்ன.. என்ன.. ஆனந்தி! இப்பவே ஓடி ஒளியறேள். நன்னா ஏமாத்தறேள்," என்றாள்.

"ஹேய்! நான் யாரை ஏமாத்தினேன்?"

"உங்களை.. உங்களை ஏமாத்திக்கறேள். மத்தவாளையும் ஏமாத்தப் பாக்கறேள்!" என்றாள் காட்டமாக.

''ஹேய்! புரியற மாதிரிப் பேசு.''

''என்னத்தைப் புரியற மாதிரிப் பேசறது? புரியாதவாளுக்குப் புரிய வைக்கலாம். புரியாத மாதிரி நடிக்கறவாளுக்கு எப்படிப் புரிய வைக்கிறது. ஹிப்பாகிரட்!'' என்றாள்.

''ஆனந்தி'' என்றான் முணுமுணுப்பாக - திகைத்துப் போனவனாய்.

''வெவ்வெவ்வே!'' என்று அழகு காட்டி விட்டு அவள் ஃபோனை வைக்கவும் ஷ்யாம் திகைத்துப் போனான்.

அந்தப் பக்கம் ஆதித்யா குலுங்கிச் சிரித்து விட்டு, ''தட்ஸ் குட் அப்படிப் போடு!'' என்றான்.

ஷ்யாமிற்கு ஆனந்தியின் நடத்தை புதிராக இருந்தது. புரிந்த மாதிரியும் இருந்தது. புரியாத மாதிரியும் இருந்தது. ஆனால் அவள் அந்த வாங்கு வாங்குகிறாள். ஹிப்பாகிரட் என்று வார்த்தைக்கு வார்த்தை திட்டுகிறாள். தனக்கு ஏன் அது பிடிக்கிறது என்று கவலையானான்.

தன் பர்ஸைத் திறந்து அவள் ஃபோட்டோவை ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த மற்றொரு ஃபோட்டோவை எடுத்துத் தலையணைக்கடியில் வைத்துக் கொண்டான்.

தன்னுடைய நடத்தை வில்லியாய் இருப்பதாய் அவனுக்கே தோன்றியது. 'ஆனால் அவள் மட்டும் என்ன? வெவ்வெவ்வே' என்று அழகு காட்டுகிறாள் என்று நினைக்க. சிரிப்பு பொங்கிக் கொண்டு வந்தது.

சிரித்துக் கொண்டே கண்ணயர்ந்தான்.

## 21

அதிகாலை!

ஆறு மணி!

ஃபோன் மணி அடிக்கவும் எடுத்தான்.



ஒருவேளை ஆனந்தியாயிருக்குமோ என்று நினைத்துக் கொண்டே எடுத்தான். ஆனால் அந்தப்புறம் பாஸ்கரனின் குரல் கேட்கவும் உடனே சுறுசுறுப்பானான்.

''சார்! இந்த நேரத்துல!'' என்றான் ஆச்சரியமாய்.

அவர் அதைக் கண்டு கொள்ளாதவராய், ''இன்னும் ஹாஃப் அன் அவர்ல கிளம்பி இங்க வர்றே! நாம ஒரு இடத்துக்குப் போறோம். உன் தம்பி விஷயமாய்!'' என்றார்.

''சரிங்க சார்!'' என்று பரபரப்பானான். குளிப்பதற்கு பாத்ரூமிற்கு ஓடினான். அதே நேரம் -

கீழே அம்மா வாசுகியிடம், ''ஏன்டி வாசு! ஷ்யாமோட துணிகளையும் எடுத்துட்டு வந்தேன்னா வாஷ் பண்ணிடலாமே,'' என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

''அம்மா! அண்ணா இன்னும் தூங்கிண்டிருப்பானே!'' என்றாள்.

''இல்லடி. நான் நேத்தைய துணிமணிகளைச் சொல்றேன். நேக்கு நீங்கள்ளாம் ஊருக்குப் போனதிலேயிருந்து இந்த நேரத்துல வாஷ் பண்றதுதான் சௌகரியமா இருக்கு. அதான்.. ஷ்யாம் வாஷிங் மெஷின் வாங்கிக் குடுத்துட்டானே! பதினைஞ்சு நிமிடத்துல ஆயிடறது.'' என்றார்.

சரியென்று வாசுகி மாடியேறினாள். இப்போது ஷ்யாம் ஆனந்தியிடமிருந்து வாடகைக்கு எடுத்திருக்கிற அந்த போர்ஷன் மாடியில்தான் இருந்தான்.

அறைக்குள் நுழைந்தவள் அண்ணன் பாத்ருமில் குளிக்கிற சத்தம் கேட்கவும் நின்றாள்.

மேஜையின் மேல் பர்ஸ் திறந்து கிடந்தது. எடுத்து ஒழுங்கு படுத்த நினைத்தவள் எடுத்தாள். கீழே ஆனந்தியின் படம் பார்த்தவள் திகைத்து நின்றாள். பின் முகத்தில் புன்னகை மலர நின்றவள் திரும்பினாள்.

படுக்கையின் மேல் போர்வை மடிக்கப்படாமல் கிடந்தது. எப்போதும் அண்ணன் படுக்கையை விட்டு எழுந்தவுடனே மடித்து வைப்பவன் அவசரமாகக் கிளம்புகிறான் போலும் என்று எண்ணியபடி மடித்தாள். தலையணையின் மேல் வைத்தாள்.

தலையணை நகர அதற்குக் கீழேயும் ஆனந்தியின் படம். எடுத்துப் பார்த்தாள். பின் பார்க்காதவள் போல் வைத்தாள்.

"அண்ணா! உன் துணியெல்லாம் வாஷ் பண்ண எடுத்துண்டு போறேன்!" என்று குரல் கொடுத்தாள்.

"சரிம்மா!" என்று அவனும் பதில் குரல் கொடுத்தான்.

படியிறங்கி வருகையில் அவள் மனதில் பல்வேறு விதமான எண்ணங்கள் ஓடின.

அண்ணனுக்கு ஆனந்தியைப் பிடித்திருக்கிறது என்பது நன்றாகவே புரிந்தது. ஆனால், ஏன் மறைக்கிறான்? ஏதோ காரணம் இருக்கிறது. அம்மாவிடம் சொல்லலாமா என்று நினைத்தாள். பிறகு

சே.. இது அண்ணனின் அந்தரங்கம். அவராக எதுவும் சொல்லாதவரை நாமாக எதையும் காட்டிக் கொள்ளக் கூடாது என்று முடிவு செய்து கொண்டாள்.

அதற்குள் குளித்து விட்டு வந்த ஷ்யாம் நடந்தது எதுவும் தெரியாமல் ஃபோட்டோக்களைப் பத்திரப்படுத்தினான்.

அவசரமாகக் கீழிறங்கி அம்மாவிடம், "அம்மா.. நம்ம நந்து மெடிக்கல் சீட் விஷயம் பாஸ்கரன் சார் கிட்டே பேசியிருந்தேன். அவர் ஏதோ ஒரு இடத்துக்கு இது விஷயமாகக் கூப்பிட்டார். கிளம்பறேன். டிஃபன் வெளியே சாப்பிட்டுக்கறேன்," என்று பரபரப்பாக ஓடினான்.

வாசுகி அவன் போவதைப் பார்த்தபடி நின்றாள். பிறகு அம்மாவிடம் திரும்பி,



"அம்மா! அண்ணா எல்லாத்தையும் பத்திக் கவலைப்படறான். அவனைப் பத்தி நாம கவலைப்பட வேண்டாமோ?" என்றாள்.

அம்மா திரும்பிப் பார்த்தாள்.

"என்னடி பண்ணச் சொல்றே! பிடி குடுத்தே பேச மாட்டேங்கறான். இந்த ஆனந்தி பொண்ணுகிட்டே பழகறதைப் பாத்து நானும் என்னென்னவோ கோட்டை கட்டிண்டிருந்தேன். கடைசில அவா ரொம்பப் பணக்காராள்னு தெரிந்ததிலே இருந்து வாயை இறுக மூடிண்டுட்டான். சோஷியல் சர்வீஸ் செய்யறானாம். லைஃபை அப்படியே கழிச்சுடப் போறானாம். நேக்கும் ஒண்ணும் புரியல்லடி. கொஞ்ச நாளாய்க் கலகலன்னு சிரிக்கறதேயில்லை, தெரியுமோ?" என்று பொரிந்தாள்.

வாசுகி சிந்தனையில் ஆழ்ந்தாள்.

* * *

அந்தப் பெரிய பங்களாவின் போர்ட்டிகோவில் கார் நின்றது.

பாஸ்கரனும், ஷ்யாமும் இறங்கினார்கள்.

அந்தப் பெரிய மாளிகையின் உரிமையாளர் போலும் வரவேற்றார்.

ஷ்யாமுக்குப் புரிந்தது.

கோவையின் அந்தத் தனியார் மருத்துவக் கல்லூரியின் நிறுவனர்.

"வாங்க! வாங்க!" என்று பாஸ்கரனை வெகுவாக உபசரித்தார்கள்.

பிறகு, "சொல்லுங்க!" என்றார்.

பாஸ்கரன் திரும்பி ஷ்யாமைப் பார்த்து வாஞ்சையாய்ப் புன்னகைத்தார். பின்னர் அவரை நோக்கி,

"சார், அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி நீங்க எனக்கு ஒரு வாக்குறுதி குடுத்திருக்கீங்க," என்றார் புன்னகையுடன்.

''மறப்பேனா அதை! இன்னைக்கும் அப்பா ஜெயந்தியா நடமாடறான்னா, உங்களாலேதானே. மறப்பேனா!'' என்றார்.

''இவர் ஷ்யாம். கோயம்புத்தூர்ல இப்போ ஃபேமஸாயிட்டு வர்ற சர்ஜன்.''

''ஓ! இவர்தானா அது? கேள்விப்பட்டேன்.''

''இவருடைய தம்பிக்கு உங்க மெடிகல் காலேஜ்ல ஃப்ரீ சீட் ஒண்ணு வேணும்,'' என்றார்.

''ஃப்ரீ சீட் முடிஞ்சுருச்சே,'' என்று யோசித்தார்.

ஷ்யாமின் முகம் வாடிவிட்டது. ஆனால் பாஸ்கரன் முகத்தில் ஏதும் உணர்ச்சியைக் காட்டாமல் அமர்ந்திருந்தார். அவரே தொடர்ந்தார்.

''நீங்க கேட்டு இல்லைன்னு சொல்ல முடியாது. அதுவும் நானே வாக்குறுதி குடுத்திருக்கேன். மானேஜ்மென்ட் கோட்டா சீட் ஒண்ணு ஃப்ரீயாத் தரேன்..'' என்றார்.

''இது.. இதைத்தான் நான் எதிர்பார்த்தேன்!'' என்றார் பாஸ்கரன். சிரித்தார்கள்.

அவர் தொடர்ந்தார். ''தெரியும் பாஸ்கரன் சார். நீங்க யாருகிட்டேயும் எதுக்காகவும் சிபாரிசுக்காகப் போறதில்லேன்னு. ஆனா நீங்களும் எனக்கு ஒரு உதவி செய்யணும்,'' என்றார்.

''சொல்லுங்க,'' என்றார் பாஸ்கரன்.

''நீங்களும் இவரும் நேரம் கிடைக்கறப்ப வருஷத்துக்கு ரெண்டு மூணு தடவையாவது கெஸ்ட் லெக்சர் குடுக்கணும்,'' என்றார்.

''ஓ அது முடியும்!'' என்று மகிழ்வோடு ஒத்துக் கொண்டார்கள். புறப்பட்டார்கள்.

வழியில் பாஸ்கரன் விவரம் சொன்னார். அந்த மருத்துவக் கல்லூரி நிறுவனருடைய தந்தைக்குத் தான் ஐந்தாண்டுகளுக்கு



முன்பு ஒரு சிக்கலான இதய அறுவைச் சிகிச்சை செய்து உயிரைக் காப்பாற்றியதைச் சொன்னார். அப்போது அவர் சொன்னாராம்.

''எப்பவாவது உங்களுக்கு ரொம்ப முக்கியமானவர்கள்னா வாங்க, மெடிக்கல் சீட் தர்றேன்,'' என்று.

அதை இன்றைக்குத்தான் பயன்படுத்திக் கொண்டதாக அவர் சொன்னவுடனே ஷ்யாம் நெகிழ்ந்து விட்டான்.

''ரொம்பத் தாங்க்ஸ் சார். ரொம்பத் தாங்க்ஸ்!'' என்று பலமுறை சொல்லி விட்டான்.

''சார், எங்க வீட்டுக்கு வந்து ஒரு வாய் காப்பி சாப்பிட்டுட்டு..'' என்று வற்புறுத்தி அழைத்தான். அவரும் சரியென்று வந்தார்.

இன்னும் இரண்டு நாட்களில் கவுன்சிலிங் இருந்தது. மறுநாள் நந்துவும், அப்பாவும் சென்னை புறப்படுவதாக ஏற்பாடு. அதற்குள் இந்த நல்ல செய்தி.

வீட்டுக்குச் சென்று இந்த மகிழ்ச்சியான செய்தியைச் சொன்னவுடன் வீடே களை கட்டியது.

பஞ்சாபகேசனும் கார்த்திகாயினியும் மனதார நன்றி சொன் னார்கள். மனங்களும், முகங்களும் நெகிழ்ந்திருந்தன.

ஷ்யாம் கண்ணைக் காட்ட, நந்து பாஸ்கரன் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கிக் கொண்டான்.

''டேய்! நந்து.. சார் இதுவரைக்கும் யாருக்காகவும் சிபாரி சுக்குப் போனவரில்லை. உனக்காக இன்னைக்கு ஒரு வீட்டுப் படியேறியிருக்கார் தெரியுமோ!'' என்றான் நெகிழ்ந்து போய்.

''பொறுப்புள்ள டாக்டரா வந்தா அதுவே போதும்,'' என்றார் பாஸ்கரன்.

''அண்ணா.. பாத்துட்டே இரு. உனக்குப் போட்டி நான்தான்!'' என்று சொல்லிக் கொண்டே தடாலென்று ஷ்யாமின் காலிலும் விழுந்தான்.

ஷ்யாம் தூக்கி விட்டவன் அவன் தலையில் கை வைத்துத் தடவி ஆசீர்வதித்தான். "நேக்குப் போட்டி என்னடா, எனக்கு மேலே நீ வரணும்!" என்றான் தழுதழுக்க.

அந்தப் பாசம் நிறைந்த குடும்பத்துடன் சற்று நேரம் மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டிருந்து விட்டுப் புறப்பட்டார் பாஸ்கரன்.

* * *

அன்றைக் கெல்லாம் ஷ்யாமள கிருஷ்ணன் மற்ற விஷயங் களை யெல்லாம் மறந்து விட்டு மகிழ்ச்சியாக நடமாடிக் கொண்டிருந்தான்.

எல்லாம் பிற்பகல் வரைதான். வழக்கம் போல் கருணாகரன், அவன், ஷாநவாஸ், அமரேந்திரன் எல்லாரும் சாப்பிடுவதற்கு அமர்ந்தார்கள்.

ஷ்யாம் தன் சகோதரனுக்கு மெடிக்கல் சீட் கிடைத்ததைப் பகிர்ந்து கொண்டான். எல்லாரும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

திடீரென்று ஷாநவாஸ், ''அண்ணா, ஓவரா லொள்ளு பண்ணினா ஆளை வைச்சு அடிப்பேன்னு சொல்லுன்னு ஒருத்தர் சொல்றாப்ல,'' என்றான்.

ஷ்யாம் அன்றைக்கு மகிழ்ச்சியான மூடில் இருந்தான். சிரித்துக் கொண்டே

''சொன்னது யாரு?'' என்றான்.

''ஆனந்தி'' என்றான், ஷாநவாஸ். ஷ்யாமுக்குச் சிரிப்பு வந்தது.

''யாரை அடிப்பாளாம்?'' என்றான் சிரிப்புடன்.

''உங்களைத்தான்'' என்றான்.

''வ்வாட்!'' என்று முதலில் திகைத்து விட்டான் ஷ்யாம். பிறகு சிரித்து விட்டான்.



கருணாகரனும் கூடச் சிரித்தான்.

''அண்ணா! வர வர ஆனந்தி லொள்ளு தாங்கலை!'' என்று சிரித்தான் ஷாநவாஸ்.

''ஆமடா, நவாஸ். அடிக்கடி என்னையும்தான் மிரட்டறா!'' என்றான் ஷ்யாம் தன்னை மறந்து.

''எதுக்குண்ணா?'' என்றான் அமரேந்திரன் அப்பாவியாய்.

''எதுக்குன்னா...'' என்று ஆரம்பித்த ஷ்யாம் சட்டென்று தன்னை மீட்டுக் கொண்டான். இயல்பாகச் சொல்பவன் போல், ''நாமெல்லாம் ஃப்ரண்ட்ஸாம். அதனால மிரட்டறாளாம்!'' என்று வேக போலச் சொல்லி விட்டான்.

''புஸ்! என்று காற்றுப் போன பலூன் போல வாயில் சத்தம் செய்து கொண்டு சோகமானான் அமரேந்திரன்.

கருணாகரனும், ஷ்யாமும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பிறகு சிரித்தார்கள்.

ஷாநவாஸ், ''அண்ணா, ஆனந்தி பயங்கரமான ஆளுன்னா.. நீ அதுக்கு மேலே!'' என்றான்.

ஷ்யாம் அதைப் புரிந்து கொள்ளாதவன் போல் நடித்து விட்டு விஷயத்தை அதோடு விட்டு விட்டான். ஆனால், உள்ளே கோபம் கனன்றது.

என்ன இது இவள்... இந்தச் சின்னப் பசங்கள் எல்லாம் கலாட்டா செய்கிற மாதிரி இடம் கொடுக்கிறாள் என்று.

அன்றைக்கு அவனே ஃபோனில் அழைத்தான்.

''ஹேய்! என்ன விளையாடறியா?'' என்றான்.

''என்ன விளையாடினேன்?'' என்றாள்.

''ஷாநவாஸ் கிட்டே என்ன சொன்னே?''

"ஐயய்யோ..! அந்தக் கிறுக்கு அப்படியே உங்கககிட்டே சொல்லிடுச்சா?" என்று கலகலவென்று சிரித்தாள்.

"ஹேய்! எதுவானாலும் என்கிட்டே பேச வேண்டியதுதானே... அவன்கிட்டேயெல்லாம் பேசி, சின்னப் பசங்கல்லாம் கேலி பண்ணிச் சிரிக்கிறாப் போலே பண்றே."

"ஏன், நீங்க என்ன தாத்தாவாக்கும்!" என்றாள். மறுபடியும் சிரித்தாள்.

"ஹேய்! ஆனந்தி.. லிசன் டு மி," என்றான்.

அவள் தொடர்ந்து சிரித்தாள்.

"ஹேய்! சிரிக்காதே," என்றான் கடுப்பாக.

அவள் நிறுத்தவில்லை.

"சிரிப்பை நிறுத்தித் தொலையேன்! ஏன் என்னை இப்படிக் கடுப்படிக்கறே?" என்றான் படு எரிச்சலாக.

அந்தப் பக்கம் சட்டென்று அமைதி நிலவவும்தான், தான் என்ன சொன்னோம் என்பதே அவனுக்குப் புரிந்தது.

பயந்து போனான்.

"எங்கே, இன்னொரு தடவை சொல்லுங்கோ, பார்க்கலாம்," என்றாள், ஆனந்தி - ஒரு மாதிரி இரும்புக் குரலில்.

"ஐ'ம் சாரி ஆனந்தி.. ஐ'ம் சாரி... நான் வாககிட்டே பேசற மாதிரி..." என்று தவித்துப் போனான்.

"பேசிட்டேளாக்கும். லையர் ஹிப்பாகிரட்!" என்று ஆழமான குரலில் சொல்லி விட்டுப் போனை கட் செய்தாள்.

அவன் திரும்ப முயற்சி செய்தான். கிடைக்கவில்லை.

அன்றைக்கு மட்டுமில்லை, அடுத்து வந்த ஒரு வாரத்திற்கும் அவள் லைனில் கிடைக்கவே யில்லை.



## 22

மருத்துவ மனையிலும் ஏதோ மாற்றம் தெரிந்தது.

ஷ்யாமளகிருஷ்ணன் அதையெல்லாம் கவனிக்கிற மன நிலையில்கூட இல்லை. ஆனந்தி லைனில் கிடைத்து ஏழு நாட்களாகி விட்டன என்ற எண்ணமே அவன் மனத்தை அரித்துக் கொண்டிருந்தது.

அவனுக்கு அன்றைக்கு இரண்டு அறுவைச் சிகிச்சைகள். இப்போது அவனும், பாஸ்கரனும் ஆளுக்கொரு டீமை உடன் வைத்துக் கொண்டு அறுவைச் சிகிச்சையின் முக்கியப் பகுதியை மட்டும் தாங்கள் கையாள்கிற மாதிரிப் பார்த்துக் கொண்டார்கள்.

மதுரை, திருச்சி என்று எங்கெங்கோ இருந்து மக்கள் சிகிச்சைக்கு வந்தார்கள். ஷ்யாமுக்கும் அப்படி பிஸியாக இருப்பது ரொம்பத் தேவையாக இருந்தது.

பிற்பகல் மூன்று மணியாகி விட்டது. அறுவைச் சிகிச்சைகள் முடித்துக் களைப்பாகத் தன் அறையில் வந்து அமர்ந்தான்.

பாஸ்கரன் அழைப்பதாக ஆள் வந்தது. போனான்.

'ஷ்யாம். ப்ராப்ளம் சீரியஸா ஆயிடுத்து. பரணி ஈஷ்வர்கிட்டே பேசியிருப்பார் போல. ஈஷ்வர் ரொம்பக் கடுப்பா இருக்கறார். ஜாக்கிரதை. யாருகிட்டயும் எதுவும் வாயைத் திறக்காதே. ஈஷ்வர் இஸ் வெரி கன்னிங். நினைச்சா உன்னோட கேரியரையே ஸ்பாயில் செய்ய முயற்சிப்பான்," என்றார்.

"சரிங்க சார். கேர்ஃபுல்லா இருந்துக்கறேன். நமக்கு எதுவும் தெரியாத மாதிரி இருந்துக்கறேன்."

இதைச் சொல்லும்போதுகூடப் பாஸ்கரன் தன் அறையில் வைத்து இதைப் பேசவில்லை என்பதையும், வெளியில் நடந்து கொண்டே மற்றவர்கள் கேட்காத வண்ணம் சொல்வதையும், அவன் புரிந்து கொண்டான்.

அதே சிந்தனையில் வீட்டுக்குப் போனான். ஜெயலட்சுமியும், நரேந்திரனும் வந்திருந்தார்கள்.

"தேவியாருக்குப் பொறந்தாத்துல நாலு நாள் இருக்கணுமாம்," என்றான் நரேன்.

"பேஷா..!" என்றான் ஷ்யாம்.

தங்கையை ஸ்பெஷலிஸ்ட்டிடம் ஒரு செக் அப்புக்கு அழைத்துப் போனான்.

"ஹலோ! ஷ்யாமே வந்துட்டீங்களா?" என்று அந்தப் புகழ் பெற்ற லேடி டாக்டர் ஷ்யாமுக்குக் கொடுக்கிற மரியாதை பார்த்து நரேந்திரன் அசந்து போனான்.

"ஹேய்.. ஜெயா.. நிஜம்மாவே உங்கண்ணன் ரொம்பக் கெட்டிக்காரர்தான் போல இருக்கு. இந்தம்மா அவ்வளவு சீக்கிரம் யாருகிட்டயும் சகஜமாய்ப் பேச மாட்டா, தெரியுமோ?" என்று ஜெயாவிடம் கிசுகிசுத்தான்.

"மேடம்..! என்னோட பிரியத்துக்குரிய சிஸ்டர். வராம இருக்க முடியுமா?" என்று அவன் சிரிக்க, நரேந்திரனும், ஜெயலட்சுமியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். "ஒண்ணும் பிராப்ளமில்லை. எவ்ரிதிங் இஸ் நார்மல்," என்று அவர்கள் உறுதி சொல்லவும் மகிழ்ச்சியானார்கள்.

வாசுகியும் இந்த முறை வந்தவள் ஏனோ ஊருக்குக் கிளம்பாமல் இருந்தாள்.

"அண்ணா! நான் ஜெயாக்காவையும், அத்திம்பேரையும் எங்க ஊருக்கு அழைச்சுண்டு போறேன். அத்திம்பேர் நாலு நாள் லீவு போடறார். நீ இந்த வீக் எண்டுக்கு எங்க ஊருக்கு வந்தர்றியா?" என்றாள் வாசுகி.

"பாக்கலாம்டி... இங்க ஆஸ்பத்திரியிலயும் என்னமோ ஒரே மூடு மந்திரமா ஏதோ நடந்துண்டிருக்கு. ஒண்ணும் புரியலே. எல்லாம் ஒரு முடிவுக்கு வரட்டுமே" என்றான்.



நரேந்திரன் அதற்குள், "அது சரி.. இதென்ன வாசுகி ஆத்துக்காரரை விட்டுட்டு இங்கே வந்து உட்கார்ந்துண்டுட்டே. மனுஷர் தவிக்கப் போயிருவாரே!" என்றான்.

பேசிக் கொண்டே திரும்பினான்.

"நீ வர்றதுக்குள்ளே நானே வந்துட்டேன்," என்று கீர்த்தி வாசன் நின்று கொண்டிருந்தான்.

எல்லாரும் கலகலப்பானார்கள்.

* * *

கீர்த்திவாசன் தாபத்துடன் மனைவியைப் பார்த்துக் கொண் டிருந்தான்.

"என்ன நீ. நான் ஒருத்தன் இருக்கேன்கறதையே மறந்தாச்சு போலருக்கு. நரேன் அண்ணா பாரு, வாரிசுக்கு வழி பண்ணிட்டுப் பெருமையா நடமாடிண்டிருக்கார். நமக்கு எப்போ அந்தப் பெருமை கிடைக்கறது?" என்றான் கிறக்கமான குரலில்.

வாசுகி கீர்த்திவாசனின் முகத்தை வருத்தத்துடன் பார்த்தாள். அவன் உடனே தீவிர முகபாவத்துக்கு மாறினான்.

"என்ன... வாசு?" என்றான்.

"நாம எல்லாரும் வாரிசு பத்திப் பேசிண்டிருக்கோம். ஆனா ஷ்யாம் அண்ணா கல்யாணமே வேண்டாங்கறானாம்," என்றாள் கவலையுடன்.

"ஓ!" என்றான், கீர்த்திவாசன் - இறங்கிய குரலில்.

பிறகு வாசுகி சகோதரனின் அறையில் தான் கண்டதை, ஆனந்தி வசதியான வீட்டுப் பெண் எனத் தெரிந்ததும் அண்ணன் தயங்குவதை எல்லாம் பகிர்ந்து கொண்டாள். பிறகு,

"அம்மாவும், அப்பாவும் கடவுள்தான்டி பாக்கணுங்கறா. இது எப்படியாறது?" என்றாள்.

"தெய்வம் மனுஷ ரூபனே. 'அதனால, கவலையே படாதே நானும் ஒரு வழியில பிராப்ளம் சால்வ் பண்ண முயற்சி பண்ணிட்டிருக்கேன். நாளைக்கே ஒருத்தர் வர்றார் பாரு," என்றான் கீர்த்தி வாசன்.

"யாராம்?" என்றாள்.

"வருவார் பார். அதுவரைக்கும் சஸ்பென்ஸ்," என்றான் அவன் ஒரே பிடியாய்.

✱ ✱ ✱

தன்னைப் பற்றிக் குடும்பமே கவலையில் மூழ்கியிருப்பது தெரியாமல் ஷ்யாம் வேலையில் ஆழ்ந்திருந்தான்.

நேரம் கிடைக்கும்போது மருத்துவம் தொடர்பான புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்தான். நிறைய விஷயங்களைச் சேகரிக்க ஆரம்பித்தான். ஆனால், அத்தனை வேலைக்கு நடுவிலும் ஒரு இடைவெளி கிடைத்தால் ஆனந்தியின் நினைவு எட்டிப் பார்ப்பதை அவனால் தடுக்கவே முடியவில்லை.

அன்று ஒ.பி. டே.

வெளி நோயாளிகளை ஒரு முறை பரிசோதித்துப் பார்த்து அறுவைச் சிகிச்சை பற்றி முடிவெடுப்பான்.

சனி, ஞாயிறு விடுமுறை கூட வேண்டாமெனத் தோன்றியது.

பாஸ்கரனும் ஒரு விதமான கவலையுடன் அவனைக் கவனித்துக் கொண்டிருப்பதை அவன் அறியவில்லை.

அதற்கேற்றாற் போல் அன்றைக்கு மருத்துவமனையில் ஏதோ பரபரப்பு மிகுந்து இருந்தது.

கருணாகரன்தான் கேட்டான், "டேய், ஷ்யாம்! ஆஸ்பத்திரியே அல்லோலகல்லோலப்பட்டு இருக்கு. நீ என்னடா எதையோ பறி கொடுத்தவன் மாதிரி நடமாடிண்டிருக்கே!" என்றான்.

பிறகுதான், "என்னவாம்?" என்று விசாரித்தான் ஷ்யாம்.



"நல்லா ஆச்சு போ! ஓனர் வர்றாராம். ஆஸ்பத்திரி ஓனர். ஆனா.. அது நம்மளை மாதிரி டாக்டர்ஸுக்கும், அட்மினிஸ்ட்ரேட்டிவ் பீப்பிள்க்கு மட்டும்தான் தெரியுமாம். லோயர் லெவல்ல இருக்கறவங்களுக்குத் தெரியப் போறதில்லையாம்."

"ஓ..!" என்றான்.

"எதுக்காக வர்றாராம்?" என்றான்.

"தெரியலைடா. நாளைக்கு வர்றாராம். ஓனர் யாருன்னு இப்படி மூடு மந்திரமா வைக்க வேண்டிய அவசியம். இனிமேலும் இல்லேன்னு நினைக்கிறாப் போலே இருக்கு." என்றான்.

அடுத்த கணம் ஷ்யாம், "சரி.. விடு.. யார் வந்தா நமக்கு என்ன? நம்ம வேலையை நாம ஒழுங்கா செஞ்சுண்டு போனா யார் நம்மை என்ன செய்யப் போறா?" என்று சொல்லி விட்டு வேலையைப் பார்க்கப் போனான்.

ஆனால் அந்த முக்கியஸ்தரின் வருகை தான் நினைத்தாற் போல் அவ்வளவு எளிமையான விஷயமாக இருக்கப் போவதில்லை என்பது அப்போது அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

✱ ✱ ✱

மாலை ஐந்து மணியிருக்கும்.

அம்மாவிடம் இருந்து ஃபோன்.

"ஷ்யாம், ஜெயா வாக எல்லோரும் இப்ப புறப்படறாளாம். வழியனுப்பறதுக்கு நீ வர்றியா? இப்ப புறப்பட்டா டிராவல் கஷ்டமில்லாம இருக்கும். நைட் பதினோரு மணி வாக்கில் மதுரை போயிடலாங்கறார் வாக மாப்பிளே!" என்றாள்.

"சரி, வரேம்மா!" என்று போனான்.

"பார்த்து கீர்த்தி! ஃபாஸ்ட்டா போகாதீங்கோ. ஜாக்கிரதை!" என்று நாலைந்து முறை சொல்கிற சகோதரனின் அன்பை ஜெயலட்சுமி ரசித்துக் கொண்டாள்.

''ஷ்யாம், ஒன்னும் கவலைப்படாதே! அவரும் டாக்டர் தான்டா'' என்று சிரித்தாள்.

ஷ்யாமின் முகம் சிவந்தது.

வழியனுப்பி விட்டு வந்தான். வீட்டுக்குள் நுழைந்ததும் வீடே வெறிச்சோடிப் போன மாதிரி இருந்தது.

நந்து சொன்னான். ''அண்ணா, வீடே வெறிச்சோடிப் போன மாதிரி இருக்கு. இல்லே!'' என்றான்.

நந்தகோபால் சென்னை போய் விட்டு வந்துவிட்டான். அடுத்த வாரத்தில் கல்லூரி திறக்கிறது என்ற மகிழ்ச்சியில் இருந்தான். அதற்குள் அம்மா,

''ஷ்யாம்..! இவனும் அடுத்த வாரம் காலேஜ் கிளம்பிடுவான். பொழுது எப்படிப் போகுமோ தெரியலே!'' என்றாள்.

''அம்மா, நோக்குத்தான் லக்ஷ்மி, சீதான்னு கோமாதாக்கள் இருக்காளோ இல்லியோ. அவாளைக் கவனி,'' என்றான்.

அந்த நேரம் -

அம்மாவும், அப்பாவும் அவன் இருபுறமும் வந்து அமர்ந் தார்கள். கார்த்திகாயினி மெதுவாக -

''ஷ்யாம், டேய் கண்ணா, நீ இந்தாத்துல மூத்த பையன். நோக்கும் வயசாயிடுத்து. இத்தனை நாள் படிப்பு அச்சீவ் மென்ட்னு ஏதோ சொல்லிண்டிருந்தே. இப்ப ஓரளவுக்கு எல்லாத்திலயும் ஜெயிக்கட்டே. இனியாவது நாங்க நோக்கு ஒரு கல்யாணம் பண்ணிப் பார்க்க வேண்டாமோ?'' என்றார்.

ஷ்யாம் சற்று நேரம் அமைதியாக அமர்ந்திருந்தான்.

''அம்மா..! நீ பெத்த புள்ளைங்க எல்லாருக்கும் கண்ணாரக் கல்யாணம் பண்ணிப் பார்த்துக்கலாம். என்னை மட்டும் விட்டுடு. நான் கல்யாணம் பண்ணிக்கறதாயில்லை,'' என்றான்.

அப்பா அவனைக் கூர்மையாகப் பார்த்தார். பிறகு சொன்னார்.



''பாருப்பா, ஆனந்தி இந்தாத்து மாட்டுப் பொண்ணா வரப் போறான்னுதான் நான் நெனச்சண்டிருந்தேன். ஆனா, திடீர்னு ஸ்டேட்டஸ் கீட்டஸ்னு பேசிண்டு நீ பின் வாங்கறே,'' என்றார்.

அவன் அவரை நிமிர்ந்து பார்த்தான்.

''அப்பா, ஸ்டேட்டஸ் மட்டும் பிராப்ளமில்லே. அவா ஃபேமியிலே ஆனந்தியோட மாப்பிள்ளையை அமெரிக்காவுக்கு வரவழைச்சு அங்கயே செட்டிலாக்கணும்னு நெனக்கறாப்ல தெரியுது. நேக்கு அது ஒத்து வராது,'' என்றான்.

''ஏம்ப்பா, எத்தனையோ பேர் ஃபாரின் போறாளே!''

''போறவா போகட்டும்மா. இப்போ கீர்த்தி கூடப் போகணுங்கறா. போகட்டும். ஆனா நேக்கு சர்வீஸ் பண்ற நோக்கத்தோடவும் அதே சமயம் பணத்துக்கும் குறைவில்லாம ஒரு ஹாஸ்பிடல் கிடைச்சிருக்கு. இதை விட்டுட்டு உங்களையும் விட்டுட்டுப் போற ஐடியா இல்லை. விட்டுடுங்கோ,'' என்றான்.

''அப்போ வேற பொண்ணாவது...'' என்றார் அம்மா.

''பார்க்கலாம்மா. பொறுங்கோ. கொஞ்சம் டைம் குடுங்கோ,'' என்றான் எழுந்து.

''டைம்ன்னா?'' என்றாள் அம்மா.

''பார்க்கலாம். ஒரு ரெண்டு வருஷம் போகட்டும்,'' என்றான். நகர முற்பட்டான். அப்போது,

''உள்ளே வரலாமா?'' என்ற குரல் கேட்கவும் எல்லாரும் திரும்பினார்கள்.

''ஐ'ம் ஆதித்யா. ஆனந்தியோட பிரதர்,'' என்று அந் இளைஞன் நின்று கொண்டிருந்தான்.

• • •

வழக்கமான உபசரிப்புக்குப் பின்,

''எங்க தங்கியிருக்கேள்? இங்கயே வந்தர்லாமே,'' என்ற ஷ்யாம்.

"இல்லே! ஆர் எஸ் புரத்திலே எங்களுக்கு ஒரு பங்களா இருக்கு. அங்கே ஒரு கெஸ்ட் ஹவுஸ் இருக்கு." என்றான்.

சற்று நேரம் பேச்சுக்குப் பிறகு, மெதுவாகப் பஞ்சாபகேசன்,

"ஆனந்தி ரொம்ப நல்ல பொண்ணு. இந்தியா எப்ப வர்றா? இப்ப ஏதும் அவளுக்கு வரன் பாக்கற ஐடியா இருக்கோ?" என்றார்.

"இருக்கு இருக்கு. இன்ஃபாக்ட் டாலிக்குப் பண்ணினதுக்கப் புறம்தான் நான் பண்ணிக்கறதா இருக்கேன்," என்றான். அவன் கண்கள் அவ்வப்போது ஷ்யாமின் முகத்தின் மேல் இயல்பாகப் படிவது போல் படிந்து மீண்டன.

"தாத்தாவும், பாட்டியும் அமெரிக்காவிலயே தங்கற மாதிரி மாப்பிள்ளையாய்ப் பார்க்கச் சொல்றா. அப்பாவுக்கு அப்படி யெல்லாம் எதுவும் ஐடியா இல்லே. நேக்கும் அமெரிக்காவுல தங்கறவரா இருந்தா நன்னாருக்கும்னு தோணறது!" என்றான்.

ஷ்யாமின் கண்கள் அம்மாவையும், அப்பாவையும் மாறி மாறிப் பார்த்தன - "பாத்தீங்களா!" என்பது போல்.

"அதுக்கேத்த மாதிரி நல்ல வரனா இருந்தாச் சொல்லுங்கோ," என்றான். பிறகு, "வேறென்னமோ கேட்டேளே. ஆனந்தி எப்ப வரான்னு இப்பக் கிளம்பிட்டா அநேகமா நாளைக்கு வந்துடுவா," என்றான். ஆனால் அந்தப் பேச்சு மாறியதற்குப் பிறகு, பொது வான விஷயங்களைப் பேச ஆரம்பித்த பிறகு, அவனும் ஆதித்யாவும் நண்பர்களாகி விட்டார்கள்.

கலகலவென்று சிரித்துக் கொண்டு பேசிக் கொண்டார்கள். அமெரிக்கப் பொருளாதாரம் பற்றியெல்லாம் அவனிடம் கேட்டுக் கொண்டான் ஷ்யாம். அவர்கள் பிஸினஸ் பற்றியெல்லாம் விரிவாக விவரித்தான்.

'டாலி டாலி'யென்று ஆனந்தியைப் பற்றிப் பரிவோடும், பாசத்தோடும் பேசினான். ஆஸ்பத்திரியில் ஆனந்தியின்



குறும்புகளையெல்லாம் பகிர்ந்து கொண்டான் ஷ்யாம். அப்போது ஒரு நிகழ்வைச் சொன்னான்.

ஒரு முறை ஒரு அறுவைச் சிகிச்சையின் போது திடீரென்று நோயாளிக்கு இதயத் துடிப்பில் மாற்றம் ஏற்பட்டது. அந்த நேரம் ஈஷ்வர், தங்கதுரை யாருமே இருக்கவில்லையாம். ஆனந்தி மட்டுமே இருந்தாள். உடனே வந்து நிலைமையைக் கையாண்டு சரி செய்து கொடுத்து விட்டாளாம். ஆனால், அறுவைச் சிகிச்சை முடித்து ஷ்யாம் வந்தபோது, அவனிடம் வந்து,

"ஷ்யாம்.. ரொம்பப் பயமாய்ப் போயிடுத்து. இதுதான் நான் தனியா ஹான்டில் பண்ணினது," என்று குழந்தையைப் போல் நின்றாளாம்.

உண்மையாகவே ஷ்யாம் பாராட்டினானாம். ஷ்யாம் பேசும் போது ஆதித்யா அவன் முகபாவத்தை மிகவும் கவனத்துடன் கூர்ந்து பார்க்கிறான் என்பதைப் புரிந்து கொள்ளவில்லை ஷ்யாம். தன்னை மறந்து பேசிக் கொண்டிருந்தான்.

அவள் மடிசார் கட்டிக் கொண்டு நிற்கிற ஃபோட்டோக்களை யெல்லாம் எடுத்துக் காட்டினார்கள். ஆதித்யா அதில் ஒன்றிரண்டு ஃபோட்டோக்களைக் கேட்டு வாங்கிக் கொண்டான்.

"சரி.. நான் புறப்படட்டுமா?" என்று ஆதித்யா புறப்படும் போது, "எப்படிப் போகப் போறேள்? என்றான் ஷ்யாம்.

"டாக்ஸியில..." என்றான்.

"வாங்கோ.. நான் டிராப்.. பண்றேன்..." என்று உடன் சென்றான்.

"மறுபடி உங்களைப் பாக்கறேன்," என்று விடை பெற்று கொண்டான் ஆதித்யா.

திரும்ப வரும்போது.. ஷ்யாம் ஒரு பெருமூச்சுடன் இந் ஆதித்யா வந்து எல்லா நினைப்பையும் கிளறி விட்டுட்டார் என் எண்ணிக் கொண்டான்.

அன்றைக்கு வெகு நேரம் உறங்கவில்லை. இந்த ஆனந்தி ஏன் என் வாழ்க்கையில் நுழைந்தாள் என்று நொந்து கொண்டான்.

## 23

"ஏம்ப்பா ஷ்யாம், நம்ம ஹாஸ்பிட்டல்லயே சின்னதா ஒரு ஹால் இருக்கு. ஒரு கான்ஃபிரன்ஸ் ரூம் இருக்கு. எதுக்கு வெளியே இந்த ஸ்டார் ஹோட்டல்ல மீட்டிங்?" என்று முணுமுணுத்தான் கருணாகரன்.

"நேக்கு என்னடா தெரியும்? ஐ'ம் ஈக்வலி இக்னரன்ட்," என்றான் ஷ்யாம்.

மொத்தமே முப்பது பேருக்குள்தான் இருப்பார்கள். ஏ.சி. அறை. பெரிய ஸ்டேஜ் எதுவும் இல்லை. ஒரு டேபிள் பின் நான்கைந்து சேர்கள். அவ்வளவுதான். மற்றப்படி வழக்கமாக அந்த ஹோட்டல் அறையில் இருக்கும் ஏற்பாடுகள்.

"ரொம்ப த்ரில்லிங்கா இருக்கு இல்லே!" என்றான் ஷாநவாஸ். "யாரா இருக்கும் அந்த ஓனர்?" என்று தொணதொணத்துக் கொண்டிருந்தான் அமரேந்திரன்.

நிர்வாக அலுவலகத்திலிருந்து ஒரு பத்துப் பேர், டாக்டர்கள் ஒரு பதினைந்து பேர் - இவ்வளவுதான். பின்னால் ஒரு இரண்டு மூன்று இருக்கைகள் காலியாக இருந்தன.

முன் வரிசையில் பாஸ்கரன், சுந்தரேசன், தங்கதுரை, பரணீதரன், பி.ஆர்.ஓ. போன்றவர்கள் இருந்தார்கள். ஷ்யாமும், கருணாகரனும் சற்றுப் பின்னாலேயே அமர்ந்து கொண்டார்கள்.

மீட்டிங் தொடங்குகிற நேரம் வந்து விட்டது போலும். பரணீதரன் மைக்கைப் பிடித்து, "கடந்த மூன்று ஆண்டுகளாக நமது மருத்துவமனை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதைக் கொண்டாடும் விதமாகவும் நமது மருத்துவமனை வளர்ச்சிக்காகத் திட்டங்கள் தீட்டுவதற்காகவும் நமது மருத்துவமனையின்



நிறுவனர் அவர்கள் வருகை தந்திருக்கிறார்கள். அவர்கள் இப்போது உங்களைச் சந்திப்பார்கள்," என்று ஆங்கிலத்தில் அறிவிக்க, கதவு திறக்க, உள்ளே அந்த உருவம் நுழைந்தது.

ஹாலில் இருந்த அத்தனை பேரும் எழுந்து நின்றார்கள். எல்லாருக்கும் கண்கள் தெறித்து விழுந்து விடுகிறாற்போல் ஆச்சரியம்.

ஷ்யாமுக்கு மயக்கமே வந்து விடும்போல ஆகி விட்டது. கருணாகரன், ஷாநவாஸ், அமரேந்திரன், ஷ்யாம் நால்வரும் பேச்செழாதவர்களாய் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு மலைத்துப் போய் நின்றார்கள்.

கனத்த அமைதியில் எல்லாரும் அமர்ந்தார்கள். எல்லாருக்கும் ஜூஸ் வழங்கப்பட்டது. எப்போதும் இது மாதிரி வெளியிடங்களில் எதுவும் அருந்துவதற்குத் தயங்குகிற ஷ்யாம் கூட வாங்கிக் 'கபக் கபக்'கென்று விழுங்கினான்.

பரணீதரனின் வரவேற்பிற்குப் பிறகு உரிமையாளர் எழுந்து பேசத் துவங்கினார்.

"உங்களையெல்லாம் நான் ஏற்கெனவே சந்தித்திருக்கிறேன். வேறு காரணத்துக்காக. இப்போது நான் யார் என்று அறிமுகப் படுத்திக் கொள்வதற்கான காரணங்கள் இரண்டு. ஒன்று, சொந்தக் காரணம். அதை இங்கே சொல்லிக் கொள்ள முடியாது. இன்னொன்று நான் அருகில் இருந்து நமது மருத்துவமனை இயங்குவது பற்றிய எல்லா விவரங்களையும் ஃபர்ஸ்ட் ஹான்ட் இன்ஃபர்மேஷனாகத் தெரிந்து கொண்டு விட்டேன். அதில் சில நிறை குறைகளைக் கண்டறிந்திருக்கிறேன். அவைகளைத் தனித்தனியாக அந்தத் துறையினரிடம் நான் விசாரிப்பேன்.

"சுருக்கமாகச் சொன்னால் ஒன்றிரண்டு மன்னிக்க முடியாத தவறுகள் நம் நிறுவனத்தில் நடந்து கொண்டிருக்கின்றன." இதைச் சொல்லும் போது அவர் பார்வை சுந்தரேசன் மேல் படிந்து மீண்டது. "அதேசமயம் வேறு எந்த நிறுவனத்திற்கும் இல்லா

பெருமையாக உலகப் புகழ் பெற்ற பாஸ்கரன் நம்மிடம் இருக்கிறார். உலகப் புகழ் பெற்றுக் கொண்டிருக்கிற ஷ்யாமள கிருஷ்ணன் நம்மிடம் இருக்கிறார். பாஸ்கரன் இளைஞர்களைச் சரியான முறையில் வழி நடத்திச் செல்கிறார். தங்கதுரை இருக்கிறார்.

''மற்றொரு முக்கிய விஷயம், நமது மருத்துவமனை முக்கியமாகச் சேவைக்காகவே இயங்குகிறது. இறைவன் எனக்கு எல்லாச் செல்வத்தையும் கொடுத்திருக்கிறார். அதில் ஒரு பங்கை அவன் விரும்பும் ஏழைகளுக்காக நான் செலவிடுகிறேன். உங்களுக்கு ஒன்று முக்கியமாகத் தெரிய வேண்டும். இந்த நிறுவனத்தில் பெறப்படுகிற இலாபம் மீண்டும் மருத்துவமனை வளர்ச்சிக்கே பயன்படுத்தப்படுகிறது. போதவில்லையெனில் தேவையான அளவுக்கு முதலீடு செய்யவும் நான் தயாராயிருக்கிறேன்,'' என்ற போது கரவொலி எழுந்து அடங்கியது. ''அதனால்தான் சேவை மனப்பான்மையுடன் இயங்கினாலும் மருத்துவர்களும், ஊழியர்களும் விருப்பத்தோடு வேலை செய்யும் அளவுக்கு நான் ஊதியமும் தரத் தயாராயிருக்கிறேன். அதே சமயம் எனது உறவினர்களாகவே இருந்தாலும், அவர்களுக்கு இங்கே என்ன தகுதியான இடமோ அதுதான் தரப்பட்டிருக்கிறது,'' என்று தொடங்கி, கிட்டத்தட்ட அரைமணி நேரம் பேசினார் அவர்.

அதற்குப் பிறகும் மருத்துவமனையின் தேவைகள் குறித்தும் முன்னேற்றம் குறித்தும் விவாதம் நடந்தது. முதலில் எல்லாரும் அதிர்ந்தாலும் பிறகு தேறிக் கொண்டார்கள். ஷ்யாமும் கூட விவாதத்தில் கலந்து கொண்டான். ஏதோ சொல்லி விட்டு ஷ்யாம் இருக்கையில் அமர்ந்த போது பின்னால் யாரோ வந்து அமர்வது தெரிந்து திரும்பினான்.

ஆனந்தியும், ஆதித்யாவும்!

விஷ் செய்து விட்டு அமர்ந்தான் ஆதித்யா. அதே நேரம் -



பரணீதரன் நமது மருத்துவமனை உரிமையாளர் அவர்களுக்கு என்று ஒரு பொக்கேயை நீட்ட, அதை மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொண்டார் சத்தியமூர்த்தி. ஆம்! சத்தியமூர்த்தியேதான்.

அதற்குப் பிறகும் பரணீதரன் தொடர்ந்து, ''அவரது அன்பு மகளும் நமது மருத்துவமனை டாக்டருமான ஆனந்திக்கும், மகன் ஆதித்யாவுக்கும் நமது சார்பாக...'' என்று பொக்கேயை வழங்க, அவர்களும் வந்து மரியாதையுடன் பெற்றுக் கொண்டு இருக்கைக்கு வந்தார்கள்.

மீட்டிங் முடிந்தபின் கார்டனில் டின்னர். எல்லாருக்கும் ஒரே குறுகுறுப்பு.

பாஸ்கரன் கூட ஷ்யாமிடம் வந்து, ''ஷ்யாம், ஓனர் பயங்கரமான ஆள். நம்ம ஆஸ்பத்திரியிலேயே வந்து ஒரு மாதம் தங்கி எல்லா விவரத்தையும் சேகரிச்சிருக்காரு. பாரேன்!'' என்றார் ஆச்சரியமாக.

''அண்ணா! ஆனந்தி சொந்த மகளாம்!'' என்றான் அமரேந்திரன், ஷ்யாமிடம்.

''ஓ!'' என்று அப்செட்டானான் அவன்.

சற்றுக் கழித்து ஆனந்தி அவர்களை நோக்கி வந்தாள்.

''ஆனந்தி! நீங்க ரொம்ப அழுத்தம்,'' என்றான் ஷா நவாஸ்.

ஆனந்தி புன்னகைத்தாள். ''புதுசா என்ன நீங்க வாங்கன்னு கிட்டு. நான் எப்பவும் அதே ஆனந்திதான்,'' என்றாள்.

''இருந்தாலும் நாக்குப் புரள மாட்டேங்குது,'' என்றா அமரேந்திரன்.

''அமரு, இந்த சொல்லுதானே வேண்டாங்கறது,'' என்றா ஆனந்தி.

''ஐயோ! இல்லிங்க. நிஜமாவே நாக்குப் புரள மாட்டேங்கு என்றான்.

"ஓ.கே..! நான் சொல்லாதது தப்புத்தான். ஆனா அப்பாதான் சொல்ல வேண்டாம்மா, சொன்னா உன்னை டிஃபரண்டா நடத்துவாங்க. உனக்கும் வாழ்க்கையோட எல்லா அனுபவமும் வேணும் - அப்படீன்னார்," என்றாள். பிறகு கெஞ்சலாகப் பார்த்துக் கொண்டே, "ப்ளீஸ் எப்பவும் போல இருங்களேன். இல்லேன்னா என்னால நிம்மதியா இருக்க முடியாது." என்றாள்.

கருணாகரன், ஷாநவாஸ், அமரேந்திரன் மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பிறகு அவளைப் பார்த்துப் புன்னகைத்தார்கள். அவள் மெதுவான குரலில், "ஷ்யாம் எங்கே?" என்றாள்.

கருணாகரன் மெல்லிய குரலில், "ரொம்ப ஷாக் ஆயிட்டான்," என்றான்.

ஆனந்தி ஒரு பெருமூச்சு விட்டாள். பிறகு, "கோபமா இருக்காரோ?" என்றாள்.

"கோபமாத் தெரியலை!" என்றவுடன், சற்றுத் தொலைவில் பாஸ்கரனுடன் நின்று கொண்டிருந்த அவனிடம் போனாள்.

பாஸ்கரனிடம் ஓரிரு வார்த்தைகள் பேசிவிட்டு, அவனிடம் போனாள்.

"ஷ்யாம்!" என்றாள்.

அவன் எதையும் காட்டிக் கொள்ளவில்லை. புன்னகைத்தான்.

'ஹலோ! மேஜிக் பாக்ஸ்ல இருந்து பெரிய அதிசயமாய் எடுத்துப் போட்டாச்சாக்கும்..." என்றான்.

ஆனந்தி புன்னகைத்தாள். அவன் புன்னகைக்கவில்லை.

"ஷ்யாம், ஒரு சாதாரணமான பொண்ணா இருந்து எல்லா அனுபவங்களையும் நான் கத்துக்கணுங்கறது அப்பாவோட ஆசைதான்."

"பின்னே... வளர்ப்பு அப்பான்னே?" என்றான்.



"சொன்ன பொய்கள்லே அதுவும் ஒண்ணு." என்றாள் ஏதோ குற்றவாளியைப்போல்.

அவன் மனம் ஒரு கணம் உருகியது பாவம்! ஏதோ குற்றவாளியை விசாரிக்கிறாற் போல் தான் விசாரிக்கிறோம். அவளும் பதில் சொல்கிறாளே என்று.

"ஆனந்தி!" என்றான் ஆழமான குரலில்.

"ம்..." என்றாள்.

"இப்ப மட்டும் ஏன் இதை வெளியிடணும்?" என்றான்.

"இல்லே! ஆஸ்பிட்டலுக்கு வர வேண்டிய பணம் வேற எங்கெங்கயோ போயிண்டிருக்கு. களையெடுக்க வேண்டிய நேரம் வந்துடுச்சுங்கறாரு." என்றாள்.

அவன் மௌனமாகக் கேட்டுக் கொண்டான்.

"அதுக்காகவே தன்னோட ஆபரேஷனை இங்கே வச்சுண்டார். அம்மாவைக் கூட, ஆதித்யாவைக் கூட வர வேண்டாம்னுட்டார்..." என்றாள்.

"ஓ!" என்றான்.

"பின்னே.. சொந்தக் காரணம்னு எதையோ சொன்னாரே!"

"அது நேக்குக் கல்யாணம் பண்ணணுமாம். அதுக்குள்ளே ஹாஸ்பிட்டல் விவகாரமெல்லாம் ஒழுங்கு படுத்தணுமாம்," என்றாள்.

"வரன் பார்த்தாச்சோ?" என்றான்.

அவள் ஒருநிமிடம் அவன் முகத்தை ஆழ்ந்து பார்த்தாள். பிறகு, "ம். ஆச்சு. ஆனா இன்னும் நேரடியாப் பேசலை!" என்றாள்.

அவன் உள்ளம் வாடியது. "ஆனந்தி! ரொம்ப எட்டாத உயரத்துக்குப் போயிட்டே! அதற்கேத்த மாதிரி வரன் பார்த்துக்கோ. உன்னைப் புரிஞ்சுக்கறவனா, உன்னை நல்லா வச்சுக்கறவனா கிடைக்கணும்னு நான் ஆண்டவனை வேண்டிக்கறேன்." என்றான்.

தன் உள்ளத்து உணர்வுகளை மறைத்தபடி, 'தாங்க்ஸ்!' என்றான். பிறகு "ஆத்துல எல்லாரும் நல்லாருக்காளா?" என்று விசாரித்தான்.

"எல்லாருக்கும் ரொம்ப ஆச்சரியமாயிருக்கும்," என்றான் அவன்.

"ஆமா" என்றான் அவன். அதற்குள் ஆதித்யா வந்தான். அவனிடமும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் விடை பெற்றுக் கொள்ளும்வரை பொறுமையாக இருந்த ஷ்யாம், அவர்கள் கார் அந்தப் பக்கம் போனவுடனே இந்தப் பக்கம் யாரையும் பார்க்க விரும்பாதவனாய்க் காரை எடுத்துக் கொண்டுபோய் விட்டான்.

* * *

வீட்டிலும் ஆள் மாற்றி ஆள் விசாரிக்க, அவன் மிகவும் கஷ்டமாக உணர்ந்தான். பின்னர், 'கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கிறேன்,' என்று மாடிக்குப் போய் விட்டான்.

அதே நேரம் -

சத்தியமூர்த்தி சுந்தரேசனைப் பார்க்க விரும்புகிறார் என்ற செய்தி பரணீதரன் மூலமாகத் தெரிந்தது. சுந்தரேசன் போனார்.

சத்தியமூர்த்தி ஒரே வார்த்தை சொன்னார். "உங்கள் திறமைக்கு நான் கொடுக்கிற சம்பளம் குறைவுன்னு நீங்க என்கிட்டே வாதாடி இருக்கலாம். இப்படிச் செஞ்சிருக்க வேண்டியதில்லே!" என்றார்.

சுந்தரேசன் அசரவில்லை. எப்படி என்றார்.

சத்தியமூர்த்தி ஒரு கத்தை பேப்பர்களை எடுத்துப் போட்டார்.

அத்தனையும் ஆதாரங்கள். பணம் கொடுத்தவர்கள் சிலரிடம் எழுதியே வாங்கியிருந்தார்கள்.

"இங்கிருந்து போய் அமெரிக்காவில வெற்றிகரமாத் தொழில் நடத்தறேன்னா சும்மாவா? எல்லாத்து மேலயும் ஒரு கண் வைக்க வேண்ணா நிறுவனம் நல்லா செயல்படுமா?" என்று கேட்டார்.



சுந்தரேசன் மௌனமாக அமர்ந்திருந்தார்.

"இப்பவும் ஒன்னும் கெட்டுப் போயிடல. உங்க திறமைக்கு மதிப்புத் தரேன். இனி இந்த பிராக்டீஸை விட்டுடுங்கோ..." என்றார்.

சுந்தரேசன் எழுந்தார். "தாங்க்ஸ்!" என்றார். போய்விட்டார்.

அவர் அந்தப்புறம் போனதும் பரணீதரனிடம் இருந்து ஃபோன்.

"சார்! பாஸ்கரன் உங்களைப் பார்க்கணுங்கறார்."

"வரச் சொல்லுங்கோ!" என்றார்.

வந்தார்.

ஆஸ்பத்திரியில் இன்னும் செய்யப்பட வேண்டிய முன்னேற்றங்கள் பற்றிப் பேசினார்கள். ஒரு மணி நேரம் மனந்திறந்து பேச. முடிந்தால் மொபைல் வேன் கூட ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்.

சற்றுக் கழித்து பாஸ்கரன் அவரிடம், "சார்! பர்ஸனலாகக் கொஞ்சம் பேசணும்," என்றார். "சொல்லுங்கோ," என்றார் சத்தியமூர்த்தி. அதற்குப் பாஸ்கரன் ஒரு கேள்வியை வைத்தார். அதற்குச் சத்தியமூர்த்தி ஒரு பதிலும் சொன்னார்.

கேள்வி எதிர்பாராததென்றால் பதில் அதைவிட எதிர்பாராததாக இருந்தது.

* * *

தனியறையில் -

இரண்டாம் முறையாக அழுது ஓய்ந்தான் ஷ்யாமளன். பிறகு இரவு பன்னிரண்டு மணிக்குப் பாஸ்கரனுக்கு ஃபோன் செய்தான்.

"சார்! ஆனந்திதான் கிடைக்கலேன்னாலும் இந்த ஆஸ்பிட்டல் என் கனவு இல்லமா இருந்தது. இப்ப... இப்ப அதுவும் போச்சு. நான் ரிஸைன் பண்றேன்," என்றான், குரல் தழுதழுக்க.

"ரொம்ப நல்லதாப் போச்சு. வாழ்க்கையைச் சந்திக்க நோக்குத் தைரியமில்லேன்னு நீயே தம்பட்டம் அடிச்ச மாதிரி ஆச்சு!" என்றார் பாஸ்கரன் எரிச்சலாக.

ஷ்யாம் இதை எதிர்பார்க்கவில்லை. திகைத்தான்.

"நல்லாப் படுத்துத் தூங்கி எழுந்து காலையில ஃப்ரெஷ்ஷா ஆஸ்பிட்டலுக்கு வா. மத்ததை நான் பாத்துக்கறேன்..." என்றார்.

ஃபோனை வைத்தார்.

அவனும் திகைப்புடன் ஃபோனை வைத்தான்.

## 24

"**சா**ர்!" என்று பரபரப்பாக வந்தான், ஷ்யாம். 'என்னப்பா?' என்றார் பாஸ்கரன் வாஞ்சையான புன்னகையுடன்.

"இல்லே! சத்தியமூர்த்தி சார் என்னைப் பார்க்கணுங்கறார்," என்றான்.

"பாரேன். அதனால் என்ன?" என்றார்.

"இல்லைங்க சார், அவர் எதுவும் ஆனந்தி பத்திக் கேட்டா?"

"கேட்டா என்ன? நீ என்கிட்டே சொன்ன அதே ஸ்டான்ட்ல தானே இருக்கே?" என்றார்.

"ஆமா!" என்றான்.

* * *

"அதையே இப்பவும் சொல்லு," என்றார். அவர் ஆழ்ந்த யோசனையுடன் அவனைப் பார்த்தார். பிறகு சொன்னார்.

"ஷ்யாம்... வாழ்க்கைன்னா காயங்கள் இருக்கத்தான் செய்யும். வலி தாங்கினாத்தான் சாதனைகள் செய்ய முடியும். நீ இப்ப ஒரு போராட்டத்திலே இருக்கே. ஆனா, ஒன்னு சொல்றேன். ஆனந்தியை வேண்டாம்னு நீ சொல்றதுக்குக் காரணமும் சுயநலமில்லாத ஒரு காரணம்தான். உன்னோட அன்பும் சுயநலமில்லாததுதான். எந்த நியாயமான ஒரு ஆசையும் நிறைவேறும். நம்பிக்கை வை. தைரியமாய்ப் போய்ப் பேசு!"



ஷ்யாம் யானை பலம் வந்தாற் போல் உணர்ந்தான். யாருக்காகவும் எதற்காகவும் தன் முடிவுகளை மாற்றிக் கொள்ள வேண்டாமென்று முடிவுக்கு வந்தான்.

சத்தியமூர்த்தி மிகவும் இயல்பாகப் பேசினார்.

மருத்துவமனை பற்றிய பல்வேறு விஷயங்களைப் பொதுப் படையாகப் பேசி விட்டு அவன் கருத்துக்களைக் கேட்டுக் கொண்டார்.

இரண்டு பேரும் கலகலப்பாகச் சிரித்துக் கொண்டிருக்கிற ஒரு தருணத்தில் அந்தக் கேள்வியைப் போட்டார்.

"என்னப்பா... அமெரிக்காவுக்கெல்லாம் வந்து செட்டிலாகற ஐடியா இல்லேன்னுட்டியாமே!" என்றார்.

அவன் எச்சரிக்கையானான். பிறகு அடங்கிய குரலில், "ஆமாங்க... சார்!" என்றான்.

"என்னப்பா நீ! சடார்ன்னு இப்படிச் சொல்லிட்டே. நோக்கும், ஆனந்திக்கும் இடையே ஒரு அன்டர்ஸ்டான்டிங் இருக்கற மாதிரி நேக்குத் தோணுச்சு. ஆனா, இப்படி ஒரு பிடிவாதம் பிடிக்கறயே!" என்றார்.

அவன் மௌனமாக அமர்ந்திருந்தான்.

'ரிசைன் பண்றேன்னு வேற சொன்னயாம். ரிசைன் பண்ற ஐடியாவை விட்டு. ஆனந்தி விஷயம் வேற இஷ்யூ... இது வேற. எப்பவும் உன்னோட சர்வீஸ் எங்களுக்கு வேணும்," என்றார்.

அவன் ரிலாக்ஸானான். "தாங்க்யூ, சார்," என்றான். பிறகு மனம் விட்டுப் பேசினான்.

"சார், நீங்க ஒரு பெரிய சேவை செய்யறீங்க... இங்க எத்தனை ஏழை ஜனங்க உங்களை வாழ்த்திட்டுப் போறாங்கன்னு உங்களுக்குத் தெரியாது. இந்த வேலை கிடைக்கிற நிறைவே

தனிதான். அ.ஃப்கோர்ஸ். ஆனந்தியை நான் ரொம்ப லைக் பண்றேன். ஆனா, அமெரிக்காவில வளர்ந்த பொண்ணு இங்க வந்து செட்டிலாகறது கஷ்டம்தான். ஐ கேன் அன்டர்ஸ்டாண்ட்... எனக்குக் குடுத்து வைக்கலை..." என்றான்.

அவரும் சற்று நேரம் மௌனம் சாதித்தார். அவனே தொடர்ந்தான்.

"நானும் ஒன்னும் இருபது வயசுப் பையனில்லே. ஆனந்தியும் பதினாறு வயசுப் பொண்ணில்லே. வாழ்க்கைன்னா காயங்கள் இருக்கத்தான் செய்யும். நாங்க சமாளிப்போம். ஐ வில் பிரே ஃபார் ஹெர்," என்றான்.

மறுப்பதை உறுதியாகவும் ஆனால் நாசுக்காகவும் செய்கிற அவனைப் புன்னகையுடன் பார்த்தார்.

"யங்மேன், யு ஆர் பிரில்லியன்ட். நோக்கு மறுக்கவும், ஆனா அதையே சா.ஃப்ட்டா செய்யவும் தெரிஞ்சிருக்கு..." என்றார். கைகுலுக்கி விடை கொடுத்தார்.

தன் வரையில் வாழ்க்கையின் ஒரு அத்தியாயம் மூடப்பட்ட ஒரு உணர்வுடன் அவன் வீட்டுக்குப் போனால், அங்கே ஆனந்தியும், ஆதித்யாவும் வந்துவிட்டுப் போனதாகச் சொன்னார்கள்.

இந்த மனநிலையில் ஆனந்தியைப் பார்க்காததே நல்லது என்று எண்ணிக் கொண்டான்.

• • •

மறுநாள்!

மருத்துவ மனையில் எல்லாரும் கும்பல் கும்பலாக நின்று முணுமுணுத்துக் கொண்டிருப்பதைக் கண்டான்.

என்ன விஷயமென்று தெரியவில்லையே என்று தன்னுடைய அறை நோக்கிப் போனான்.

எதிரில் கருணாகரன் வந்தவன், அவனைப் பிடித்து நிறுத்தினான்.



"ஷ்யாம்! விஷயம் தெரியுமா? ஈஷ்வர் ரிஸைன் பண்ணிட்டாராம்..." என்றான்.

"ஓ!" என்றான் ஷ்யாம். திகைத்துப் போய்.

"இப்போ பதினோரு மணிக்குப் பரணிதரனும், அநேகமா சத்தியமூர்த்தி சாரும் சீனியர் டாக்டர்ஸை மட்டும் மீட் பண்றாங்களாம். சீ.ஃப் யாருன்னு முடிவு செய்வாங்கன்னு நினைக்கிறேன்," என்றான்.

"ஓ!" என்றான் மறுபடியும்.

"என்னடா, எதுக்கெடுத்தாலும் 'ஓ போடறே!'" என்றான் கருணாகரன்.

"வேறென்ன செய்யச் சொல்றே! விஷயங்கள் எல்லாம் இப்படி சீரியஸாப் போயிண்டிருக்கு. நீயும் நானும் என்ன செய்ய?" என்றான்.

"அதுவும் சரிதான்," என்ற கருணாகரன், மேலும், ஷ்யாம் கேட்காமலேயே, இன்னொன்றும் சொன்னான்.

"ஆனந்தி... இன்னும் ஒரு வாரம் லீவாம்..." என்று.

"நல்லதாப் போச்சு..." என்று எண்ணிக் கொண்டான் ஷ்யாம்.

ஏன் அவளைச் சந்திப்பதற்குத் தன் மனம் அச்சப்படுகிறது என்ற கேள்வியும் எழுந்தது. ஆனால், வேலை என்று வந்ததும் மற்ற எல்லாவற்றையும் மறந்து போனான். அவனே எதிர்பாராத விதமாகப் பிற்பகல் மீட்டிங்குக்கு அவனையும் அழைத்தார்கள். 'குவாலி.ஃபிகேஷன்' என்ற வகையில் பார்த்து அவனையும் அழைத்தார்களாம்.

பாஸ்கரன் சீ.ஃப் ஆக இருக்க வேண்டும் என்று சத்தியமூர்த்தியே விரும்பினார். ஆனால், பாஸ்கரன் சிரித்துக் கொண்டே மறுத்து விட்டார். தங்கதுரையை சீ.ஃப் ஆக்கிவிட வேண்டுமென்று வேண்டுகோள் வைத்தார். அப்படியே தீர்மானமும் ஆனது.

மீண்டும் ஒரு முறை டாக்டர்களுக்கு மீட்டிங் நடந்தது. தங்கதுரையின் நிலமை முறையாக அறிவிக்கப்பட்டது.

இந்த முறை மருத்துவமனையிலேயே நடந்தது. ஆனால் சத்தியமூர்த்தி வந்து சொல்லவில்லை. சென்னைக்கு விமானத்தில் போய்விட்டதாகப் பேச அடிபட்டது. தங்கதுரையைக் கடவுளாகவே கொண்டு வாழ்த்தினார் பாஸ்கரன். இனிமேல் வேலை செய்யும் இடத்தில் எல்லாம் சுமுகமாகி விடும் என்று எல்லாரும் நினைத்தார்கள்.

ஷ்யாம் மட்டும் தன் கவலையைத் தனியே பாஸ்கரனிடம் [illegible]ந்து கொண்டான். "வெளியே போனதற்கு அப்புறம் [illegible]ர் சும்மாயிருக்கணுமே," என்றான்.

பாஸ்கரன் புன்னகைத்தார். "இனி ஒன்றும் செய்யாது [illegible]லேய்யா... சத்தியமூர்த்தியும் ரொம்ப பவர் உள்ள ஆள்தான். [illegible] ஆதாரங்களையும் கையில வச்சிருக்கிறாரே..." என்றார் [illegible]டந்து.

"அவர் ஒன்றும் கேஸ் பண்ணச் சொல்லலையாம். [illegible]தான் பண்ணியிருக்காரு..." என்றார்.

"சரி... விடு. இனிமேலாவது பாலிடிக்ஸ் இல்லாம வேலையைப் [illegible]போம்..." என்றார்.

"அட்லீஸ்ட் இனிமேல் வேலை செய்கிற இடத்துலயாவது [illegible]ம் வேலை செய்யலாம்," என்று எண்ணிக் கொண்டான் [illegible]ம்.

* * *

ஃபோன் ரிசீவரை வைத்து விட்டுக் கவலையாய்ப் [illegible]ர்த்தாள் வாகி.

"என்ன... கவி...!" என்றான் கீர்த்திவாசன்.

"என்னா... நீங்க என்ன சொன்னேள்? ஆதித்யா வந்து



வந்து மறுபடியும் அதே கேள்விதான் கேட்டாராம். எங்கண்ணா வுக்கு அமெரிக்கா வந்து செட்டிலாகற ஐடியா இருக்கா, அப்ப என்றுதான் கேட்டாராம்."

"யாருகிட்டே?"

"எங்க அம்மா, அப்பாகிட்டயே கேட்டாராம்."

"அவா என்ன சொல்றா?"

"அவா உங்கண்ணாவண்ட பேச... அவன் அமெரிக்கா போனாலும் எங்களுக்கும் சம்மதமே. அவன் பிரியப்பட்ட பொண்ணு அவனுக்குக் கிடைக்க அவன் நிம்மதியாய் இருந்தாலும் போதும்ங்கறா. அவனைப் பார்க்கச் சகிக்கலடி, கண்ல உயிரே இல்லாம நடமாடிண்டிருக்கான்னு கண்ல தண்ணி விடறா..." என்றாள் வருத்தத்துடன்.

மெதுவாகக் கீர்த்திவாசனின் மார்பில் சாய்ந்து கொண்டாள். மெல்ல அவன் மார்பை நீவியபடி -

"ஏன்னா! நீங்க இதுல எதுவுமே பண்ண முடியாதா?" என்றாள்.

"என்னத்தைப் பண்றது? உங்கண்ணாதான் பிடிவாதமா இருக்காரே. சேவை செய்யறாராம். நான் என்ன செய்ய?" என்றான்.

உடனே வாகி அவனிடமிருந்து வெடுக்கென்று விலகினாள். கோபமாக அவனைப் பார்த்து,

"இத பாருங்கோ! எதையாவது செய்யுங்கோ...! இல்லேன்னா... நான் சும்மா இருக்க மாட்டேன்," என்றாள்.

தன்னிடம் சண்டை பிடிக்கிற மனைவியை அவன் சுவாரசியமாகப் பார்த்தபடி,

"செய்வோம்... அப்படிச் செஞ்சா நீ நேக்கு என்ன தருவே?" என்றான்.

"கேக்கறதெல்லாம்..." என்றாள் கன்னம் சிவக்க.

"அப்ப முயற்சி செய்யறேன். ஆனா... கொஞ்சம் கஷ்டம்தான்..." என்றான்.

ஆதித்யாவிடம் பேசினான். எப்படிப் பாஸ்கரனிடம் சத்திய மூர்த்தி சொன்ன பதில் எதிர்பாராததாக இருந்ததோ, அப்படியே அவனுக்கும் கிடைத்த பதில் எதிர்பாராததாக இருந்தது.

சிந்தனையுடன் ரிசீவரை வைத்தான்.

"என்னன்னா சொல்றா?" என்று ஆர்வத்துடன் விசாரிக்கிற மனைவியின் முகம் பார்த்தான்.

"சொல்றேன்... அப்புறம்," என்று நகர்ந்து விட்டான்.

அவன் போன திசையைப் பார்த்துக் கொண்டு வாசுகி கவலையுடன் நின்றாள்.

◆ ◆ ◆

"ஹலோ!" என்றாள் ஆனந்தி.

"ஆனந்தி! நான் வாசு பேசறேன்."

"சொல்லு... சொல்லு..." என்று உற்சாகமானாள் ஆனந்தி.

"ஆனந்தி... நான் உன்கிட்டே ஒரு முக்கிய சமாசாரம் பேசணுமே," என்றாள்.

"சொல்லு வாசு."

"இல்லே! நேக்கும், ஷ்யாம் அண்ணாவுக்கும் மேரேஜ் ஆகும்னு நாங்கள்லாம் ரொம்பக் கனவு கண்டோம்," என்றாள்.

அந்தப் பக்கம் மௌனம் நிலவியது.

"ஆனந்தி, கேக்கறியா?"

"ம். கேக்கறேன், சொல்லு."

"ஆனா இப்ப ஏன் இப்படி பிரேக் ஆயிடுத்து? உங்க வசதி பார்த்து எங்காத்துல பயம்தான். ஆனா, என்ன வசதி இருந்தா என்ன! ஒருத்தருக்கு அதிக பட்சம் என்ன வசதிகள் தேவைப்படும்?



இருக்க ஒரு நல்ல வீடு, போக்குவரத்துக்குக் காரு. கொஞ்சம் நல்ல துணிமணிகள், நகைகள். இதுக்கு மேலே இல்லேங்காம பணம். இதெல்லாம் எங்க அண்ணாவாலே இங்கயே குடுக்க முடியுங்கறப்ப நீங்க எதுக்கு அண்ணாவை அமெரிக்கா வரச் சொல்றேள்?" என்றாள்.

ஆனந்தி சற்று நேரம் அமைதி காத்தாள்.

"வாசு! நான் அப்படிச் சொல்லலே. எங்காத்துல அப்படி எதிர் பார்க்கறா..."

"நீ அவாளுக்குச் சொல்ல வேண்டியதுதானே?"

"வாசு... நேக்கும்... உங்கண்ணா மேல வருத்தம்தான். 'ஆனந்தியா, ஆஸ்பிட்டலான்னா... ஆஸ்பிட்டல்னு முடி வெடுத்துட்டாரே! ரொம்பக் காம்ப்ளெக்ஸ் இருக்கும் போல இருக்கு! எப்ப ஆனந்திக்கு வரன் பாக்கப் போறேள்னே கேக்கறாராமே? இப்படியெல்லாம் எங்காத்துல கேட்கறா..." என்றாள்.

வாசுகி சற்று நேரம் திகைத்து விட்டாள். அப்போதுதான் அந்த விஷயத்தைச் சொன்னாள், விவரமாக.

ஆனந்தி துளைத்துத் துளைத்து விவரங்கள் கேட்டுக் கொண் டாள். பின்னர் 'ஓ! அப்படியா சமாச்சாரம்!' என்று முணுமுணுத்துக் கொண்டாள்.

ரிசீவரை வைத்தாள். நேராக ஆதித்யாவிடம் போனாள்.

"ஆதித்! நான் உன்கிட்டே பேசணும்," என்றாள்.

"வித் ப்ளெஷர், மேடம்! சொல்லுங்கோ," என்றான்

சொன்னாள் அழுத்தம் திருத்தமாக. அவள் சொன்ன வார்த்தை களைக் கேட்டு ஆதித்யா கடகடவென்று சிரித்தான்.

"குட்... வெரிகுட்... என் தங்கச்சிக் கண்ணே! தங்க நிலாவே!" என்று மேலும் சிரித்தான்.

"சிரிக்காதே, ஆதித்!" என்றாள்

"சரி... சிரிக்கலே! உத்தரவு போடுங்கோ, செய்யறேன்," என்றான்.

உத்தரவு போட்டான்.

ஒரு அன்புச் சகோதரனாக அவன் கடமையே கண்ணாக அதை நிறைவேற்ற முற்படுவதை ஒரு புன்னகையுடன் பார்த்துக் கொண்டு நின்றாள்.

## 25

தங்கதுரை இதுவரை எப்படிப் பொறுமையுடன் இருந்தாரோ, அத்தனைக்கும் சேர்த்து வேகத்தோடு செயல்பட ஆரம்பித்தார். அது மட்டும் அல்லாமல், புதியதாகப் பத்து நியமனங்கள் செய்ய நிர்வாகம் அனுமதித்திருப்பதாக மகிழ்ச்சியுடன் சொன்னார்.

நான்கைந்து பேர் அமர்ந்து அடுத்த ஒரு ஆண்டுக்குச் செய்ய வேண்டிய பணிகள் பற்றித் திட்டமிட்டுக் கொண்டார்கள். அன்றைக்குப் பல நல்ல செய்திகளும் சொன்னார் பரணீதரன்.

ரொம்பவும் சிக்கலான நோயாளிகளுக்கு அவசியப்பட்டால் வேறு மருத்துவமனைகளில் சென்று சிகிச்சை அளிப்பதற்கும் பாஸ்கரனுக்கும், ஷ்யாமுக்கும் நிர்வாகம் அனுமதி அளித்திருப்பதாகச் சொன்னார். ஆனால் விவாதம் மிகவும் முக்கியமானதாக இருந்தது.

காலையில் வழக்கமான பணிகளை முடித்தபின், பிற்பகலில் அமர்ந்தால் களைப்பாக இருந்தது. மூன்று மணிக்கு கான்ஃபரன்ஸ் ஹாலை விட்டு வெளியே வரவும் அம்மாவிடம் இருந்து ஃபோன் வரவும் சரியாக இருந்தது.

"ஷ்யாம், மதுரையில ஜெயாவுக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லையாம். உன்னைப் பார்க்கணுமாம். உடனே கிளம்பச் சொல்றா. நந்துவும் கூட வர்றானாம். நீ உடனே கிளம்பு," என்றாள். குரலில் படபடப்புத் தெரிந்தது.



உடனே தங்கதுரையிடம் சொல்லிக் கொண்டு விடை பெற்றான். புறப்பட்டான். ஃபோன் செய்தான் நந்தகோபால். அதற்குப் பிறகு நந்தகோபால் மெதுவாகச் சகோதரனிடம் திரும்பி,

"அண்ணா, நான் சொல்றதைக் கேட்டு ஷாக் ஆயிடாதே. ஜெயாக்காவுக்கு ஒண்ணுமில்லே. மசக்கைதான். ஆனா, ஆனந்தி மன்னிக்குதான் அடிபட்டிருக்காம்," என்றான்.

சியாமளகிருஷ்ணன் காரை ஓரமாக நிறுத்தினான்.

"ம்!" என்றான் முகத்தில் எதையும் காட்டாமல். "எப்படி ஆச்சாம்?" என்றான்.

"அதான்... எப்பவும் துறுதுறுன்னு நடப்பாங்களே, அது மாதிரி நடக்கச்சே வயல் பக்கத்துல ஏதோ பெரிய கல் தடுக்கிக் கல்லு மேலயே விழுந்து... நல்ல அடியாம்..." என்றான்.

ஷ்யாம் கார் கதவைத் திறந்து இறங்கினான். "நீ காரை ஓட்டுடா," என்றான்.

நந்த கோபால் மறுப்புச் சொல்லாமல் நகர்ந்து காரை ஓட்டினான். மௌனம் சாதிப்பதே சிறந்தது என்று பேசாமலே காரை ஓட்டினான்.

சியாமளகிருஷ்ணன் வெறித்த பார்வையுடன் அமைதியாக அமர்ந்து வருவதைப் பார்த்த நந்துவுக்கே பாவமாகியது.

கீர்த்தி வாசனின் அந்தப் பெரிய கிராமத்து வீட்டுக்கு முன்னால் யாரும் இருக்கவில்லை. ஒரே மௌனம் நிலவியது.

"ஹாஸ்பிட்டலுக்குள் கொண்டு போகாமல் ஏன்டா இங்க வச்சிருக்கிறார்.... வாசன்?" என்று முணுமுணுத்தான் சியாமளகிருஷ்ணன்.

எந்த விதப் பரபரப்பையும் காட்டாமல் ஆனால் வேக நடையுடன் அவன் உள்ளே நுழைந்த உடனே கீர்த்திவாசனும் நரேந்திரனும் சீரியஸான முகத்துடன் வந்தார்கள்.

"வாங்கோ அத்திம்பேர்!" என்று வரவேற்றான் கீர்த்திவாசன்.

"என்ன பிராப்ளம்?" என்றான் நேரடியாக.

"கீழே விழுந்துட்டா... அடி பலம்தான்," என்றபடி, மாடிக்கு அழைத்துச் சென்றான்.

அந்தப் பக்கம் இருந்த கூடத்தில் கூட்டமாக ஆட்கள் இருந்த மாதிரி இருந்தது. ஆனால் எத்தனை பேர் இருக்கிறார்கள், யார் யார் இருக்கிறார்கள் என்பதையெல்லாம் சியாமள கிருஷ்ணன் கவனிக்கவில்லை. படிகளில் ஏறிப் போகிற அவனுடன் கீர்த்திவாசனும், நரேந்திரனும் மௌனமாகவே வந்தார்கள்.

அறைவாசலில் கையைக் காட்டி விட்டு அவர்கள் பின்தங்கி விட்டதை அவன் அறியவில்லை. தனக்குள் ஆழ்ந்தவனாக உள்ளே நுழைந்தவன் எதிரில் ஜன்னலைப் பார்த்தபடி அறை வாசலுக்கு முதுகைக் காட்டியபடி ஆனந்தி நின்று கொண்டிருப்பதைப் பார்த்தான்.

'ஆனந்தி!' என்றான் உள்ளடங்கிய குரலில். அவள் திரும்பினாள். 'ஷ்யாம்!' என்று ஆச்சரியமானாள்.

"ஹேய், நோக்கு பலமா அடிபட்டுடுச்சன்னாளே!" என்றபடி நெருங்கினான்.

"விழுந்துட்டேன்னு... வேற சொன்னா!" என்றான்.

"விழுந்துட்டேன்தான். அடிபட்டுச்ச... ஆனா பலமா ண்ணுமில்லையே...!" என்றாள் வியப்புடன்.

சியாமளகிருஷ்ணன் திரும்பிப் பார்த்தான் மைத்துனர்மார் ருவரையும் காணவில்லை. அந்தக் கணம் உலகம் மறந்தான்.

ஆனந்தியின் அருகில் நெருங்கி இடக்கையால் வேகமாக ழுத்தான் வலக்கையால் அணைத்துக் கொண்டான்.

"அரைமணி நேரமாய் என்ன தவிப்பு தவிச்சேன்னு க்குத்தான் தெரியும். உயிரே போன மாதிரி ஆயிடுத்து. சே..!"



என்று முணுமுணுத்தபடி, அவள் முகம் நோக்கிக் குனிந்தான். அவன் வேகத்துக்கும் அவன் பொழிகிற அன்புமழைக்கும் திகைப்பான ஒரு பார்வையுடன் இடம் கொடுத்தாள் ஆனந்தி.

கலகலவெனச் சிரித்துக் கொண்டு அவன் மார்பில் ஒண்டிக் கொண்டாள். நிமிர்ந்து பார்த்தாள் - அவன் கிறக்கப் பார்வை பார்த்து -

"குட் சாமியாருக்குக் கூட ஃபீலிங் இருக்கு போல இருக்கு..." என்றாள் குறும்பாக. ஆனால், சளைக்காமல் பதில் கொடுத்தான்.

சற்று நேரம் உலகம் மறந்தார்கள். பிறகு, விலகினார்கள். கிறக்கக் குரலில்,

"ஹேய்! ஆனந்தி... இதயமே நின்னு போன மாதிரி ஆயிடுத்து. என்ன, இப்படி விளையாடிட்டா...!" என்றான்.

"எல்லாம் காரணமாத்தான். உங்களுக்கு உங்களைப் புரிய வைக்கணும்னு நினைச்சிருப்பாளாயிருக்கும்," என்றாள். இரண்டு பேரும் அருகருகில் அமர்ந்து கொண்டார்கள். அவன் சட்டென்று சோஃபாவில் கைப்பிடியில் நெற்றிக்கு முட்டுக் கொடுத்து அமர்ந்த வண்ணம் சிரித்தான்.

"என்ன... என்ன சிரிப்பு?" என்றாள் கடுப்புடன்.

"இல்லே, வெட்கம்ன்னா வீசை என்ன விலைன்னு கேப்பே போலிருக்கு!" என்று மீண்டும் சிரிக்க,

"லொள்ளு பண்ணாதே... கிருஷ்ணா!" என்று காதைத் திருகினாள். அவன் அந்தக் கையையே பிடித்துக் கொண்டு, எழ முயற்சி செய்து, எழ, அவள் அவன் மார்பில் செல்லமாகக் குத்தி விளையாடினாள். கிறக்கப் பார்வையுடன் அனுமதித்தான். அவள் அப்போதும், 'ஹிப்பாகிரேட் லையர்!' என்று திட்டினாள். அவன் வேகமாக அருகில் இழுத்து, 'அதென்ன எப்ப பார் திட்டறே!' என்றான். குரலில் கோபம் கிஞ்சித்தும் இல்லை.

"பின்னே ஹிப்பாகிரட்டான் நிரூபிக்கட்டுமா?" என்றான்.

அவன் வியப்புடன் 'ம்' என்றான். அடுத்தபடி அவன் செய்கை அவனை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

சட்டென்று அவன் சட்டைப் பாக்கெட்டில் கைவிட்டு அவன் பர்ஸை எடுத்தான். அதில் இருந்த தன் படத்தைக் காட்டினான்.

அவள் சற்றும் வெட்கமில்லாமல் சிரித்தாள். ஆனால் அதில் மகிழ்ச்சி இருந்தது.

"ஹேய்! இது எப்படி நோக்குத் தெரிஞ்சது?" என்றான்.

"தெரிஞ்சது," என்றாள்.

"ஐயய்யோ! ஆத்துக்குள்ளறவே நமக்கு எதிரிகள் நிறைய இருக்கா!" என்றான் சியாமள கிருஷ்ணன்.

"பின்னே? நீங்க உங்களையே ஏமாத்திண்டு திரிஞ்சா விட்டுருவோமா!" என்றாள். "இப்படி ஃபோட்டோவை வச்சுண்டு அலையறேள்னு தெரிஞ்சதுக்கப்புறம்தான் நேத்து ஆதித்யாகிட்டே பேசினேன்," என்றாள்.

நடந்ததைச் சொன்னாள்.

வாசுகியிடம் இருந்து ஃபோன் வந்தது. அப்போது.

"பாருங்கோ மன்னி, அண்ணா இன்ட்ரஸ்ட் இல்லாத மாதிரி நடிக்கறான். பிஃப்கேஸிலயும் பர்ஸ்லயும் உன் ஃபோட்டோதான் வச்சு இருக்கான்," என்றவுடனேயே ஆனந்திக்கு மகிழ்ச்சி வெள்ளமாய் ஊற்றெடுத்தது.

அதை ஆதித்யாவிடம் கூறினாள்.

"பாரு ஆதித் ஹீ லைக்ஸ் பி [illegible] க்கா [illegible]



"ட்ராமாவா? ஒரு நிமிஷம் என் அடிவயிற்றையே கலக்கிட்டான்டி உங்க அண்ணன்!" என்றான் ஷ்யாம் கடுப்பாக. அதுவும் இல்லாமே அம்பினி வேற அப்பப்போ சீண்டறது என்றான். அதற்கும் சிரித்தாள். பிறகு சீரியஸான குரலில், "இப்போ சொல்லுங்கோ. இந்தியாவா? நானா?" என்றாள்.

அவன் முகத்தில் ஒரு கணம் வேதனை மின்னி மறைந்தது. பிறகு ஆழ்ந்த குரலில்,

"ஆனந்தி! நான் இனியும் மறைக்க விரும்பல. நீதான் என் உயிர். நீயில்லாத ஒரு வாழ்க்கையை என்னால கற்பனை பண்ணக் கூட முடியலே. ஆனா, அதே சமயம் இந்த ஹாஸ்பிட்டல்லே வேலைன்றது நேக்கு ஆத்ம திருப்தியைத் தர்றது. நீதான் முடிவு சொல்லணும்," என்றான்.

ஏக்கப் பார்வையுடன் நின்றான். கோயம்புத்தூர் நகரத்தின் அவ்வளவு புகழ் பெற்ற சர்ஜன் தன் பார்வைக்கு ஏங்கி நிற்கிற அந்தக் கணத்தில் ஆனந்தி உருகினாள்.

"இதை... இதை முதல்லயே என்னண்டே சொல்லியிருக்கலாமோன்னா," என்றாள். நெருங்கி அணைத்துக் கொண்டாள்.

"சரி, நான் பேசறேன் அப்பாகிட்டே," என்று உருகினாள்.

மீண்டும் ஒரு முறை அவன் அணைப்பில் அடங்கினாள். தன்னை மறந்த நிலையில் அவன் கொஞ்சல்களை ஒரு சிரிப்புடன் வாங்கிக் கொண்டாள்.

அதே நேரம் வேண்டுமென்றே உரக்கப் பேசிக் கொண்டு மைத்துனன்மார் வருவது தெரிந்து ஷ்யாம் விலகினான்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு வெட்கச் [illegible] ன் நின்றார்கள்.

* * *

[illegible] னாலும் கலங்கடிச்சுட்டேள், அத்திம்பேர்," என்றான் [illegible] ார் பே [illegible] கீர்த்திவாசன் புன்னகைத்தான்.

"அத்திம்பேர் ஐடியா முழுக்க நரேன் அண்ணாவோடது," என்றான் கீர்த்திவாசன்.

ஷ்யாம் வியப்பாய் நரேந்திரனைப் பார்க்க, அவன் சிரித்தான்.

"ஆமா பின்னே. எங்களையெல்லாம் சிக்க வச்சயோன்னா, உன்னைவிட முடியுமா? ஃபோட்டோ பார்த்த அன்னைக்கே வாசு கீர்த்திக்கு ஃபோன் பண்ணிச் சொல்லியிருக்கா. கீர்த்தி நேக்கு விவரம் சொன்னான். நீயானா, ஒண்ணுமே இல்லேன்னு சாதிக்கறே. விஷயம் தெரிஞ்சதுக்கப்புறம் விட்ற முடியுமோ? அதான் ஃபோன் பண்ணினோம்," என்றான்.

கீர்த்தி வாசன், ஆதித்யா, நரேந்திரன் மூவரும் மீண்டும் சிரித்தார்கள். நரேந்திரன் தொடர்ந்தான்.

"நந்தகோபால் சொன்னான். ஆனாலும், பாவம்! அண்ணனை ரொம்ப வறுத்துட்டேன். அரை மணி நேரம் ஒரு வார்த்தை பேசலே. வெறிச்ச பார்வையோட வந்தான்னு. அவ்வளவு ப்ரியத்தை மனசுல வச்சுண்டு அப்புறம் எதுக்கு இல்லே இல்லேங்கறது," என்றான்.

அதற்குள் கீர்த்திவாசன், "சரி சரி. பேசிண்டு நின்னா எப்படி? ஷ்யாம், நீங்க உடனே குளிச்சுட்டு பதினைஞ்சு நிமிஷத்துல ரெடியாகி வரேள். ஆனந்திக்கு அரை மணி நேரம் டைம்," என்றான்.

"எதுக்கு?" என்றான் ஷ்யாம்.

"இன்னைக்கு பௌர்ணமியாம். இன்னைக்கு விட்டா தேய் பிறை வந்துர்றதாம். இன்னைக்கே நிச்சயம் வச்சுக்கறோம்," என்றான்.

"வ்வாட்?" என்றான் ஷ்யாம்.

"என்னத்தை வ்வாட் வென்னுகிட்டு. ரெடியாகி வாப்பா..." று நரேந்திரன் மிரட்ட,

"என்ன அத்திம்பேர், நீங்களும் இப்படிப் பேசறேள். அம்மா, பா ஆனந்தியோட பெரியவா எல்லாம் வர வேண்டாமா?" றான்.



"இத பாருப்பா, அதெல்லாம் எங்களோட பிரச்சினை. நீ இறங்கி வா," என்று அழைத்துப் போனார்கள்.

பத்து நிமிடத்தில் குளித்து வெளியே வந்தான். பட்டு வேட்டி சட்டை என்று எல்லாம் ரெடியாக இருக்க, தானும் தயாராகிக் கீழே வந்தவன், உண்மையாகவே மலைத்துப் போனான்.

அம்மா, அப்பா, பாஸ்கரன், கருணாகரன், ஷாநவாஸ், அமரேந்திரன், தங்கதுரை எல்லாரும் இருந்தார்கள். எல்லாரும் சிரித்தார்கள்.

ஷாநவாஸ், "அண்ணா! இந்த சஸ்பென்ஸ் ரொம்ப ஜாலியா இருக்கில்லே?" என்றான்.

"நீங்கள்லாம் எப்ப?" என்று விழித்த அவனிடம்,

"உன்னை முன்னாலே அனுப்பி வச்சுட்டு நாங்க பின்னாலயே ஒரு வேனில் கிளம்பினோம்," என்றார்கள்.

சற்றுப் பேசுவதற்குள்ளாகத் தங்கதுரை, "இத பாருப்பா, நாங்கள்ளாம் விருந்தாளிகள் இல்லே. விருந்தாளிகள் பார், அந்தப் பக்கம். அவர்களை வரவேற்க வேண்டாமா?" என்றார்.

திரும்பினால் மேலும் வியப்பு.

"சந்திரசூடன், கற்பகாம்பாள், ஆனந்தியின் அம்மா என்று அவர்கள் மனிதர்கள் எல்லாரும் வந்திருந்தார்கள்.

"கீர்த்தி, இது ஒண்ணும் அவசர ஏற்பாடா தெரியல்லே," என்று முணுமுணுத்தான்.

"எல்லாம் ஒரு வாரமா ஏற்பாடு நடந்துண்டிருக்கு. உங்களுக்குத்தான் கடைசியா நியூஸ்," என்றான்.

மறுபடியும் எல்லாரும் சிரித்தார்கள்.

ஒவ்வொருவரையும் வரவேற்று ஓரிரு நிமிடங்கள் பேசிய அதே வேளையில் மேலே ஜெயலட்சுமி, வாசுகி, தேவிகாவிடம் ஆனந்தி சிக்கிக் கொண்டு திணறிக் கொண்டிருந்தாள்.

"ஜெயாக்கா, ஞாபகம் இருக்கோ, உருண்டைச் சாதம் அம்மா கிட்டே வாங்கிக்கறச்சே ஷ்யாம் அண்ணா பக்கத்துல போய் இடிச்சுண்டே உட்கார்ந்தானே, அப்பவே நாம தெரிச்சுண்டிருக்கணும்," என்றாள் வாசு.

"ஆமா இல்லே! நான் கவனிக்கல்லடி," என்றாள் ஜெயலட்சுமி.

"ஆமா, வாசு. அப்ப அக்கா வேற ரூட்ல இருந்தாளாயிருக்கும்," என்று ஆனந்தி சொல்ல, இப்போது வாசுகியும் ஆனந்தியும் சிரித்தார்கள்.

சங்கரி இதையெல்லாம் ஒருவிதச் சிரிப்புடன் கேட்டுக் கொண்டே ஆனந்திக்கு அலங்காரம் செய்தாள். விரைவில் அலங்காரம் முடித்துப் படிகளில் அழைத்துக் கொண்டு வருகையில் பேசிக் கொண்டிருந்தவர்கள் எல்லாரும் ஆவலாகத் திரும்பினார்கள்.

ஷ்யாமளகிருஷ்ணன் தன் சகோதரிகளிடம் மெல்லிய குரலில் பேசிக் கொண்டு புன்னகையுடன் வருகிற தன் வருங்கால மனைவியின் அழகிய தோற்றத்தில் மனம் பறிகொடுத்தவனாய் லயித்துப் போய் அமர்ந்திருந்தான்.

நடப்பது எல்லாம் கனவு போல் தோன்ற, வேறு உலகத்தில் இருப்பவன் போல் அமர்ந்து கொண்டிருந்தான்.

ஒன்று மட்டும் நன்றாகப் புரிந்தது. தனக்குத் தெரியாமல் தனது மைத்துனன்மார் எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தார்கள் என்பது புரிய, ஒரு விதமான நெகிழ்ச்சியில் இருந்தான்.

சங்கரியின் கணவர் அருகில் அமர்ந்திருந்தார். "அத்திம்பேர், இவாள்ளாம் இத்தனை திட்டம் போட்டு இப்படியெல்லாம் செய்யக் கூடியவான்னு நேக்குத் தோணவே இல்லே," என்றான் முணுமுணுப்பாக.

அவர் புன்னகைத்தார். "அவா என்ன சொல்றா தெரியுமோ? 'ஒத்தை ஆளா ஷ்யாம் நமக்கு எல்லாம் செய்யலையா! அவர் கல்யாணத்தை நாம இத்தனை பேர் இருந்துண்டு ஜாம் ஜாம்னு செய்ய வேண்டாமோ?' அப்படிங்கறா. நியாயம்தானே"



தன் நெருங்கிய உறவின் வட்டம் தன்மீது வைத்திருக்கிற அன்பை, பிரியத்தை இனி வரும் இந்தக் கல்யாணத்தில்தான் காட்டப் போகிறார்கள் என்பது புரிய உள்ளம் நெகிழ்ந்து அமர்ந்து விட்டான்.

## 26

எல்லாக் களேபரமும் முடியச் சரியாக இரவு பன்னிரண்டு மணியாகிவிட்டது.

ஆனந்திக்கு நலங்கு வைத்து பட்டுப் புடவை கொடுத்து நகைப் பரிசம் போட்டு முழுமையாக நிகழ்ச்சி முடிய, நல்ல விருந்தொன்று கொடுத்தார்கள்.

சாப்பிட்ட பின்பு கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்துவிட்டுப் படுக்கைக்குப் போனார்கள் உறவினர்கள் எல்லாரும்.

சகோதரிகள், அவர்கள் கணவன் மாருடன் மேலும் சற்று நேரம் அளவளாவினான் ஷ்யாம். ஆதித்யாவும் அவர்களோடு இணைந்து கொண்டான். ஆனந்தியையும் அழைத்தார்கள். வந்தாள்.

அப்போதுதான் ஆதித்யா சொன்னான். "ஷ்யாம், இவளோட ஃபோட்டோ உங்க பர்ஸில் இருக்குன்னு தெரிஞ்சவுடனே என் சிஸ்டர் நேக்கு உத்தரவு போட்டுட்டா. என்ன செய்வீங்களோ தெரியாது, நான் ஷ்யாமோட பேசணும். அதான் நாங்க ஃபோன் செய்து டிராமா பண்ணினோம்," என்றான்.

"அது மட்டுமில்லே, அத்திம்பேர். அந்த அரைமணி நேரத்துலேதானே ஆனந்தி மேல எவ்வளவு பிரியம் வச்சிருக்கேள்னு உங்களுக்கே புரிஞ்சது," என்றான்.

ஷ்யாம் ஆமென்பது போல் தலையாட்டிக் கொண்டான். பிறகு எல்லாரும் மெதுமெதுவாகக் கலைந்தார்கள். அவர்களுக்குத் தனிமை கொடுத்தார்கள். ஆனந்தி அவன் முகம் பார்த்தாள்

"ஷ்யாம், அப்பாகிட்டே பேசிடலாமா?" என்றாள்.

"ம்!" என்றான்.

போனார்கள்.

சத்தியமூர்த்தி அந்தப் பௌர்ணமி இரவின் ஒளியை அனுபவித்தவராய் ஒரு கயிற்றுக் கட்டிலில் வீட்டின் முன்புறத்தில் வானம் பார்த்துப் படுத்துக் கொண்டிருந்தார். உறங்கவில்லை. மகளுக்கு நல்ல வரன் அமைந்த மகிழ்ச்சி வேறு.

ஆனந்தியும், ஷ்யாமும் வருவதைப் பார்த்து எழுந்து அமர்ந்தார்.

"என்னடா, கண்ணம்மா! உட்காருங்கோ ரெண்டு பேரும்," என்றார்.

ஷ்யாம் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டுக் காலியாகக் கிடந்த ஒரு கயிற்றுக் கட்டிலை எடுத்து எதிரில் போட்டு அமர்ந்தான்.

"சொல்லுங்கோ!" என்றார்.

ஆனந்தியும், ஷ்யாமும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பின் ஆனந்தி மெதுவாக, "அப்பா, ஷ்யாமுக்கு இங்கயே ஹாஸ்பிட்டல்ல வேலைக்கு இருக்கறதுதான் மனசுக்குப் பிடிச்சிருக்காம்," என்றாள்.

அப்பா முகத்தில் எதையும் காட்டாமல், 'அப்ப அமெரிக்கா ர்லேங்கறாரோ?" என்றார்.

"ம்!" என்றாள் ஆனந்தி.

சற்று நேரம் கனமான அமைதி நிலவியது.

"அப்பா, வாசகி அன்னைக்கு என்கிட்டே ஒரு கேள்வி கேட்டா. துகூட கரெக்ட்தான்," என்றாள்.

"என்ன கேள்வி?" என்றார் அப்பா.

"ஒருத்தருக்கு அதிகபட்சம் என்ன வசதிகள் தேவைப்படும். ங்க ஒரு நல்ல வீடு... போக்கு வரத்துக்குக் காரு, கொஞ்சம்



நல்ல துணிமணிகள், நகைகள் - இதுக்கு மேலே இல்லேங்காம பணம் - இதை யெல்லாம் எங்க அண்ணாவாலே இங்கயே குடுக்க முடியும்கறப்ப நீங்க எதுக்கு அண்ணாவை அமெரிக்கா வரச் சொல்றேன்னு கேட்டா," என்றாள். பிறகு மெல்லிய குரலில், "அந்தக் கேள்வியில ஒரு நியாயம் இருக்கு இல்லே," என்றாள்.

சியாமளகிருஷ்ணனுக்கு இது செய்தி. ஆச்சரியமாக ஆனந்தியைப் பார்த்து,

"வாசவா இப்படிப் பேசினாள்?" என்றான்.

அவனை ஒரு நிமிடம் திரும்பிப் பார்த்து, 'ஆமா!' என்றவள், மீண்டும் தந்தையைப் பார்த்தாள்.

அவர் கண்களில் குறும்பு மின்ன, ஒன்று, இரண்டு, மூன்று என்று விரல் விட்டு எண்ணினார்.

ஆனந்தி கடுப்பானாள்.

"விளையாடாதேங்கோப்பா, விஷயத்துக்கு வாங்கோ," என்றாள்.

"இல்லம்மா... இந்த ஷ்யாமுக்கு என்னம்மா இவ்வளவு பேர் ரெகமன்டேஷன்? அன்னைக்கு இந்தப் பாஸ்கரன் வந்து ஏதோ பர்ஸனலாப் பேசணும்னார். சொல்லுங்கோ, அப்படீங்கறேன். இல்லே ஜனங்களுக்குச் சேவை செய்யறதுக்காக இவ்வளவு பெரிய ஒரு ஆஸ்பத்திரியைக் கட்டிக் குடுத்துட்டு அதுக்கேத்த மாதிரி ஒருத்தர் மாப்பிள்ளையாகக் கிடைக்கறப்போ அவரை அமெரிக்கா வரச் சொல்றீங்களே! இது என்ன நியாயம்னு கேட்டார்!" என்று சொல்லிவிட்டுக் கடகடவென்று சிரித்தார்.

ஆனந்தியும், ஷ்யாமும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். அவரே தொடர்ந்தார்.

"அப்புறம் இந்தக் கீர்த்தி ஆதித்யாகிட்டே கேட்டிருக்கான். உங்க தங்கையை மனசுக்குப் பிடிச்ச வரனோட வாழ வைக்கறது முக்கியமா, அவரை அமெரிக்க வரவைக்கறது முக்கியமான்னு. அப்புறம் நரேன் என்கிட்டே கேட்டான். மாமா நீங்க செய்யறது

நியாயமில்லே. அவனுக்கு இந்த ஆஸ்பத்திரி உயிர் மாதிரி. இந்த வேலையை நேசிக்கிறான். இப்படி ஒரு ஆள் உங்களுக்குக் கிடைக்கறதே கஷ்டம். புரிஞ்சுக்கமாட்டேங்கறேளே. அப்படின்னு...'' என்றார்.

ஷ்யாம் பதில் ஏதும் பேசாமல் பேச்சற்றுப் போய் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவரே தொடர்ந்தார். ''அப்போ நான் அவாகிட்டே கேட்ட கேள்வியைத்தான் உங்களண்டே கேட்கிறேன். அமெரிக்கா வர்ற ஐடியாவோ செட்டிலாகற ஐடியாவோ இருக்கான்னுதானே கேட்டேன். வாங்கோன்னு கூப்பிட்டேனா?'' என்றார்.

மீண்டும் சிரித்தார்.

அவர் சொன்னதன் பொருள் முழுமையாகப் புரிந்த பின், இரண்டு பேர் முகமும் மலர்ந்தது.

'அசட்டுப் பிள்ளைகளா!'' என்றார். மறுபடியும் சிரித்தார்.

''அப்பா... யு ஆர் இம்பாசிபிள்!'' என்று சிணுங்கிய மகளை ஆசையாகப் பார்த்தார். பிறகு ஷ்யாமிடம் சொன்னார்.

''ஷ்யாம், இப்படி ஒரு ஹாஸ்பிட்டல் கட்டணும்னு ரொம்ப நாளா சேமிச்சேன். ஏன்னா, எனக்குத் தெரிஞ்சு அந்தக் காலத்துல எத்தனையோ பேர் இதய நோய்க்கு வைத்தியம் தெரியாம சின்ன வயசுலயே செத்துப் போனாடா என்று அப்பா சொல்லிண்டே இருப்பார். அதனால நம்ம ஊர்ல இப்படி ஒரு ஹாஸ்பிடல் கட்டணும்னு ஆசை. அந்தச் சமயத்துலதான் ஆனந்தி மெடிக்கல் ஃபீல்டுல இன்ட்ரஸ்ட் காட்டினா. எம்.பி.பி.எஸ். படிச்சா. அப்புறம் எம்.டி. பண்றேம்பான்னா. எந்த ஃபீல்டுலம்மான்னேன். 'கார்டியாலஜி' அப்படீன்னா, ரொம்ப சந்தோஷமாப் போச்சு. எம்.பி.பி.எஸ். முடிச்சு அவள் இன்டர்ஷிப் முடிக்கறதுக்குள்ளே இந்த ஹாஸ்பிடலை ஒரே வருஷத்துல கட்டி முடிச்சேன். எம்.டி. முடிச்சுட்டு இங்கயே ட்ரெனிய்ங்குக்கு வந்தறன்னா. இன்னும் ரொம்ப சந்தோஷமா ப போச்சு. அப்பதான் சொன்னேன். அம்மா நீ யாருன்னு காமிச்சுக்காம ஒரு சாதாரணப் பொண்ணா



போனேயின்னா உனக்கு ரியல் லைஃப் எக்ஸ்பீரியன்ஸ் கிடைக்கும்னேன். ஒத்துண்டா. ஆனா எதிர்பாராத விதமா நீ வந்தே.'' என்றார். நிறுத்தினார்.

ஷ்யாமின் முகம் பார்த்தார். ஷ்யாம் லயித்துக் கேட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தவுடன் தொடர்ந்தார்.

''ஆனா, பொதுவா அமெரிக்கக் குடியுரிமை உள்ள பெண்கள் கிடைச்சா அமெரிக்காவுல போயி செட்டிலாகிறதுக்கு ஒரு வாய்ப்புன்னு நினைக்கறவா நெறையப் பேர் இருக்காளே. நோக்கு அந்த ஐடியா ஏதாவது இருக்கான்னு தெரிய வேண்டியிருந்தது. கேட்டேன். அவ்வளவுதான்,'' என்றார்.

பெரிய பாரம் இறங்கினாற் போல் உணர்ந்த ஷ்யாம் முகம் மலரச் சிரித்தான்.

''தாங்க்ஸ்... அங்கிள்!'' என்றான்.

''நோக்கு இந்த ஆஸ்பத்திரியோட பெருமை புரிஞ்சிருந்தது மட்டுமில்லே, இந்த ஈஷ்வர் பிரச்சினை வந்தப்ப இன்ஸ்ட்டிட்யூஷன் பேர் கெட்டுப்போயிறக் கூடாதேன்னு நீ பட்ட பாட்டைப் பாஸ்கரன் பரணிகிட்டே சொல்லி அது என் காதுக்கு வந்தது. அப்பதான் நான் தேடற ஆள் நீதான்னு நேக்கும் புரிஞ்சுது. உன் பொறுப்பில ஹாஸ்பிடலை விடலாம்னு எண்ணம் தோணுச்சு,'' என்றார்.

ஷ்யாம் பதறிப் போனான். ''அங்கிள், அப்படியெல்லாம் அவசரப்படாதீங்கோ. பாஸ்கரன் சார் தங்கதுரை சார் எல்லாம் நமக்குக் கிடைச்ச பொக்கிஷங்கள். அவாகிட்டே எங்களைப் போல யங்ஸ்டர்ஸுக்கு நிறையக் கத்துக்க வேண்டியிருக்கு. அவங்கதான் லீட் பண்ணணும். அதுதான் நியாயம்,'' என்றான்

''குட் இந்த ஆட்டிட்யூட்தான் எல்லாருக்கும் உன்னைப் பிடிக்க வைக்குது. நான் இப்ப சொல்லலைப்பா. எதிர்காலத்து...'' என்றார்.

''அதைப் பின்னாடி பாத்துக்கலாம் அங்கிள். இப்போதைக்கு ஹாஸ்பிடலை டெவலப் பண்றதைப் பத்தி யோசிக்கலாம்,'' என்றான்

அப்பா சிரித்தார் 'அம்மா, ஆனந்தி! உன்னை நினைச்சா நேக்குக் கவலையா இருக்கேம்மா!'' என்றார்.

''ஏன்?'' என்று அவள் பார்க்க,

''இல்லே... இன்னைக்குத்தான் என்கேஜ்மென்ட் ஆயிருக்கு. இவர் என்னம்மா ஹாஸ்பிடல் டெவலப்மெண்ட் பத்திப் பேசிண்டிருக்கார். அதுவும் இந்த மாதிரி ஒரு பௌர்ணமி நேரத்துல,'' என்றார்.

ஷ்யாம் முகம் சிவந்தது.

''அங்கிள்!'' என்று வெட்கத்துடன் சிரித்தான்.

சத்தியமூர்த்தி இப்போது ஆனந்தியைப் பார்த்தார். ''ஏம்மா... இப்போ நீ சொல்லு... நீ அமெரிக்காவுல வளர்ந்தவ. உன்னால இங்க செட்டிலாக முடியுமா?'' என்றார்.

அப்போது ஷ்யாம் சொன்னான். ''மாமா, அப்பப்போ அவளுக்காக ஒரு ஆறு மாசம்... ஒரு வருஷம்னு வந்துட்டு வர்றதுல கூட நேக்கு ஒண்ணும் ஆட்சேபணையில்லை...'' என்றான்.

''தட்ஸ் குட்...'' என்றார். ''பாஸ்கரன் சொன்னது சரிதான். 'சார் அவன் இந்த ஆஸ்பிடல் மேல வச்சிருக்கிற பாசமும் சுயநலமில்லாததுதான். ஆனந்தி மேல வச்ச பிரியமும் சுயநலமில்லாதது தான். நீங்கதான் அதை நிறைவேற்றி வைக்கணும்'னார்.''

ஷ்யாம் மீண்டும் நெகிழ்ந்தான்.

''சரி சரி, போதும். எல்லா அனாலிசிஸும் செய்யறதுக்கு வேண்டப்பட்ட நேரம் காலம் இருக்கு. இப்போ அப்படியே ஒரு வாக் போயிட்டு வாங்கோப்பா,'' என்றார். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு எழுந்து நடந்தார்கள்.

* * *

பின்கட்டில் இருந்த திண்ணையில் அமர்ந்து கொண்டார்கள். பௌர்ணமி நிலவில் கதிர்கள் அசைவதைச் சற்று நேரம் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.



ஷ்யாமின் கை மெதுவாக ஆனந்தியைத் தன்னருகே இழுக்க, அவள் அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

அந்த ஸ்பரிசத்தில் உணர்ச்சி வசப்பட்ட அவன் எழுந்து நின்று அவளைத் தன்னருகே இழுத்தான்.

அன்பு மழை பொழிந்தான். அவளும் பதில் தரப் பெற்றுக் கொண்டான்.

''ஹேய்! உங்க அப்பா ஒரு கேள்வி கேட்டாரே. அதையே நானும் கேக்கறேன். நீ இங்க லைஃப் லாங்கா அட்ஜஸ்ட் பண்ணிப்பியா?'' என்றான்.

''ஏன்? பண்ணிக்க மாட்டேனாக்கும். என்னைக்கு, 'ஆனந்தி! நீயில்லாத ஒரு வாழ்க்கையை என்னால கற்பனை பண்ணக்கூட முடியலே!'ன்னு சொன்னீங்களோ, அந்த வெற்றி ஒண்ணு போதாதா...! நீங்க போதும் நேக்கு. மத்த வசதிகள் எல்லாம் நாமளா பார்த்துச் செஞ்சுக்கறதுதானே?'' என்றாள்.

அந்தக் கணம் அவன் உலகம் மறந்தான்.

''நீயென்ன டாலியாமே, இன்னும் உனக்கு என்னென்ன பேரு இருக்கு?'' என்று கிறக்கமாகப் பேசியபடி கொஞ்சி மகிழ்ந்தான். பிறகு, ''ஹேய் ஆனந்தி! வாசு கல்யாணத்துல மடிசார் கட்டிண்டு நின்னயே, அன்னைக்கு விழுந்த ஆள்தான் நான்!'' என்றான்.

அவள் சிரித்தாள்.

''அப்புறம் அதென்ன எப்பப் பார் வம்பிழுக்கறது? நீயென்ன பொண்ணாத்துக்காரியா மாப்பிள்ளையாத்துக்காரியான்னு கேட்டா, உங்காத்துக்காரின்னு சொன்னியே! ஞாபகமிருக்கா?'' என்றான்.

''ம்,'' என்றாள். கிளுகிளுவென்று சிரித்தாள்.

''அப்புறம்? உங்க ஊருக்கு வந்தா வாழ வைப்பேங்களான்னு இன்னொரு நாள் கேட்டயே! நினைக்க நினைக்கச் சிரிக்கப்பேன், தெரியுமா?'' என்றான்.

மறுபடியும் சிரித்தாள்.

"ஹேய்! ஆனா ரெண்டு தரம் அழுதேன். தெரியுமா?" என்றாள்.

அவன் அதிர்ந்து போய்ப் பார்த்தான்.

'அமெரிக்காவுல இருந்து வந்ததுக்கப்புறம் நீங்க ரொம்ப வசதியானவான்னு தெரிஞ்சப்போ கனவிலயே ஒரு கோட்டை கட்டிண்டேனோன்னு பயந்தேன். அதே போல ஆஸ்பத்திரி ஃபௌண்டர் உங்கப்பாதான்னு தெரிஞ்சப்ப இன்னொரு தரம்,' என்றாள்.

'பாருங்கோ ஷ்யாம். அதெல்லாம் எங்கப்பா சம்பாதித்த சொத்து... அதில நேக்கு என்ன அதிகாரம் இருக்கு? நான் சம்பாதிச்ச சொத்து. இந்த எம்.டி. படிப்பும் நீங்களுந்தான். அதனாலேயே நாம இனிமே ஒண்ணா இருக்கறதைப் பத்திதான் யோசிக்கணும். மத்த விஷயங்களைப் பத்தி இல்லே," என்றாள்.

அந்த வார்த்தைகள் தந்த ஆனந்தத்தில் உணர்வுகளை விதவிதமாய் வெளிப்படுத்தினான். பிறகு.

"ஹேய்! ஆனந்தி! நீ கார்டியாலஜிஸ்ட்தானே! இங்க தொட்டுப் பாரு.. ஏன் என்னோட இதயம் படபடன்னு அடிச்சுக்குது?" என்றான்.

அவள் சிரித்துக் கொண்டே தன் காதை அவன் மார்பில் வைத்துக் கேட்டாள்.

"எல்லாம் ஹார்மோனால் வந்த கோளாறு. பாருங்கோளேன், ஒரு ஹார்ட் சர்ஜனையும் ஃபிஸிஷியனையுமே இந்தப் பாடு படுத்தறது," என்றாள்.

இருவரும் சிரித்தார்கள்.

"நீங்களே எனக்காக ஒரு வருஷம் ரெண்டு வருஷம் வேண்ணாலும் வந்து அமெரிக்காவுல இருக்கேன்னு சொன்னேளே... அதுவே பெரிய விஷயம்தான்," என்றாள்.

"ஆனந்தி! கல்யாணம் எப்பவாம்?" என்றான்.

"நன்னா ஆச்சு போங்கோ. பேச்சு வார்த்தையப்ப இதைக் கவனிக்கலயா?" என்றாள்.



"நான் அதையெல்லாம் எங்கே கவனிச்சேன்? நீ ரொம்ப அழகா உட்கார்ந்து கண்ணை அப்படி அகல விரிச்சு ஒரு பார்வை பார்த்தயே, அந்த மயக்கத்துலயே இருந்தேன்," என்றான்.

"மூணு மாசம் கழிச்சுக் கல்யாணமாம். ஆனா அதுக்குள்ளே அப்பா ஒரு ரெண்டு மாசமாவது எங்களோட வந்து இருங்கறார்."

"ஹேய்! வேண்டாம். இனியெல்லாம் விட்டுட்டு இருக்க முடியாது," என்றான் கெஞ்சுதலாக.

"பாவம், ஷ்யாம். அவாளோட கொஞ்ச நாள் இருந்துட்டு வந்தர்றேன். அப்புறம் எப்பவும் உங்களோடதானே. சரியா ரெண்டே மாசம். அப்புறம் ஆர்.எஸ்.புரம் பங்களாவுக்கு வந்தர்றோம். அப்புறம் ஒரு மாசம் ஏற்பாடுகள். அப்புறம் கல்யாணம்," என்று அவள் சிரிக்க,

"அப்புறம்... அப்புறம்ன்னு தள்ளிப் போட்டுண்டே இருக்காதே. இப்ப கொஞ்சம் கவனி," என்றான்.

கவனித்தாள். பிறகு மயக்கக் குரலிலேயே,

"ஷ்யாம்... ரொம்ப நேரம் ஆளைக் காணலேன்னா தேடப் போறாங்க," என்று விலகினாள்.

"ம்... அவாளுக்கு எங்கே என்னோட அவஸ்தை புரியப் போகிறது?" என்று அலுத்துக் கொண்டே அவனும் பின்தொடர, மீண்டும் ஒரு முறை இதழ் பதித்து விட்டு ஓடினாள்.

கலகலப்பான சிரிப்புடன் அவனும் தொடர்ந்தான்.

## 27

திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

இங்கே திருமணம் முடிந்த பிறகு அமெரிக்காவிலும் ஒரு ரிசப்ஷன் நடைபெற்றது. ஆதித்யா தன்னுடைய செலவில் ஷ்யாமின் முக்கிய உறவினர்களை அழைத்துச் சென்றான்.

உறவினர்களை அனுப்பி விட்டு ஷ்யாமும், ஆனந்தியும் மட்டும் சில நாள் சுற்றி விட்டு வந்தார்கள். அப்போதுதான் ஆனந்தி வேறொரு ஷ்யாமைப் பார்த்தாள். விளையாட்டும், சிரிப்பும் வேடிக்கையுமாய் அவன் பேசுகிற விதம் பார்த்து அவளுக்கே ஆச்சரியம். அவனிடமும் சொன்னாள்.

''ஆனந்தி! நம்மளோட தனியான நேரத்திலே நீ ஃப்ரீயா இருக்கலாம். நானும் ஃப்ரீயா இருப்பேன். எந்தத் தயக்கமும் வேண்டியதில்லே. எப்பவும் எல்லாத்தையும் ஃப்ரீயாப் பேசலாம்,'' என்றான்.

அப்போதுதான் ஆனந்தி அந்தக் கேள்வியைக் கேட்டாள்.

''ஏன் ஷ்யாம்? 'இண்டியாலே பெண்கள் ஃப்ரீயா தங்களோட ஃபீலிங்ஸை இயற்கையா காட்டினா தப்பா நினைப்பாங் களாமே?'' என்றாள். பிறகு, ''இங்கயெல்லாம் பொய் பேச மாட்டா... எல்லா ஃபீலிங்ஸையும் இயற்கையாக் காட்டுவா, தெரியுமா?'' என்றாள்.

''ஆமா,'' என்று அவன் ஒத்துக் கொண்டான். ''ஆனா, எங்க ஊர்ல ஒரு பெரிய கவிஞன் இருந்தான். தெரியுமா? அவன்தான் சொன்னான்.

''நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்களின் குணங்களாம்!''

''ஓ! அப்படின்னா...'' என்றாள்.

''முந்தியெல்லாம் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு, அப்படின்னெல்லாம் சொல்லுவா... ஆனா, பாரதி சொல்றார், அறிவு, ஒழுக்கம், வீரம், சுதந்திரம் இதெல்லாம்தான் பெண்களுக்கு வேணுங்கறார், தெரியுமா? அதனாலே யாரோ என்னவோ சொல்லிண்டு போறா. நீ இயற்கையா இரு. சுதந்திரமா இரு. அட்லீஸ்ட் நாம தனியா இருக்கும் போதாவது...'' என்றான். மென்மையாக அணைத்துக் கொண்டான்.



''ஆமா... பாரதியார் பத்தி எங்க தாத்தா நிறையச் சொல்லியிருக்காரு.'' என்றாள்.

''அவர்தான் பெண்களுக்குச் சுதந்திரம் பத்தி நிறையச் சொல்லியிருக்காரு. ஒரு தரம் சூரத் காங்கிரஸ் மாநாட்டுக்குப் போனாராம். அங்கே நிவேதிதா கேட்டாங்களாம். 'ஏன், உங்க நாட்டுல பெண்களை இப்படிப் பொத்திப் பொத்தி வச்சிருக்கீங்க. ஏன்... உங்க மனைவியைக் கூட்டிட்டு வர்லே?'' என்று கேட்டாங்களாம். அப்ப இருந்துதான் பாரதியார் பெண்களுக்குச் சம உரிமைன்னு பேச ஆரம்பிச்சாராம். அவரோட பாடல் தொகுதியைக் கூட நிவேதிதாவுக்குச் சமர்ப்பணம் பண்ணியிருக் காரு.'' என்றான்.

ஆனந்தி சுவாரசியமாகக் கேட்டுக் கொண்டாள்.

''நேக்கு இங்கே பாட்டி ஒரே அட்வைஸ். நீ இங்கே ஃப்ரீயா இருக்கற மாதிரி யெல்லாம் அங்கே இருக்கப்படாதுன்னு.'' என்றாள்.

''அதனாலதான் நான் இப்ப நேக்கு இதையெல்லாம் விளக்கமாச் சொன்னேன்.'' என்றான்.

திருமணத்தில் நடந்த கலாட்டாக்களையெல்லாம் பேசிச் சிரித்தார்கள்.

ஷா நவாஸும், அமரேந்திரனும் செய்த கலாட்டாக்களைப் பேசிப் பேசிச் சிரித்தார்கள். அவர்கள் இருவரும் ஆனந்தியைப் போலவும் ஷ்யாமைப் போலவும் நடித்தார்கள்.

''ஆனந்தி! ஏன் என் இதயம் இப்படிப் படபடன்னு அடிக்கக் குதுன்னு டெஸ்ட் பண்ணு.'' என்று ஷாநவாஸ் கேட்க, அமரேந்திரன்,

''அது ஒண்ணுமில்லே, உங்களுக்கு ஹார்ட்ல பிராப்ளம். நான்தான் அதுக்கு வைத்தியம் செய்யணும்.''

''நீயா? நீ வரப் போய்த்தான் இந்த ஹார்ட்ல பிராப்ளம்ங்கற நோயே வந்தது.'' என்று ஷாநவாஸ் இழுக்க,

''ஆமா... இந்த நோய் இப்படித்தான். என்னை மாதிரி யாரையாவது பார்த்துத்தான் வந்திருக்கும். சீக்கிரம் வந்துடும். ஆனா, அவ்வளவு சீக்கிரம் சரியாகாது. லைஃப் லாங்கா தொல்லைப்படுத்தும்,'' என்றான் அமரேந்திரன்.

சுற்றிலும் எல்லாரும் சிரித்தார்கள்.

''டேய்! போடா. போய்ச் சாப்பிடு. பந்தியிலே இட்டம் எல்லாம் தீரப் போகுதாம்,'' என்று ஷ்யாம் பொய்யாகக் கோபித்துக் கொண்டு ஒரு அடி வைக்க, மறுபடியும் சிரித்தார்கள்.

அவர்கள் அந்தப் பக்கம் போனவுடன் ஷ்யாம் அடிக்குரலில் சிரித்துக் கொண்டு,

''ஹேய்! ரெண்டு பேரும் நல்லாத்தான் டயலாக் பேசினா ஙங்க. லைஃப் லாங் வியாதிதான் இது!'' என்று சிரிக்க, ஆனந்தி ஓரக்கண்ணால் பார்த்துச் சிரித்தாள்.

''ஐயய்யோ... ஐஸ்வர்யா ராய் ரேஞ்சுக்குப் பார்க்கறாடா, இவ!'' என்று அவன் மறுபடியும் மெல்லிய குரலில் சிரிக்க... அந்தக் குரலே அவளுக்குச் சிலிர்ப்பூட்டியது.

ஷ்யாம் வாழ்க்கை பற்றிய எல்லா விஷயங்களுக்கும் வரையறை வைத்திருந்தான். அதுபோல் இல்லற வாழ்க்கைக்கும் வரையறை வைத்திருந்தான்.

அத்தனைக்கும் இருவரும் மருத்துவமனையில் நாகரீகம் காத்தார்கள். வேலை என்று வந்தபோது இருவரும் அதில் மட்டுமே கவனம் செலுத்தினார்கள் என்பது மற்றவர்களுக்கு ஆச்சரியமான விஷயம்.

உறவும், பணியும் அவர்கள் வாழ்வின் இரண்டு பக்கங் களாகிப் போயின.

• • •



''டேய்! ஷ்யாம். உன் ஆத்துக்காரியைக் கூப்பிடேன்டா... தொல்லை தாங்கலை!'' என்று அம்மா அழைக்க, அவன் எட்டிப் பார்த்தான்.

திருமணம் முடிந்து பத்து மாதங்கள் ஓடியிருந்தன.

ஜெயலட்சுமிக்குப் பிரசவம் பார்த்தார்கள். அதற்குப்பிறகு நான்காவது மாதம் வாசுகிக்குக் குழந்தை என்று அவர்களுக்கு வாழ்க்கை வெகு பிஸியாக ஓடியது.

''என்னம்மா?'' என்று சிரித்துக் கொண்டே இறங்கி வந்தான் ஷ்யாம்.

ஆனந்தி சிணுங்கிக் கொண்டே வெளியே வந்தாள்.

''பாருங்கோன்னா... நான் சமைக்கறேன்னு சொன்னா ஆன்ட்டி விடவே மாட்டேங்கறா!'' என்று புகார் சொன்னாள்.

''டேய்! உங்க ரெண்டு பேருக்கும் ரெஸ்ட் கிடைக்கறதே பெரிய விஷயமா இருக்கு. போய் ரெஸ்ட் எடுங்கோ,'' என்றார் கார்த்திகாயினி - சமையல் உள்ளில் இருந்தபடியே.

'ஹேய்! அம்மா சொல்றது நிஜம்தான். இந்த விஷப் பரிட்சையெல்லாம் வேண்டாம். வா, வந்து ரெஸ்ட் எடு,'' என்று அவன் சிரிக்க, அவள் பொய்க் கோபத்துடன் அவன் மார்பில் குத்தி விளையாடினாள்.

அம்மா வருகிற அரவம் கேட்டு விலகிக் கொண்டார்கள்.

''இத பாரு பொண்ணே! நோக்குப் பிடிச்ச இட்டமா சொல்லு... சமைச்சுத் தரேன்,'' என்றார் கார்த்திகாயினி.

''நன்னா புளிப்பா காரமா சாப்பிடணும் போல இருக்கு!'' என்றாள்.

கார்த்திகாயினி சட்டென்று நின்றார். ஆனந்தியின் முகத்தைக் கூர்ந்து கவனித்தார்.

அவள் முகத்தில் லேசான வாட்டமும், கூடுதலான ஒரு அழகும் தெரிவதைக் கண்டார்.

"எப்போலேர்ந்து இப்படிச் சாப்பிடணும்னு தோணறது?" என்றார் ஒரு டாக்டரைப் போல.

"ரெண்டு மூணு நாளாத்தான்," என்றாள்.

அவருக்கு ஏதோ புரிகிறாற்போல் இருந்தது. அதற்கேற்ப ஷ்யாம் அவளை இழுக்க, இரண்டு எட்டு அவனோடு எடுத்து வைத்தவள், சட்டென்று சோஃபாவில் உட்கார்ந்தாள்.

"தலையை லேசா சுத்தற மாதிரி இருக்கு," என்றாள். ஓங்கரித்தபடி எழுந்து வாஷ்பேசினை நோக்கி ஓடினாள். வாந்தி எடுத்தாள்.

ஷ்யாமுக்குப் புரியவில்லை. "அம்மா, அவ சமைக்கப் போற புளியோதரையை நினைக்க அவளுக்கே இப்படி ரியாக்ஷன்," என்று வேடிக்கை பேச, அம்மா மெல்லிய குரலில் சீரியஸாக,

"டேய் ஷ்யாம்! விஷயம் அதில்லடா. இது வேற..." என்றார்.

சட்டென்று உள்ளே ஓடினார். ஏதோ டப்பாக்களில் தேடிக் கொண்டு வந்து,

"இந்தாடி மாட்டுப்பொண்ணே! ஆல்பகோடாப் பழம். வாயிலே போட்டுக்கோ. நன்னா இருக்கும்," என்றார்.

வாயில் போட்டுக் கொண்டாள்.

"நீ அப்பாவாகப் போறேடா!" என்றார்.

ஷ்யாம் முகத்தில் பெருமையும், கனிவும் போட்டி போட அவளைப் பார்த்துக் கொண்டு நின்றவன், கண்களாலேயே, "அப்படியா?" என்று மனைவியைப் பார்த்துக் கேட்க, அவள் ஆம் என்பது போல் தலையசைத்தாள்.

அந்த இடைவெளிக்குள் அம்மா ஓடிப்போய்ப் பஞ்சாபகேசனை அழைத்து வந்தாள். முகமெல்லாம் சிரிப்பாக அவரும் வேக நடையில் வந்தார்.



"அப்படியா விஷயம்? கன்கிராஜுலேஷன்ஸ்!" என்றார் மகனிடம்.

"தாங்ஸ்ப்பா!" என்றான் ஷ்யாம் லேசாகச் சிவந்த முகத்துடன்.

"கார்த்திகாயினி! எல்லாருக்கும் ஃபோன் போட்டுச் சொல்லிடலாமா?" என்று அவர் பரபரக்க,

"சித்த அவசரப்படாதீங்கோ. ஆனந்தி கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கட்டும். மத்தியானமா சொல்லிக்கலாம். எல்லாம் கூட்டமா வந்து நிப்பா. அவளும் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கட்டும்," என்றார்.

"புளியோதரையே பண்றேன்.ஷ்யாம்...நீ இவளை மாடிக்கு அழைச்சண்டு போ. ரெஸ்ட் எடுக்கட்டும்," என்றார்.

தாயின் இங்கிதம் மிக்க போக்கை மனத்துக்குள் சிலாகித்துக் கொண்டே அவனும் மனைவியை அழைத்துக் கொண்டு போனான்.

"ஹேய்! சொல்லவே இல்லை!" என்று கலகலவெனச் சிரித்துக் கொண்டு கைப்பிடிக்குள் அணைத்துக் கொண்டான்.

மனைவியின் முகம் சிவப்பதை ரசித்தான். "நேத்துத்தான் டெஸ்ட் செஞ்சு நானே கன்ஃபர்ம் பண்ணிண்டேன். சொல்றதுக்கு வெட்கமா இருந்துச்சு," என்றாள். அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

அவன் மறுபடியும் மகிழ்ச்சியாகச் சிரித்தான். "இத பார்றா! ஆத்துக்காரர் கிட்டே வராத வெட்கம் குழந்தை வரப்போறதுங் கறவுடனே வந்துருச்சாக்கும்!" என்றான்.

"எல்லாம் போன மாசம் அமெரிக்கா போனமே, அப்ப ஆத்துக்காரர் படுத்தின பாட்டிலே வந்த வினைதான்!" என்றாள்.

"ஹேய்! வினைன்னு சொல்லாதே. நம்மளோட வினைப் பயன்னு சொல்லு... வரப்போறது இளவரசனோ, இளவரசியோ - நன்னா உன்னைப் போல புத்திசாலியா வளர்ப்போம்!" என்று

வாஞ்சையுடன் அவள் தலையைக் கோதிக் கொண்டு அவன் மெல்லிய குரலில் கனவு காண ஆரம்பித்தான்.

* * *

பிறபகல்

வீடே கலகலத்தது.

"ஜெயா, உங்கண்ணன் என்னமோ கல்யாணமே வேண்டாம்ன்னார். இப்ப இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமான்னு உட்கார்ந்திருக்கார் பாரு," என்று நரேந்திரன் கலாட்டா செய்ய...

"உங்களை மாதிரித்தான். பாக்கறதுக்குத்தான் சாது. எல்லாம் காரியத்தில் கெட்டி!" என்று அவள் கணவனைக் கால் வாரி விட, ஷ்யாம் சிரித்தான்.

"அப்படிப் போடு, ஜெயாக்கா!" என்றான். உறவினர்களும், நெருங்கிய நண்பர்களும் சுற்றிலும் கூடி மகிழ்ச்சியைக் கொண்டாடுகிற அந்தக் கணத்தில் ஷ்யாம் வாழ்வின் நிறைவை உணர்ந்தவனாய், பெருமையுடன் மனைவியை லேசாக அணைத்தபடி நின்று கொண்டிருந்தான்.

பஞ்சாபகேசன் தன் மனைவியிடம், "வீடே வெறிச்சன்னு இருக்குன்னு புலம்பிண்டிருந்தியே, இப்பப் பார், ஆறே மாசத்துல குஞ்சும் குளுவானுமா எல்லாரும் அவா குழந்தைங்களைக் கொண்டு தள்ளப் போறா. அடுத்த இன்னிங்ஸ் வளர்ப்புப் பணிக்குத் தயாராயிக்கோ," என்றார் கனிவான குரலில்.

தன்னிடம் ரகசியமாகக் குறும்புகள் செய்கிற கணவனிடம் நிமிர்ந்து பார்த்து ஆனந்தி சொன்னாள்.

"ஹலோ! ஜூனியர் கவனிச்சண்டேயிருக்கார். கிவ் ரெஸ்பெக்ட் அண்ட் டேக் ரெஸ்பெக்ட்!" என்றாள் முறுமுறுப்பாக.

"அட ஆண்டவா? என் நிலைமை பார்த்தியா. இதுவரைக்கும் உன் ஒருத்தி கட்டளைக்கெல்லாம் ஆட வேண்டியிருந்தது. இனி



ரெண்டு பேரும் சேர்ந்துண்டு மிரட்டுவேள்," என்றான் சோகம் போல்.

"என்ன ரொம்ப சோகமாச்சொல்றேள்!" என்று அவள் கேட்க,

'முதல் எழுத்தை மாத்திரு கண்ணம்மா, சோகமா இல்லை. சுகமாச் சொல்றேன்," என்றான்.

வரும் நாட்களின் வாழ்க்கை ஒரு சுகானுபவமாக இருக்கப் போகிறது என்ற நம்பிக்கையில் இருவரும் இணைந்து சிரித்தார்கள்.

அந்த நேரம் -

"ஆதௌ கீர்த்தனாரம்பத்திலே..." என்று நந்தகோபால் குரல் கொடுக்க, எல்லாரும் சுற்றி நின்று கவனித்தார்கள்.

"இப்படித்தான் இந்தாத்துல ஒரு நாள் ஏதோ ஃபங்ஷன் நடக்கறச்சே, ஆனந்தி மன்னி மடிசார் புடவை கட்டிண்டு வந்து நின்னா... அதைப் பார்த்துப் பிரமிச்சுப் போய் காமிராவே ஷேக் ஆயிடுத்து!" எனவும் எல்லாரும் சிரித்தார்கள்.

அவன் தொடர்ந்தான்.

"சரி... காமிரா மட்டுந்தான் ஷேக் ஆயிடுத்துன்னு நினைச்சண்டிருந்தோம்... நினைச்சண்டிருந்தோமோ... அப்புறம் பார்த்தா எங்கண்ணாவும் ஷேக் ஆயிட்டார்!" என்றான்.

மறுபடியும் சிரிப்பு.

"இப்ப அதோட பின் விளைவா ஜூனியர் ஷ்யாம் வந்து குதிக்கிற குதியில இந்த வீடே திமிலோகப்படப் போகுதாம்!" என்று ராகம் போட,

"இருங்கோ உங்களை..." என்று ஆனந்தி சோஃபா மேல் இருந்த சின்னத் தலையணையை எடுத்துக் கொண்டு விரட்ட, அவன் பயந்து ஓடுபவன் போல் நடித்துக் கொண்டு, 'நவாஸ்... அமரு... காப்பாத்துங்க!" என்று அலறினான்.

"ஐயோ! அண்ணாவையே எங்களால அவங்ககிட்டே இருந்து காப்பாத்த முடியலை. எதுக்கும் சாங்கியத்துக்கு ஒரு அடியாவது வாங்கிக்க!" என்று அமரேந்திரன் நின்ற இடத்திலேயே பதில் கொடுக்க, அங்கே நட்பும், அன்பும் ஒருங்கே காற்றில் பரவி விருந்தது.

குடும்பத்திற்காகத் தான் செலுத்திய அன்பு அங்கே வட்டியும் முதலுமாகத் திரும்பப் பெருக்கெடுத்துப் பாய்வதை அன்பும் கனிவும் பெருமிதமும் நிறைந்த இதயத்தோடு நின்று பார்த்துக் கொண்டிருந்தான், அந்த இதய மருத்துவச் சிகிச்சை நிபுணன்.

தங்களின் தனிமையான நேரங்களில் பாடுகிற பாடல்களில் ஆனந்திக்காக அவன் பாடிக்காட்டுகிற பாடல்களில் அவனுக்குப் பிடித்த அந்த வரி 'இதயந் தேடும் என்னுயிரே' என்ற வரி இதயத்தின் உள்ளே ஆழத்தில் எதிரொலித்தது.